
முத்துலட்சுமி ராகவன்
எண்ணியிருந்தது ஈடேற...
ஏழாம் பாகம்

# முத்துலட்சுமி ராகவன்

# எழுதிய

# எண்ணியிருந்தது ஈடேற...

## ஏழாம் பாகம்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எண்ணியிருந்தது ஈடேற... 7 |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, ஆகஸ்ட் 2017 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 400 |
| விலை | : | ரூபாய் 200.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்

**எ**ன் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

நமது நாட்டில் கலை வளத்திற்கும், கற்பனை வளத்திற்குமான மதிப்பும், பாதுகாப்பும் கிடைப்பதேயில்லை.. மேலை நாடுகளை வியப்பதற்காகவும் அவற்றை உயர்த்திப் பேசுவதற்காகவும் இதை நான் கூறவில்லை.. என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்..? ஏன் உயர்த்திப் பேச வேண்டும் வெளிநாட்டை என்ற கோட்பாட்டை உடையவள் தான் நான்.. ஆனால் அடுத்தடுத்துப் பாதிக்கப்படும் போது மனக்குமுறலை பகிராமல் இருக்க முடியவில்லை..

மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஒரு சிறந்த கலைக்கோவில்.. மதுரையை ஆண்ட அரசனும், அரசியுமாக இறைவனும், இறைவியும் இருக்கிறார்கள் என்பதால் இதை நான் கூறவில்லை.. மிகப் பெரி ய நிலப்பரப்பில் நான்கு திசைகளிலும் கோபுர வாயில்களைக் கொண்ட மீனாட்சியம்மன் கோவில் எண்ணற்ற பல அதிசயங்களை தன்னகத்தே கொண்டது.. இக்கோவிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம், பொற்றாமரைக் குளம், முக்குறுணி விநாயகர்,

உயர்ந்த கோபுரம் என்ற அனைத்தும் உலக அதிசயங்களுக்கு நிகரானவை.. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருந்து மன்னர் திருமலை நாயக்கர் மஹாலுக்கு சுரங்கப்பாதை உண்டு என்று சொல்கிறார்கள்.. இத்துணை சிறப்பு வாய்ந்த இக்கோவில் உலக அதிசயங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை.. ஏன்..?

நமது நாட்டின் வடக்கு, தெற்கு என்ற பாரபட்ச அரசியல் பார்வை கொண்ட மத்திய அரசின் மெத்தனம்தான் காரணமா..? அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்று இல்லை.. எந்தக் தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இங்கே தெற்கத்திய மாநிலங்களின் பெருமைகளும், நலன்களும் பின்னுக்குத்தான் தள்ளப் படுகின்றன.

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள கோவில்களின் சிற்ப வேலைப்பாடுகள் துல்லியமானவை.. வெகு நுணுக்கமானவை.. இங்குள்ள நவகிரக கோவில்களின் அமைப்பை வான்வெளியின் விமானத்திலிருந்து ஆராய்ந்தால் அறிவியல், இறைவியல், ஆருடம், ஆன்மிகம் சார்ந்த பல நுட்பமான விவரங்களை உள்ளடக்கி அவை அமைக்கப் பட்டிருப்பதை அறியலாம்.. இவற்றைப் பற்றி ஆராய ஆரம்பித்தால் முடிவேயிருக்காது.. அப்பேற்பட்ட வலைப்

பின்னலாக எண்ணற்ற பல விவரங்களைக் கொட்டும் அதிசய சுரங்கங்கள் இந்தக் கோவில்கள்..

இவற்றை உலக அதிசயங்களில் இணைப்பதற்கான பேச்சோ நடவடிக்கையோ மேற்கொள்ளப் பட்டதா..? இல்லவே இல்லை..

மாமல்லபுரத்தின் சிற்ப வேலைப்பாடுகள் போற்றுதலுக்குரியவை.. அவற்றின் பெருமைகள் உலகளாவிய அளவில் வியந்து பேசப்பட்டிருக்க வேண்டும்.. எங்கே..? நம் இந்தியத் திருநாட்டிலேயே இவற்றைப்பற்றிய வியத்தல் குறைவாக உள்ள போது வெளி நாட்டை ஏன் குறை கூற வேண்டும்..?

மதுரை மாவட்டம், சோழவந்தான் தாலுகாவில் திருவேடகத்தின் அருகேயுள்ள தேனூர் கிராமத்தில் ‘எளிய குரு..’ என்ற சித்தர் ஒருவர் சிவன் கோவிலையும் சில மண்டபங்களையும் கட்டி சிவ வழிபாடு நடத்தி வந்தாராம்.. எளிய குரு சிவன் கோவில் என்று அக்கோவிலை தேனூர் கிராம மக்கள் அடையாளம் காட்டுவார்களாம்.. அந்தக் கோவிலுக்கும் என் கணவரின் முன்னோர்களுக்கும் ஓர் சம்பந்தமுண்டு.. என்னவென்று சொல்லவா..?

என் கணவரின் தாத்தாவிற்கும் தாத்தா காலத்தில், அவர் நெற்கதிர்கள் குவித்து வைக்கப் பட்டிருந்த களத்து மேட்டில் காவலுக்குப் படுத்து கண்ணயர்ந்த போது கனவில் தேனூர் கோவிலில் குடி கொண்டிருக்கும் சிவன் வந்தாராம்.. தேனூர் கிராமத்திற்கு என்னைத் தேடி வந்து வணங்கு என்று உத்தரவிட்டாராம்.. விழித்துக் கொண்ட தாத்தா திகைத்துப் போனாராம்..

என் கணவரின் முன்னோர்கள் பெருமாளை வழிபடுபவர்கள்.. நாராயணன்தான் அவர்களின் தெய்வம்.. அவர் கனவில் சிவன் வந்து ஆணையிட்டதில் சிலிர்த்துப் போனாராம்.. ஊரில் உள்ளவர்களுக்கு கனவைப் பற்றிச் சொல்லி அனைவரையும் அழைத்துக் கொண்டு தேனூர் சிவனை வணங்கக் கிளம்பியிருக்கிறார்கள்.. மாடுகள் பூட்டப் பட்ட மாட்டு வண்டிகள் வரிசை கட்டிக் கிளம்பத் தயாராகி விட்டன.. பேருந்து வசதியில்லாத அந்தக் காலத்தில் தேனூர் எங்கே இருக்கிறது என்று தெரியாததினால் எங்கே போவது..? எந்த வழியில் ே பாவது என்று தெரியாமல் திகைத்து நின்ற போது வானில் கருடன் வழி காட்டிப் பறந்திருக்கிறது.. மெய் சிலிர்க்க இவர்கள் கருடன் வழிகாட்டிய திசையில் வண்டிகளை ஓட்டினார்களாம்.. தேனூர் கிராமத்தில் எளியகுரு சிவன்

கோவிலை இவர்கள் அடைந்ததும் வழிகாட்டிய கருடன் விலகிச் சென்று விட்டதாம்.. சென்றவர்கள் கோவிலுக்கு எதிரேயிருந்த மண்டபத்தில் தங்கி சிவனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்து திரும்பினார்களாம்.. இது தொடர் கதையாய் தொடர்ந்திருக்கிறது..

என் கணவர் என்னிடம் அடிக்கடி கூறும் மலரும் நினைவுகள் இவை..

‘‘மாட்டு வண்டிகளைக் கட்டிக்கிட்டுப் போவோம்.. தேனூர் கோவிலின் முன்னால் உள்ள மண்டபத்தின் மாடியில் ஜமுக்காளங்களை விரித்து நிலாவை வேடிக்கை பார்த்தபடி தூங்குவோம்.. கோவில் கிணறில் தண்ணி மேலே இருக்கும்.. குடத்தால் தண்ணீரை முகர்ந்து எடுக்கலாம்.. அவ்வளவு கிட்ட இருக்கும் தண்ணீரில் உள்ள தூசி, தும்புகளை இறைத்து ஊற்றினால் உடனே நீர் சுரக்கும்.. குடித்துப் பார்த்தால் தேங்காய் தண்ணீரைப் போல அத்தனை சுவையாக இருக்கும்.. மண்டபத்தில் கொண்டு போயிருக்கும் அரிசி, பருப்பு, காய்கறிகளை வைத்து சாப்பாடு சமைத்து பொங்கல் வைப்பார்கள்.. நாங்கள் (சிறுவர்கள்) சோழவந்தான் ஆற்றில் குளித்து விட்டு பசியோடு வருவோம்.. சாமிக்கு பொங்கலைப்

படைத்து கும்பிட்டு விட்டுச் சாப்பிட்டுத் தூங்குவோம்.. அடுத்த நாள்தான் திரும்பி வருவோம்..”

மூன்று நாள் பயணமாக அவர் விவரித்த தேனூர் பயணம் கேட்பதற்கு பக்தி கலந்த சுவராஸ்யத்துடன் இருக்கும்.. அந்தக் கோவிலில் என் மகன் அள்ளிப் பணம் போடும் வேண்டுதலை நிறைவேற்ற சென்றிருந்தோம்.. என் கணவரின் மலரும் நினைவுகளில் வந்த மண்டபங்கள் இடிந்து மண் குவியலாகக் கிடந்தன.. எளிய குரு சிவன் கோவிலின் மூலஸ்தானம் நான்கு தூண்களும் மேலே ஒரு சதுர வடிவிலான கல்லுமாக அசைந்தாடிக் கொண்டிருக்க உள்ளே அகிலத்தையெல்லாம் காத்து அருள் பாலிக்கும் சிவ பெருமான் லிங்க வடிவில் இருந்தார்.. கிணறும் சிதில மடைந்த நிலையில் இருந்தது..

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை வார்த்தைகளால் கூற இயலாது.. கண்கள் கலங்கின.. அக்கோவிலின் பெருமைகளைப் பற்றி அந்த ஊரில் உள்ளவர்கள் வியந்து சொன்னார்கள்.

சிறிய எளியகுரு சிவன் கோவிலில் தங்கக் கட்டிகள் புதையலாகக் கிடைத்திருக்கின்றன.. அதை அரசாங்கம்

எடுத்துக் கொண்டதாம்.. எடுத்துச் சென்ற அரசாங்கம் அவற்றைக் கொண்டு இடிந்து கிடக்கும் சிவன் கோவிலை எடுத்துக் கட்டியிருக்கலாம்.. செய்யவில்லை.. ஐந்து தலை நாகம் வந்து சிவ லிங்கத்திற்குப் பூப்போட்டு வணங்குமாம்.. அத்தகைய பெருமை கொண்ட கோவிலுக்குச் சொந்தமான மானிய நிலங்களின் மதிப்பு பல கோடியாம்.. அவற்றை அனுபவித்து வரும் மானியதாரர் தேனூரின் முந்நாள் பிரசிடெண்டாம்.. அவரது மனைவி தேனூர் கிராமத்தின் இந்நாள் பிரசிடெண்டாம்.. மானியதாரரான கிராம பிரசிடெண்ட் மனது வைத்தால் சிவன் கோவில் எழும்பி விடும்.. இவரும் மனம் வைக்கவில்லை..

என்னால் என்ன செய்ய முடியும்..? என் எழுத்திற்கு சக்தி இருந்தால் தேனூரில் உள்ள எளியகுரு சிவன் கோவில் எழுந்து நிற்கும் என்ற வைராக்கியத்துடன் முகநூலில் எனது கணக்கில் தினந்தோறும் தேனூர் சிவன் கோவிலைப் பற்றி ‘கதை கேக்க வாரீகளா..’ என்று பதிவு போட்டுக் கொண்டே இருக்கிறேன்.. காலம் கணியவில்லை..

இதுவே வெளிநாடாக இருந்திருந்தால் ஒரு எழுத்தாளரின் குரல் பரவியிருக்கலாம்.. இடிந்து கிடக்கும் சிவன் கோவில் எழுந்து நின்றிருக்கலாம்..

என்ன செய்வது..? என்றேனும் ஓர்நாள் தேனூர் சிவன் கோவில் எழுந்து நிற்கும்.. அதன் கும்பாபிஷேகத்தை கண்குளிர நான் பார்ப்பேன் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து பதிவு செய்து கொண்டேயிருப்பேன்..

நான் எண்ணியிருப்பது நிச்சயமாக ஈடேறும்...

சரிதானே..?

**- நட்புடன்**

**முத்துலட்சுமி ராகவன்**

# அத்தியாயம் 204

**ந**ந்தினிக்குப் பிடித்தமான W வடிவ மலைப் பாதையில் வளைத்து திரும்பி வயநாட்டு மலைப் பாதையில் விரைந்தேறியது ரவிச்சந்திரனின் கார்..! அவனை ஒட்டி அமர்ந்து தோள் சாய்ந்திருந்த நந்தினியின் கை அவனது கையை வளைத்திருந்தது.. ஆலப்புழாவில் கழித்த நாள்களின் இனிமை மனதில் நிரம்பியிருக்க இமை மூடி சரிந்திருந்தாள் நந்தினி.. எவர்க்கும் வசப்படாத அவள் மனதை தன் வசப்படுத்தி விட்ட வெற்றிக் களிப்புடன் காரைச் செழுத்திக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. இருவர் மனங்களிலும் காதல் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது..

ரவிச்சந்திரன் இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கக் கூட முடியாமல் துடித்துப் போனாள் நந்தினி.. உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு என்று அவளது விழிகள் அவனிடம் வினவிக் கொண்டிருந்தன.. நீயே எனக்கு அனைத்துமானவன் என்று அவளது பார்வை அவனிடம் மண்டியிட்டது.. நீ வேண்டும் என் வாழ்வின் இறுதிவரை மட்டுமல்ல.. அதையும் தாண்டி எனது அனைத்து ஜென்மங்களிலும் உனையே நான் காதலனாக, கணவனாக

அடைய வேண்டும் என்று அவனது காதருகே அவள் முணுமுணுத்தபோது அவனது மனம் இறக்கை கட்டி வானில் பறந்தது..

அவனைக் காவலனாக பாவித்து எட்டி நின்ற நந்தினியா இவள் என்று அவன் ஆச்சரியப்படும் அளவிற்கு அவள் அவன் மீது பித்தாகிப் போனாள்... அதை அவளது அனைத்துச் செயல்களின் வாயிலாக அவனுக்கு உணர்த்தினாள்.. என் கண்ணம்மா என்று மனம் நிறைந்து அவன் அவளை ஆட்கொண்டான்..

நாள்கள் இனிமை நிரம்பியவையாக மாறிப் போயிருந்தன.. காதல் தன் மனதில் இல்லையென்றவளை காதலாகிக் கசிந்துருக வைத்து விட்டான்.. அவளும் அவன்மீது உயிரை வைத்து விட்டாள்..

**“உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்..**

**உன்னை உள்ளமெங்கும் அள்ளித் தெளித்தேன்..**

**உறவினில் விளையாடி - வரும்**

**கனவுகள் பலகோடி..”**

காரில் ஓடிக் கொண்டிருந்த சிடி பிளேயரில் ஒலித்த பாடல் காற்றில் தவழ்ந்து வந்து அவர்களின் காதுகளில் நுழைந்தது.. மனதின் இதமான உணர்வுகள் அதிகரித்ததில் இன்பமான ஓர் சுமையை உணர்ந்தாள் நந்தினி..

“பாஸ்..”

அவளது முணுமுணுப்பான அழைப்பு அவனது நாடி நரம்பெங்கும் வியாபித்துக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டது.. அவளை ஆட்கொள்ளும் வேட்கை அவனுள் எழுந்தது..

“சொல்லுடி..” கரகரத்த குரலில் பதிலுக்கு முணுமுணுத்தான்..

உண்மையில் அரண்மனைக்குக் கட்டாயம் செல்லத்தான் வேண்டுமா என்று கேட்கத்தான் அவள் அழைத்தாள்.. அவனுடனான தனிமை நீள வேண்டுமென அவள் மனம் விரும்பியது.. இப்படியே எங்காவது பயணித்தால் என்ன என்ற ஏக்கம் வந்தது.. அவளும் அவனுமாக பயணித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.. முடிவே இல்லாமல் அப்பயணம் நீண்டு கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசை கொண்டாள்.. அதை அவனிடம் சொன்னால் அவ்வளவுதான் என்ற எண்ணம் தோன்றியதில் பேச்சை

மாற்றி விட்டாள்.. அவளது ஆசையை மட்டும் அவன் அறிந்து விட்டால் காரை வய நாட்டு அரண்மனைக்குச் செலுத்த மாட்டான்.. வந்த வழியில் திரும்பி விடுவான்.. உலகத்தைத் தனியே சுற்றியவன் அவளுடன் சுற்றப் பறந்து விடுவான்.. எவரைப் பற்றியும் கவலைப்பட மாட்டான்..

‘இவனைப் பற்றித் தெரிந்துக்கிட்டே வாய் விடப் பார்த்தேனே..’ தனக்குத்தானே மானசீகமாக ஒரு குட்டு வைத்துக் கொண்டு..

“ஐ லவ் யு..” என்றாள் நந்தினி..

“ஐ லவ் யு டி..” அவளது உச்சந்தலையில் கணப் பொழுதில் முத்தம் பதித்துத் திரும்பிக் கொண்டான்..

“அத்தை என்னன்னு நினைப்பாங்க..? என்னை வேற்று மனுஷியைப் போல ட்ரீட் பண்ணாம ரிலேட்டிவ் போல ட்ரீட் பண்ணினாங்க.. வேலை செய்ய வந்தவளுக்கு அதிக இடம் கொடுத்துட்டோமோன்னு ஃபீல் பண்ணுவாங்களோ..? நான் தப்புச் செய்துட்டேனில்ல..?” கவலையில் தழதழத்தது அவளது குரல்..

“எங்கே...?” அவன் அலுத்துக் கொண்டான்..

அவளது கவலைக்கும் அவனது அலுப்பான கேள்விக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையே என அவள் குழம்பிப் போனாள்..

“வாட்’ஸ் தி மீனிங் திஸ் ‘எங்கே’..?”

“எங்கே மீன்ஸ்.. நீ எங்கே என்னைத் தப்புச் செய்ய அலோவ் பண்ணினாய் என்று பெருமூச்சு விடுவது.. ஆலப்புழாவின் படகுவீட்டில் நாள் பூரா சேர்ந்துதான் இருந்தோம்.. சேர்ந்துதான் தூங்கினோம்.. ‘சேர..’ முடியலையே.. தப்புப் பண்ணிடனும்னு ஆன மட்டும் டிரை பண்ணினேன்.. தடா போட்டுட்டியேடி..”

அவன் அவளைப் பார்வையிலேயே ‘ஸ்வாஹா ’ பண்ணியதில் அவள் முகம் சிவந்து..

“ச்சீய்..” என்று சிணுங்கி அவன் கையைக் கிள்ளினாள்..

அவளது வெட்கம் கலந்த கிள்ளல் அவனுக்குப் பிடித்திருந்தது..

“ஹா.. ஹா..” என அதை ரசித்து அனுபவித்தான்.. தொலைவில் யானையின் தந்தம் போன்ற அழகுடன்

வெண்ணிறக் கடைசலுடன் வெள்ளை மாளிகை போன்ற வயநாட்டு அரண்மனை தெரிந்தது..

‘இந்த மாளிகைக்கு நான் மருமகளா..?’ மலைத்தாள் நந்தினி..

‘இவனை யார் இவ்வளவு பெரிய கோடிஸ்வரனாகப் பிறக்கச் சொன்னது..?’ கோபம் கோபமாக வந்தது..

‘இதில் ராஜ பரம்பரை வேறு..’ பெருமூச்சு விட்டாள்..

“என்ன..?” புருவங்களை உயர்த்தி மயக்கினான் அவளின் மாயவன்..

“நத்திங்..” முகம் வாடினாள் நந்தினி..

“நீ நத்திங் சொல்லும் விதமே சரியில்லை.. அதுக்குள்ளே மெனி திங்க் இருக்கு.. என்னன்னு சொல்லுடி..”

“உங்க அப்பா என்னைப் பத்தி என்ன நினைப்பார்..?”

“ஆஹா..! வாயாடி மருமகள் கிடைத்துட்டாள்ன்னு நினைப்பார்.. அது என்ன.. எங்க அம்மாவை மட்டும் அத்தைன்னு உறவு கொண்டாடற.. அப்பாவை மட்டும் உங்க அப்பான்னு சொல்கிற..? அத்தை உறவு.. மாமா பகையா..?”

“ம்ப்ச்.. விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதீங்க.. அவர் மீது எனக்கென்ன பகை..? அத்தையைப் பார்த்தால் பாசம் தான் முதலில் வருகிறது.. உங்க அப்பாவிடம் பயமும், மரியாதையும் வருகிறதே..”

அப்படித்தான் இருந்தது.. வீணாவிடமும், ரம்ய மாலினியிடமும் ஒட்டுதலாகப் பேசிப் பழகும் நந்தினிக்கு ரவிவர்மனைக் கண்டுவிட்டால் வாயடைத்து விடும்..

பசையில்லாமல் வாய் ஒட்டிக் கொள்ள எதுவும் பேசாமல் மரியாதையான பார்வையுடன் கடந்து சென்று விடுவாள்.. அதிகமாகப் பேச மாட்டாள்..

“அவரிடம் பயமா..? நான் அவருடைய மகன்.. என்னிடம் கொஞ்சமாவது பயப்படுகிறாயா..? எட்டு ஊருக்குக் கேட்கிறதைப் போல வாயடிக்கிறாயே.. என்னைப் பார்த்தால் உனக்குப் பயம் வரலையா..?”

“ஊஹும்.. காதல்தான் வருது..”

நந்தினி தலை சாய்த்திருந்த அவனது தோளை செல்லக் கடி கடித்தாள்..

“ஹேய்..” என்று ரவிச்சந்திரன் காரை நிறுத்தி விட..

“ஹையோ.. சாமி.. கிளம்பிராதீங்க..” என்று காதைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடுவதைப் போலப் பாவனை செய்து அவன் வேகத்தை அணை போட்டு தடுத்து நிறுத்தினாள்..

“அங்கே நீ தனியா சிக்காமலா போவ..? அப்ப இருக்குடி உனக்கு..”

சூளுரைத்தபடி அவன் காரைக் கிளப்ப.. நந்தினிக்குள் அவனிடம் தனியாக சிக்கி விடவேண்டும் என்ற தாபம் எழுந்தது.. அப்போது அவளுக்கு என்ன இருக்கும் என்ற நினைவில் உடல் சூடேறியது..

அரண்மனையைக் கார் நெருங்கி விட்டது.. ரவிச்சந்திரனின் பிரத்யேகமான ஹாரன் ஒலியில் அலறியடித்துக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்த செக்யூரிட்டி கேட்டை விரியத் திறந்து விட்டான்.. நீண்ட பாதையில் கார் ஓடி நின்றது..

“எண்ட அம்மே..!” எங்கிருந்தோ பாய்ந்து வந்தாள் ஓமனா..

“நீ அரண்மனைக்குள் எண்டரானா போதும்.. இவளுக்குக் கரெக்டா மூக்கு வியர்த்து விடுது.. எனக்குப்

போட்ட சொக்குப் பொடியில் துளியூண்டை இவள் பக்கம் வீசி விட்டாயா..?” கண்சிமிட்டினான் ரவிச்சந்திரன்..

“சொக்குப் பொடியை மூட்டை மூட்டையாய் ஸ்டாக் வைத்து என் பக்கமா அள்ளி வீசிக்கிட்டு இருக்கிறது நீங்கதான் பாஸ்.. எனக்கு அது கருப்பா, சிகப்பான்னு கூடத் தெரியாது..” காரை விட்டு இறங்கினாள் நந்தினி..

“வரனும் அம்மே..” ஓமனாவுக்கு மூச்சு வாங்கியது..

“வராம எங்கே போகப் போகிறா..? போக்கிடம் இல்லாமல்தானே இங்கே வந்து டேரா போட்டிருக்கிறா..?” நிஷ்டூரமாக முறைத்தபடி தோட்டத்திலிருந்து வெளிப்பட்டாள் அஜந்தா..

அவளைக் கண்டதும் ஓமனாவின் உற்சாகம் காற்றுப் போன பலூனைப் போலக் குறைந்தது.. காரிலிருந்த பெட்டிகளை இறக்குவதைப் போல ஒளிந்து தப்பித்தாள்..

“நந்தினிக்குப் போக்கிடம் இருக்கிறது அஜந்தா.. உனக்குத்தான் இல்லை.. இதை திரும்பத் திரும்ப நினைவு படுத்திப் படுத்தி எனக்கே போரடிச்சுருச்சு.. உனக்குத்தான் போரடிக்க மாட்டேங்குது.. நீயெல்லாம் போக்கிடத்தைப்

பற்றியும், டேரா போடறதைப் பத்தியும் வாயைத் திறந்து பேசவே கூடாது..” கொடுத்துக் கட்டினான் ரவிச்சந்திரன்..

ஓமனாவின் முன்னால் பேச்சு வாங்க நேர்ந்ததில் அஜந்தாவின் செக்கச் சிவந்த முகம் கருத்து விட்டது.. அவளுக்குத் தெரியும்.. அவளைப் பார்த்து ரவிச்சந்திரன் பேசிய பேச்சுக்களை ஓமனா அப்படியே சேகரித்துச் சென்று வீணாவிடமும் ரம்ய மாலினியிடமும் ஒப்பிப்பாள் என்பது.. ரம்ய மாலினி அஜந்தாவிடம் வார்த்தையாட மாட்டாள் தான்.. அதைத் தன்னைப் பற்றிய அவளின் பயமாக அஜந்தா வெளியில் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டாலும் மனதுக்குள் புழுங்கிப் போவாள்..

‘நீயெல்லாம் எனக்கு இணையான்னுதானே இந்த ரம்ய மாலினி பிஹேவ் பண்றா..’

ரம்ய மாலினியிடம் எப்போதுமே ஓர் நிமிர்வு இருக்கும்.. அவள் ரவிச்சந்திரனின் தங்கை என்ற கர்வத்தில் உண்டான நிமிர்வு அது என்பதில் அஜந்தா வெகுண்டு போவாள்..

‘இவளது திமிரை அடக்கனும்..’

இது ஒன்றுதான் அவளுக்கும் அவளது குடும்பத்தினருக்குமான முக்கிய குறிக்கோளாக இருந்தது..

‘வீணாவின் மகளுக்கு இத்தனை திமிரா..?’ இதுதான் அவர்களின் எண்ணமாக இருந்தது..

தன்னைப் பற்றிப் பேசினால் பொறுத்துப் போகும் வீணா, தன் மகளைப் பற்றிய பேச்சு வந்தால் பொங்கி எழுந்து ஒரு கை பார்த்து விடுவதில் அஜந்தாவுக்கும் அவளது குடும்பத்தினருக்கும் ஆவேசம் வந்தது.. வீணாவின் கோபத்துக்கு அஞ்சி அருள்மொழிவர்மனும், யாழினியும் ரம்ய மாலினியைப் பற்றிய பேச்சு வந்தால் தட்டிக் கழித்துத் தப்பித்து விடுவதில் அந்த ஆவேசம் அதிகரித்தது..

ரம்ய மாலினியின் அந்த நிமிர்வை உடைத்து பணிய வைப்பதற்காகவே அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வெறி கொண்டான் அபராஜிதன்.. அதற்கு தூபம் போட்டுத் தூண்டி விட்டாள் அஜந்தா..

“அவ கொட்டத்தை அடக்கனும் சேட்டா.. ஈ கொட்டாரம் அவளிண்ட சேட்டனோட கொட்டாரம்ங்கிற ஆணவம் அவளுக்கு.. அப்படியில்லை.. ஈ கொட்டாரம் எண்ட சேட்டனோட கொட்டாரம்ன்னு நான் அவளைப் பார்த்து விரலைச் சொடுக்கிச் சொல்கிற திவசம் கிட்டனும் சேட்டா..” அபராஜிதனிடம் பொருமுவாள்..

அவளது அடி மனதில் ஒன்றும் அப்படிப்பட்ட ஆசையில்லை.. தான், தனது என்பதில் முதலிடம் வகிப்பவள் அஜந்தா.. எந்த ஒன்றையும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுத்து விட மாட்டாள்.. அவளாவது.. அந்த அரண்மனையை அபராஜிதனுக்கு விட்டுக் கொடுப்பதாவது... ரவிச்சந்திரனின் அனைத்துச் சொத்துக்களுக்கும் அவளே அதிபதியாகி விட வேண்டும் என்ற கனவில் இருப்பவள் அவள்.. ரவிச்சந்திரனின் சொத்துக்களுக்கு அவனையே 'அதிபதி' என ஒப்புக் கொள்ளாதவள்..

என்ன ஒன்று.. அவளால் ரவிச்சந்திரனின் நிழலைக் கூட நெருங்க முடியவில்லை... அபராஜிதனோ ரம்ய மாலினியை நிழல் போலப் பின் தொடர்ந்து கொண்டேயிருந்தான்.. என்றைக்கு அஜந்தா ரவிச்சந்திரனை மயக்கி அனைத்து சொத்துக்களுக்கும் அதிபதி ஆவது..?

எட்டாத தொலைவில் இருந்த திட்டத்தை விட கிட்டத்தில் இருந்த திட்டத்தைச் செயல்படுத்த முனைவதே சாலச் சிறந்தது என்று தமையனை முடுக்கி விட்டாள் அந்தக் கெட்டிக்காரி..

'முதலில் இவன் இந்த ரம்யாவைக் கல்யாணம் பண்ணிச் சொத்துக்களைக் கைப்பற்றட்டும்.. அதற்கப்புறம் இந்த

ரம்யாவைக் கதற வைத்தே ரவிச்சந்திரனுக்கு பார்யாளாகி அவனோட அத்தனை சொத்துக்களுக்கும் நான் சொந்தக்காரியாக்கிக் காட்டறேன்..’

தெளிவாக கட்டம் கட்டினாள் அஜந்தா.. அவள் சொல்லாமலே ரம்ய மாலினியைக் கட்டம் கட்டினான் அபராஜிதன்.. அவளோ அவனிடமிருந்து ஒவ்வொரு முறையும் தப்பித்து வீணாவின் புடவை முந்தானையில் ஒளிந்து கொண்டாள்.. வீணா விழித்துக் கொண்டாள்.. இரவு பகலாய் மகளைக் கா வல் காக்க ஆரம்பித்தாள்.. நினைத்தது நடக்காததில் வெறி கொண்ட அபராஜிதன் அத்து மீற யத்தனிக்க.. விவரம் ரவிச்சந்திரனின் செவிகளை எட்டி விட்டது..

அன்று வாங்கிய உதையை அபராஜிதன் ஆயுளுக்கும் மறக்க மாட்டான்.. அவந்திகா ரவிச்சந்திரனின் காலைப் பிடித்துக் கதறியதால் அவனை ரவிச்சந்திரன் குற்றுயிரும் குலையுயிருமாக விட்டு வைத்தான்... இல்லாவிட்டால் அன்றே அபராஜிதன் வயநாட்டு மலை வெளியில் புதைந்து போயிருப்பான்..

அஜந்தாவே மிரண்டு விட்டாள்.. அபராஜிதன் வாங்கிய அடி அவளுக்கும் சேர்த்ததுதான் என்பதில் ஊமையாகிப் போனாள்.. அபராஜிதனை வயநாட்டு அரண்மனையை விட்டு ரவிச்சந்திரன் வெளியேற்றிய போது யாழினி உள்பட எவரும் வாயைத் திறந்து அதை ஆட்சேபிக்கவில்லை..

அஜந்தாவின் மனதில் அந்த வன்மத்தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.. ரவிச்சந்திரனையும், ரம்ய மாலினியையும் சுட்டெரிக்க அந்தத்தீ கால, நேரம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது..

# அத்தியாயம் 205

“**சு**கமானோ அம்மே..?”

ஓமனா அஜந்தாவின் கண்களில் பட்டு விடாமல் மறைவாக நின்றபடி நந்தினியிடம் குசலம் விசாரித்தாள்.. சுகம்தான் என்று நந்தினி பதில் சொல்வதற்கு முன்னால் அஜந்தா முந்திக் கொண்டு முன்னால் வந்து எட்டிப் பார்த்து..

“இவள் சுகத்திற்கு என்ன கேடு..? இதைக் கேட்கத்தான் நீ ஈ கொட்டாரத்தில ஜோலி பார்க்கிறயோ..?” என்று சிடுசிடுத்தாள்..

ஓமனாவின் முகம் வாடி விட்டது.. அஜந்தா அவளைத் திட்டியதைக் கூட அவள் பெரிதாக எண்ணவில்லை.. அஜந்தா திட்டாமல் இருந்தால்தான் வியப்பு.. வயநாட்டு அரண்மனையில் வேலை செய்யும் அனைத்து வேலையாள்களையும் அரட்டிப் பயமுறுத்தித் தான் அந்த அரண்மனையின் வருங்கால ராணி என் பதை நிலை நிறுத்த முயன்று கொண்டிருப்பவள் அஜந்தா.. தலைக்கனம் பிடித்தவள்.. வேலையாள்களைத் துச்சமாகப் பார்ப்பவள்.. பாவிப்பவள்.. அவள் திட்டுவதற்கெல்லாம் சோர்ந்து நின்றால்

வயநாட்டு அரண்மனையில் எந்த வேலையாளும் வேலை செய்ய முடியாது.. நந்தினியிடம் குசலம் விசாரித்துக் குழாவ முடியவில்லையே என்பதால் தான் ஓமனா முகம் வாடிப் போனாள்..

“அதுதானே.. என் சுகத்திற்கு ஒரு கேடும் வராது ஓமனா.. டோன்ட் வொர்ரி.. என் அப்பாம்மாவின் வீட்டில் பிறந்து, அவங்க பணத்தில் படித்து வளர்ந்தவள் நான்.. என் சுகம் நன்றாகத்தான் இருக்கும்.. மத்தவங்களுக்கு கேடு நினைக்காதவள் நான்.. எனக்கு எந்த ஒரு கேடும் வரவே வராது ஓமனாக்குட்டி.. இதுக்கு நம்மைப் படைச்ச ஆண்டவனே கேரண்டி கொடுப்பார்.. மனசிலாயி..”

நந்தினியின் உள் குத்தில் அஜந்தா கொதித்துப் போனாள்..

‘என்ன ஒரு தைரியம்..!’ அவளது ரத்த அழுத்தம் எகிறியது.. என் அப்பாம்மாவின் வீட்டில் பிறந்து, அவங்க பணத்தில் படித்து வளர்ந்தவள் என்று நந்தினி குத்திக் காட்டியதில் அஜந்தா பேச்சு வராமல் கோபத்தில் கொந்தளித்தாள்.. நந்தினி அவளுடைய அப்பாம்மாவின் பணத்தில் வளர்ந்தவள், அஜந்தா அப்படி வளரவில்லை என்பதை நாசுக்காக சுட்டிக் காட்டி விட்ட நந்தினி யின்

கெட்டிக்காரத்தனத்தில் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. என்னைத்தானே சொன்னாய் என்று கேட்கவும் முடியாது.. அப்படிக் கேட்டால் நந்தினி என்ன பதிலைச் சொல்வாள் என்று அஜந்தாவுக்குத் தெரிந்திருந்தது.. நான் என்னைப் பற்றிச் சொன்னேன்.. நீ அப்படியில்லாமல் உன் தாய்மாமன் மகனின் தயவில் வளர்வதால் உனக்குக் குத்துகிறது.. அதற்கு நான் என்ன செய்வேன் என்று இமை கொட்டுவாள்..

‘தேவைதானா..?’

அஜந்தா யாழினியிடம் கோள் மூட்ட அரண்மனைக்குள் விரைந்தாள்..

“நந்தினி மேடத்திண்ட சாதுர்யம் எவருக்கு வரும்..? அஜந்தா அம்மே கொட்டாரத்துக்குள்ள ஓடிப் போயி..” ஓமனா மகிழ்ந்து போனாள்..

“பாவம்.. ஆசையாசையா என்னிடம் நலம் விசாரிக்க வந்தவளை ஓட்டி விட்டுட்ட இல்ல.. இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது ஓமனா.. துரத்தப் போகுது பாரு..” நந்தினி பயமுறுத்தினாள்..

“அதில்ல அம்மே.. ஈ கொட்டாரத்தில ஜோலி பாக்கற பணியாள்களோட பாவமல்லோ ஆ அம்மையைத் துரத்தி..? ஞான் எந்தா செஞ் ..?”

“அப்படிங்கிற..?”

“ஆமாமல்லோ..”

“அப்பச் சரி.. எண்ட ஓமனா சொன்னா ஞான்..”

“மலையுச்சியில இருந்து அம்மே குதிக்குமோ..?”

“அது சரி.. என்னை மலையுச்சியில இருந்து உருட்டி விட அம்புட்டு ஆசை..? அப்படியெல்லாம் வாய் விட மாட்டேன்.. எண்ட ஓமனா சொன்னா ஞான் பேச்சை விட்டிரும்ன்னுதான் சொல்ல வந்தேன்.. அதுதான் சாக்குன்னு நீ மலையுச்சியில இருந்து உருட்டி விடத் தயாராகிட்ட.. எந்தா பாசம்..? எந்தா பாசம்..! ரோமாஞ்சனம் உண்டாகிப் போயி..”

“எந்தா அம்மே இது..? நந்தினி மேடம் சம்சாரிச்சது அதல்லோ..” ஏக்கமாகிப் போனாள் ஓமனா..

“அதல்ல ஓமனா.. ஞான் வேற கேட்டகிரி.. ஓமனா சொன்னா ஞான் ஓமனாக் குட்டியை மலையுச்சியில இருந்து உருட்டி விடும்.. ஞான் மட்டும் ஸேஃபா நின்னுக்கும்..”

“அம்மைக்கு ஈ ஓமனாக்குட்டியிண்ட பிரேமம் இல்லையோ..?”

“வல்லிய பிரேமம் உண்டு ஓமனா.. பட்ஷே.. மலையுச்சியில இருந்து குதிக்கிற அளவுக்கு பிரேமமில்லோ.. கேட்டோ..” ஓமனா சோகமாக பெட்டிகளைச் சுமந்து கொண்டு போனாள்..

எதிரே வந்த ரம்ய மாலினி ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துவிட்டு..

“நீங்க வந்திருக்கீங்க.. உங்களைப் பார்த்த பின்னாலும் ஓமனாக்குட்டி முகத்தில இத்தனை சோகமா..? நம்பவே முடியலைங்க..” என்று நந்தினியிடம் சொன்னாள்..

“என்னைப் பார்த்த பின்னால்தான் சோகமாகிட்டா..” என்றாள் நந்தினி..

“ஏனாம்..?”

“என்னை மலையுச்சியில இருந்து தள்ளி விட முடியலையாம்..”

“என்னது..?”

புரியாமல் விழி விரித்த ரம்ய மாலினி, நந்தினிக்கும் ஓமனாவுக்கும் நடுவில் நடந்த உரையாடலைப் பற்றிக் கேட்டதும் சிரிக்க ஆரம்பித்தாள்..

“நீங்க இருக்கீங்களே.. எப்படித்தான் இப்படிப் பேசறீங்களோ..” ரம்ய மாலினி சிலாகிக்க..

“நீதான் இவளை மெச்சிக்கனும்.. உண்மையில் இவ ஜீரோ.. ஹீரோயின் போல நீ பில்ட் அப் கொடுக்காதே..” ரவிச்சந்திரன் நந்தினியைப் பார்வையில் தின்றபடி மட்டம் தட்டுவதைப் போலப் பேசினான்..

“நான் ஜீரோவா..?” நந்தினி வெட்டும் பார்வையுடன் அவனுடன் சரசமாக மோதினாள்..

“யெஸ் மை டியர்..” கொஞ்சியவன் தங்கை பக்கத்தில் நிற்கும் நினைவு வந்ததில்..

“மை டியர் செக்கரட்டரி..” என்று பிழை திருத்தம் செய்தான்.. அதை கண்டு கொண்ட அவன் காதலியின் விழிகள் மின்னின..

“பாஸ் யாராம்..?” பொய் சண்டையை அவள் தொடர்ந்தாள்..

“நம்பர்ம்மா.. நம்பர் ஒன்..” அவன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்..

“இந்த நம்பர் ஒன் பக்கத்தில ஜீரோவான நான் சேரச்சேர மதிப்பு அதிகரிக்கும் பாஸ்.. பெரிய பிஸினெஸ் மேக்னெட்டுன்னு சொல்லிக்கறீங்க.. இந்தச் சின்னக் கால்குலேஷன் கூடத் தெரியலையே..” அவனைப் போலவே புருவங்களை உயர்த்தி இறக்கினாள் நந்தினி..

“வாவ்..” கைகளைத் தட்டிப் பாராட்டினாள் ரம்ய மாலினி..

“அண்ணா.. நீ கிளீன் போல்டு..”

“உனக்கும் தெரிஞ்சு போச்சா..?”

ஆழமான பார்வையால் நந்தினியைக் கிறங்கடித்தபடி தங்கையிடம் கேட்டான் ரவிச்சந்திரன்.. அவன் எதைச் சொல்கிறான் என்று புரியாமல்..

“என்ன சொல்கிற..?” என்று பதிலுக்குக் கேட்டாள் ரம்ய மாலினி..

“ச்சும்மா..”

ரவிச்சந்திரன் இமைகளைச் சிமிட்டிக் கொண்டிருந்த போது

வீணா வந்து விட்டாள்.. "நந்தினி.. வாம்மா.."

அவள் இருகைகளையும் விரிக்க.. ரவிச்சந்திரனை மறந்து அவனது அன்னையின் கைகளுக்குள் பசுவிடம் ஓடும் கன்றாய் பாய்ந்து தஞ்சம் புகுந்த நந்தினி வீணாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு..

"அத்தை..!" என்று செல்லம் கொஞ்சினாள்..

"ஆ மனுஷி அஜந்தாவிட அத்தை.. கேட்டே.."

கோபத்துடன் ஒலித்த யாழினியின் குரலில் நந்தினி பதறி விலக.. அதில் சினம் துளிர்க்க மாமியாரைப் பார்த்தாள் வீணா.. அஜந்தா பின் தொடர அங்கே வந்து கொண்டிருந்தாள் யாழினி..

"நந்தினி வந்து கொஞ்ச நேரம் கூட ஆகலை.. அதுக்குள்ள பாட்டியிடம் பத்த வைச்சிட்டா..." முணுமுணுத்தாள் ரம்ய மாலினி..

சினத்துடன் தலையை லேசாக அசைத்து அதை ஆமோதித்தாள் வீணா.. அவளது முகம் இறுகியிருந்தது..

“நினக்கு இது சரியல்ல வீணா..”

நந்தினியை முறைத்தபடி மருமகளைக் கண்டித்தாள் யாழினி.. ரவிச்சந்திரனின் கண்கள் இடுங்கின.. அவனது பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்தாள் யாழினி.. எதைச் செய்தால் பேரனின் கோபத்திற்கு ஆளாக நேருமோ அதையே அவள் பேரன் அரண்மனைக்குள் காலடி வைத்த உடனே செய்து வைப்பதைக் கண்ட அருள்மொழிவர்மன் நொந்து போனவராக தலைமீது கை வைத்து நின்று விட்டார்..

“எது சரியில்லை அத்தை..?”

வீணா மாமியாரின் முகத்தை நேருக்கு நேர் பார்த்துக் கேள்வி கேட்ட விதத்தை மெச்சும் புன்னகை ரவிச்சந்திரனின் இதழ்களில் உதித்தது..

இப்படியொரு நிமிர்வைத்தான் அவன் தன் தாயிடம் எதிர்பார்த்தான்.. ரவிச்சந்திரனின் தாய் ஊமையாக நிற்பதா..? நியாயத்திற்காக உரத்த குரல் கொடுத்துப் போராட வேண்டாமா..?

“எந்துவெண்டு பறஞ்ஞோ..?”

“ஆமாம் அத்தை..”

“ஈ மனுஷி ஆரானு..?”

“நந்தினி..”

“ஆ பேரை ஞான் அறியும்.. நந்தினியாம் நந்தினி.. ஈ மனுஷி ஆரானு..? நிண்ட மோனோட செக்கரட்டரி.. ஜோலி பார்க்க வந்து..”

“அதுக்கென்ன அத்தை..? இது தெரிந்த விஷயம் தானே..”

“ஈ. மனுஷியிடம் நீ கொஞ்சிக் கொஞ்சிச் சம்சாரிச்சு.. அஜந்தா நிண்ட கணவனோட அணியத்தி மோள்.. அவளிண்ட ஓர் திவசமும் பிரியத்துடன் சம்சரிச்சதில்ல..”

“பிரியம் தானா வரனும் அத்தை..”

“அதைத்தான் ஞான் பறஞ் .. நினக்கு எண்ட மோளிண்ட குடும்பத்து மேல துளியளவும் பிரியமில்ல.. கேட்டே..”

“பிரியம் இல்லாமல்தான் இத்தனை வருசமா என் நாத்தனாரையும் அவங்க குடும்பத்தையும் ‘என் அரண்மனை’யில் தங்க அனுமதிச்சிருக்கேனா அத்தை..?”

வீணா நிதானமாக கேட்ட கேள்வியில் விதிர்த்துப் போய் விட்டாள் யாழினி.. வயநாட்டு அரண்மனையை என்

அரண்மனையென்று யாழினியின் மருமகள் சொந்தம் கொண்டாடுகிறாளா..? யாழினியின் மகளையும், அவளது குடும்பத்தையும் வயநாட்டு அரண்மனையில் தங்க யாழினியின் மருமகள் அனுமதித்திருக்கிறாளா..?

“எதி பறஞ்ஞாலும் ஆலோசிச்சுப் பறஞ்ஞுனும்.. கேட்டே..”

“ஆலோசிச்சுத்தான் பேசறேன் அத்தை.. இது என் அரண்மனை..”

“நீ எவரிடம் பறஞ் ன்னு அறிஞ் சம்சாரிக்கனும் வீணா.. ஞான் யாழினி.. அருள்மொழிவர்மனோட பார்யா.. ஈ கொட்டாரத்தின் தம்புராட்டி..”

“நான் வீணா.. ரவிவர்மனோட மனைவி.. இந்த அரண்மனைக்கு ராணி..”

இரண்டு பெண் சிங்கங்கள் எதிரெதிர் நின்று மோதிக் கொள்வதைப் போல இருந்து அந்தக் காட்சி.. அரண்மனையின் நுழைவாயில் அருகே மூண்டிருந்த சொற்போரை ரவிவர்மனும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.. மனைவியைத் தடுக்கவோ, கடிந்து பேசவோ

அவர் யத்தனிக்கவே இல்லை.. அமைதியாக இருந்தார்.. அதை யாழினியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“ரவிவர்மா..” அவள் அலறினாள்..

“அம்மே..”

“நிண்ட பார்யா சம்சாரிக்கிறத கேட்டே.. ஈ கொட்டாரத்துக்கு நிண்ட பார்யா தம்புராட்டியெண்டா ஞான் ஆரானு..?”

ரவிவர்மன் மௌனம் சாதித்தார்.. அவருக்குப் பதில் வீணாவே பேசினாள்..

“நீங்க ராஜமாதா..”

“எந்தா..?”

“ஆமாம் அத்தை.. உங்களுக்குக் கல்யாணமாகி இந்த அரண்மனையில் மருமகளா வாழ வந்தப்ப உங்க மாமியார் ராணியா இருந்தாங்க.. உங்க மாமனார் ராஜாவா இருந்தார்.. நீங்க வந்ததும் உங்க மாமியார் ராணிப் பட்டத்தை உங்களுக்குக் கொடுத்துட்டு ராஜ மாதாவாகிட்டாங்க.. மாமாவுக்கும் ராஜா பட்டம் வந்தது.. என் விஷயத்தில் அப்படி நடக்கலையே.. நான் கல்யாணமாகி இந்த அரண்மனைக்கு

வாழ வந்து இரண்டு பிள்ளைகளுக்கும் தாயாகிட்டேன்.. இதோ.. என் பிள்ளைகள் வளர்ந்து பெரியவங்களாகி அடுத்த தலைமுறைக்கான ராஜா, ராணியாய் நிற்கிறாங்க.. இன்னும் எனக்கு ராணி பட்டம் வந்து சேரலையே.. நான் தான் இந்த அரண்மனைக்கு ராணி.. நீங்க ராஜ மாதாதான் என்கிறதை வசதியாய் நீங்க மறந்து போயிட்டிங்களே.. பரம்பரை, பரம்பரையாய் வருகிற பட்டமும் அதிகாரமும் உங்க மாமியாரிடமிருந்து உங்களுக்குக் கிடைத்தது அத்தை.. உங்க பிறந்த வீட்டிலிருந்து அதை நீங்க கொண்டு வரலை.. உங்களுக்கு அடுத்து எனக்கு வர வேண்டிய பட்டத்தையும் அதிகாரத்தையும் உங்க கிட்டேயே தக்க வைச்சுக்கிட்டா அது உங்களுக்கு மட்டும் உரிமையாகிருமா...? நான் வாய் திறந்து கேட்கலை என்கிறதுக்காக கடைசி வரைக்கும் நீங்களே ராணின்னு சொல்லிக்குவீங்களா..? இல்லை அத்தை.. இப்ப இது என்னோட அரண்மனை.. இங்கே ராஜா உங்க மகன்தான்.. மாமா இல்லை.. ராணி நான்தான்.. நீங்க இல்லை..''

இத்தனை தீரமும் கோபமும் உரிமைப் போராட்டமும் எங்கிருந்து வீணாவுக்கு வந்தது..?

அவள் கைபிடித்து இழுத்துப் போகும் நந்தினியைப் பார்த்தார் ரவிவர்மன்.. வீணாவுக்கான உந்து சக்தி நந்தினிதான் என்பதில் அவர் மனம் நந்தினியை வாழ்த்தியது..

அதே எண்ணத்துடன் நந்தினியை உறுத்துப் பார்த்த யாழினியின் மனம் அவளை, ‘அனைத்தும் ஈ பெண் குட்டியாலதான்..’ என்று வெறுத்தது.

ரவிச்சந்திரன் மெலிதான கைதட்டலுடன் யாழினியைக் கேலியாக நோக்கினான்.. பார் என் அம்மாவை.. என்ற இறுமாப்பைக் கொண்ட பேரனின் பார்வையை அந்தப் பாட்டியால் எதிர் கொள்ள முடியவில்லை..

# அத்தியாயம் 206

**யா**ழினியின் மனதில் அலை மோதிய எண்ணம் தான் ரம்ய மாலினியின் மனதிலும் அலைமோதியது.. எண்ணிய விதம்தான் வேறு..

“எல்லாம் நந்தினியாலேதான் அப்பா...” ரவிவர்மனிடம் குதூகலித்தாள் ரம்ய மாலினி..

அரிதாக மலரும் குறிஞ்சி மலரைப் போன்ற மகளின் சிரிப்பில் மனம் லயித்தார் ரவிவர்மன்.. இந்தச் சிரிப்பு அனைத்துப் பொழுதுகளிலும் அவளிடம் நிலைத்திருக்காதா என்று அவரது மனம் ஏங்கியது.. பொறுப்பான மகனாகவே இருந்து விட்டதினால் தந்தையெனும் பொறுப்போடு கடமையாற்ற அவர் தவறி விட்டாரோ..

“நந்தினி வந்த பின்னால் அரண்மனையில் நிறைய நல்ல விஷயங்கள் நடக்குதுப்பா.. அமைதியின் சிகரமான அம்மாவே பெண்சிங்கமா மாறி பாட்டியிடம் பொங்கிட்டாங்களே..” அவள் பொங்கிச் சிரித்தாள்..

“உனக்குப் பாட்டியைப் பிடிக்காதாடா..?” மன நெருடலுடன் கேட்டார் ரவிவர்மன்.

தந்தை, தாயின் மீதான அவரது பாசம் அத்தகையது.. தன் தாயை அவர் நேசித்தார்.. அவரது மகளுக்கு அவருடைய தாயைப் பிடிக்காமல் போவதா..?

“பிடிக்கலைன்னு இல்லைப்பா..” தயக்கத்துடன் தந்தையைப் பார்த்தாள் ரம்ய மாலினி..

“சொல்லுடா..” மகளை ஊக்குவித்தார் ரவிவர்மன்..

“அவங்க எனக்குப் பாட்டியா இருக்கிறதை விட பாஸா இருக்கிறாங்கன்னுதான் சொல்லனும்ப்பா.. அஜந்தாவுக்கும் அவ அண்ணனுக்கும்தான் அவங்க பாட்டியா இருக்கிறாங்க.. என்னிடம் பேத்திங்கிற பாசத்தை அவங்க காண்பித்ததே இல்லைப்பா.. எப்போப் பேசினாலும் அஜந்தாவிடமும், அத்தை மாமாவிடமும் நான் எப்படிப் பணிவா நடந்துக்கனும்னே கிளாஸ் எடுக்கிறாங்க.. அன்பா நடந்துக்கனும்னு சொன்னாக்கூட பரவாயில்லைப்பா.. நம்ம அத்தை, அத்தை மகள்ன்னு நினைத்துக்கலாம்.. இவங்க எதிர்பார்க்கிறது பணிவை.. அதே பணிவை என்னிடம் காட்டச் சொல்லி அஜந்தாவிடம் இவங்க சொல்லி விடுவாங்களா..? அம்மாவிடம் மரியாதையாய், பணிவாய் நடந்துக்கனும்னு அத்தையிடம் சொல்லியிருக்காங்களா..? இல்லையே.. அது ஏன்ப்பா..?”

‘ஏன்..?’ ரவிவர்மனால் பேச முடியவில்லை..

தாய்மை என்பது பாரபட்சம் இல்லாதது என்ற வார்த்தைகள் அவருடைய தாயைப் பொறுத்த மட்டிலும் பொய்த்துப் போனதேன்..? பெற்ற மக்களில் மகனிடம் ஓர் முகமும்.. மகளிடம் ஓர் முகமும் யாழினி காட்டுவதேன்..?

“இந்த அரண்மனையில் எனக்கும், அம்மாவுக்கும் என்ன இடம்ன்னு தெரியாமலே இருந்தது அப்பா.. ஆக்ஷுவலா அப்பா, இங்கே அகதிகளா இருந்தது நானும், அம்மாவும்தான்.. அத்தையின் குடும்பமில்லை.. அவங்க உரிமையானவர்களா இருந்தாங்க.. நாங்க அடைக்கலமா வந்தவங்களைப் போல அடங்கி, ஒடுங்கி இருந்தோம்.. அண்ணனுக்குத் தெரிந்தால் தாத்தா, பாட்டி முதற்கொண்டு எல்லோரையும் வெளியேற்றி விடுவான் என்பதால் அண்ணனிடம் எங்க வேதனையை வெளிப்படுத்திக்காம மறைத்தோம்..”

என்னிடம் சொல்லியிருக்கலாமே என்று ரவிவர்மன் கேட்கவே இல்லை.. அவரிடம் சொல்வதால் எதுவும் மாறப் போவதில்லை என்பதை அறிந்து வைத்திருந்த

காரணத்தினால்தானே வீணாவாயிருந்தும் ஊமையாக அந்த அரண்மனையில் வளைய வந்து கொண்டிருந்தாள்..?

வீணாவிடம் அவர் மட்டற்ற அன்பைக் கொண்டிருக்கிறார்தான்.. அவளை விடப் பெரிதென்று அவருக்கு எதுவும் இல்லைதான்.. இருந்தும் என்ன பண்ண..? வீணாவைக் கொல்ல அஜந்தாவும், அவந்திகாவும் சதி செய்ததை அறிந் த பின்னாலும் அவர்களை அரண்மனையை விட்டு வெளியேற்றாமல் தானே இருக்கிறார்..

“இது கூடப் பரவாயில்லைப்பா..” ரம்ய மாலினியின் குரல் தழுதழுத்தது..

ரவிவர்மன் துணுக்குற்றார்.. அவருடைய செல்ல மகள்.. வயநாட்டு அரண்மனையின் ராஜகுமாரி.. தீரன் ரவிச்சந்திரனின் அன்புத்தங்கை.. அவளுடைய குரல் தழுதழுப்பதா..?

“என்னடா..?” அவர் பதறினார்..

ரம்ய மாலினி எதையோ சொல்ல நினைத்து அதைச் சொல்ல முடியாமல் தவித்தாள்.. பெண் பிள்ளைகளின் நிலை இதுதான்.. தாயிடம் எவ்விதத் தயக்கமுமில்லாமல் பகிர்ந்து

கொள்ளும் விவரங்களைத் தந்தையிடம் பகிர்ந்து கொள்ள முடியாது..

“ஒண்ணுமில்லைப்பா..”

“இல்லைடா.. நீ எதையோ சொல்ல வந்த..”

“ச்சும்மாப்பா.. நத்திங்...”

“ஊஹூம்.. நான் நம்ப மாட்டேன்.. என்னன்னு சொல்லு..” மகளின் மனதில் இருப்பதை அறிந்தே தீரவேண்டும் என்ற பிடிவாதத்துடன் வற்புறுத்தினார் ரவிவர்மன்.. இத்தனை காலமாக தாய், தந்தையை மீறிப் பேசாமல் இருந்ததில் மனைவியும் மகளும் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ என்று அவரது மனம் வருந்தியது..

வீணா அவரது மனம் வருத்தப்படும் என்று எதையும் சொல்ல மாட்டாள்.. மறைத்து விடுவாள்.. ரம்ய மாலினி தாயைப் பின் பற்றுபவள்.. வீணாவைப் போலவே இவளும் மனதில் போட்டு பூட்டி வைத்து விடுவாள்.. அண்ணனிடம் சொன்னால் குடும்பம் உடைந்து விடும்.. அரண்மனையில் களேபரம் உண்டாகும்.. தந்தையிடம் சொன்னால் அவரது மனம் வருத்தப்படும்.

ஆதலினால் தாயிடம் சொல்வதே சாலச் சிறந்தது என்று அனைத்து விவரங்களையும் தாயிடம் மட்டும் பகிர்ந்து கொள்ளப் பழகியிருந்தாள் ரம்ய மாலினி.. மகளை விட்டுக் கொடுக்காத தாய் வீணா.. அந்த வகையில் போர் குணம் கொண்டவள்.. மகளுக்கு ஒன்றென்றால் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டாள்.. அதைத் தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருந்ததினால்தான் அவந்திகாவும் அஜந்தாவும் வீணாவிடம் அதிகமாக மோதிக் கொள்ள மாட்டார்கள்.. அதற்குப் பதில் யாழினியை முடுக்கி விட்டு அவள் பின்னால் நின்று கொள்வார்கள்.. அவள் ஒன்றுக்குப் பத்தாக மருமகளிடம் மோதித் தீர்ப்பாள்.. மாமியார் ஆயிற்றே என்று வீணாவும் பொறுத்துப் போய் விடுவாள்.. அப்பேற்பட்ட யாழினியே ரம்ய மாலினியைப் பற்றி வீணாவிடம் பேச அஞ்சுவாள்..

“எதின்னாலும் கொச்சு மோளிண்ட ஞான் சம்சாரிச்சு.. வீணாவிடம் பறயானாம்.. கேட்டோ..” என்று சொல்லி விடுவாள்..

அவளுக்குத் தெரியும்.. மகள் என்று வந்து விட்டால் வீணா மாமியார் என்று கூடப் பார்க்க மாட்டாள் என்பது.. மட்டு மரியாதையைக் காற்றில் பறக்க விட்டு விடுவாள்..

தேவையா என்ற முன்ஜாக்கிரதையுணர்வுடன் ஒதுங்கி விடுவாள் யாழினி.. இருக்கிற மரியாதையையும் முக்கியத்துவத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் வித்தையைக் கற்றிருப்பவள் அவள்.. அப்படியில்லாமலா, மருமகளிடம் அரண்மனையின் அதிகாரத்தைப் பறி கொடுத்து விடாமல் கோலோச்சிக் கொண்டிருக்கிறாள்..? அப்படி மாமியாரிடம் மோதாமல் விலகி மரியாதை கொடுத்து வந்த வீணா இன்று என் அரண்மனை, நான்தான் இங்கு ராணி என்று உரிமைக் குரலை எழுப்பி விட்டாள்.. சாதுப்பசு பெண் சிங்கமாகி விட்டது.. மகளுக்காக அவள் சீறி விடுவாள் என்று ரம்ய மாலினியைப் பற்றி அவளிடம் எதுவும் பேசாமல் அடக்கி வாசித்த யாழினி எங்கிருந்தோ வந்த நந்தினியிடம் காழ்ப்புணர்ச்சியைக் காட்டினால் அது அவளுக்கே வில்லங்கமாக திரும்பி விட்டது..

ஆக.. ரவிவர்மனின் மனைவி உரிமைக் குரல் எழுப்புவதற்கும், அவரது மகள் மகிழ்ச்சியுடன் மனம் விட்டுச் சிரிப்பதற்கும் எங்கிருந்தோ ஒரு பெண் வர வேண்டியிருக்கிறது.. அவர்களுடன் இருக்கும் ரவிவர்மனால் ஒரு ஆணியையும் பிடுங்க இயலவில்லை..

மனதில் பொங்கிய குற்ற உணர்வைத் தாள முடியாதவளாக அவர் மகளை மென்மேலும் வற்புறுத்த அவள் தயக்கத்துடன்..

“அபராஜிதனை நான் காதலிக்கனும்னு பாட்டி என்னைப் ஃபோர்ஸ் பண்ணினாங்கப்பா..” என்று சொல்லி விட்டாள்..

“எந்தா..?” ரவிவர்மனின் கண்கள் கோபத்தில் கோவைப் பழமாய் சிவந்து விட்டன..

தங்கையின் மகனுக்கு அவர் பெண் கொடுத்துப் பெண் எடுக்க வேண்டுமென்று அருள்மொழிவர்மனும், யாழினியும் அவரிடம் வற்புறுத்துகிறார்கள்தான்.. அபராஜிதன் அரண்மனையை விட்டுத் துரத்தியடிக்கப்பட்ட பின்பும் அவர்கள் மனதில் அந்த எண்ணம் இருக்கிறதுதான்.. அதை வெளிப்படையாக அவரிடம் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்தான்..

இவையெல்லாம் மகன் என்ற உரிமையில் அவரிடம் பேசுவது என்றுதான் இத்தனை நாளாக அவர் நினைத்திருந்தார்.. அவருடைய மகளிடம் வற்புறுத்தியிருப் பார்கள் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லையே..

“எண்ட அச்சனும், அம்மையும் இத்தரயும் பறஞ்ஞோ..?”

“இல்லேப்பா.. தாத்தா எதையும் பேசினதில்லை.. பாட்டிதான் ஃபோர்ஸ் பண்ணினாங்க.. நான் அபராஜிதன் மேல ஆசைப் படுகிறேன்னு சொல்லிட்டா பிராப்ளம் சால்வ்டுன்னு பிரெயின் வாஷ் பண்ணினாங்க.. நான் ஸ்ட்ராங்கா இருந்தா அண்ணன் அப்ஜெக்ட் பண்ண மாட்டான்.. அவனுக்கும் அஜந்தாவுக்கும் மேரேஜ் பண்ணி வைக்கிறது சுலபம்ன்னு கிளாஸ் எடுத்தாங்க.. இல்லேன்னா குடும்பம் சிதறிப் போயிரும்ன்னு சொன்னாங்க.. ஏன்ப்பா.. நம்ம குடும்பம் வேற.. அத்தை குடும்பம் வேறதானேப்பா.. பாட்டியோட நாத்தனார்ஸ் எல்லாம் அவங்வங்க.. ஃபேமிலின்னு தனித்தனியாத்தானே செட்டிலாகியிருக்காங்க... அவங்களில் யாரையும் தன் குடும்பம்ன்னு பாட்டி சொன்னதே இல்லையேப்பா.. நம்ம அரண்மனையில் மட்டும் ஏன்ப்பா அத்தை குடும்பத்தையும் நம்ம குடும்பத்தையும் சேர்த்துப் பேசறாங்க..?”

ஏன், ஏன், ஏன்..? ரவிவர்மனைத் துரத்தும் கேள்விகளை அவரது மனைவியும் மக்களும் கேட்டதே இல்லை.. அவர் மீது குற்றம் சாட்டியதில்லை.. தன் குடும்பத்தைப் புறக்கணித்துத் தாய், தந்தை சொல்லுக்குத் தலையை ஆட்டும் தலையாட்டி

பொம்மையாக அவர் இருக்கிறார் என்று வேதனைப் பட்டதில்லை..

அவர் கொடுத்து வைத்தவர்.. மனமறிந்து நடக்கும் மனைவி.. மனத்தாங்கல் கொள்ளாத புரிந்து கொள்ளும் தன்மை கொண்ட பிள்ளைகள் என்று சோட்டாணிக்கரை பகவதி அம்மனும் குருவாயூரப்பனும் அவரை நன்முறையிலேயே வாழ வைத்திருந்தார்கள்.. அவரும் அந்தச் சுகமான வாழ்க்கைக்குப் பழகிப் போனவராக மனைவி, மக்களைப் பற்றி யோசிக்காமலே நாள்களைக் கடத்தி விட்டாரே..

“எனக்கு அபராஜிதனைப் பிடிக்காதுப்பா.. இதை பாட்டியிடம் பலதடவை சொல்லிட்டேன்..”

“எண்ட அம்மை எந்தா பறஞ் ..?”

“பாட்டி கோபப்பட்டாங்கப்பா.. நான் அம்மா பேச்சைக் கேட்கிறேன்னு பழி போட்டாங்க.. குடும்பத்தை நினைத்துப் பார்க்கலைன்னு குறை சொன்னாங்க..”

“நிண்ட அம்மையிடம் இதிப் பத்தி பறஞ்ஞோ..?”

“இல்லைப்பா.. அப்படிச் சொல்லியிருந்தா இன்னைக்கு வந்த சண்டை எப்போதோ வந்திருக்கும்.. அண்ணன் அபராஜிதனோடு தாத்தா, பாட்டியையும் சேர்த்து நாடு கடத்தியிருப்பான்.. என்னால் குடும்பத்தில் பிரச்னை வருவதா..?”

“எண்ட மோளே..!”

மனம் நெகிழ்ந்து மகளின் தலைமீது கை வைத்து ஆசிர்வதிப்பதைப் போல முடி மோதினார் ரவிவர்மன்.. பாசத்துடன் தந்தையின் தோள் சாய்ந்தாள் ரம்ய மாலினி.. தாயின் செயலை நினைத்து ரவிவர்மனின் ரத்தம் கொதித்தது..

“ரம்யா..”

வீணாவின் அழைப்பில் தகப்பனின் தோள் சாய்ந்திருந்தவள் விலகித் துள்ளியோடி விட்டாள்... புள்ளி மானைப் போல அவள் தாவியோடியதை ரசித்துப் பார்த்தபடி நின்றிருந்த ரவிவர்மனின் பின்னாலிருந்து யாழினியின் குரல் வந்தது..

“நிண்ட பார்யா சம்சாரிச்சதே கேட்டே மோனே..”

ரவிவர்மன் மூச்சை இழுத்து விட்டுத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு திரும்பினார்.. சினம் தவழும் தாயின் முகத்தை அமைதியாக நோக்கினார்.. அவரது நிதானமும் அமைதியும் யாழினியின் சினத்தை மேலும் கிளறி விட்டன..

“கேட்டே அம்மே..”

“ஓ..! நிண்ட அம்மைய நிண்ட பார்யா எங்ஙன விளிச்சுண்டு அறிஞ் ..?”

“வீணா தெற்றா சம்சாரிக்கலயல்லோ..”

“ஓ..! நிண்ட பார்யா சம்சாரிச்சது தெற்றல்லயல்லோ..?”

“அல்ல அம்மே..”

“ஞான் சம்சாரிச்சது தெற்றோ..?”

ரவிவர்மன் அமைதி காத்தார்.. மகனின் அமைதியில் வெகுண்டாள் யாழினி.. அவரது அமைதி மனைவியின் பக்கம் அவர் நிற்பதை உணர்த்தி விட்டதில் படபடத்தாள்..

“மிண்டு (பேசு..) மோனே.. வல்லதும் மிண்டு..”

ஏதாவது பேசு என்றால் எதை அவர் பேசுவார்..? எதைப் பேசினாலும் யாழினி அதைக் குற்றமாகத்தான் எடுத்துக் கொள்ளப் போகிறாள்.. அவருக்கு எதிரான வார்த்தைகளை

அவள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையெனும்போது அவர் பேசிப் பயனென்ன..?

“ஈ கொட்டாரத்தோட தம்புராட்டி நிண்ட பார்யாளெண்டு பறஞ் ..”

“அதி தெற்றா (தவறா) அம்மே..? ஈ கொட்டாரத்தோட தம்புரான் ஞான் எண்டா, எண்ட பார்யா ஆரானு அம்மே..?”

“எந்தா..? நீ ஈ கொட்டாரத்தோட தம்புரானோ..?”

“இல்லையோ..? ஞான் பறயறது நொனா (பொய்) வோ..?”

“நிண்ட அச்சனல்லோ ஈ கொட்டாரத்தோட தம்புரான்.. ஞான் தம்புராட்டி..”

“அச்சனுக்கு ஆத்யம் (முதலில்) ஆரானு தம்புரான் அம்மே..? அச்சனோட அச்சனல்லோ.. அவகானம் (கடைசி) வரை அவர் தம்புரானோ..? அவருக்கு அடுத்த தம்புரான் ஆரானு..? அச்சனல்லோ.. அச்சனுக்கு அடுத்த தம்புரான் ஞானல்லோ..”

யாழினிக்கு பேச நா எழவில்லை.. இதுநாள் வரை ரவிச்சந்திரன் மட்டுமே நினைவு படுத்தி வந்த வம்சாவழித்

தம்புரான் பட்டத்தை ரவிவர்மன் உரிமை கோரி விட்டார்.. இனி அவர்தான் வயநாட்டு அரண்மனையின் ராஜா..! அப்படியென்றால் வீணா..?

“ஞான் தம்புரான் எண்டா எண்ட பார்யா தம்புராட்டியல்லோ..” திட்டவட்டமாக அறிவித்து விட்டார் ரவிவர்மன்..

# அத்தியாயம் 207

**ஆ**ழ்ந்த சிந்தனையிலிருந்தாள் அவந்திகா.. நடப்பது எதுவும் நல்லதிற்கானதல்ல என்பதை அவளது மனம் அறிவுறுத்தியது.. ரவிச்சந்திரன் அஜந்தாவைத் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே அவளுக்கு வாழ்வு என்பதில் அவளது மனம் அடித்துக் கொண்டது.. அபராஜிதன் ரம்ய மாலினியைத் திருமணம் செய்து கொள்வான்.. அஜந்தாவை ரவிச்சந்திரன் திருமணம் செய்து கொள்வதற்கான நெருக்கடியை உண்டாக்குவான் என்ற அவளது கனவு பொய்த்துப் போய் விட்டது.. கட்டிக் கொண்டு வா என்றால் வெட்டிக் கொண்டு வரும் அவளது மகனை ரம்யாவை காதலித்து விட்டு வா என்று அனுப்பி வைத்தாள்.. அவனோ அவளது கையைப் பிடித்து இழுத்து வில்லத்தனம் செய்து வைத்து ரவிச்சந்திரனிடம் மிதி வாங்கினான்.. மிதித்த மிதியோடு நிறுத்தாமல் அவனை நாடு கடத்தி அவந்திகாவின் கனவில் வயநாட்டு மண் மலையைச் சரித்து விட்டான் ரவிச்சந்திரன்..

இடிந்து போய் உட்கார்ந்து விட்ட அவந்திகாவிற்கு அஜந்தாதான் புத்துணர்வு கொடுத்து எழுப்பி உட்கார

வைத்தாள்.. அபராஜிதனின் உதவியில்லாமலே ரவிச்சந்திரனைக் கவிழ்த்து காட்டப் போவதாக சபதம் செய்தாள்.. சிவகாமி சபதம் செய்தால் செல்லும்.. அஜந்தாவெல்லாம் சபதம் செய்தால் பூமி தாங்குமா..? ரவிச்சந்திரன் அவளைக் கண்டாலே ஆவதில்லையென்று காத தூரம் விலகி ஓடினான்..

இப்படியாகப்பட்டச் சூழ்நிலையில் எப்பேற்பட்ட வைர மனம் கொண்டவர்களும் மனம் தளர்ந்து விடுவார்கள்.. அஜந்தா சற்றும் மனம் தளராத விக்கிர மாதித்தியாக மறுபடியும் மறுபடியும் படையெடுத்தாள்.. ரவிச்சந்திரனின் மீது

மோகனாஸ்திரங்களை வீசிக் கொண்டே இருந்தாள்.. அவன் முகம் சுளித்து விலகிக் கொண்டே இருந்தான்..

இப்படியே காலம் கழிந்து கொண்டிருந்தாலும் அவந்திகா அச்சம் கொள்ளாமல் இருந்திருப்பாள்.. அப்படியிருக்க முடியாமல் சமீப காலமாக அவளது அஸ்திவாரம் ஆட ஆரம்பித்து விட்டதே..

அவளது அஸ்திவாரம் அவளுடைய அம்மாவான யாழினி..! யாழினியின் சிம்மாசனம் உறுதியாக இருக்கும் வ ரைதான் அவந்திகா வயநாட்டு அரண்மனையில் நிம்மதியாக

உலா வர முடியும்.. யாழினியின் சிம்மாசனம் ஆட்டம் கண்டு விட்டால் அவந்திகாவின் ஆனந்த மயமான வாழ்வும் ஆட்டம் கண்டு விடும்..

எங்கிருந்தோ வந்த நந்தினியால் வீணாவுக்குத் துணிச்சல் வரும்.. அதனால் யாழினியின் அரியாசனம் ஆட்டம் கண்டு விடும் என்று அவந்திகா என்ன சொப்பனமா கண்டாள்..? “எதிக்கு எண்ட அம்மே இத்தரயும் ஆலோசிக்கனுது..?” அஜந்தா தோளைப் பிடித்து உலுக்கிய உலுக்கலில் கண் விழித்த அவந்திகாவின் விழிகளில் எதிர்காலத்தைக் குறித்த பயம் நிரம்பியிருந்தது..

“எந்தினா கரையூந்தே அம்மே..? ஞான இருக்கறப்ப எண்ட அம்மே கரையறதோ..?” அஜந்தா பதட்டத்தோடு தாயின் விழி நீரைத் துடைத்து விட்டாள்..

“ஞான் எந்து செய்யும் மோளே..?” அவந்திகா விம்மினாள்.. “எந்தா பறயுனு அம்மே.. நிண்ட மனசில உள்ள நொம்பரம் எந்துவெண்டு ஞான் அறியும்.. இங்ஙன நோக்கணும் அம்மே.. நமக்கு வல்லதும் துன்பம் வராதல்லோ..”

“எங்ஙன மோளே.. ஆ வீணா ஈ கொட்டாரத்தோட தம்புராட்டியெண்டு பறஞ் .. நிண்ட பாட்டி ஆரானு அஜந்தா..?”

“ஹ...”

தாயின் துயரத்தை ஒற்றை எழுத்தில் புறம் தள்ளினாள் அஜந்தா..

“ஆ கிழவி ஆரானா நமிக்கி எந்தா..?”

“அஜந்தா..”

“ஈ கொட்டாரத்தோட தம்புராட்டியா ஞான் ஆகனும் அம்மே.. அதி மட்டுமே நம்மைக் காக்கும்.. அதியல்லாம நிண்ட அம்மை தம்புராட்டியா இருந்தா நமிக்கெந்தா.. இல்லாமப் போனா நமிக்கு எந்தா..?”

“அம்மைதான் நமிக்கு சப்போர்ட் அஜந்தா..”

“அதி இன்னல் (நேற்று) வரைக்கும்.. ஈ திவசத்தில நமிக்கு நாமதான் சப்போர்ட் அம்மே..”

அவந்திகாவுக்குப் புரிந்தது.. அவளுக்கு ஒன்றும் தாய்மீது அபரிதமான பாசம் இருந்ததில்லை.. யாழினி வலிமையுடன் இருந்தால்தான் அவளால் வயநாட்டு அரண்மனையில் தாக்குப் பிடிக்க முடியும்.. அந்த ஒரு காரணத்திற்காகத்தான்

யாழினியின் வலிமை குன்றி விடக் கூடாது என்று பதறிக் கொண்டே இருப்பாள்.. இப்போது நிலைமை கை மீறி விட்டது.. யாழினியின் வலிமை குறைந்து விட்டது.. தாய் சொல்லைத் தட்டாத தனயனான அவந்திகாவின் தமையன் தாயை எதிர்த்து நின்று விட்டார்.. தாய்க்குப் பின் தாரம் என்று அறிவித்து விட்டார்.. இனி யாழினியின் சினத்துக்கும் சொல்லுக்கும் மதிப்பிருக்கப் போவதில்லை.. ஓட்டை விழுந்த படகில் பயணிப்பதை விடக் கட்டு மரத்திற்கு தாவி விடுவதே பாதுகாப்பு..

அஜந்தா அலைகளை எதிர் நோக்கும் கட்டு மரம்..! எது வந்தாலும் பதட்டம் கொள்ளாமல் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுவதில் கை தேர்ந்தவள்.. இனி யாழினியை நம்பி யாதொரு பயனுமில்லை.. அஜந்தாவைத்தான் அவந்திகா நம்பியாக வேண்டும்..

“ஞான் இருக்கேன் அம்மே..” அபயமளித்தாள் அஜந்தா..

“ஆ வீணா ஈ கொட்டாரத்தோட தம்புராட்டியாம்..”

“எத்தினி திவசத்துக்கு அம்மே..?”

“எந்தா பறயுனு மோளே..”

“ஈ அஜந்தா இருக்கிற வரைக்கும் ஈ கொட்டாரத் தில வேற ஆரானும் தம்புராட்டியா ஆக முடியாதல்லோ..”

“எங்ஙன மோளே..? ஆ ரவிச்சந்திரன் மனசில ஆ பெண்குட்டி நந்தினியிண்ட பிரேமம் வந்துன்னு எனிக்குத் தோணி..”

“தோணவே வேணாம்.. அதிதான் நிஜம்.. ரவிச்சந்திரன் மனசில நந்தினி மேல பிரேமம் வந்து..”

“நினக்கு பயம் வரல..?”

“வரல அம்மே.. எதிக்குப் பயம் கொள்ளனும்..? என்ன விஜாரம் கொண்டு ஆ நந்தினியும், ரவிச்சந்திரனும் தான் அச்சம் கொள்ளனும்..”

அஜந்தாவின் முகம் பயங்கரமாக மாறியது.. வெறி பிடித்தவளைப் போல அவள் பலமாக சிரித்தாள்.. அவள் சிரித்த சிரிப்பில் அரச பாரம்பர்யத்தில் கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்தும் அகதியாக வாழ நேர்ந்து விட்ட அவலத்தின் கொடூரம் இருந்தது.. இன்னாரின் மகள் என்று பெருமை பீற்றிக் கொள்ள முடியாமல் இன்னாரின் மகள் வழிப் பேத்தி என்று ஒட்டுப் புல்லைப் போல ஒட்டி வாழ நேர்ந்து விட்ட துயரத்தின் ரணம் தெரிந்தது..

“இதி ஒடுகளம் அம்மே.. ஆடுகளம் அல்ல.. எவர் ஆத்யம் (முதலில்) ஓடினாலும், அவகானத்தில் (கடைசியில்) எவர் வெற்றிக் கோட்டைத் தொடுவாரோ.. அவரே ஜெயக்கொடியை நாட்ட ஏலும்.. இப்ப நந்தினி ஆத்யம் ஓடுகிறாள்.. ஓடட்டும்.. எதிவரை ஓட முடியுமோ அதிவரை ஓடட்டும்.. அவகானத்தில் ஜெயிக்க ப் போவது ஈ அஜந்தாதான் அம்மே..”

“எங்ஙன மோளே..”

“எங்ஙன என்கிறதைப் பொறுத்திருந்து நோக்கனுமல்லோ..”

அஜந்தாவின் வார்த்தைகளில் தெரிந்த தீவிரத்தில் அவந்திகாவின் கண்ணீர் நின்று விட்டது.. மகளின் சாகசத்தில் அவளுக்கு நம்பிக்கை வந்தது.. எதையாவது செய்து மகள் ஜெயித்து விடுவாள் என்று அமைதி கொண்டாள்..

அழுத முகமாக இருக்கக்கூடாது என்ற அஜந்தாவின் கண்டிப்பில் முகம் கழுவிச் சன்னமாக ஒப்பனை செய்து கொண்டாள் அவந்திகா.. யாழினிக்கும் வீணாவுக்கும் நடந்த வாக்குவாதத்தினால் தாங்கள் பாதிக்கப் பட்டதாகக் காண்பிடித்துக் கொள்ளக் கூடாது என்று தாய்க்கு அறிவுறுத்தினாள் மகள்.. தலையாட்டி அதை ஏற்றுக்

கொண்டாள் அவந்திகா.. அவர்கள் டைனிங் ஹாலுக்குப் புறப்பட்டார்கள்.. எதிரில் வந்த யோகானந்தன்..

“எனிக்கு ஒரி லட்சம் பணம் வேணும் அவந்திகா..” என்றார்..

“அதிக்கு எத்தினி சைபர்..?” பதிலுக்கு கேட்டாள் அவந்திகா..

யோகானந்தன் தன் திருவாயை இறுக மூடிக் கொண்டார்.. வாய்க்குள் முணுமுணுவென கணவனைத் திட்டித் தீர்த்த அவந்திகாவின் உள்ளங்கையில் கிள்ளி அமைதி காக்கும்படி அறிவுறுத்தினாள் அஜந்தா..

“நிங்களுக்கு டென்ஷன் உண்டானது அச்சனாலதான் எண்டு எவரும் விஜாரம் கொள்ள மாட்டாரல்லோ.. பாட்டிக்கும் அத்தைக்கும் வந்த வாக்குவாதத்தினாலதான் டென்ஷன் வந்துன்னு விஜாரம் கொள்வாரல்லோ.. அதி எந்துக்கு..?”

அஜந்தா எடுத்துச் சொன்னதும் மூச்சை இழுத்து விட்டுத் தன் கோபத்தைச் சமன் படுத்திக் கொண்டாள் அவந்திகா.. மகள் எப்படியெல்லாம் யோசித்துச் செயல்படுகிறாள் என்ற வியப்பு அவளுக்குள் எழுந்தது.. அவள் எட்டடி பாய்ந்தால் அஜந்தா எண்ணூறு கோடி அடிகள் பாய்கிறாளே..

டைனிங் ஹாலில் நிசப்தம் நிலவியது… யாழினி இறுக்கமான முகத்துடன் மகனையும், மகன் குடும்பத்தையும் விரோதிகளைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தாள்… அருள்மொழிவர்மனால் அப்படி இருக்க முடியவில்லைதான்.. அவர் பேரனிடம் வெள்ளைக் கொடியைப் பறக்கவிடச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று கொக்கைப் போலக் காத்திருந்தார்.. அவர் பக்கம் திரும்புவேனா என்று வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்து அவரை சோதித்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. நேர்கொண்ட பார்வையும் புதிதாகப் பிறந்திருந்த கம்பீரமுமாக ரவிவர்மன் மனைவியைக் காதல் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.. அவருடைய கம்பீரத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் வீணா.. கணவனின் கம்பீரத்திலும் நிமிர்விலும் அவளுக்குப் பெருமையாக இருந்தது..

‘இத்தனை நாளா இந்தக் கம்பீரத்தையும், நிமிர்வையும் எங்கே ஒளிந்து வைத்திருந்தாராம்..?’

பெற்றவர்களிடம் அவர் கொண்டிருந்த மரியாதையும், காட்டிய பணிவும் அவருடைய கம்பீரத்தையும், நிமிர்வையும் திரை போட்டு மறைத்திருந்தன என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள் வீணா..

அளவுக்கு மீறினால் அமிர்தமே நஞ்சாகும் போது மற்றவையும் நஞ்சாகாதா என்ன..?

நந்தினியும், ரம்ய மாலினியும் அமைதியாக இருந்தாலும் சிரித்த முகமாக இருந்தார்கள்.. கண் ஜாடை காட்டிக் கொண்டார்கள்.. மொத்தத்தில் டைனிங் ஹாலில் நிசப்தம் நிலவினாலும் யாழினியைத் தவிர வேறு எவர் முகத்திலும் இறுக்கம் தவழவில்லை..

“நோக்கியோ அஜந்தா..” அவந்திகா கிசுகிசுக்க..

“நோக்கி அம்மே..” என்றாள் அஜந்தா..

அவர்கள் வேண்டும் என்றே சப்தம் எழுப்ப.. நாற்காலிகளை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்கள்.. ரவிச்சந்திரனின் மௌனமான தீர்க்கப் பார்வையை படு அலட்சியமாக எதிர் கொண்டாள் அஜந்தா.. அதைத் தனக்காக பேத்தி முறைப்பதாக அர்த்தப் படுத்திக் கொண்டு புளகாங்கிதப் பட்டுப் போனாள் யாழினி..

“அம்மே..”

டைனிங் ஹாலின் அமைதியைக் கலைத்து அஜந்தா எதையோ பேச ஆரம்பிக்க.. அதை சற்று நோக்கிப் பதிலளித்து டைனிங் ஹாலின் நிசப்தத்தை ஓட்டி விட்டாள் அவந்திகா..

“கொச்சு மோளே..”

தன் பங்குக்கு யாழினியும் கூட்டுச் சேர்ந்து கொள்ள அங்கே இரு அணி உருவானது.. அருள்மொழிவர்மன் மனைவி, மகளின் அணியில் கூட்டுச் சேராமல் தனித்து ஒதுங்கிக் கொண்டு பேரனின் அணிப் பக்கம் தாவத் தயாராகி நின்றார்.. ரவிச்சந்திரனோ அவர் பக்கமே திரு ம்பாமல் ரம்ய மாலினியிடமும், நந்தினியிடமும் ஜோக்கடித்து சிரித்துக் கொண்டிருந்தான்.. வீணா அதில் இணைந்து கொண்டதையே யாழினியால் தாங்க முடியவில்லை.. ரவிவர்மனும் அவர்களது கலகலப்பில் இணைந்து கொண்டதில் அவளுக்கு நெஞ்சுவலி வந்து விடும் போல இருந்தது..

யாழினியின் மகன் தாயை மறந்து மனைவி, மகன், மகள் என்று ஒன்று சேர்ந்து பேசிச் சிரிப்பதா..?

அவளால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை..

“எண்ட மோன் என்னிய மறந்து போயி..” அவள் புலம்பினாள்..

‘பின்னே.. பேரன், பேத்தி எடுக்கிற வயசு வந்த பின்னாடியும் உன் புடவை முந்தானையைப் பிடிச்சுக்கிட்டே இருக்கனுமோ..? நினைப்புத்தான் கிழவி உனக்கு..’

அஜந்தா மனதுக்குள் தாளித்தபடி வெளியே யாழினிக்காக பரிதாபப் படுவதைப் போலச் சூள் கொட்டி..

“ம்ப்ச்.. நிங்க பாவம் பாட்டி..” என்று ஏற்றி விட்டாள்..

“வல்லதும் செய்யனும் கொச்சு மோளே..”

“அவ்வளவுதானே.. ஞான் செய்யறேன் பாட்டி..”

உத்திரவாதம் அளித்த அஜந்தா எதிர் அணியினரின் பேச்சைக் கவனிக்காததைப் போலப் பாவனை செய்தபடி உன்னிப்பாக கவனித்தாள்..

“உன் அப்பா பெட்டிக் கடை வைத்து இருந்தாலும் உன்னைக் கஷ்டம் தெரியாம நல்ல பெண்ணாய் பண்போட வளர்த்திருக்கார்ம்மா..” நந்தினியைப் பாராட்டினார் ரவிவர்மன்..

அஜந்தாவுக்குப் பிடி கிடைத்து விட்டது.. விழிகள் மின்ன..

“அப்பா பெட்டிக்கடையா..? யாரோட அப்பா..? இவளோட அப்பாவா..?” என்று உதட்டைச் சுழித்தாள்..

பேத்தி எதையோ கண்டு பிடித்து விட்டாள் என்று பரபரப்பானாள் யாழினி..

“எந்தா அஜந்தா.. எந்துக்கு இங்ஙன பறஞ் ..?” என்றாள்..

“நீங்க வேற பாட்டி.. இவளோட அப்பா தஞ்சாவூரில பெரிய பணக்காரர்.. இவளோட அம்மா கோடிஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க.. இவ எதுக்காகவோ வீட்டை விட்டு ஓடி வந்து அத்தானிடம் வேலைக்குச் சேர்ந்திருக்கா.. நம்மகிட்ட பொய்யாய் கதை சொல்லியிருக்கா.. மாமாவும் அதை நம்பிக்கிட்டு பாராட்டிப் பேசிக்கிட்டு இருக்காரு.. வீட்டை விட்டு ஓடி வந்த இவ பண்பான நல்ல பெண்ணா..? குட் ஜோக்..”

அஜந்தாவின் எள்ளலில் நந்தினி தடுமாறினாள்.. ரவிவர்மன் முகம் மாறிப் போனார்.. புருவங்கள் முடிச்சிட மகனை உறுத்து நோக்கினார்..

# அத்தியாயம் 208

**‘எ**ண்ட கொச்சு மோள் வல்லிய கைகாரியல்லோ..’

மகிழ்ந்து போனாள் யாழினி.. நந்தினியின் மீதான வன்மத்தைத் தீர்த்துக் கொள்ளச் சரியான சந்தர்ப்பத்தை அஜந்தா அள்ளி வழங்கியிருக்கிறாளே..

வயநாட்டு அரண்மனையில் சர்வாதிகாரமும் பொருந்தியவளாக முடி சூடிய ராணியாக வலம் வந்த யாழினியின் தம்புராட்டி பதவி வீணாவிடம் இடம் மாறியதற்கு நந்தினி மட்டுமே காரணம் என்று மனதார நம்பினாள் யாழினி.. நந்தினியை ஏதாவது சொன்னால் வீணா பொறுத்துப் போகவில்லை.. மாமியாரையே எதிர்த்து நின்று தன் உரிமையை நிலை நாட்டி விட்டாள்.. வயநாட்டு அரண்மனையில் என்றுமே அவள் மாமியாரை ராணியாக நினைக்கும் மருமகளாகவே இருந்த வந்தாள்.. கனவி ல் கூடத் தன்னை ராணியென்று அவள் நினைத்ததில்லை.. அப்படிப்பட்ட வீணா தன்னை ராணியென்று கூறி அதை

ரவிவர்மன் வாயாலேயே அறிவிக்க வைத்து விட்டதற்கு யார் மூல காரணம்..?

‘ஈ நந்தினியெனும் பெண் குட்டிதான் காரணமாயி..’

அந்த நந்தினிக் குட்டியை வீணா தலையில் தூக்கி வைத்து சீராட்டுகிறாள்.. அதை ரவிவர்மனும் ஆதரிக்கிறார் என்பதை யாழினி துளியளவும் விரும்பவில்லை.. நந்தினியை புறம் தள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று வன்மம் வைத்திருந்தவளுக்கு லட்டு போல ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்து விட்டாள் அஜந்தா..

“எந்தா..? ஈ பெண்குட்டி வல்லிய பணக்காரக் குடும்பத்தில் ஜனித்தவளோ..? வீட்டை விட்டு ஓடி வந்தவளோ..? கேட்டே மோனே.. ஞான் பறஞ்சால் நினக்கு வெப்பராளம் வந்து.. அம்மையிடம் பிணக்கம் கொண்டு.. இவிடத்த இவள நோக்கின போதே எனிக்குத் தோணி.. வறிய குடும்பம்ன்னு ஈ பெண்குட்டி பறஞ் .. பட்ஷே.. குட்டிய நோக்கினா வல்லிய குடும்பத்துப் பெண்குட்டி யெண்டு தோணி.. ஆ சம்சயம் ஈ திவசத்தில உண்மையாகிப் போயி..” யாழினி பேசப் பேச ரவிச்சந்திரனின் முகத்தில் குடக

பொறிந்தது.. அவனுடைய கோபத்தைப் பொருட் படுத்தாமல் கண்டிப்புக் கலந்த அழுத்தத்துடன்..

“நந்தினியைப் பற்றி அஜந்தா சொல்வது உண்மையா ரவி..?” என்று மகனிடம் கேட்டார் ரவிவர்மன்..

“உண்மைதான் அப்பா..” தயக்கமில்லாமல் ஒப்புக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“நந்தினி வீட்டை விட்டு ஓடி வந்தவளா..?”

ரவிவர்மனின் கேள்வியில் நந்தினியின் முகம் சிறுத்தது.. அதை சந்தோஷமாக வேடிக்கை பார்த்தாள் அஜந்தா.. அவளைத் துச்சமாகப் பார்த்தான் ரவிச்சந்திரன்..

“இவள் ஓடி வரலை.. என்னுடன் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் டிராவல் பண்ணி வந்தாள்.. தென், ஒன் திங்.. இவள் ஒன்றும் இருக்க இடமில்லாமல் அடுத்தவங்க வீட்டை ஆக்ரமிக்க நினைத்து வரலை.. தற்காலிகமா மறைந்து வேலை பார்க்க இடம் தேடி வந்திருக்கிறாள்.. இவளைப் பத்திப் பேசறதுக்கு முன்னாலே நாம யார்.. இருக்கிறது யாரோட அரண்மனைங்கிறதை யோசித்துப் பேசனும்.. அப்பா வீட்டுச் சொத்தைக் கழுவாய் கரைச்சிட்டு இருக்க இடமில்லாம மாமன்

மகன் அரண்மனையில ஒண்டிக்கிட்டு இருக்கிற நீ நந்தினியைப் பற்றிப் பேசக் கூடாது..”

“ஏன் பேசக்கூடாது..?”

“ஏன்னா உனக்கு அதற்கான தகுதியில்லை..”

“போதும் அத்தான்.. இதையே எத்தனை காலம் சொல்லிக் காட்டுவீங்க.. எனக்குத் தகுதியில்லாமலே இருக்கட்டும்.. நான் என்னோட அப்பாவோட அரண்மனையிலே இல்லாம உங்க அரண்மனையிலே ஒண்டிக்கிட்டு இருக்கிறவள ாவே இருக்கட்டும்.. இதில் ஒளிவு மறைவு ஏதும் இல்லையே.. வயநாட்டுக்கே இது தெரியுமே..”

“உலகத்துக்கே தெரியும்ன்னு சொல்லு.. ஏன்னா உன் அப்பா உலகம் முழுக்க கடன் வாங்கி கிளீன் போல்டானவர்.. இப்பவும் கடன் வாங்க டிரை பண்ணிக்கிட்டு இருக்கிறவர்.. தன் பெயரைச் சொன்னாக் கடன் கிடைக்காதுன்னு என் பெயரைச் சொன்னவர்.. நான் சட்ட ரீதியாய் அறிவிப்பு கொடுத்த பின்னால்தான் அடங்கியிருக்கிறார்.. உன் வரலாற்றைப் பற்றிப் பெருமையாய் பேசற பார்.. உன்னோட மனோ திடத்தைப் பாராட்டியே ஆகனும்.. இதில் ஒளிவு மறைவு இல்லையாம்.. இது ஒரு பெருமையா..?”

இப்போது அஜந்தாவின் முகம் சிறுத்துப் போனது.. அவள் அவமானபட்டுப் போனவளாக தவித்தாள்.. இது போன்ற தருணங்களில் ஏன் யோகானந்தனுக்கு மகளாகப் பிறந்து தொலைத்தோம் என்று வெறுத்துப் போவாள்.. அப்போதும் அந்த வெறுப்பு வர தந்தையை முறைத்துப் பார்த்தாள்.. யோகானந்தனோ நடந்து கொண்டிருக்கும் பேச்சுக்களுக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல காலை உணவை வளைத்துக் கட்டி வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்.. அதில் ரவிச்சந்திரனின் முகத்தில் ததும்பிய ஏளனம் அதிகமானதில் அஜந்தாவுக்கு வயநாட்டு மலையிலிருந்து குதித்து விடலாமா என்றிருந்தது..

“இப்போதைய பிராப்ளம் அஜந்தா இல்லையல்லோ..” யாழினி ஊடே பாய்ந்தாள்.. நந்தினிக்காக ரவிச்சந்திரன் அஜந்தாவைச் சொல்லிக் காட்டியதில் அவளுக்குள் கோபம் கொந்தளித்தது.. அவளுடைய மகனின் மனதில் உரிமைப் போராட்டத்தை கொணர்ந்தவள், அவளுடைய சிம்மாசனத்தை ஆட்டம் காட்டச் செய்தவள் என்று மனம் சுட்டிக் காட்டிய நந்தினியை அவளால் மன்னிக்க முடியவில்லை..

தாய்மாமனின் முகத்தில் யோசனையிருந்ததில் அஜந்தாவின் உற்சாகம் திரும்பிவிட்டது.. அவள்

குதூகலமானாள்.. மகன் பேச்சுக்கு எதிர்பேச்சுப் பேசாத ரவிவர்மன் முதல் முறையாக யோசிக்கிறார்.. இது கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்லவா..

‘எண்ட மோன் அவனன்ட பார்யாவுக்குப் பிரியமான ஈ நந்தினிக் குட்டிமேல சம்சயமாகி..’ யாழினிக்கு வானில் பறக்க சிறகு முளைத்தது..

“ஞான பறஞ் .. ஈ பெண்குட்டி ஈ வயநாட்டுக் கொட்டாரத்தகத்தே பாதம் பதிச்சப்பவே ஞான் பறஞ் .. ஆரானு ஈ பெண்குட்டி..? இவளிண்ட பேரு உண்மையிலேயே நந்தினியோ.. அல்ல நொனா பறஞ்ஞோ..? எவுடுந்து ஈ பெண்குட்டி வருந்நூ..? இவளிண்ட ஊரு எதா..? அனைத்தயும் அன்வர்ஷிக்கனு மெண்டு ஞான பறஞ் .. எவரானு செவியகத்தே கேட்டோ..? ஆ பெண்குட்டிய ஒரு சொல் பறஞ்ஞோண்டாலும் எண்ட கொச்சு மோன் வெப்பராளம் கொண்டு.. ஞான் சம்சாரிக்கிறது தெற்றெண்டே பிராதி பறஞ் .. வல்லதும் சரியில்லண்டு எனக்குத் தோணி.. ஆரானு ஈ பெண்குட்டின்னு சம்சயமாகி.. எண்ட சம்சயம் சரியெண்டு ஆகிப் போயி.. ஈ பெண்குட்டி வல்லிய குடும்பத்தில ஜனிச்சதை மறைச்சு.. நொனா பறஞ் .. கேட்டே ரவி..”

கொக்கரித்தாள் யாழினி.. மருமகளை வெற்றிப் பார்வை பார்த்தாள்.. இது ஒன்றை வைத்தே ரவிவர்மனைத் தன் பக்கமாக இழுத்து விடலாம் என்ற நம்பிக்கை அவள் விழிகளில் ஒளிர்ந்தது..

ரவிவர்மனின் முகபாவத்தை வைத்து எதையும் கணிக்க இயலவில்லை.. மகன் எதைச் செய்தாலும் அதற்கு சரியான காரணமிருக்கும் என்ற அவரது கணிப்பு மாறி விட்டதா என்று அவரது முகபாவத்தை வைத்துக் கணிக்க முடியவில்லை..

‘எண்ட மோனோட மனிசில எந்து உண்டு..?’ அறிந்து கொள்ள முடியாமல் தவித்தாள் யாழினி..

‘ஞானே ஈ வயநாட்டுக் கொட்டாரத்தின் தம்புராட்டி..’ அதற்காக அவள் எதையும் செய்வாள்.. மருமகளின் மீதான மகனின் காதலை உடைத்தெரியவும் தயங்க மாட்டாள்.. ரவிச்சந்திரன் அலட்டிக் கொள்ளவே இல்லை.. உன் மனதை நானறிவேன் என்பதைப் போல இமைக்காமல் யாழினியின் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.. அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் முகம் திருப்பிக் கொண்டாள் யாழினி..

அவளது விரல்கள் நடுங்கின.. அவள்மீது அவளது மகனான ரவிவர்மன் வைத்திருக்கும் பாசத்தினால் யாதொரு

பலனும் ஏற்படப் போவதில்லை என்ற உண்மையில் அவள் ஏங்கிப் போனாள்.. இந்த உலகத்தையே அன்னையின் காலடியில் போட்டு விட்டு இன்னும் என்ன வேண்டும் என்று கேட்கும் ரவிச்சந்திரனைப் போன்ற தீரனுக்கு அன்னையாகி யிருக்கும் வீணாவின் முன்னால் அவளால் நிற்கக் கூட முடியாதே..

ரவிச்சந்திரன் யாழினியின் மனதைப் படித்தவனைப் போல இகழ்ச்சியான புன்னகையுடன் அஜந்தாவைச் சொல்வதைப் போல..

“கொஞ்சம் அடங்கறியா..” என்றான்..

ரவிச்சந்திரன் யாழினியைத்தான் சொல்கிறான் என்பது அங்கிருந்த அனைவருக்கும் தெள்ளத் தெளிவாகப் புரிந்ததில்..

“ரவி..” என்று யாழினி வெகுண்டாள்..

“ம்ம்ம்..?” அமர்த்தலாக புருவத்தை மட்டும் உயர்த்திய ரவிச்சந்திரன் அவளிடம் அவன் பேச விரும்பவில்லை என்பதை உணர்த்தினான்..

“இதி எண்ட கொச்சு மோனோ..?”

“ரவிச்சந்திரன்..”

“ரவிச்சந்திரன் ஆரானு..?”

“ரவிவர்மன், வீணாவின் மகன்.. ரம்ய மாலினியின் அண்ணன்..”

நந்தினியை ரகசியப் பார்வை பார்த்தபடி சொன்னான் அவன்.. அந்த ரகசியப் பார்வை..

‘ஈ ரவிச்சந்திரன் நந்தினியிடம் வல்லிய பிரேமம் கொண்ட காதலனல்லோ..’ என்றது..

‘ஈ வல்லிய சுந்தரன், என்னுடையவனல்லோ..’ நந்தினியின் மனம் குதூகலித்தது..

அவர்களது பார்வையின் பரிபாஷையில் அஜந்தா பொறாமை கொள்ள, தான் வீணாவின் மகன் என்று ரவிச்சந்திரன் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டதில் யாழினி பொறாமை கொண்டாள்..

“ஆ ரவிவர்மன் எண்ட மோனாக்கும்..”

யாழினி ரவிவர்மனை மனைவி, பிள்ளைகள் பக்கம் சேர விடாமல் தன் மகனாக மட்டும் அடையாளப் படுத்தித் தன் பக்கம் இழுக்க முயன்றாள்..

“உங்க மகனா மட்டுமில்லை.. என் அம்மாவின் கணவனா எனக்கும் ரம்யாவுக்கும் அப்பாவா அவர் மாறி ரொம்ப காலமாச்சு..” நிதர்சனத்தைப் பிட்டுப் பிட்டு வைத்தான் ரவிவர்மன்..

“அதிக்காக அம்மை அச்சனை எண்ட மகன் எத்திவசத்திலும் விட்டுக் கொடுத்ததில்லையல்லோ.. அவன் ஈ யாழினியிட மோன்.. அவந்திகாவோட சேட்டன்.. அஜந்தா, அபராஜிதனோட அம்மாவன்..”

“அதுதானே பிராப்ளம்..”

“எந்தா பறஞ் ..?”

“என்னோட அப்பாவுக்கு இத்தனை அடை மொழிகளைக் கொடுத்து நீங்க பாச வலையில சிக்க வைத்திருக்கிறதுதான் பிராப்ளம்ன்னு சொன்னேன்..”

“ஆரானு பாச வலையில சிக்க வைச்சு..?”

“நீங்கதான்..”

“ஆரை..?”

“என் அப்பாவை..”

“அவன் எண்ட மோனாக்கும்..”

“இம்சை..”

ரவிச்சந்திரன் பட்டென்று சொல்லி விட்டான்..

நந்தினி நடுங்க ஆரம்பித்தாள்.. ஆரம்பித்திருக்கும் வாக்குவாதம் அவளைப் பற்றியது என்பதில் அவளுக்குள் குளிர் பரவியது.. அவளது நடுக்கத்தைப் புரிந்து கொண்ட ரம்ய மாலினி ஆறுதலாக அவளது கைவிரல்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. நடுங்கும் நந்தினியின் தளிர் விரல்கள் ரம்ய மாலினியின் கை விரல்களுக்குள் அடங்கியிருந்தன..

‘ஏதாவது செய் அண்ணா..’ ரம்ய மாலினியின் விழிகள் ரவிச்சந்திரனிடம் இறைஞ்சின..

ரவிச்சந்திரன் பல்லைக் கடித்தான்.. ஏதேனும் ஒரு வகையில் அஜந்தா குடைச்சல் குடுத்துக் கொண்டே இருப்பதில் அவனுக்குள் எரிச்சல் பரவியது.. அவனுக்கே இத்தனை குடைச்சல்களைக் குடுப்பவள் அவன் வயநாட்டில் இல்லாத தருணங்களில் அவனுடைய அம்மாவுக்கும் தங்கைக்கும் எத்தனை குடைச்சல்களைக் கொடுத்திருப்பாள்..?

ரவிச்சந்திரன் உலகம் சுற்றும் தருணங்களில் வீணா வயநாட்டு அரண்மனையில் இருப்பதில்லை என்பது அவன் நினைவுக்கு வந்தது.. ரம்ய மாலினியைக் கையில் பிடித்துக்

கொண்டு கோவில் கோவிலாகத் தரிசனம் பண்ணக் கிளம்பி விடுவாள்.. தமிழ்நாட்டில் உள்ள அவளுடைய பிறந்த வீட்டில் தங்கப் போவதாகச் சொன்னால் அதையே ஒரு குற்றமாகச் சொல்லி யாழினி பிரளயத்தை உண்டு பண்ணி விடுவாள் என்பதினால் கோவிலைக் காரணம் சொல்லிக் கிளம்பிப் பிறந்த வீட்டிற்குப் போய் விடுவாள்.. மகன் வயநாட்டுக்கு வரும் சமயம் பார்த்து வயநாட்டுக்கு வந்து சேர்வாள்..

‘என்மீது இவளுக்கு நம்பிக்கையில்லையா..?’ ரவிவர்மனுக்கு வருத்தமாகத்தான் இருக்கும்..

என்ன செய்வது..? வீணாவின் குணம் அப்படி.. அவளால் குடும்பத்தில் பிரச்னை ஏற்படுவதை அவள் விரும்ப மாட்டாள்.. அந்தக் குணம் அவந்திகாவிடமும் அஜந்தாவிடமும் இல்லையென்பதை அவருடைய தாய் ஏன் புரிந்து கொள்ளவில்லை..?

நந்தினியால் தலைநிமிர முடியவில்லை.. அவள் என்ன குற்றம் செய்தாள்..? ஏன் இந்த தலைகுனிவு..? அதுவும் அஜந்தா போன்ற கயமை நிறைந்தவள் விரல் நீட்டிச் சுட்டிக் காட்ட அவள் தலை கவிழ்ந்து நிற்க வேண்டுமா.? ரவிச்சந்திரனுக்கும் அதே எண்ணம்தான்.. அஜந்தாவின்

அட்டூழியம் அன்று அவனுக்கு வழக்கத்தை விட அதிகக் கடுப்பைக் கிளப்பி விட்டிருந்தது..

அவனைப் பற்றிய சொந்த விவரங்களைப் பேச அவள் யார்..? அவளுக்கான இடம் எது என்று எத்தனை முறை அவன் தெரியப் படுத்தினாலும் அவள் அடங்க மறுக்கிறாள் என்றால் அதற்கு யார் காரணம்..?

‘இந்தப் பாட்டிதான் காரணம்..’ வெறுப்புடன் யாழினியைப் பார்த்தான் அவன்..

இம்சையென்று அவன் சொல்லி விட்டதில் வெகுண்டிருந்த யாழினியால் அந்த வெறுப்புப் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

“ஆரானு இம்சை..?” அவள் பாய்ந்தாள்..

“ம்ப்ச்..” அசூசையுடன் சூள் கொட்டினான் ரவிச்சந்திரன்.. யாழினியால் பேச முடியவில்லை.. பாசமழையைப் பொழிந்ததில்லையென்றாலும் ரவிச்சந்திரன் அவளை வெறுத்ததில்லை.. அவந்திகாவின் குடும்பத்தினர் மீது அவள் காட்டும் பாரபட்சமான பாசத்தைச் சுட்டிக் காட்டுவான்.. தட்டிக் கேட்பான்.. மற்றபடி யாழினியின் மனது புண்படும்படி அவன் பேசியதேயில்லை..

‘அங்ஙன இருந்த எண்ட கொச்சுமோன் என்ன இம்சையெண்டு பறஞ் ..’ அதிர்ச்சியில் ஊமையாகிப் போனாள் யாழினி..

அவள் பேசுவாள், பேசுவாள் என்று காத்திருந்து ஏமாந்து போன அஜந்தாவுக்கு யாழினியைக் கன்னம் கன்னமாக அறைய வேண்டும் போல வெறி மிகுந்தது..

‘இந்தக் கிழவி வெறும் இம்சையில்லை.. இம்சையிலும் இம்சை..’

யாழினியை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று அஜந்தாவே களம் இறங்கி விட்டாள்..

“கேட்டிங்களா மாமா.. உங்க அம்மையை அத்தான் இம்சைன்னு சொல்கிறார்..” ரவிவர்மனைத் தூண்டி விட்டாள்..

மகன் தன் மகனைத் தட்டிக் கேட்பான் என்று எதிர்பார்த்துக் காதுகளைத் தீட்டிக் கொண்டு காத்திருந்த யாழினிக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது..

ரவிவர்மன் வாயைத் திறக்கவே இல்லை.. ஆழ்ந்த பெருமூச்சுடன் அரண்மனையின் உச்சியிலிருந்த அழகுமிகு

வேலைப்பாடுகளை வெறித்தார்.. அவர் விட்ட பெருமூச்சு யாழினியின் செவிகளில் அமிலமாக உள் இறங்கியது..

# அத்தியாயம் 209

**ர**விவர்மன் அப்படி உற்று உற்று நோக்கும் அளவிற்கு விட்டத்தில் என்னதான் இருக்கிறது என்று யாழினி உற்று உற்றுப் பார்த்து விட்டாள்.. அவளுக்கு ஒரு துகளும் புரியவில்லை..

‘எண்ட மோனோட கலை நோக்குப் பார்வை போல ஞான் நோக்கலையோ..?’ சம்சயம் கொண்டாள்..

“தப்பாச் சொல்கிறியே அஜந்தா.. உன் பாட்டியை மட்டும் இம்சைன்னு சொல்லலை.. உன்னையும், உன் குடும்பத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.. இம்சையிலும் இம்சை, பெருத்த இம்சை.. ஓர்நாள் ஓர் பொழுதாவது இந்த அரண்மனையில் நிம்மதியாய் இருக்க முடிகிறதா..?”

இதே கேள்வியைத் துயரத்துடன் நினைத்துக் கொண்டிருந்த ரவிவர்மன் அவர் மனதில் நினைத்த அதே கேள்வியை மகன் வாய் விட்டுக் கேட்டு விட்டதில் புளகாங்கிதம் கொண்டவராக மகனை விழிகள் மின்ன ஓர் பார்வை பார்த்தார்..

அஜந்தாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

‘அம்மாவன் தன் மகனைப் பாராட்டுகிறாராக்கும்..’

“அடங்கி இருக்கிறதா இருந்தால் இருங்க.. இல்லைன்னா..”

“இல்லைன்னா..? என்ன சொல்ல வருகிறீங்க அத்தான்..? இந்த அரண்மனையை விட்டு ஓடி விடச் சொல்கிறீங்களா..?”

“அப்படியொரு திருநாள் எப்போ வரும் அஜந்தா..?”

இப்படியொரு கேள்வியைக் காது கொடுத்துக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டால் எவராக இருந்தாலும் அவமானத்தில் துடித்துப் போய் விடுவார்கள்.. அஜந்தா

அது போன்ற சாமானிய சுயமரியாதை உணர்வுகளைத் தன்னிடத்தில் தக்க வைத்துக் கொள்வதில்லை.. எப்படிப் பட்டக் கேள்வியையும் தட்டி விட்டு நகரும் கலையில் அவள் கை தேர்ந்தவள்..

“நாங்க ஏன் ஓடனும்..? இந்த அரண்மனையை விட்டு அப்படியொன்றும் ஓடி விட மாட்டோம்..”

“போக இடம் இருந்தால்தானே.. யாரும் கிட்டக் கூட அண்ட விட மாட்டார்கள்.. உன் பெரியப்பாவுடைய

அரண்மனையும் இதே வயநாட்டில்தானே இருக்கிறது..? அங்கே போய் ஒருநாள்.. ஒரே ஒரு நாள் இருந்துவிட்டு வந்து விடு பார்ப்போம்.. உனக்காக அந்த அரண்மனையின் கதவுகள் திறக்குதான்னு நானும் பார்க்கறேன்.. அதுதானே உன் அப்பாவின் அரண்மனை..? அங்கேயே உனக்கு இந்த வரவேற்புன்னா மத்த இடங்களில் எப்படியிருக்கும்ன்னு நான் சொல்லத் தேவையேயில்லை..”

அவந்திகாவினாலேயே இந்தப் பேச்சைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவமானத்தில் முகம் கருத்து கண் கலங்கி விட்டாள்.. அஜந்தாவுக்குத்தான் அது போன்ற உணர்வுகள் எதுவும் ஏற்படுவதில்லையே.. அவள் சலனமில்லாத முகத்துடன்..

“நான் ஓடிப் போனா என் சொந்தப் பெரியப்பாவோட அரண்மனைக் கதவுகளே எனக்காகத் திறக்க மாட்டேன் என்கிறதே அத்தான்.. ஈ நந்தினியெனும் பெண் குட்டி தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் இருந்து வயநாட்டுக்கு ஓடி வந்திருக்கிறாள்.. இவளுக்கு மட்டும் எப்படியத்தான் இந்த வயநாட்டு அரண்மனையோட கதவுகள் திறந்தன..? அதிலும் கோடிஸ்வரர் குடும்பத்தில் பிறந்தவள் ஏழ்மைக்காக

வேலைக்கு வந்ததா பொய் சொல்லியிருக்கா.. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லனும் அத்தான்..”

அஜந்தா களம் இல்லாமலே படு சாமர்த்தியமாக விளையாடுவாள்.. இன்றோ அவளுக்குச் சரியான களம் கிடைத்து விட்டது.. சும்மாவா விட்டு வைப்பாள்..? புகுந்து விளையாட ஆரம்பித்து விட்டாள்.. ரவிச்சந்திரன் துச்சமாகப் பேசுவதைக் கண்டு கொள்ளாமல் துடைத்து விட்டுச் சுற்றிச் சுற்றி நந்தினியின் பக்கமே விரல் நீட்டினாள்..

இது தீயவர்களின் பாதுகாப்புக் கவசம்.. நான் இப்படித்தான்.. கேடு செய்பவள்தான்.. குணமில்லாதவள் தான்.. ஆனால் உன்னால் நல்லவள் என்று சுட்டிக் காட்டப் பட்ட இவள் மட்டும் குணசாலியா..?

உயரத்தில் இருப்பவர்களை கீழே இழுத்து நிறுத்த காலம் காலமாக சாகசக்காரர்கள் கையாளும் யுக்தி இது.. அஜந்தாவும் அதையே கையாண்டாள்..

“பொய்யைப் பொருத்தமாகச் சொல்ல உனக்குத்தான் தெரியும் அஜந்தா.. நந்தினிக்குத் தெரியாது.. பொய் சொல்வது உனக்குத் தண்ணீர் குடிப்பதைப் போல..”

“ஓ..! பொய் சொல்லத் தெரியாத போதே இத்தனை பொய்ன்னா, தெரிந்திருந்தா எத்தனை பொய் சொல்லுவா..?”

“நந்தினி பொய் சொல்லலை... நான்தான் சொன்னேன்.. இவளைப் பத்தின கேள்விக்கு இவளா பதில் சொன்னாள்..? நான்தானே சொன்னேன்..?”

“ஏன் அப்படிச் சொன்னீங்க..?”

“எதற்கோ சொன்னேன்.. அதைக் கேட்க நீ யார்..?”

ரவிச்சந்திரனின் கடுமையில் அரண்டு போன அவந்திகா அஜந்தாவின் கைபற்றி அவள் பேசுவதைத் தடுக்க முயன்றாள்..

நந்தினியின் விழிகள் கலங்கின.. ரவிவர்மன் அவளைப் பற்றி என்ன நினைப்பாரோ என்று சங்கடம் கொண்டாள்.. அவரிடம் அவள் சகஜமாகப் பேசியதில்லை.. பயம் நிரம்பிய மரியாதையுடன் தள்ளியே நின்றிருக்கிறாள்.. அவரும் அவளது பயம் புரிந்தவராக சன்னமான புன்சிரிப்பும் சிறிய தலையசைவுமாக நகர்ந்து விடுவார்.. அவர் முன்னால் அஜந்தா நந்தினியைக் குற்றவாளியாக்கி நிறுத்தி விட்டாளே..

அவந்திகா கை பிடித்துத் தடுத்ததை அஜந்தா லட்சியம் பண்ணவில்லை.. கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை கோட்டை

விட்டு விட்டுச் சும்மா இருந்தால் அவள் எப்படி அஜந்தா ஆவாள்..?

“நான் யாரோவாகவே இருந்து விட்டுப் போகிறேன் அத்தான்... உங்க அப்பச்சியோட மகள்ன்னு நீங்க சொல்லிக்கவே வேணாம்.. நந்தினி உண்மையில் யாரோட மகள் அத்தான்..? கோடிஸ்வரர் மேகநாதனோட மகளா.. இல்லை பெட்டிக்கடை வைத்திருக்கிற ஏழையோட மகளா..? இப்ப அதுதான் பிராப்ளம்..”

“நீயே பிராப்ளம்.. நீயெல்லாம் பிராப்ளத்தைப் பத்திப் பேச வந்திட்ட.. நந்தினியோட அப்பா பெயர் உனக்கு எப்படித் தெரியும்..? துப்பறிஞ்சியா..?”

யோசனையுடன் கேட்டான் ரவிச்சந்திரன்.. அவந்திகாவின் முகம் வெளிறி விட்டதை அவனது கூர்மையான கண்கள் கண்டு பிடித்து விட்டன.. அவள் அதில் கலவரமானாள்..

“ஓ..” ரவிச்சந்திரன் கோபமானான்..

“இந்த வேலைக்குத்தான் உன் அண்ணன் மும்பையை விட்டுச் செஞ்சிக்குப் பறந்தானா..?”

‘என்னது..?’ நந்தினி துணுக்குற்றாள்..

அவள் யாரோ.. ரவிச்சந்திரன் யாரோ.. தமிழ் நாட்டிலிருக்கும் நந்தினியைப் பற்றித் துப்பறிய அஜந்தா எதற்காக அபராஜிதனை அனுப்பி வைக்க வேண்டும்..? துணுக்குற்ற அவளது பார்வையின் கேள்வியில் ரவிச்சந்திரன் சுதாரித்துக் கொண்டு பேச்சை மாற்றி விட்டான்..

“நந்தினி என் பொறுப்பு.. இவளைப் பத்தி நான் என்ன சொன்னாலும் எதிர் கேள்வி கேட்காம அப்படியே கேட்டுக்கனும்..”

“கேள்வி கேட்க வேண்டிய விவரங்களுக்கு கேட்டுத்தான் ஆகனும் அத்தான்..”

“கேள்வி கேட்கிற உரிமையும், தகுதியும் உனக்கு இல்லை.. மனசிலாயி.. நீ லிமிட்டை கிராஸ் பண்ணிட்ட.. மும்பைக்கு உன் அண்ணனிடம் அனுப்பி வைத்திடறது தான் பெட்டரா இருக்கும்.. நீயும் உன் குடும்பமும் ரெடியாகிக்கங்க..”

ரவிச்சந்திரன் சொல்லி வாய் மூடுவதற்குள்..

“புறப்படான் தயாராயோ.. ஞான் ரெடி.. ஞான் ரெடி..” என்று பறந்தார் யோகானந்தன்..

‘ஈ ஊர் சுத்தி மனுஷனுக்கு வாழ்க்கைப் பட்டு எண்ட ஜீவிதமே பாழாப் போயி..’ தலையில் அடித்துக் கொண்டாள் அவந்திகா..

“அஜந்தா எந்துக்கு ரெடியாகி ரவி..?” யாழினி கோபத்துடன் சண்டைக்கு வந்தாள்..

‘ஈ கிழவிக்கு தன்னுணர்ச்சி வர இத்தனை மணிக்கயிறா..?’

பாட்டியை முறைத்தாள் அஜந்தா..

“எந்துக்கா..? அவளோட அண்ணனோட இவளும் இவ குடும்பமும் ஐக்கியமாகத்தான்..” என்றான் ரவிச்சந்திரன்.

“எண்ட கொச்சு மோளும் அவளிட குடும்பமும் ஈ வயநாட்டுக் கொட்டாரத்திலதான ஜீவிதம் செய்யி..”

“இந்த வயநாட்டு அரண்மனை எனக்கும் என் குடும்பத்துக்குமானதுன்னு நான் எத்தனை தடவை சொன்னாலும் உங்க மரமண்டையில் ஏறவே ஏறாதா..? தாத்தா உங்க செல்லப் பார்யாளை வாயை மூடிக்கிட்டு

இருக்கச் சொல்லுங்க.. இல்லைன்னா இவங்களும், நீங்களும் உங்க மகள் குடும்பத்துடன் மும்பைக்குப் போய் செட்டிலாகிருங்க..”

“பறயறது ஞான்.. நிண்ட தாத்தாவிடம் பறயாண்டாம் கொச்சு மோனே.. கேட்டே..”

“எனக்குக் கேட்குது.. தாத்தாவுக்குத்தான் கேட்க மாட்டேங்குது.. நான் எதைச் சொன்னாலும் ஷமிக்கனும் கொச்சு மோனே.. ஈ கிழவனுக்கு மாப்புத் தரனும்ன்னு புலம்ப ஆரம்பத்து விடுகிறார்.. அதனால அங்கே சொன்னேன்..”

“அஜந்தா சம்சாரிச்சதில எவ்விதமான தெற்றும் இல்லையல்லோ.. இவ நொனா பறயலயல்லோ..”

“உண்மைக்கும் இவளுக்கும் ரொம்பத் தூரம் பாட்டி.. ராக்கெட் விட்டாலும் எட்டாது.. இவளோட கேரக்டர் அப்படி..”

“நிண்ட கேரக்டர் எந்தா ரவி..? தமிழ் தேசத்தில இருந்து ஈ நந்தினி ஓடி வந்து.. ஈ பெண் குட்டிக்கு நீ அடைக்கலம் தந்து... அதிபத்தி அப்பவே சம்சாரித்திருக்கலாமல்லோ.. ஏன் பறஞ்ஞுல..?”

“அது என் விருப்பம்ன்னு அப்பவே சொல்லிட்டேன்.. என் அப்பாவுக்கு மகனாப் பிறந்துட்டதினால அவரோட அப்பாம்மா, தங்கை குடும்பம்ன்னு அத்தனை பேருக்கும் இந்த அரண்மனையில தங்க இடம் கொடுக்க வேண்டியதாப் போச்சு.. என் குடும்பத்தோடு உறவுக் கும்பல் தங்கியிருக்கிறதால என்னோட பெர்சனல் அத்தனையையும் அத்தனை பேரிடமும் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா...? இருக்க இடம் கொடுத்திருக்கேன்.. அந்த எல்லையோடு நிற்கப் பழகிக்கனும்..”

“ஞானும் ஆ எல்லையோடு நிற்கனுமோ..?”

“நீங்க மட்டும் என்ன ஸ்பெஷல்..? முக்கியமா நீங்கதான் தள்ளி நிற்கனும்.. பெத்த மகனுக்கு நல்லது நினைக்காம மகள் குடும்பத்தை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிற மனுஷி நீங்க.. பெத்தவங்க பவரா இருக்கனும்ன்னுதான் பிள்ளைகள் எக்ஸ்பெக்ட் பண்ணுவாங்க.. என்னைப் பெத்தவங்களை பவரோடு இருக்க விட்டிங்களா..? இந்த அரண்மனையோட பவர் அத்தனையையும் நீங்க வைத்துக்கிட்டு என் அப்பாவை பாசத்தைக் காட்டி, அடிமையா வைத்திருந்தீங்க.. நீங்களா பவரைக் கொடுக்க மாட்டிங்கன்னு நான் அதை விலை கொடுத்து வாங்கி என்னுடையதாக்கிக் காட்டினேன்.. என்

வாழ்க்கையை நான்தான் செதுக்கினேன்.. எனக்கான இடத்தையும் நான்தான் உருவாக்கினேன்.. இது உங்கள் பரம்பரையால் கிடைத்த இடமில்லை.. என் உழைப்பால் நான் தக்க வைத்துக் கொண்ட இடம்.. எனக்கு மட்டும் சொந்தமானது.. ஸோ.. தள்ளி நிற்க வேண்டியவங்க தள்ளித்தான் நிற்கணும்..”

மனதுக்குள் நொந்து நூலாகிப் போனார் அருள்மொழிவர்மன்.. வயநாட்டு அரண்மனையில் நடக்கும் அநியாயங்களைத் தட்டிக் கேட்கும் போது ரவிச்சந்திரன் அருள்மொழிவர்மனும், யாழினியும் நடந்து கொண்ட விதத்தைக் குத்திக் காட்டித்தான் பேசுவான்.. அதற்காகவே அருள்மொழிவர்மன் பேரனுடன் வாக்குவாதம் செய்ய மாட்டார்.. அமைதி காத்து விடுவார்..

‘ஈ யாழினிக் கிழவி வாயை அடக்கி இருந்தா எந்தா..?’

“கேட்டே மோனே...” சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள விழைந்தவளாக மகனிடம் முறையிட்டு கூட்டணி போட முயன்றாள் யாழினி..

ரவிவர்மனோ தாயின் பார்வையைத் தவிர்த்தார்.. தாடையைத் தடவியபடி அரண்மனையின் மேற்கூரையைப்

பார்வையிடுவதைத் தொடர்ந்தார்.. அப்படி அங்கே என்னதான் இருக்கிறது என்று அண்ணாந்து பார்த்த யாழினிக்குப் பித்துப் பிடித்ததைப் போல இருந்தது..

கணவரும் துணைக்கு வராமல் மகனும் கழன்று கொள்ள பேரனை எதிர்த்து தனியொருத்தியாய் எவ்வளவு நேரம்தான் அவள் தாக்குப் பிடிப்பாள்..?

அவளது மனப் போராட்டத்தைப் பற்றித் துளியும் லட்சியம் செய்யாமல் அஜந்தாவைச் சுட்டிக் காட்டி அழுத்தம் திருத்தமாக கேட்டான் ரவிச்சந்திரன்..

“இவள் யார் என்னைக் கேள்வி கேட்க..? நந்தினியைப் பற்றித் துப்பறியும் தைரியம் இவளுக்கு எங்கிருந்து வந்தது..? இது என் அரண்மனை.. தாத்தாவுக்கு உரிமையானதைப் போல இது பரம்பரையாய் அவருக்குப் பின்னால் என் அப்பாவுக்கு.. என் அப்பாவிடமிருந்து எனக்குன்னு உரிமையாகலை.. விலை கொடுத்து வாங்கியிருக்கிறேன்.. அதுக்குப் பின்னாலும் இந்த அரண்மனையில் என் அம்மாவும் அப்பாவும் உரிமை கொண்டாட முடியலை.. நீங்க அதற்கு விடலை.. அப்போதே உங்களையும் உங்க மகள் குடும்பத்தையும் தள்ளி நிறுத்தியிருக்கனும்.. விட்டு

வைத்ததினால் தான் இவளுக்கெல்லாம் என் எதிரே நின்று கேள்வி கேட்கிற துணிச்சல் வந்திருக்கு..”

யாழினி இருப்புக் கொள்ளாமல் நெளிந்தாள்.. அருள்மொழி வர்மனோ இமைகளை மூடித் திறந்து பெருமூச்சு விட்டார்.. இதுபோன்ற கேள்விகளை தினம் தினம் எதிர் கொண்டும் சளைக்காமல் அடுத்தடுத்து பிர ச்னைகளைக் கிளப்பிவிடும் அஜந்தாவால் இன்னும் என்னெவெல்லாம் கேட்க வேண்டி வருமோ என்று அவருக்கு வேதனையாக இருந்தது..

நந்தினி கோடிஸ்வரியாய் இருந்தால் என்ன.. இல்லை.. ஏழை வீட்டுப் பெண்ணாக இருந்தால்தான் என்ன..? அஜந்தாவுக்கு அதைப் பற்றி என்ன கவலை..? இந்த வாக்குவாதத்தை ஏன் கிளப்பி விட்டாள்..? அருள்மொழிவர்மனுக்கு அஜந்தாவின் மீது வெறுப்பு கலந்த கோபம் உண்டானது..

# அத்தியாயம் 210

**அ**வரவர் நிலையைப் புரிந்து அடங்கிப் போக வேண்டும் என்று அருள்மொழிவர்மன் நினைக்க வில்லை.. நினைக்கவும் மாட்டார்.. ஆனால், அடுத்தவரின் பராமரிப்பில் இருந்து கொண்டு பராமரிப்பவர்களுக்கே தலைவலியை உண்டு பண்ணுவது தவறு என்று திட்டவட்டமாக நினைத்தார்..

அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.. ரவிச்சந்திரன் பழகும் பெண்களைப் பற்றி அஜந்தா துப்பறிய முனை ந்ததில்லை.. இந்த ஆண்களே இப்படித்தான் என்று தோள்களைக் குலுக்கி விட்டு நகர்ந்து விடுவாள்.. அவர்களைப் பற்றிப் பேசும் அளவிற்கு அவர்கள் அஜந்தாவிற்கு இணையா என்று கேட்பாள்.. நந்தினியிடம் மட்டும் ஏன் வன்மம் வைக்கிறாள்..?

“எங்க அப்பாவின் பங்குக்கு வந்திருந்த சொத்து கொஞ்சம்தான் பாட்டி.. எங்க பூர்விக சொத்தை உங்க மகளுக்காக நீங்க கரைத்து காணாமல் போக வை த்ததில் எஞ்சியிருந்தது கொஞ்சம்.. அதையும் நீங்க காணாமல் போக வைக்க நினைத்தீங்க.. நான் விடவில்லை.. என் பெயரிலும் ரம்யா பெயரிலும் பாகம் பிரித்து ரிஜிஸ்டர் பண்ண

வைத்தேன்.. மற்றபடி நான் சுயமாய் ஏர்ன் பண்ணியிருக்கிற புராப்பர்ட்டிஸுல கோடியில் ஒரு பங்குக்குக் கூட இந்த புராப்பர்ட்டி வராது.. இருந்தும் ஏன் நான் அதைக் கைப்பற்றினேன் தெரியுமா..? வயநாட்டு ராஜகுடும்பத்தின் பாரம்பரியச் சொத்து அத்தனையும் ஒரு ஊதாரிக் குடும்பத்தின் சுயநலத்துக்காக 'ஸ்வாஹா..' ஆகி காணாமல் போயிருச்சுன்னு கேரளத்தில் பேசி விடக்கூடாது என்பதற்காக.. அப்படி என் பரம்பரைச் சொத்தை 'ஸ்வாஹா' பண்ணக் கிளம்பி வந்த இவள் என்னைப் பார்த்துக் கேள்வி கேட்டா.. அதை நான் சகித்துக் கொண்டிருக்கனும்.. நினைப்புத்தான் உங்களுக்கு.."

ஏளனமாக ரவிச்சந்திரன் கேட்ட விதம் சம்மட்டி அடியாக யாழினியின் மனதில் விழுந்தது..

"இது எனக்கும் ரம்யாவுக்குமான அரண்மனை.. உங்க மகள்வழிப் பேரன் பேத்திகளுக்கான அரண்மனையில்லை பாட்டி.. அடைக்கலம்ன்னு வந்தவங்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கேன்.. தட்'ஸ் ஆல்.. இந்த நினைவை மனதில் வைத்துக் கொள்ளச் சொல்லுங்க.. வேறு நினைவை வைத்துக் கொள்ள வேண்டாம்.. விருந்தாளிகள் எல்லாம் அளவோடு பேசிப் பழகனும்.. ஒருநாள், இரண்டு நாள் என்றால்

பரவாயில்லை.. உங்க மகள் குடும்பம் ஆயுளுக்கும் அடுத்தவர் தயவில் வாழ்கிறாங்கள்ல.. அதுதான் அவங்களுக்கு அவங்க யார்.. அவங்க லெவல் என்ன என்பது மறந்து போய் விட்டது..”

அவந்திகா தலை கவிழ்ந்து கண்ணீரை மறைக்க முயன்றாள்.. அவளது விழிகளில் உதித்த கண்ணீர் அவளது உள்ளங்கையில் பட்டுத் தெறித்து வீழ்ந்தது.. தாயின் துயரத்தில் அஜந்தா கோபம் கொண்டாள்..

“நான்.. இந்த அரண்மனையின் தம்புரான் அருள்மொழிவர்மனோட பேத்தி.. அஜந்தா..” என்று அவள் கட்டியம் சொல்லி ஆரம்பிக்க..

“ம்ப்ச்..” என்று சூள் கொட்டி அவளை அடக்கினான் ரவிச்சந்திரன்..

“தலையை வலிக்குது அஜந்தா.. போரடிக்குது.. இதே ஐடெண்ட்டிஃபிகேஷனை எத்தனை முறைதான் சொல்லுவ.. ஒரு சேஞ்ஜுக்கு.. நான் யோகானந்தனின் மகளாகப் பிறந்திருக்கும் அஜந்தான்னு சொல்லிப் பாரேன்.. அதுதானே உன்னோட ஃபர்ஸ்ட் ஐடெண்டிபிகேஷன்..”

ரம்ய மாலினி மெலிதாக சிரித்தபடி தலையைச் சரித்து நந்தினியின் காதோரமாக குனிந்து..

“செம்மயான நோஸ்கட்டில்ல..” என்று முணுமுணுத்தாள்.. நந்தினியின் முகம் ஒளிர்ந்தது.. அருமையான கமெண்ட் என்ற சிலாகிப்புடன் அஜந்தாவைக் கள்ளப் பார்வை பார்த்தபடி தலையை ஆட்டி அவளுக்குக் கடுப்பைக் கிளப்பினாள்..

ரவிச்சந்திரனிடம் மூக்குடைந்தது போதாது என்று நந்தினியின் கள்ளப் பார்வைக்கும் ரம்ய மாலினியின் கேலிச் சிரிப்புக்கும் ஆளான அஜந்தா அவற்றை கண்டு கொள்ளாததைப் போல படு கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

“அண்ணன் இவளைக் கழுவிக் கழுவி ஊற்றிக்கிட்டு இருக்கான்.. இவ என்னவோ அடுக்கடுக்காய் ரிவார்டை வாங்கிக்கிட்டு இருக்கிறதைப் போல முகத்தை வைத்துக்கிட்டு இருக்கா..” அடுத்த கமெண்ட் ரம்ய மாலினியிடமிருந்து புறப்பட்டது..

“வேணாம் ரம்யா.. சிரிச்சிருவேன்..”

“ஹையோ.. நந்தினியா இதைச் சொல்கிறது..? சிரிப்புத்தான் உங்க டிரேட் மார்க்.. உங்களாலே சிரிக்காமல் இருக்க முடியாதே..”

“சோகத்தைக் கிளப்பாதீங்க ரம்யா.. என்னைத்தான் இவ கார்னர் பண்ணிக்கிட்டு இருக்காளே..”

“அதுக்குத்தான் அண்ணன் இவளைக் கார்னர் பண்ணிக்கிட்டு இருக்கானே..”

“ஆமாமில்ல..”

அஜந்தாவை பொறியில் மாட்டி விட்ட எலி போலத் தவிக்க வைத்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனை எவரும் அறியாமல் ரகசியமாக காதலுடன் பார்த்து வைத்தாள் நந்தினி.. அவன் அதுதான் வாய்ப்பென்று கண்சிமிட்டி, அவளை நடுங்க வைத்தான்..

‘இவன் இருக்கானே..’

இனி மற்றவர் முன்னால் அவன் பக்கம் பார்க்கவே கூடாது என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டாள் நந்தினி.. அவள் மனதோ அடங்க மறுத்து சண்டித்தனம்

செய்தது.. என்னைக் கேட்டா நீ தீர்மானம் போட்டாய்.. என்று சட்டம் பேசியபடி அவனைப் பார்க்கத் தூண்டியது..

யாழினி அடங்கிப் போயிருந்தாள்.. அஜந்தா நந்தினிக்கு எதிராக வலுவான ஆதாரம் ஒன்றைக் கொண்டு வந்து விட்டாள்.. ரவிச்சந்திரனைக் கேள்வி கேட்டு விட்டாள் என்று அவள் சிறகடித்துப் பறக்க நினைத்தால் ரவிச்சந்திரன் கேள்வியின் நாயகனாக அஜந்தாவையும் யாழினியையும் நிற்க வைத்துக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்..

“எனக்குக் கொஸ்டின் பண்ணினாப் பிடிக்காது.. தேவையில்லாம என்னோட பெர்சனல் மேட்டரில் தலையிட்டா உண்டு இல்லைன்னு ஆக்கித் தொலைத்துக் கட்டி விடுவேன்.. இருக்கிற இடம் தெரியாம அரண்மனையில இருக்க முடிந்தவங்க மட்டும் இருக்கலாம்.. வாயை அடக்கி இருக்க முடியாதவங்க வெளியே போய் விடலாம்.. சொந்தமாகித் தொலைத்து விட்டதினால அவங்க தனித்து வாழ பங்களா, தொழில்ன்னு எழுதிக் கொடுத்துத் தொலைக்கிறேன்.. தலையெழுத்து..”

“ம்ஹும்.. எண்ட கொச்சுமோன் எந்தத் திசயில நோக்கினாலும், எங்களை ஈ வயநாட்டுக் கொட்டாரத்திட

புறத்தே ஓட்டி விடற ஜோலியத்தான் நோக்குவானென்டு ஞான் கரையூந்துப் பறயறத எவர் செவி மடுத்து..? ஈ நந்தினிக்குட்டி பெட்டிக்கடை நாயரிட மோளாயிருந்தா நமக்கெந்தா..? தரவாடோட மோளா இருந்தா நமக்கெந்தா..? நாம ஈ கொட்டாரத்தில ஜீவிக்கனும்.. அதிதான முக்கியம்..?" அருள்மொழிவர்மன் மனைவியின் காதைக் கடித்தார்..

"அதி முக்கியமெண்டாலும் ஈ நந்தினிக்குட்டி ஆரானு..? அதி பத்தி அன்வர்ஷிக்கனுமல்லோ..?"

"எந்தா கழுதைக்கு..?"

"எந்தா பறயுனு..? ஈ பெண்குட்டி வறிய குடும்பத்தில ஜனித்தவளெண்டு நொனா பறஞ் .."

"எவர் பறஞ் ..? ஈ நந்தினியோ..?"

"அல்ல.. நம்மளிட கொச்சு மோன் பறஞ் .."

"அறிஞ்சும் அவனிட பிணக்கம் கொண்டு.. ம்ஹூம்.. நினக்கு மதியில்ல யாழினி.."

"எந்துக்காம்..?"

"ரவிச்சந்திரன் பறஞ்ஞா அதிக்கு எதிரா பறயாண்டாம்.. கேட்டே.."

“கேட்டே.. கேட்டே..”

யாழினி முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.. அப்பாடி என்றிருந்தது நந்தினிக்கு.. வாக்குவாதம் ஓய்ந்து விட்டது என்ற நிம்மதி அவள் முகத்தில் படர்ந்தது.. அதைக் காணப் பொறுக்காத அஜந்தா..

“இது உங்களுடைய அரண்மனைன்னு சொல்லிக் கேள்வி கேட்டவ வாயை அடைத்துட்டிங்க அத்தான்.. கெட்டிக்காரர்தான் நீங்க.. ஆனாலும் கேள்வி அப்படியே தான் இருக்குது அத்தான்.. அதுக்கான பதில்தான் கிடைக்கல..” என்று தூண்டிலைப் போட்டு விலாங்கு மீனை இழுக்க முயன்றாள்..

“ஸ்ஸ்.. அப்பா.. மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பித்து வைக்கிறாளே.. கண்ணைக் கட்டுதே..” பலமாகவே சொல்லி விட்டாள் ரம்ய மாலினி..

ரவிவர்மனின் இதழ்களில் புன்னகை அரும்பியது.. தைரியமாகப் பேசிவிட்ட மகளை ஆதுரத்துடன் பார்த்து விட்டு..

“கண்ணையெல்லாம் கட்டாது மோளே.. நீ நிம்மதியா ஊன் கழிச்சு.. இப்போது என்ன ஆகி விட்டது..? நந்தினி பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள்.. ஏழையில்லைன்னு

தெரிய வந்திருக்கு.. அவ்வளவுதானே..? அது என்ன பெரிய கிரிமினல் குற்றமா..? இதைப் பற்றிப் பேசியது போதும் அஜந்தா.. இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடு..” என்று அஜந்தாவைக் கண்டித்தார்..

“தேங்க் யு டாட்..” ரம்ய மாலினியின் முகம் மலர்ந்து விட்டது..

‘இதி என்னிடக் கொட்டாரமோ..’ யாழினியால் தாள முடியவில்லை..

அவளுடைய மகன் தன்னுடைய மகளுக்காக அஜந்தாவைக் கண்டிக்கிறார்.. அதில் அவளுடைய மகள் சந்தோஷப் பட்டுப் போகிறாள் என்றால் வயநாட்டு அரண்மனை யாழினியின் கரம் நழுவிப் போய் விட்டது என்றுதானே அர்த்தம்..?

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான சிந்தனையுடன் சாப்பிட்டு முடித்து விட்டு இடத்தைக் காலி செய்தார்கள்.. ரவிவர்மனைத் தனியே சந்தித்த ரவிச்சந்திரன்..

“ஸாரி அப்பா.. நந்தினி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள்ன்னு பொய் சொல்லிட்டேன்..” என்று வருத்தம் தெரிவித்தான்..

“நீ சொன்னா அதிக்கு வல்லதும் காரணமிருக்கும் மோனே.. பட்ஷே.. அச்சனிடம் எதிக்காக இதை மறைக்கனும்..? இது எண்டு ஆத்யமே பறஞ்சிருக்கலா மல்லோ..?” கனிவுடன் கேட்டார் ரவிவர்மன்..

“அவளுக்கு சில சிக்கல்கள் இருக்கு டாட்.. என்னிடம் எதையும் அவள் மறைக்கவில்லை.. நம் குடும்பத்திடமும் மறைக்க நினைக்கவில்லை.. அவள் சொல்லியிருந்தால் உண்மையைத்தான் சொல்லியிருப்பாள்.. அவளுக்குப் பொய் சொல்லத் தெரியாது டாட்..”

“ஞான் அறியும் மோனே..”

“என்ன விவரம்ன்னு இப்போதைக்குச் சொல்ல முடியலை டாட்.. நேரம் வருகிறப்ப நானே சொல்கிறேன்.. அவள் மறைந்திருக்க இடம் தேடி வேலைக்கு வந்திருக்கிறா.. அவளை எப்படி டாட் வெளியில் தங்க வைக்க முடியும்..? என் பாதுகாவலில் அவளை நிறுத்தி வைத்துக் கொள்வதாக என் நண்பனுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்..”

“ஓ..”

“அதனால் நம் அரண்மனையிலேயே தங்க வைத்தேன்.. நான் எங்கே போனாலும் அவளையும் அழைத்துக் கொண்டு போகிறேன்..”

அதுவரை ரவிவர்மன் மகனிடம் கேள்வியேதும் கேட்டதில்லை.. முதல் முறையாக கேள்வி கேட்டவரிடம் விளக்கம் கொடுத்து மறைத்ததிற்கான வருத்தத்தையும் தெரிவித்து விட்டான் ரவிச்சந்திரன்..

உலகம் வியக்கும் இளம் கோடிஸ்வரத் தொழிலதிபனாக.. நட்சத்திர பிம்பம் உடையவனாக இருந்தாலும் பெற்றவருக்குப் பிள்ளையாக பணிவுடன் விளக்கம் சொல்லி அவன் வருத்தம் தெரிவித்ததில் ரவிவர்மனின் மனம் நிறைந்து விட்டது..

‘இவன் என்னுடைய மகன்..!’

பெருமையுடன் மகனின் தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டார் ரவிவர்மன்.. தந்தையும் மகனும் தழுவி நின்றக் காட்சியைப் பார்த்தபடி அங்கே வந்த வீணாவின் விழிகள் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பி விட்டன.. அதை மறைத்துக் கொண்டு..

“அடடா.. பாசம் வழுக்கப் போகுது போங்க..” என்று சிரித்தாள்..

தந்தையை விட்டு விலகிய ரவிச்சந்திரன்..

“உங்களுக்குப் பொறாமைம்மா..” என்றபடி குனிந்து தாயின் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்டு விட்டு..

“குட்நைட்..” என்று தாய், தந்தைக்கு கையாட்டி விட்டு விரைந்து விட்டான்..

மகனைப் பார்த்தபடி நின்றிருந்த வீணா தலையை ஆட்டி மகனின் செய்கையை ரசித்துச் சிரித்தபடி கணவரை ஏறிட்டாள்.. அவர் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் திகைத்துப் போனவளாக..

“என்னங்க..?” என்று கேட்டாள்..

“நந்தினியைப் பற்றி உனக்கு முதலிலேயே தெரியுமா வீணா..?”

வீணா உதட்டைக் கடித்தபடி மௌனமாக நின்றாள்.. அவள் விழிகளில் தெரிந்த குற்ற உணர்வில்..

“ஏய்..” என்று மனைவியை அணைத்துக் கொண்டார் ரவிவர்மன்..

“உனக்கு நந்தினியைப் பற்றித் தெரியும்ன்னு என் உள்மனது சொல்லுது வீணா.. அதனால கேட்டு விட்டேன்..

ஸாரிடி..” வீணாவுக்குள் அதிர்வு வருவதை அவளை அணைத்து நின்ற ரவிவர்மனால் உணர முடிந்தது..

“வீணா..?” புருவங்கள் முடிச்சிட மனைவியின் முகத்தை விரலால் நிமிர்த்தி விழியோடு விழி பார்த்தார்..

“எனக்குத் தெரியும்ங்க..” எதையோ சொல்லத் துடித்தவளாக வீணா தவித்தாள்..

“ரவி உன்னிடம் மட்டும் சொன்னானா..?”

“இல்லைங்க..”

“அவன் சொல்லாமல் உனக்கு எப்படித் தெரியும்..?”

கணவரை நிமிர்ந்து பார்த்த வீணாவின் விழிகளில் கண்ணீர் திரண்டிருந்தது.. அது ஆனந்தக் கண்ணீரல்ல என்பதில் ரவிவர்மன் திகைத்தார்..

“என்னம்மா..?” ஆறுதலாக வினவினார்..

“நான்.. நான்..” கணவரின் மார்பில் தலைசாய்த்துக் கண்ணீர் விட்டாள் வீணா..

“நான்தான் நந்தினியைப் பற்றி ரவிக்குச் சொன்னேன்..”

அவளது விழிகள் துயரத்துடன் அவரைப் பார்த்தன.. ஏனிந்த துயரம் என்ற அவருக்குப் புரியவில்லை.. அதைவிட நந்தினியைத் தெரிந்திருந்தும் தெரியாதவளைப் போல வீணா அவளை வரவேற்றது ஏன் என்று சுத்தமாகப் புரியவில்லை..

# அத்தியாயம் 211

**வீ**ணா சாத்வீகமானவள்.. ரகசியங்கள் அவளிடத்தில் இருந்ததில்லை.. தெளிந்த நீரோடையைப் போன்றவள்.. அகல்விளக்கின் சுடருக்கு இணையானவள்.. அவளா நந்தினியைப் பற்றி ரவிவர்மனிடம் சொன்னாள்..? நந்தினியை வயநாட்டு அரண்மனைக்கு ரவிச்சந்திரன் அழைத்துக் கொண்டு வந்தபோது அப்போதுதான் அவளைப் பார்ப்பதைப் போல வரவேற்றாளே.. அதிலும் ரவிச்சந்திரன் சொன்ன பெட்டிக்கடை அப்பா கதையை நம்புவதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு காருண்யமாய் நந்தினியைப் பார்த்தாளே.. அவருடைய வீணாவிற்கு நடிக்கத் தெரியாதே..

‘பின் எப்படி அப்படியிருந்தா..?’

ரவிவர்மனின் முக வேறுபாட்டில் வீணாவின் கண்ணீர் அதிகரித்தது..

“என்னை மன்னிச்சுருங்க..” அவள் தேம்பினாள்.. அவள் கேட்டும் முதல் மன்னிப்பு..! அதுநாள்வரை ரவிவர்மன்தான் அவளிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்..

ஒன்றல்ல, இரண்டல்ல.. அடுக்கடுக்காய் கேட்க நேரிட்ட மன்னிப்புகள்..

தினந்தோறும் ஏதேனும் ஒரு நிகழ்வில் மனம் கசிய மனைவியிடம்..

“என்ன மன்னிப்பாயா..?” என்று நின்றிருக்கிறார்.. வீணா அந்த வார்த்தைகளை உச்சரித்ததே இல்லை.. அவரிடம் மன்னிப்பை யாசிக்கும் யாசகியாக அவள் இருந்ததே இல்லை.. அவருக்கு மன்னிப்பை வழங்கும் தேவதையாகத்தான் இருந்திருக்கிறாள்.. தந்தை, தாயின் பாசவலையிலிருந்து மீள முடியாத பிணை கைதியாய் கட்டுட்டுண்டு நின்றவருக்குக்

கிட்டிய அமுத சுரபி வீணா..! அவள் கற்பகத் தரு..!

பாலைவனச் சோலை..! பாசமென்னும் பெயரால் வஞ்சிக்கப் படும் ஒவ்வொரு தருணமும்.. வாய் திறவாமல் அந்தத் துரோகங்களை ஜீரணித்துக் கொண்டு மனைவியிடம் தான் அவர் சரணடைவார்.. அவரது மனக்காயங்களுக்கான மருந்து வீணாவின் மடிதான்.. அதுதான் தாய்மடி என்று அவருக்குத் தோன்றும்.. மகனிடம் காட்டும் அதே வாஞ்சையைக் கணவரிடமும் காட்டித் தேற்றி உட்கார

வைப்பாள் வீணா.. புண்பட்ட மனதை ஆற்றும் வல்லமை கொண்டவள் அவள்.. மகா சக்தி..!

அவளா ரவிவர்மனிடமிருந்து ஓர் ரகசியத்தை மறைத்தாள்..? அவளா நந்தினியை ரவிச்சந்திரனுக்கு இனம் காட்டினாள்..? அவளா நந்தினியை அறிந்தும் அறியாதவளைப் போல நடந்து கொண்டாள்..? அவளா இப்போது மன்னிப்பு கேட்டுத் தேம்பி அழுது கொண்டிருக்கிறாள்..?

“வீணா..”

அவர் மனையின் கண்ணீரைத் துடைத்து விட்டு அவளைச் சமாதானப் படுத்தினார்.. அறைக் கதவை தாழிட்டு விட்டு அவளை நெருங்கினார்.. அங்கிருந்த சோபாவில் அவளை அமர வைத்து விட்டுப் பக்கத்தில் அமர்ந்தார்.. மனைவியின் கலக்கம் நிரம்பிய முகத்தைப் பிரியத்துடன் பார்த்தார்..

அவளைத் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து அந்த நொடிவரை அவர் அவளுக்கு மட்டும் சொந்தமானவராக இருந்ததில்லை.. மனைவி, பிள்ளைகளின் நலனை முன்னிருந்தியதில்லை..

“எங்கட மோன் அம்மையச்சன் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டானாக்கும்..” என்று சொல்லிச் சொல்லி வளர்த்து அவருக்கு எல்லைக் கோடை வரையறுத்துக் கிழித்து அதைத் தாண்ட விடாமல் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள் யாழினி..

அவள் கிழித்த கோட்டை ரவிவர்மனால் தாண்ட முடிந்ததில்லை.. அந்தத் தருணங்களில் தனது கம்பீரம் குறைவதாக அவர் குன்றிப் போய் விடுவார்.. மனைவியின் முன்பு மன்னிப்பை யாசித்து நிற்பார்.. அதுபோன்ற தருணங்களில் தான் மன்னிப்பை வழங்குகிறோம் என்ற கர்வம் துளியும் இல்லாமல் அவரது மனைவி சின்னப் புன்னகையில் அவருக்கு மன்னிப்பை வழங்கி அவருடைய கம்பீரம் சிதையாமல் காப்பாற்றி விடுவாள்..

அந்த நன்றிக் கடனை தீர்க்கும் தருணம் ரவிவர்மனுக்கு வாய்த்திருக்கிறது.. அவரது மனைவி எதைச் செய்திருந்தாலும் அதற்கு ஒரு காரணம் இருக்கும்.. அதை அவரிடம் மறைத்திருந்தாலும் அதற்கும் ஒரு காரணம் இருக்கும்..

அவர் அவற்றைப் பற்றித் தூண்டித் துருவ மாட்டார்.. அவள் கேட்கும் மன்னிப்பைத் தயக்கமில்லாமல் அள்ளித்

தருவார்.. அவள் தயாள குணம் கொண்டவள்.. அவரது குடும்பத்தில் ஒளியேற்ற வந்த குத்து விளக்கு..! அவள் மனது அலைபாய ஒருபோதும் அவர் அனுமதிக்க மாட்டார்..

“என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாதுதான்.. பட்ஷே... எது நடந்திருந்தாலும் அதை ஒரு காரணத்தோடுதான் நீ நடத்தியிருப்பாய்ன்னு தெரியும்.. துயரப்பட வேணாம் வீணா.. நீ மன்னிப்பு கேட்கிற அளவுக்கு எதுவும் நடந்திரலை.. அமைதியாய் இரு..”

சின்னக் குழந்தைக்குத் தேறுதல் சொல்வதைப் போல அவளை மடிதாங்கி தேறுதல் சொன்னார் ரவிவர்மன்.. காதலுடன் தன் கணவரை ஏறிட்டாள் வீணா.. அவளது விழிகளில் பிரமிப்புடன் கூடிய பிரியம் வழிந்தோடியது..

“நான் என்ன செய்தேன்னு உங்களுக்குத் தெரியாதுங்க..”

“தெரியாதுன்னுதான் எனக்குத் தெரியுமே..”

“ரவி நம்ம மகன்..”

“என்னடி இது.. புதிதாய் சொல்கிறதைப் போலச் சொல்கிற..?”

கனிவுடன் சிரித்தார் அவர்.. மனைவியின் பதட்டத்தை அவர் குறைக்க முனைவதைப் புரிந்து கொண்ட வீணாவின் மனதில் தென்றலடித்தது.

“அவனுடைய கல்யாணத்தை முடிவு செய்கிற உரிமை நம் இருவருக்குமே இருக்கிறது.. அதைத்தான் சொன்னேன்..” தயக்கத்துடன் சொன்னாள்..

“நமக்கும் முன்னால் முதல் உரிமை அவனுக்குத்தான் இருக்கு வீணா.. அதிலும் நம் ரவி தகப்பன்சாமி.. அச்சனுக்கே பாடம் நடத்தும் சுப்பிரமணிய சுவாமி..”

“அந்த சுப்பிரமணிய சுவாமி தகப்பன் பிள்ளை.. இந்த ரவிச்சந்திரன் அம்மா பிள்ளை.. என் ஆசையை நிறைவேற்றும் செல்லப்பிள்ளை..” பெருமையுடன் சொன்னாள் வீணா..

ரவிவர்மன் அதில் போட்டிக்கு வரவில்லை.. மனைவி சொல்வது உண்மைதான் என்பதைப் போல மிருதுவாக புன்னகைத்தார்.. ரவிச்சந்திரன் தாய் சொல்லைத் தட்டாத தமையன்தான்.. அதே சமயத்தில் அவனை தளை போடும் வார்த்தைகளை வீணா சொல்ல மாட்டாள்.. மகனுக்கு அவள் கட்டளையிட்டதில்லை.. பாச வலையில் பிணைத்ததில்லை..

அதைச்செய், இதைச் செய் என்று ஆணையிட்டதில்லை.. அதை ஏன் செய்தாய்..? இதை ஏன் செய்தாய்..? என்று கேள்வி கேட்டதில்லை.. அதைச் செய்யாதே.. இதைச் செய்யாதே என்று தடை போட்டதில்லை..

மொத்தத்தில் யாழினி பாசம் என்ற பெயரில் தன் மகனை அடிமைப் படுத்தியிருந்ததைப் போல வீணா தன் மகனை அடிமைப் படுத்தியதேயில்லை.. மாறாக எல்லையற்ற சுதந்திரத்தை வாரி வழங்கினாள்.. இவன் என்மகன் என்ற பெருமிதத்தோடு விலகி நின்றாள்.. மண்ணில் தாவாமல் விண்ணில் தாவி அவன் இலக்கை எட்டி உச்சத்தைத் தொடுவதற்கு இடையூறு செய்யாமல் வழிவகை செய்தாள்..

ரவிச்சந்திரன் சாதனையாளன்..! சாதிகப் பிறந்தவன்..!

உயரே, உயரே என்று வரையறைகளைக் கடந்து வானத்தைத் தொட்டவன்.. அவனுடைய வெற்றிகளுக்குக் காரணம் சப்தமின்றி ஒதுங்கி நிற்கும் அவனது தாய்தான் என்று ரவிவர்மன் அடிக்கடி நினைத்துக் கொள்வார்.. அவருக்குக் கிட்டாத தாயின் ஒத்துழைப்பு அவருடைய மகனுக்குக் கிடைத்திருப்பதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டு..

தாய், தந்தையின் பாசம் என்னும் போர்வையின் மறைவில் அவர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு கைதியாகியிருந்த ரவிவர்மன் தன்னுடைய மகன் அம்மா பிள்ளையாக தாய், தங்கையின் பாதுகாவலனாக இருப்பதில் பெருமிதம்தான் கொள்வார்.. அவரது மனைவிக்கும், மகளுக் கும் அவரால் தர முடியாத பாதுகாவலையும், சந்தோஷத்தையும் அவரது மகன் தந்து கொண்டிருக்கிறானே.. இதைவிட அவருக்கு வேறென்ன வேண்டும்..? இதற்காக மகனை மனைவிக்கு விட்டுக் கொடுத்தால்தான் என்ன..?

“நம் மகன் அம்மா பிள்ளைதான் வீணா.. உன் செல்லப் பிள்ளைதான்.. நான் இல்லையென்டு பறயலையே..”

“ரவி எனக்கொரு வாக்குக் கொடுத்தான்..”

“எப்போது..?”

“இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்னால்..”

“என்னவென்று..?”

“என் மனதுக்குப் பிடித்த.. நான் கை காட்டும் பெண்ணைத்தான் அவன் கல்யாணம் செய்து கொள்வான்னு..”

“ஓ...”

ரவிவர்மனுக்கு ஏதோ புரிவதைப் போல இருந்தது..

நந்தினியின் மீது வீணா காட்டும் பாசத்தையும், பிரியத்தையும் அவர் கவனித்துக் கொண்டுதானே இருக்கிறார்.. ரம்ய மாலினியும் நந்தினியிடம் ஒட்டுதலாய் பழகினாள்.. மகளின் முகத்தில் சிரிப்பையும், உயிர்ப்பையும் மீட்டுக் கொடுத்திருந்த நந்தினியின் மீது அவருக்குள் பரிவு உண்டாகியிருந்தது.. ரவிச்சந்திரனின் மனதில் நந்தினியின் மீது ஓர் எண்ணம் இருப்பதைப் போல அவருக்குத் தோன்ற ஆரம்பித்திருந்தது.. இப்படி ஒட்டு மொத்தமாக அவளுடைய மனைவி, மகள், மகன் மனதைக் கவர்ந்திருக்கும் பெண்ணை மருமகளாக ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டால் அதற்குப் பூரண சம்மதம் தெரிவித்து விட வேண்டும் என்று அவர் உத்தேசித்திருக்க வீணா வேறு எதையோ சொல்கிறாளே..

“நந்தினியைத்தான் நான் கை காட்டினேன்.. இவள்தான் எனக்கு மருமகளாக வரனும்னு சொன்னேன்.. ரம்யாவும் அதுக்குச் சப்போர்ட் பண்ணினாள்..”

ரவிவர்மனுக்குக் குழப்பமாக இருந்தது.. வீணா இப்போதைய நிகழ்வைப் பற்றிச் சொல்கிறாளா இல்லை..

முன்னரே நடந்து முடிந்துவிட்ட நிகழ்வைப் பற்றிச் சொல்கிறாளா..?

அப்படி நடந்து முடிந்துவிட்ட நிகழ்வைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் நந்தினியைப் பற்றி வீணாதான் ரவிச்சந்திரனுக்குச் சொன்னதாக ஏன் சொன்னாள்..?

“ரவி மனசில நந்தினி மேல ஓர் சாஃப்ட் கார்னர் இருக்கிறதா எனக்கும் தோன்றியது வீணா.. அது போல உனக்கும் தோன்றியதில் இவள்தான் என் மருமகள்ன்னு ரவியிடம் சொன்னாயா..?” தன்மையாக விசாரித்தார்..

“இல்லைங்க..” மறுப்பாக தலையசைத்தாள் வீணா..

“இல்லைன்னா..? எனக்குப் புரியலைடி..”

“ரவி நந்தினியைப் பார்க்கிறதுக்கு முன்னாடியே நானும், ரம்யாவும் அவளைப் பார்த்துட்டோம்.. ரவியிடம் இவள்தான் என் மருமகள்ன்னு நந்தினியோட போட்டோவைக் காட்டித்தான் சொன்னேன்.. ரம்யாவும் ஆமாண்ணா, எனக்கு இவங்களைப் பார்த்தவுடன் பிடிச்சிருச்சுன்னு சொன்னா.. உங்கள் இரண்டு பேருக்கும் பிடித்திருந்ததுன்னா ஓகே.. நான் இவளையே கல்யாணம் பண்ணிக்கிறேன்னு ரவி சொல்லிட்டான்..”

“ரவி நந்தினியைப் பார்க்கலையா..?”

“போட்டோவில்தான் பார்த்தான்.. நேரில் பார்க்கலை..”

“என்னிடம் சொல்லியிருக்கலாமே வீணா..”

என்னிடம் ஏன் சொல்லவில்லையென்று ரவிவர்மன் கேட்கவில்லை.. சொல்லியிருக்கலாமே என்றுதான் கேட்டார்.. அதில் நெகிழ்ந்து போன வீணா..

“மன்னித்துருங்க..” என்று தழுதழுத்தாள்..

“ம்ப்ச்.. மன்னிப்புன்னு ஏன் பிரிச்சுப் பேசற..? என்னிடம் சொல்லத் தயங்கியிருப்ப..”

“இல்லைங்க.. தயக்கமில்லை.. நீங்க என் ஆசையை மறுக்கப் போவதில்லைங்கிறப்ப எதற்காகத் தயங்கனும்..? இது வேற..”

வீணாவின் கண்கள் குளமாகின.. மனைவி இந்த அளவுக்குத் துயரப்படும் அளவிற்கு என்ன நிகழ்ந்தது என்று புரியாமல் மனம் துடித்தார் ரவிவர்மன்.. தூண்டித் துருவிக் கேள்வி கேட்கவும் முடியவில்லை.. அதுவரை அவர் அப்படிக் கேள்வி கேட்டதில்லை.. அவர் கேள்வி கேட்கும் விதத்தில்

வீணா நடந்து கொண்டதும் இல்லை.. புதிதாக அவளும் துடித்து அவரையும் துடிக்க வைக்கிறாளே..

“என்னவென்று இப்போதாவது சொல்லும்மா..”

வீணா கண்ணீருடன் கணவரை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளது இதழ்கள் நடுங்கின..

“சொல்லனும்னுதான் நினைக்கிறேன்.. ஆனால்.. சொல்ல முடியலைங்க.. ஒன்றை மட்டும் உறுதியாச் சொல்கிறேன்.. எனக்குப் பிடித்திருக்கிறது என்கிறதுக்காக நம் ராஜ குடும்பத்தின் பாரம்பர்யத்தைக் குறைக்கிறதைப் போல நான் எதையும் செய்து விடலைங்க.. நந்தினியின் அம்மா வெண்ணிலா எனக்குச் சொந்தக்காரப் பெண்.. ராஜ வம்சத்தில பிறந்தவ.. நந்தினியின் அப்பா மேகநாதன் தஞ்சாவூர் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்... நம்ம குடும்பத்தைப் போல அவங்க ராஜ பாரம்பர்யம்ங்கிறதைப் பெரிதாப் பேசிக்கொள்வதில்லை.. பிள்ளைகளுக்கே அதைப்பற்றி எதுவும் தெரியாதாம்..”

“ம்ஹூம்.. நம் குடும்பத்தில்தான் மூச்சுக்கு முந்நூறுதரம் ஈ வயநாட்டு கொட்டாரத்திட தம்புரான், தம்புராட்டியெண்டு பெருமையைப் பீற்றிக்கிறோம் போல..”

“மேகநாதன் நம்ம அளவுக்குப் பணக்காரர் இல்லைன்னாலும் கோடிஸ்வரர்.. உறவு, ராஜபாரம்பர்யம்ன்னு எல்லாம் ஒன்றாய் கூடி வந்ததாலே தான் நான் நந்தினியை நம் மருமகளாக்கிக் கொள்ள ஆசைப்பட்டேன்..”

“அதிலொன்றும் தவறில்லை.. நாம் குடும்பத்தோடு போய் ரவிக்காக பெண் கேட்கலாம்..”

“நான் கேட்டுட்டேங்க..”

கணவரின் முகம் பார்க்கும் திராணியில்லாமல் தலையைக் குனிந்தபடி சொன்னாள் வீணா... ரவிவர்மனுக்குத் தனது செவிகளை நம்ப முடியவில்லை.. இவ்வளவு பெரிய தீர்மானத்தை வீணா தனித்து எடுத்து நடத்தி முடித்திருக்கிறாளா..? ஏன்..? அவரிடம் கலந்து பேசினால் அவரென்ன மறுக்கவா போகிறார்..?

# அத்தியாயம் 212

**வா**னளவு பேரலை ஒன்று எழுந்தால் எப்படியிருக்கும்..? அப்படியிருந்தது ரவிவர்மனுக்கு.. ஸ்தம்பித்துப் போனார்.. தன் மனைவியா இதைச் சொல்வது என்று நம்ப முடியாமல் வீணாவை வெறித்தார்.. வீணாவின் விழிகள் அவரிடம் மன்றாடின..

நந்தினியைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வீணா மகனிடம் கை காட்டினாள் என்று அவள் சொன்னதைக்கூட அவரால் ஏற்றுக் கொள்ள முடிந்தது.. அதில் தவறில்லையென்று நினைத்தார்.. நந்தினியை அடையாளம் தெரியாதவளைப் போல அவள் நடந்து கொண்டதைக்கூட அவரால் மன்னிக்க முடிந்தது.. அதற்கு ஏதேனும் காரணமிருக்கும் என்று நினைத்தார்.. ஆனால்... அவருக்குக்கூடத் தெரியாமல் அவரது மகனுக்காக வீணா பெண் கேட்டு விட்டாள் என்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. பேரதிர்ச்சியாக இருந்தது..

ரவிச்சந்திரன் சாமானியனல்ல.. கேரளத்து ராஜ பரம்பரையில் பிறந்த கோடிஸ்வரன்.. உலகம் முழுவதும்

பெரும் பிரபலமாக அறியப்படும் இளந்தொழிலதிபன்.. நட்சத்திர இமேஜைக் கொண்டவன்..

அப்பேற்பட்டவனுக்குப் பெண் தேடும் போது அவனுடைய தந்தையிடம் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டாமா..? அவரென்ன மனைவியின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காதவரா..? அவளுக்கு நந்தினியைத்தான் பிடித்திருக்கிறது என்று சொன்னால் மறுத்து விடுவாரா..?

“இதை நான் உன்னிடமிருந்து எதிர்பார்க்கலை வீணா..” வறண்ட குரலில் சொன்னார் அவர்.. அவர் குரலின் வறட்சியைத் தாள முடியாமல் துடித்துப் போன வீணா அவர் முன்னால் மண்டியிட்டுக் கை கூப்பி மன்னிப்பை இறைஞ்சினாள்.. அவளது விழிகளில் இருந்து தாரை தாரையாய் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது..

“இப்படியெல்லாம் நடக்கும்ன்னு நானும் எதிர்பார்க்கலைங்க.. திட்டமிட்டு எதையும் செய்யலை.. தமிழ்நாட்டுக் கோவில்களைச் சுற்றிப் பார்க்கப் போனப்பதான் நந்தினியைப் பற்றித் தெரிந்தது.. அவளோட அம்மா என் உறவுக்காரியாய் இருந்தா..”

“சரி வீணா.. அங்கிருந்தே தகவல் சொல்லியிருந்தா நான் கிளம்பி வந்திருப்பேனே..”

“தனியாவா கிளம்பி வருவீங்க..?” நிதானமாக கேள்வி கேட்டாள் வீணா..

“அது.. அது..”

“அப்படி வர உங்களால் முடியுமா..?”

முடியாது என்பதில் பெருமூச்சு விட்டார் ரவிவர்மன்.. அவருடைய தாய், தந்தையின் பாசவலையில் சிக்கி அவர் அடிமையாகியிருந்ததில் அவர் பெற்ற மகனுக்குப் பெண் கேட்க அவரால் போக முடியாமல் போய் விட்டதே..

“வேண்டும்ன்னு எதையும் செய்யலைங்க... உங்களிடம் சொல்ல முடியாத சூழ்நிலை.. உங்களிடம் சொன்னால் அத்தை, மாமாவுக்கு விவரம் போகும்.. அவர்களுக்குத் தெரிந்தால் அவந்திகா குடும்பத்துக்கும் விவரம் தெரிந்து விடும்.. அப்புறம் எப்படிங்க நான் நினைத்ததைப் போலப் பெண் கேட்க முடியும்..? எதைச் செய்வாங்க, எப்படிச் செய்வாங்கன்னு தெரியாது.. ஆனா நாம பெண் கேட்டுப் போக முடியாத அளவுக்கு எதையாவது செய்து கல்யாணத்தை அவங்க கலைத்து விட மாட்டாங்களா..?”

‘கட்டாயம் செய்வார்கள்..’ ரவிவர்மன் மனதுக்குள் ஆமோதித்தார்..

“அவர்களை விடுங்க.. அத்தை, மாமாவே நாம தமிழ்நாட்டிலே பெண் எடுப்பதை அனுமதிக்க மாட்டாங்க.. கேரளத்தில பெண் இல்லையாம்பாங்க.. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில ஆரம்பிச்சு கேரள ராஜ குடும்பங்களில கல்யாண வயசில இருக்கிற அத்தனை பொண்ணுகளோட விவரங்களையும் பட்டியல் போடுவாங்க.. அதில ஒன்றைக்கூட பார்க்க விட மாட்டாங்க என்கிறது வேற விஷயம்.. கட்டக் கடைசியில அஜந்தா மட்டும்தான் ரவிச்சந்திரனுக்குத் தோதான பெண் என்கிறதில வந்து நிற்பாங்க..”

“அதற்காக நீ செய்தது சரின்னு ஆகிருமா வீணா..”

“ஆகாதுதான்.. அது எனக்கும் தெரியும்ங்க.. நான் நந்தினியைப் பெண் கேட்டது நெருக்கடியான ஓர் நிலைமையில..”

“அப்படியென்னடி நெருக்கடி..?”

வீணா உதட்டைக் கடித்துக் கொண்டு கண்களில் நீர்மல்க தலையை அசைத்து அவளால் எதையும் சொல்ல முடியாது என்று உணர்த்தினாள்.. கைகளைக் குவித்து மன்னிப்பை

இறைஞ்சினாள்.. மனம் தாளாமல் மனைவியை அணைத்துக் கொண்டார் ரவிவர்மன்.. வீணா விம்மினாள்..

“என்னால இப்ப எதையும் சொல்ல முடியாதுங்க.. உங்க வீணா எதையும் மறைக்கனும்னு நினைத்து மறைக்கலைங்க.. மறைக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில அகப்பட்டுக்கிட்டேன்.. இதையெல்லாம் உங்களிடம் சொல்லும் நாள் வரும்.. அப்ப உங்க வீணா எதையும் காரணமில்லாமல் செய்யலைங்கிறதை நீங்க புரிஞ்சுக்குவீங்க..” அவள் மருகும் அந்த ‘எதையும்..’ என்பது என்ன என்று அறியத் துடித்த மனதை அடக்கி கொண்டு மனைவியைத் தேற்றினார் ரவிவர்மன்.. வீணாவின் விம்மல் அடங்க வெகு நேரமானது.. ரவிவர்மனுக்கு இன்னும் சில விவரங்கள் தெரிய வேண்டியிருந்தன.. அவற்றையாவது மனைவி அவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமே என்றிருந்தது அவருக்கு..

மனைவியைக் குறை சொல்லவும் முடியவில்லை.. அவள் தனித்துச் செயல்பட்டதைப் போலத் தோன்ற வில்லை.. ரம்ய மாலினியும் வீணாவுடன் இருந்திருக்கிறாள்.. இவள்தான் உனக்கு மனைவியாக வரப் போகிறவள் என்று நந்தினி சுட்டிக்

காட்டிய போட்டோவைப் பார்த்ததுமே ரவிச்சந்திரன் சம்மதம் சொல்லியிருக்கிறான்..

இவை அத்தனையையும் அவர் யோசித்து செயல்பட வேண்டியிருந்தது.. அவர் மகனின் திருமணத்திற்கு அவரது சம்மதத்தை விட அவர் மகனின் சம்மதம்தானே முக்கியம்..!

“வீணா..” மெதுவாக அழைத்தார்..

அழுது அழுது ஓய்ந்து போயிருந்த வீணா.. “ம்ம்ம்..” என்று நலிந்த குரலில் முணுமுணுத்தாள்..

“நந்தினி வீட்டை விட்டு ஓடி வந்து விட்டதா அஜந்தா சொல்கிறாளே..”

“உண்மைதான்..”

“ஏன்..? எதற்காக ஓடி வந்தா..?”

“அவளுக்கு பிக்ஸ் பண்ணின மாப்பிள்ளையைப் பிடிக்கலைன்னு ஓடி வந்திட்டா..”

“என்னது..?”

ரவிவர்மனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. என்னடா இது என்று குழம்பிப் போனார்.. தெளிவாகப் பேசும் வீணாவிற்கு என்ன ஆனது..? இப்படிக் குட்டையைக் குழப்புகிறாளே..

“ஆமாங்க.. பிடிக்காத கல்யாணத்திலிருந்து தப்பிக்கத்தான் அவ ஓடி வந்திருக்கிறா..”

“ரவிச்சந்திரனை அவளுக்குப் பிடித்திருக்கிறதைப் போலதானே தெரிகிறது..?”

“ஆமாம்.. அவளுக்கு நம்ம ரவியைப் பிடித்திருக்காம்.. ரவியைக் காதலிக்கிறாளாம்.. ரவி சொன்னான்..”

தெளிவாகப் பேசிய மனைவியின் மனநிலை குறித்த சந்தேகம் ரவிவர்மனுக்குள் வந்தது.. அவரது தாய், தந்தையும் தங்கையின் குடும்பமும் படுத்துகின்ற பாட்டில் வீணாவின் மனநிலை பாதிக்கப்பட்டு விட்டதா என்ன..?

இல்லை.. இப்படிப்பட்ட குடும்பத்திடம் மாட்டி விட்டிருக்கும் கணவரை பழிவாங்க இதுபோல பேசி வைக்கிறாளா..?

“என்னடி பேசற..? உனக்குக் கோபமிருந்தா என் முதுகில் நான்கு அப்பு அப்பிக்க வீணா.. தோதா முதுகைத் திருப்பிக் காட்டறேன்.. மொட்டைக் காத்தான் குட்டையில விழுந்தான் என்கிறதைப் போல முன்னுக்குப் பின் முரணா பேசி வைக்காதே.. மண்டை காயுது..”

“இதில் மண்டை காய என்ன இருக்கு..?”

“ரவியைப் பிடிக்கலைன்னுதானே அவ வீட்டை விட்டு ஓடி வந்தா..?”

“ஊஹும்.. அவளுக்கு நிச்சயம் பண்ணி வைத்திருந்த மாப்பிள்ளையைப் பிடிக்கலைன்னு வீட்டை விட்டு ஓடிவந்தா..”

“குழப்பாதே வீணா.. நீ ரவிக்காக நந்தினியைப் பெண் கேட்டிருக்கும் விவரம் அவளுக்குத் தெரியுமா, தெரியாதா..?”

“தெரியாது..”

“ஓ...”

“நந்தினி சென்னையில படிச்சுக்கிட்டு இருந்தா.. ரவி ஃபாரின் கண்ட்ரிஸில சுத்திக்கிட்டு இருந்தான்.. ரெண்டு பேருக்குமே இந்தக் கல்யாண ஏற்பாட்டைப் பற்றித் தெரியாது.. ஃபாரின்ல இருந்து வந்த ரவிக்கு நந்தினியைப் போட்டோவில் பார்த்ததுமே பிடித்து விட்டது..” பேச்சை நிறுத்திய வீணா யோசனையுடன் மௌனமானாள்.. அவளது விழிகளில் தெரிந்த தவிப்பில் ரவிவர்மன் யோசனையானார்.. ஏன் இந்தத் தவிப்பு..? எதற்காக வீணா துயரம் கொள்கிறாள்..

“நந்தினிக்கு மாப்பிள்ளையின் ஃபோட்டோவைக் காட்டியிருப்பாங்கள்ல..?”

“இல்லையாம்.. நந்தினி மாப்பிள்ளையின் போட்டோவைப் பார்க்கலையாம்.. நேரில் பார்த்துப் பேசனும்னு கேட்டிருக்கிறா.. அவளோட அப்பா முடியாதுன்னு சொல்லிட்டாராம்..”

“ஏன்..?”

“இவ மாப்பிள்ளையைப் பிடிக்கலைன்னு அவர் முகத்துக்கு நேராச் சொல்லிக் கல்யாணத்தைக் கலைத்து விட்டிருவாளோங்கிற பயமாய் இருக்கலாம்..”

“அப்படி நேரில் பார்த்திருந்தா இப்படியெல்லாம் நடந்திருக்காது.. நந்தினி அவசரப் பட்டுட்டா..” வீணா பதில் சொல்லாமல் படுக்கை விரிப்பை சரிசெய்து இழுத்து விட்டு குளிருக்கு இதமாக ரஜாயில் புகுந்து கொண்டாள்.. மனைவிக்கு தூக்கம் வந்து விட்டது என்று நம்ப ரவிவர்மன் தயாராக இல்லை..?

இதுவரை வராத தூக்கம் இப்போது வந்து விட்டதா..? அதி முக்கியமான பேச்சு வார்த்தையின் போது தூக்கம் வரத்தான் செய்யுமா..?

“இப்ப நந்தினியிடம் உண்மையைச் சொல்லி விட வேண்டியதுதானே வீணா..”

“வேண்டாம்.. வேண்டாம்..”

பதட்டத்துடன் மறுத்தாள் வீணா.. ஏனிந்த பதட்டம் என்று மனைவியைப் பார்த்தார் ரவிவர்மன்.. அனைத்தையும் அவரது மனைவி அவரிடம் சொல்லி விட்டாளா..? இல்லை.. இன்னும் ஏதேனும் ரகசியங்கள் உள்ளனவா..?

“ஏன் வேண்டாம்ன்னு சொல்கிற வீணா..?” “நந்தினி தற்கொலைக்கு முயற்சி பண்ணினாளாம்..”

“என்னடி சொல்கிற..?”

“ஆமாங்க.. கல்யாணம் பிடிக்கலைன்னு செஞ்சிக் கோட்டையில இருந்து குதிக்கப் பார்த்திருக்கிறா.. அங்கேதான் அபராஜிதன் இவளையும் உத்ராவையும் முதன் முதலா பார்த்திருக்கிறான்..”

“ஓ.. இவன் ஏண்டி செஞ்சிக்குப் போனான்..?”

“தெரியலைங்க.. சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாங்க.. கரெக்டா இவன் செஞ்சிக்குப் போய் நின்றிருக்கான்னா எப்படியோ அவந்திகா குடும்பத்திற்கு விவரம் தெரிந்திருக்கனும்ன்னு ரவி சந்தேகப்படறான்..”

“தெரிந்துமா நந்தினியின் மேலே பழி போடறதைப் போல அஜந்தா அம்மையிடம் போட்டுக் கொடுத்தா..?”

“என்னைக் கேட்காதீங்க.. நான் எதையாவது சொல்லி விடுவேன்.. எல்லாத்தையும் தெரிந்து வைத்திருக்கிறவங்க உங்க அம்மை அச்சனிடம் மூச்சுக்கூட விடலை.. மகனை அனுப்பி வேவு பார்த்திருக்காங்க.. இப்பச் சொல்லுங்க.. நான் ரவி, நந்தினியோட கல்யாண விவரங்களை ரகசியமா வைத்திருந்தது தப்பா..?”

“தப்பேயில்லை.. போதுமா..”

வீணா புரண்டு ரவிவர்மனின் மார்பில் தலை வைத்துப் படுத்து கணவரின் முகம் பார்த்தாள்.. மனைவியின் நெருக்கத்தில் ரவிவர்மனின் மனதிலிருந்த மனத்தாங்கல்கள் அத்தனையும் பறந்து போய் விட்டன.. இதமான உணர்வுகள் சூழ மனம் பாரமற்று இறகை விட லேசானதைப் போல உணர்ந்தார்..

“உத்ராவோட கல்யாண நிச்சயதார்த்தத்தில் கலந்துக்கப் போன நந்தினி தற்கொலைக்கு முயற்சி பண்ணினதில பயந்து போன உத்ரா தோழியோட பிரச்னையைத் தன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற வினித்திடம்

சொல்லியிருக்கிறா.. வினித்தோட ஃபிரண்டுக்கு ஃபிரண்ட் நம்ம ரவியோட ஃபிரண்டாம்..”

“நெருக்கமான ஃபிரண்ட்ஷிப்தான் போ..”

“அவன் மூலமா விஷயம் தெரிந்ததும் ரவி என்னிடம் நந்தினியை அழைத்து வரப் போகிறதா சொன்னான்.. அவளா மனது மாறி ரவியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஒப்புக் கொள்கிற வரைக்கும் அவளைத் தெரிந்ததைப் போலக் காட்டிக்க வேண்டாம்ன்னு நாங்க முடிவு பண்ணினோம்..”

“இப்பத்தான் அவ மனது மாறிட்டாளே வீணா..”

“மாறிய மனது மறுபடியும் மாறிட்டா..?”

வீணாவின் கேள்வியில் இருந்த தவிப்பில் ரவிவர்மன் ஊமையானார்.. மாறுகின்ற மனமா நந்தினியின் மனம்..? காதலில் வீழ்ந்த பின்னால் அவள் மனம் மாறுவளா..? என்று அவரது மனம் கேள்வி கேட்டது..

# அத்தியாயம் 213

**எ**தற்காக தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வீணா அஞ்சுகிறாள் என்று ரவிவர்மனுக்குப் புரியவேயில்லை.. இவன்தான் உனக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை.. நாங்கள்தான் உன்னைப் பெண் கேட்டுத் திருமணத்தை நிச்சயித்தவர்கள் என்று சொல்வதில் என்ன வந்து விடப் போகிறது..?

“எது வேண்டுமானாலும் வரலாம்..”

வீணாவின் அச்சத்தை சமன் செய்ய முடியாமல் அவள் போக்கிலேயே விட்டுத் திருப்ப முடிவு செய்தார் ரவிவர்மன்.. வீணா அப்படிப் பிடிவாதம் பிடிப்பவளல்ல.. மகா பொறுமைசாலி.. சாத்வீகமானவள்.. உண்மையின் உரைகல்..!

அவள் ஒன்றை மறைக்க நினைக்கும் போது பொறுத்துப் போவதைத்தவிர ரவிவர்மனுக்கு வேறு வழியிருக்கவில்லை..

“ஓகே.. உன் மனதுப்படி நந்தினியிடம் எதுவும் சொல்ல வேண்டாம்.. பட்ஷே.. அவளைப் பெற்றவர்களிடம் நாம் பேசித்தானே ஆகனும்..?”

“நிச்சயமாய் பேசனும்.. கல்யாணத் தேதியை ஃபிக்ஸ் பண்ணனும்..”

“அப்ப அவங்க மகளிடம் உண்மையைச் சொல்லி விட மாட்டாங்களா..?”

“சொல்ல வேண்டாம்ன்னு வெண்ணிலாவிடம் சொல்லிக்கறேன்.. நான் சொன்னால் அவள் கேட்டுக்குவா..”

“வெண்ணிலாவா..? யாரது..?”

“இப்பத்தானே சொன்னேன்.. வெண்ணிலாதான் நந்தினியின் அம்மா.. அப்பா பெயர் மேகநாதன்.. ஒரே தம்பி.. நந்தகுமார்ன்னு பெயர்.. மகா சுட்டி..” நந்தினியின் குடும்பத்தைப் பற்றி விவரிக்கும் போது வீணாவின் குரலில் தெரிந்த உவகையில் மனம் நனைந்தார் அவர்.. மனைவிக்குப் பிடித்த சம்பந்தம் அமையும் போது அவர் எதற்காக வீண் மனக்கிலேசம் கொள்ள வேண்டும்..?

“உனக்குப் பிடிச்சிருக்கில்ல..?”

“யாரைச் சொல்கிறிங்க..?”

“ஊம்..? என்னைச் சொல்கிறேண்டி..”

ரவிவர்மன் மனைவியை அணைத்துக் கொண்டார்.. அவரது மார்பில் புதைந்த வீணா கொஞ்சலாக.. “பிடிக்காமல்தான் உங்களுடைய இரண்டு பிள்ளைகளுக்கு அம்மாவாகி இருக்கிறேனா..?” என்று கேட்ட கேள்வியில் அவருக்கு சொர்க்கம் தெரிந்தது.. வீணாவிற்கும் ரவிவர்மனுக்கும் இடையில் உள்ள பிணைப்பு அத்தகையது.. மனைவியென்று வந்து விட்டால் ரவிவர்மன் அம்மை அச்சனையும் புறம் தள்ளி விடுவார்.. அதைத் தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருந்ததினால் யாழினி தேவையில்லாமல் வீணாவை பகைத்துக் கொள்ள மாட்டாள்.. பொறுமைசாலியான மருமகள் குடும்பத்தின் நிம்மதிக்காக விட்டுக் கொடுத்துப் பணிந்து நடந்து கொள்ளும்போது அவளைப் பகைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லையே.. நந்தினி வந்தபின்னால்தான் அந்தத் தேவை ஏற்பட்டு விட்டதாக அவந்திகாவின் அறையில் யாழினி சீறிக் கொண்டிருந்தாள்.. ரவிவர்மனும் வீணாவும் ரவிச்சந்திரனின் திருமணத்தைப் பற்றிப் பேசி முடிவெடுத்த அதே இரவில் அப்படி நடந்து விட்டால் என்ன செய்வது..? எப்படித் தடுப்பது என்ற சதியாலோசனை அவந்திகாவின் அறையில் நடந்து

கொண்டிருந்தது.. மனைவியின் மீதான ரவிவர்மனின் மயக்கத்தைத் துல்லியமாக கணித்த அவந்திகா..

“ஈ நொடியில் எண்ட சேட்டன் பார்யாளோட பேச்சுக்கு செவி சாய்ச்சிருக்குமல்லோ.. ஆ மனுஷி மேல எண்ட சேட்டனுக்கு வளர பிரேமமானு..” என்று கூறினாள்..

“அதே அவந்திகா.. வீணா பறஞ்சோண்டால் எண்ட மோன் சம்மதமிண்டு பறஞ் ..”

“அங்ஙன எண்டா அம்மே.. ஆ நந்தினிக்கும் ரவிக்கும் விவாகம் கழிக்குமோ..?”

“அதிக்கோசரம்தானே ஞான் உண்டு..? அங்ஙன வல்லதும் நடந்திருமெண்டுதானே நாம ஆலோசிக்கக் கூடி..”

“எந்தா ஆலோசிக்கனது அம்மே..? ஆ நந்தினி இல்லத்த விட்டு புறத்தே வந்து.. அதிபத்தி அஜந்தா பறஞ் .. எண்ட சேட்டன் அன்வஷிச்சுண்டு ஞான் விஜாரம் கொண்டு.. ஆ நந்தினிய ஈ கொட்டாரத்த விட்டுப் புறத்தே தள்ளுமெண்டு சொப்பனம் கண்டு.. அங்ஙன நடக்கலையல்லோ..”

“ஞான் எண்ட மோனிடம் சம்சாரிச்சு.. ஆ இனியன பரிசோதிச்சுட்டுப் பறயாம் கேட்டேன்னு பறஞ் .. எந்து

பிரயோசனம்..? அவனிட பார்யா ஓர் நோக்கு நோக்கி.. எண்ட மோன் கவிழ்ந்து.. ம்ஹூம்.. நிங்கட அச்சன் ஓர் திவசமாவது அதி போல கவிழ்ந்ததில்லையல்லோ..”

“ம்ஹூம்.. நிங்களுக்கு நிங்களிட பிரச்னை..”

“ஆ வீணா சொக்குப்பொடி தூவி.. எண்ட மோன் மயங்கி.. ஆ வித்தை ஞான் அறியேனல்லோ..”

“ஓ.. அதி பத்தி சம்சாரிக்கவா ஈ ராத்திரியில நாம ஒந்நு கூடி..?”

தாயும் மகளும் வழக்கடித்துக் கொண்டிருந்த போது அறைக்குள் வந்த அஜந்தா அவர்களின் அருகே அமர்ந்தபடி..

“அச்சன் எங்கே அம்மே..?” என்று கேட்டாள்..

“எனிக்குத் தெரியாது மோளே..” அசட்டையாக பதில் சொன்னாள் அவந்திகா..

“தாத்தா எங்கே பாட்டி..?”

“எங்ஙட அறையில நித்திரை கொண்டு..”

“அவர் நித்திரை கொள்ள எங்க அச்சனை நித்திரை கொள்ள விடாம விரட்டி விட்டுட்டு அம்மையுடன் என்னத்தை டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?”

“எந்தா டிஸ்கஸ்..? ஆ நந்தினியப் பத்தின டிஸ்கஷன்தான்.. வேறு எந்தா..?”

“அவளைப் பற்றி தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டு டிஸ்கஷன் பண்ண என்ன இருக்கு பாட்டி..? நம்ம தூக்கத்தைத் தியாகம் பண்ற அளவுக்கு அவளென்ன வல்லிய மனுஷியோ..?”

“இல்லவே இல்லா..”

“அப்ப குட்நைட் சொல்லிட்டுத் தூங்க போவிங்களா.. அதை விட்டு விட்டு அவளையெல்லாம் பெரிய மனுஷியாக்கி பேசிக்கிட்டு இருக்கீங்க..”

“அஜந்தா அங்ஙன பறஞ் ..?”

“ஓ.. ஈ கொட்டாரத்தோட தம்புராட்டி ஆரானு..?”

“ஞானானு..”

“அங்ஙன எண்டா நித்திரை கொள்ளப் போயி.. தம்புராட்டி பொடி மனுஷியப் பத்தின விஜாரம் கொள்வதோ..”

“வேணாம்.. வேணாம்..”

தான்தான் அந்த அரண்மனையின் தம்புராட்டி என்பதை நிருபிப்பதற்காக வேகமாக எழுந்து சென்று விட்டாள் யாழினி.. தலையில் அடித்துக் கொண்ட அஜந்தா தாயைப் பார்த்து..

“எழுதி வைத்துக்கங்க அம்மே.. ஒருநாள் இல்லேன்னா ஒருநாள் இந்தக் கிழவிக்கு விஷம் வைக்கத்தான் போகிறேன்..” என்று ஆத்திரப்பட்டாள்..

“எந்துக்கு ஈ வெப்பராளம்..?”

“காலம் போன கடைசியில தம்புராட்டி பட்டம் வேண்டிக் கிடக்கு.. எப்பப் பாருங்க.. ஞான் தம்புராட்டி, ஞான் தம்புராட்டிதான்.. எரிச்சலா வருது.. இப்ப எதுக்காக இந்தக் கிழவியிடம் ஆலோசனை பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?”

“ஆ நந்தினி ஆரெண்டு நீ அறிஞ் அஜந்தா..”

“அதை இந்தப் பாட்டி அறிவாங்களோ..?”

“நீ பறயாண்டாமெண்டு பறஞ்சதினால ஞான் அதி பத்தி சம்சாரிக்கலையல்லோ..”

“நல்லகாரியம் செய்தீங்க.. நந்தினியைப் பற்றி பாட்டியிடம் பேசி எதையும் கிழித்து விட முடியாது அம்மே..”

“எந்துக்கு அங்ஙன பறஞ் ..?”

“இந்தக் கிழவியினால ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது.. நந்தினி விஷயத்தை என்னிடம் விடுங்க.. நான் பார்த்துக்கறேன்.. உங்க அம்மை சத்தம் போடுகிறதுக்குத்தான்

லாயக்கு.. சதி பண்ண அல்ல..” அது உண்மையென்பதில் மறுத்துப் பேசாமல் மௌனமாக இருந்தாள் அவந்திகா.. ரவிச்சந்திரன் அஜந்தாவை மறுத்து வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்வான் என்பதை அவள் அறிந்து வைத்திருந்தாலும் எப்படியாவது அஜந்தா அதைத் தடுத்து நிறுத்தி ரவிச்சந்திரனுக்கு மனைவியாகி விடுவாள் என்ற நப்பாசை அவள் மனதின் ஓரத்தில் மையமிட்டிருந்தது..

அவளது நப்பாசை நிராசையாகி விட்ட துயரத்தில் அவள் கண்கலங்கினாள்.. எதிர்காலம் இருள்மயமாகி விட்டதைப் போன்ற அச்சம் அவள் மனதை வியாபித்தது..

தாயின் விழிகள் பிரதிபலித்த அச்சத்தை கண்டு கொண்ட அஜந்தா..

“எந்துக்கு பயம்..?” என்று தாயை கடிந்து கொண்டாள்.

“ஞான் எந்து செய்யும் மோளே..?”

“ஒன்றும் செய்ய வேண்டாம்.. நான் இருக்கேனில்ல.. நான் பார்த்துக்கிறேன்..”

“உன்னால் எந்து செய்ய முடிஞ் ..?”

“எதுவும் செய்ய முடியும் அம்மே.. பார்க்கத்தானே போகிறீங்க..? இந்த அஜந்தா நினைத்தால் எதையும் செய்வாள்..”

மகளின் சூளுரையில் நம்பிக்கை வராமல் நிம்மதியின்றி படுக்கையில் வீழ்ந்தாள் அவந்திகா.. அறையை விட்டு வெளியே வந்து தன் அறையை நோக்கி நடந்த அஜந்தாவுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை.. நிச்சயம் தான் வெற்றி பெறுவோம் என்று மனப்பூர்வமாக அவள் நம்பினாள்..

‘நந்தினியை ரவிச்சந்திரனால் காதலிக்கத்தான் முடியும்.. கல்யாணம் செய்து கொள்ள முடியாது..’ அவளால் அவர்களின் திருமணத்தை தடுத்து நிறுத்த முடிகிறதோ இல்லையோ.. வேறு ஒருத்தி அதைத் தடுத்து நிறுத்தி விடுவாள் என்று அவளுக்குத் தெரியும்..

அவள் அசகாய சூரி..! ஆனானப்பட்ட அஜந்தாவையே வந்து பார் வட்டப்பாறைக்கு என்று சவாலுக்கு அழைக்கும் வில்லாதி வில்லி..!

‘தரங்கிணி..!’ வெறுப்புடன் முகத்தைச் சுளித்தாள் அஜந்தா..

அவளை நினைத்தாலே அஜந்தாவுக்கு வேம்பை விட அதிகமாக கசக்கும்தான்.. அவளைக் கொன்று புதைக்க வேண்டும் போல கொலைவெறி உண்டுதான்.. வாய்ப்புக் கிடைத்தால் வயநாட்டு மலையுச்சியிலிருந்து அவளை உருட்டி விட்டு விடுவாள்தான்..

ஆனாலும் நந்தினியின் விஷயத்தில் தரங்கிணியுடன் ஓர் சமரசம் செய்து கொண்டிருந்தாள்..

“நீயும் நானும் முயற்சி செய்வோம்... ஒன்று ரவிச்சந்திரன் எனக்குக் கிடைக்க வேண்டும்... இல்லையென்றால் ஆ நந்தினிக்கு மட்டும் கிடைத்து விடவே கூடாது..” என்ற ஒப்பந்தம்தான் அது..

யார், யார் என்ன வழியில் முயற்சி செய்யப் போகிறார்கள் என்பதை ரகசியமாக மனதுக்குள் பத்திரப் படுத்தி வைத்திருந்தார்கள்.. பொது எதிரியான நந்தினியைத் தனி ஒரு மனுஷியால் விரட்டியடிக்க முடியாது என்பதற்காகத்தான் இந்த ஜென்டில் இல்லாத வுமன்களின் அக்ரிமெண்ட்.. “முதலில் அவளை விரட்டியடிப்போம்.. அதற்கடுத்து இவளை ஓட்டி விடுவோம்..”

ஒன்று போல இந்த ஒன்றை இருவருமே நினைத்தார்கள்..

‘எதிரிக்கு எதிரி தோழி..’ என்று இல் லாமல்.. நீயும் நானும் என்றுமே எதிரிதான் என்ற வன்மத்துடன் கை கோர்த்திருக்கும் விசித்திரப் பிறவிகள் அவர்கள்.. ரவிச்சந்திரனை அடைவதை வாழ்வின் குறிக்கோளாய் வைத்திருப்பவள் தரங்கிணி.. அவனை அடைந்தால்தான் வாழ்க்கை என்ற நெருக்கடியில் இருப்பவள் அஜந்தா.. இருவருமே அவனை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.. எதையும் பணயம் வைத்து அவன் கரம் பற்றிவிட வேண்டும் என்று துடிப்புடன்தான் இருந்தார்கள்.. இப்படிப்பட்ட இரண்டு வில்லாதி வில்லிகளின் சதிப் பின்னல் தன்னைக் குறி வைத்துப் பாயக் காத்திருப்பதை உணராமல் நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி..

கனவில் ரவிச்சந்திரன் வந்தான்.. வெண் மேகம் போன்ற பனிப்புகை சூழ நீலிமலைக் காட்டில் அவளுடன் டூயட் பாடினான்.. வெள்ளியருவிகளாய் கொட்டிய மீன்முட்டி அருவிகளில் அவளுடன் சேர்ந்து நனைந்தான்.. மரக்குடிலில் காலாட்டியபடி அவள் தூங்க தாலாட்டுப் பாடினான்.. ஆலப்புழாவின் படகு வீட்டின் மேல்பகுதிப் பால்கனியின்

விளிம்பில் அவளை நிறுத்தி வைத்து அவள் பின்னால் நின்று டைட்டானிக் பட ஹீரோ, ஹீரோயின் போல கைகளை விரித்தான்..

“என் ரவி..!”

தூக்கத்தில் முணுமுணுத்தாள் நந்தினி.. வானம் வசப்பட்டு விட்டதைப் போல காதல் அவள் வசப்பட்டு விட்டதில் உண்டான குதூகலம் அவள் முகத்தில் விரவியிருந்தது.. அந்த மலர்ச்சியுடன் கண்விழித்தவள் ஓமனா கொண்டு வந்து கொடுத்த ‘சாயை’ குடித்து விட்டு தோட்டத்துக்கு உலாவப் போனாள்..

‘ரவி இன்னும் வரலையே..’

நொடிக்கொருதரம் அரண்மனையைப் பார்த்தபடி காத்திருந்தவளின் முன்னால் வந்து நின்று சொடக்குப் போட்டு அவளை அழைத்த அஜந்தா..

“யாருக்காக காத்திருக்கிற நந்தினி..? பெல்ட் மன்னனுக்காக காத்திருக்கிறாயா..?” என்று ஒன்றுமறியாத சின்னப் பெண்ணைப் போல இமை கொட்டினாள்..

# அத்தியாயம் 214

“பெல்ட் மன்னனா..?” திடுக்கிட்டாள் நந்தினி.. அவளது உடல் தூக்கிப் போடுவதை உன்னிப்பாக கவனித்த அஜந்தாவின் இதழ்களில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது..

‘இவளுக்கு பெல்ட் மன்னனைப் பற்றி எப்படித் தெரியும்..?’ நந்தினியின் மனதில் கேள்வி எழுந்த போதே..

‘இவளுக்குத் தெரியாததுன்னு ஏதாவது இருக்கா..? இவ வில்லியிலும் வில்லி.. கடைஞ்செடுத்த வில்லியாச்சே..’ என்ற பதிலும் கூடவே வந்தது..

‘துப்பறிஞ்சிருப்பா..’ நந்தினி பல்லைக் கடித்தபடி அஜந்தாவை முறைத்தாள்.. தேமே எனத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருப்பவளிடம் விடிகின்ற வேளையிலேயே வம்பு வளர்க்க வந்துவிட்ட அஜந்தாவைப் பார்க்கக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை..

“ஈ நந்தினியிட மனசில எந்து உண்டு..? பெல்ட் மன்னனிட பெயரைக் கேட்டதும் திகைச்சுப் போயி..” அஜந்தாவின் குரோதம் நிரம்பிய விழிகள் உன்னை நான் அறிவேன் என்று அறிவித்தன..

‘அறிந்தால் அறிந்துக்க.. எனக்கென்ன போச்சு..? இது என்ன இமாலய ரகசியமா..?’ அலட்சியம் போல உதட்டைச் சுழித்தாள் நந்தினி..

‘இவ்வளவு ஆணவமா..?’ கொதித்துப் போனாள் அஜந்தா..

“ரவிச்சந்தினிட பிரேமம் கிட்டியெண்டு ஆணவம் கொண்டு..?” என்று சீறினாள்..

“ஆமாம்.. அப்படித்தான்.. என்ன செய்யனும்ங்கிற..?” நேரடியாக மோதி விட்டாள் நந்தினி..

“எந்தா பறஞ் ..? நீ ரவிச்சந்திரனிட காதலியோ..”

“அட..! ஆமாம்ன்னுதான் சொல்லிட்டேனே.. அதுக்கப்புறமும் விசாரணை என்ன வேண்டிக்கிடக்கு..?”

“ரவியத்தான் எவரெண்டு அறியுமோ..?” “அறியும்.. போதுமா..?”

“போதாது.. அறிவில் ஆடினாப் பரவாயில்லை.. நீ ஆணவத்தில் ஆடுகிறாய் நந்தினி.. எதற்குத் தப்பி வந்தாயோ.. அதே புதைகுழியில் விழுகப் போகிறாய்.. தெரியாமல் ஆடாதே..”

‘இவ என்ன சொல்கிறா..?’ குழம்பினாள் நந்தினி..

‘இன்னைக்கு என்ன.. ஒரு தினுசாப் பேசறா.. எனக்குத் தெரியாத ஏதோ ஒரு ரகசியத்தை இவ தெரிஞ்சு வைச்சிருக்கிறதைப் போல பிலிம் காட்டறாளே.. என்னவா இருக்கும்..?’

நந்தினி யோசனையாவதை ஏளனமாக கவனித்துக் கொண்டிருந்தாள் அஜந்தா.. இரையைத் துரத்தும் வேட்டை நாயின் வெறியை கண்ட நந்தினியின் மனம் படபடத்தது..

“இங்கே என்ன பண்ற..?”

ரவிச்சந்திரனின் அதட்டலில் பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. அவன் வந்து விட்டான் என்பதில் மனம் துள்ள நிம்மதியாக உணர்ந்தாள் நந்தினி... அவள் மனதில் அஜந்தாவினால் உண்டாகியிருந்த மனக்கிலேசங்கள் பறந்து விட்டதைப் போல இருந்தது.. அவனது அருகாமை தரும் பாதுகாப்பு உணர்வு தாய்ப் பறவையின் சிறகுகளுக்கு அடியில் அடைக்கலம் புகும் உணர்வுக்கு நிகரானது என்பதை உணர்வுபூர்வமாக அறிந்து வைத்திருந்தவள் நந்தினி.. அவனைப் பற்றிய பயங்களில் இருந்து தப்பிக்க அவனிடமே அடைக்கலம் புகுந்தவள் அல்லவா அவள்..

“பாஸ்..”

அவளது குரல் தளுதளுத்ததில் ரவிச்சந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன..

“வாட் ஹேப்பன்ட்..?” என்று விசாரித்தான்..

அஜந்தா அருகில் இல்லாமலிருந்தால் அவளை இழுத்து அணைத்து மார்பில் சாய்த்து உச்சந்தலையில் முகம் புதைத்து அமைதிப் படுத்தியிருக்கலாமே என்று கோபம் கோபமாக வந்ததில்..

“நீ இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கிறன்னு கேட்டேன்..” என்று அஜந்தாவிடம் வெடுவெடுத்தான்..

“தோட்டத்தில் நந்தினி என்ன பண்ணுகிறாளோ அதைத்தான் நானும் பண்ணுகிறேன் அத்தான்.. அவளை என்ன ஏதுன்னு கேட்காம என்னிடம் மட்டும் கொஸ்டின் பண்றது நியாயமா அத்தான்..?” இமை கொட்டினாள் அஜந்தா..

“இப்படி பிஹேவ் பண்ணாதே.. பற்றிக்கிட்டு வருது..” எரிந்து விழுந்தான் ரவிச்சந்திரன்..

“எப்படி பிஹேவ் பண்றேன் அத்தான்..?” மறுபடியும் இமைகொட்டல்..

“பப்பாவைப் போல பிஹேவ் பண்ற.. உனக்கு இது ஸூட் ஆகும்ன்னா நினைக்கிற..?” ஏளனமாக கேட்டான் ரவிச்சந்திரன்..

அதில் நந்தினிக்குச் சிரிப்பு வந்து தொலைத்தது.. உதட்டைத் துடைப்பதைப் போல நாசுக்காக அவள் சிரிப்பை மறைத்ததில் ‘இருக்குடி உனக்கு..’ என்று காண்டானாள் அஜந்தா..

“நந்தினி மேம் சிரிக்கிறாங்க போல இருக்கே..” என்று ஆரம்பித்தாள்..

“மனிதர்கள் சிரிப்பாங்க அஜந்தா.. உனக் கும் சிரிப்புக்கும்தான் ரொம்ப தூரமாச்சே.. அதைப்பத்தி யெல்லாம் நீயேன் அலட்டிக்கிற..?” மட்டம் தட்டினான் ரவிச்சந்திரன்..

‘இவ முன்னாடி என்னைக் குறைவாப் பேசறயா..?’

அஜந்தா உதட்டைப் பிதுக்கியபடி நந்தினியை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு..

“என்ன தெரிந்து விட்டதுன்னு இவ சிரிக்கிறா அத்தான்..? பெரிதா பெல்ட் மன்னனிடமிருந்து தப்பி விட்டதா நினைத்து ஓடி வந்திருக்கிறாளே.. அந்த பெல்ட் மன்னன் யாருன்னு இவளுக்குத் தெரியுமா அத்தான்..?” என்று விஷமமாகக் கேட்டாள்..

“அஜந்தா..” ரவிச்சந்திரனின் விழிகளில் தீப்பொறி பறந்தது..

“எந்துக்கு இத்தினி வெப்பராளம் அத்தான்..” அறியாப் பெண்ணைப் போல இமை கொட்டி ரவிச்சந்திரனின் கொதிப்பை அதிகப்படுத்தினாள் அஜந்தா.

அக்கினிப் பிழம்பானான் அவன்.. அஜந்தாவை அவன் பார்த்த பார்வையில் நந்தினியே நடுங்கிப் போனாள்..

“இது என் அரண்மனை..”

“எத்தனை முறைதான் இதைச் சொல்வீங்க..?”

“தினமும்தான் சொல்லிப் பார்க்கிறேன்.. திமிர் பிடித்த உன் மூளையில் அது பதிய மாட்டேன் என்கிறதே..”

“பதியலைன்னா விட்டுவிட வேண்டியதுதானே..?”

“விட்டு விடலாம் என்றுதான் டிசைட் பண்ணியிருக்கேன் அஜந்தா.. உன் அம்மாவையும், அவங்க குடும்பத்தையும் தாங்கிப் பிடிப்பதில் எனக்குத் தலைவேதனைதான் அதிகமாகிறது.. ஸோ.. நீயும் உன் குடும்பமும் மும்பைக்கு ஃபிளைட் ஏறிடுங்க.. அதுதான் சரியாக இருக்கும்..”

அஜந்தாவின் முகம் வெளிறியது.. அவளது விழிகளில் கோபம் கலந்த அச்சத்தைக் கண் கூடாகக் கண்டாள் நந்தினி.. அப்பட்டமாக வெளிப்பட்ட அஜந்தாவின் அச்சத்தில்..

‘இவ்வளவு பயமிருக்கே.. அப்புறமும் எதுக்காக வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கிறா..?’ என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் நந்தினி..

“ஆக்ஷுவலா அத்தான்..” அஜந்தா எதையோ சமாதானமாக சொல்ல ஆரம்பிக்க..

“கெட் லாஸ்ட்..” என்று கத்தினான் ரவிச்சந்திரன்..

அவனது குரல் தோட்டத்தைத் தாண்டி வயநாட்டு அரண்மனையின் உள்ளே பிரவேசித்து உலுக்கியதில்..

“எண்ட கொச்சு மோனே..” என்று ஓடி வந்தார் அருள்மொழிவர்மன்..

“வேண்டாம் தாத்தா.. உங்க கொச்சுமோன் என்ற பட்டம் எனக்கு வேண்டவே வேண்டாம்.. அதை இதோ இங்கே நிற்கிறாளே.. இந்த அஜந்தாவின் அண்ணனுக்குக் கொடுத்துக்கங்க.. இப்ப உங்க கொச்சு மோளை இழுத்துக்கிட்டு போய் விடுங்க.. இன்னும் ஒரு செகண்ட்.. இவ என் கண் முன்னாடி நின்றான்னு வையுங்க.. நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.. பெண்ணாச்சேன்னு விட்டு வைத்தா இவளோட அடாவடி நாளுக்கு நாள் அதிகமாகிட்டே போகுது.. இவளோட அண்ணனை உதைத்ததைப் போல இவளையும் உதைத்திருக்கனும்.. விட்டு வைத்தேன் பாருங்க.. அதுதான் அடங்காம திமிறிக்கிட்டு அலைகிறா..”

ரவிச்சந்திரன் எதற்காக கோபப்படுகிறான் என்று ஓர் மண்துகளும் புரியாவிடினும் அஜந்தா ரவிச்சந்திரனின் கோபத்தைக் கிளறி விட்டாள் என்பதை மட்டும் புரிந்து கொண்டார் அருள்மொழிவர்மர்..

என்னவென்று அவர் பேரனிடம் எப்படிக் கேட்பார்.. அந்த தைரியம் அவரிடம் இல்லையென்றாலும் மனம் கேட்காமல் மெதுவாக..

“எந்தா ரவி..?” என்று வினவி விட்டார்..

“என்னன்னு சொன்னால்தான் இவளை போகச் சொல்வீங்களா..?” ரவிச்சந்திரன் உறுமி விட்டான்..

“அல்ல ரவி.. ஆ நிமிசத்தில அஜந்தாவ ஞான் அழைத்துப் போயி..” என்று அலறியடித்துக் கொண்டு அஜந்தாவை கைபிடியாய் இழுத்துக் கொண்டு ஓடி விட்டார் அருள்மொழிவர்மன்.. ரவிச்சந்திரனின் முகத்தில் தீயின் ஜ்வாலை தெரிந்ததில் நந்தினிக்கு அவனிடம் பேசவே

பயமாக இருந்தது.. பெல்ட் மன்னனைப் பற்றி அஜந்தாவுக்குத் தெரிந்திருக்கிறது என்று சொல்ல நினைத்தாள்.. அவனது கோப முகத்தில் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் வாயை மூடிக் கொண்டாள்..

“இன்றைக்கு எஸ்டேட்டுக்குப் போயாகனும்.. கிளம்பு..”

காதலனாக இல்லாமல் சம்பளம் கொடுக்கும் முதலாளியாக உத்தரவிட்டு விட்டு அவன் அரண்மனையை நோக்கி விரைந்து விட நந்தினி அசையாமல் சிலை போல நின்றாள்..

அவளது மனதில் ஏமாற்றம் கவிந்தது.. அவனுடன் தனித்திருந்த மணித்துளிகள் மனதில் உலா வந்ததில் அவளது விழிகளில் கண்ணீர் அரும்பியது..

தென்னைமரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்திலா நெறி கட்ட வேண்டும்..? அஜந்தா தலைக் குடைச்சல் கொடுத்தால் அந்த கோபத்தை நந்தினியின் மீது காட்டுகிறானே.. ரவிச்சந்திரன் இல்லாத தோட்டம் அழகிழந்து காணப்பட்டது.. அவனில்லாத தோட்டத்தில் உலாவ விருப்பமில்லாமல் சோர்வாக அறைக்குத் திரும்பினாள் நந்தினி.. குளிக்கப் போகும் போதுதான் அவளது மூளையில் மின்னல் வெட்டியது..

‘பெல்ட் மன்னன் யாருன்னு இவளுக்குத் தெரியுமா அத்தான்னு ரவியிடம் அஜந்தா கேட்டாளே.. அப்படின்னா என்ன அர்த்தம்..? பெல்ட் மன்னன் யாருன்னு அவளுக்குத் தெரியுமா..? துப்பறிஞ்சிருப்பான்னு வைத்துக்கிட்டாலும் நான் யாருன்னே இவளுக்குத் தெரியாது.. இங்கே வேலை செய்ய வந்த பின்னாடிதான் தெரியும்.. என்னையே தெரியாதுங்கிறப்ப எனக்கு ஃபிக்ஸ் பண்ணின பெல்ட் மன்னனைப் பற்றி எப்படித் தெரியும்..?’ குழப்பத்துடன் குளித்து முடித்தாள்.. உடை மாற்றி ஒப்பனை செய்து கொண்டபோதும் அதே சிந்தனைதான்.. கூடவே ரவிச்சந்திரனிடம் எதற்காக அந்தக் கேள்வியைக் கேட்டாள் என்ற தலைக்குடைச்சலும் சேர்ந்து கொண்டது..

‘ரவிக்கு பெல்ட் மன்னன் யாருன்னு தெரிந்திருக்குமோ..’

தெரிந்து கொள்ளாமல் இருப்பானா என்ற பெருமிதச் சிரிப்பு அவளது இதழ்களில் தவழ்ந்தது..

‘ஜெகஜால கில்லாடியாச்சே அவன்.. இந்நேரம் அந்த பெல்ட் மன்னனோட ஜாதகத்தையே கையில் வைச்சிருப்பான்..’ மெச்சிக் கொண்டாள்.. காதலிக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை வில்லன் யார் என்று ரவிச்சந்திரன் தெரிந்து வைத்திருப்பது ஓர் அர்த்தம் உள்ளது.. அந்த பெல்ட் மன்னன் யாரென்று அஜந்தா எதற்காக தெரிந்து வைத்திருக்கிறாள்..?

‘ஒருவேளை.. நான் இங்கேதான் இருக்கேன்னு தகவல் கொடுத்து அவனை வர வைக்கப் பிளான் பண்றாளோ..’

அஜந்தா செய்தாலும் செய்வாள் என்ற நினைவில் நந்தினியின் உடல் நடுங்கியது.. அப்படி பெல்ட் மன்னன் அவளைத் தேடி வந்தால் ரவிச்சந்திரன் விட்டுக் கொடுத்து விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பானா என்ற கேள்வி மனதில் எழுந்ததில் சமாதானம் ஆனாள்..

தன்னைப் பற்றி நந்தினி எதற்காக கவலைப்பட வேண்டும்..? அவளைப் பாதுகாக்க ‘ஹீ மேன்’ போல ஒரு

சூப்பர் மேன் இருக்கிறான்.. அவளைக் கைவளைவுக்குள் வைத்துக் காப்பாற்றுவான்..

‘பெல்ட் மன்னன் யாருன்னு இவளுக்குத் தெரியுமான்னு அஜந்தா கேட்டாளே.. அந்தக் கேள்வியில தானே ரவி டென்ஷன் ஆனான்..?’ அந்தச் சந்தேகம்தான் அவள் மனதை அரித்தது.. பெல்ட் மன்னனைப் பற்றி அஜந்தா விசாரித்துத் தெரிந்து வைத்திருப்பதை ரவிச்சந்திரனிடம் சொல்லாமல் மறைத்துத்தானே வைத்திருக்க வேண்டும்.. இவள் வலிய வந்து வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டாளே.. அப்படி வாங்கிக் கட்டிக் கொள்ள நேரிடும் என்று தெரியாத அளவிற்கு அவளொன்றும் முட்டாள் இல்லையே.. அப்படியிருந்தும் ஏன் சொன்னாள்..?

அஜந்தா சொன்னது மிரட்டும் தொனியில் இல்லாவிட்டாலும் உன்னை நானறிவேன் என்ற வகையில் இருந்ததை நினைவு கூர்ந்தவளுக்குத் தலையை வலிப்பதைப் போல இருந்தது.. டைனிங் ஹாலை அடைந்த போது அனைவரும் சாப்பிட ஆரம்பித்திருந்தார்கள்.. தாமதமாக வந்தவளை முறைத்தான் ரவிச்சந்திரன்.. கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறைவாக பார்வையால் மன்னிப்பை இறைஞ்சியவாறு அவனுக்கு எதிரே உட்கார்ந்த நந்தினியின்

தொண்டையில் சாப்பாடு இறங்கவேயில்லை.. மர்மம் நிரம்பிய அஜந்தாவின் பார்வையும், கடுமை நிரம்பிய ரவிச்சந்திரனின் பார்வையும் இடைவிடாமல் அவளை முறைத்ததில் எப்படி அவளால் நிம்மதியாக சாப்பிட முடியும்..? அரையும் குறையுமாக சாப்பிட்டதாய் பெயர் பண்ணி விட்டு ரவிச்சந்திரனுடன் ஜீப்பில் ஏறியவள் குனிந்து டேஷ் போர்டில் சிடிக்களைப் பார்வையிட்டாள்.. பார்த்தவள் அப்படியே உறைந்து விட்டாள்..

அங்கே சிடிக்களின் மத்தியில் ஆரோகணித்திருந்தது ஒரு துப்பாக்கி..!

# அத்தியாயம் 215

கருப்பு, வெள்ளை திரைப்படத்தில் வரும் கதாநாயகிகளைப் போல வலது கையை வாயில் வைத்து ‘வீல்..’ என்று மட்டும்தான் அலறவில்லை.. மற்றபடி முகத்தின் உணர்வலைகள் அப்பட்டமான திகிலை பிரதிபலித்ததில் ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தினான்.. எப்போதும் அவளை மயக்கும் வசீகரம் மிக்க அந்த புருவம் உயர்த்துதல் அந்த நொடியில் அவளை வசீகரித்து மயக்காதது ஏனென்ற கேள்விக்கான விடை அவளுக்குப் புலப்படவில்லை..

“வாட் ஹேப்பன்ட்..?”

குனிந்தவனின் முகம் துப்பாக்கியைக் கண்டதும் மாறியது.. பட்டென டேஷ் போர்டை மூடியவன்..

“இதை எதற்காகத் திறந்து பார்த்த..?” என்று எரிந்து விழுந்தான்..

அவள்மீது அவன் எரிச்சல்படுவது ஒன்றும் புதிதில்லைதான்.. ஆனால் அவள் காதல் சொல்லியிருக்கும் சமீப காலங்களில் அவன் எரிச்சலைக் காட்டியதேயில்லை.. அவளைக் கண்டதும் அவனது விழிகளில் சூழும் கிறக்கம்

கலந்த மயக்கம் அவளை ஈர்த்து அவனது காலடியில் வீழ்த்தி விடும்..

அந்த மயக்கம் இப்போது எங்கே போனது..? எதற்காக இந்த கோபம்..? அவள் எதை அறிந்து விடக் கூடாது என்று அவன் நினைக்கிறான்..?

“இது என்ன பாஸ் புதிதா இருக்கு..?”

“எது புதிதா இருக்கு..?”

அவனது விழிகளில் வேட்டைக்காரனின் கோபம் தெரிவதைப் போல அவளுக்குத் தோன்றியது.. நெருப்புத் துண்டம் போல கண்கள் ஜொலிக்கும் அளவிற்கு அவள் என்ன கேட்கக் கூடாத கேள்வி எதையும் கேட்டு விட்டாளா என்ன..?

“காரிலயும், ஜீப்பிலயும் நான் டேஷ் போர்டைக் குடையறது வழக்கம்தானே பாஸ்..? என்ன பாட்டைக் கேட்கிறதுன்னு பிளான் பண்ணுவேன்.. அது உங்களுக்கும் தெரியும்தானே.. இன்றைக்கு என்னவோ புதிதா நான் திறந்து பார்க்கிறதைப் போலத் திட்டறீங்களே.. அதைச் சொன்னேன்..”

“ஓ.. நீ அதைச் சொன்னாயா..?” கோபம் குறைந்தவன்..

“எதைப் பேசினாலும் தெளிவாப் பேசித் தொலைக்க மாட்டியா..?” என்று எரிந்து விழுந்தான்..

‘அப்படி என்னத்தைத் தெளிவில்லாமல் பேசித் தொலைத்துட்டேன்..?’ அவளுக்கு அழுகையழுகையாய் வந்தது..

ஓ.. நீ அதைச் சொன்னாயா என்று கேட்டானே..

அவள் அதைச் சொல்லாமல் வேறு எதைச் சொல்லி விட்டாள் என்று நினைத்து அவன் கோபப்பட்டான்..?

நந்தினியின் பார்வை துப்பாக்கியின் மீது படிந்தது..

‘ஒருவேளை.. இதைச் சொன்னானோ..’

ஏனோ அவளுக்குப் பயமாக இருந்தது.. உடல் சிலிர்த்தது.. துப்பாக்கியைப் பார்க்கப் பார்க்க அவளது தலைக்குள் வண்டு குடைவதைப் போல குடைச்சல் ஏற்பட்டது.. ஆயிரம் கேள்விகள் அவளுக்குள் வட்டமிட்டுச் சுழன்றன..

ஆழப்புலாவில் இருந்து திரும்பி வந்து ஒருநாள் கூட ஆகவில்லை.. அதற்குள் அவள் அவனுக்கு கசந்து விட்டாளா..?

“எண்ட அத்தானுக்கு வல்லதும் (ஏதாவது) கிட்டாத வரைக்குத்தான் மோகம் வந்து.. அதி கிட்டி விட்டால் தட்டி விட்டுப் போயி..” அஜந்தாவின் குரல் காதுகளில் எதிரொலித்தது.. அப்படியா..? நந்தினி எட்டாக்கனியாய் இருந்தவரை ரவிச்சந்திரனுக்கு அவள்மீது மயக்கம் இருந்ததா..? அவளது காதல் கிட்டியவுடன் அவளைத் தட்டி விட்டுச் செல்ல நினைக்கிறானா..?

நந்தினிக்கு அழ வேண்டும் போல இருந்தது..

கண்களில் திரண்ட நீர் முத்துக்கள் உதிரவா என்று கேட்டு அவளைப் பாடாய் படுத்தின.. உதிர்த்து விட நினைக்கும் முன் அவன்..

“எதற்காக முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தூக்கி வைத்துக்கிட்டு இருக்கிற..?” என்று அதட்டினான்..

முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு இருப்பதற்கே இந்தத் திட்டுக் கிடைத்தால் அவள் கண்ணீரை உகுத்தால் எந்த அளவுக்குத் திட்டுக் கிடைக்கும்..?

பயந்து போன நந்தினி கலங்கிய விழிகளை அவனறியாமல் துடைத்துக் கொண்டாள்.. இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்..

“உன் ப்ராப்பர்ட்டிஸ் எதுவும் கொள்ளை போய் விட்டதா..?”

திடிரென்று அவன் கேட்ட கேள்வியில் திருதிருத்தவள்..

“இல்லையே..” என்றாள்..

“கொள்ளை போகலைல்ல..?” “இல்லைன்னு சொன்னேனே..”

“அப்ப சிரித்த முகமாய் இருந்து தொலையேன்.. எஸ்டேட் பக்கத்தில வந்துட்டோம்.. பார்க்கிறவங்க நான் உன்னைப் பிடுங்கற பிடுங்கலில நீ அழுதுகிட்டு இருக்கிறன்னு நினைக்கப் போகிறாங்க..”

‘இப்ப நீ பிடுங்கலையாடா..?’

அவன் பிடுங்கும் பிடுங்கலைத் தாங்க முடியாமல் அவளுக்குத் தலைவேதனையாக இருந்தது.. இந்தப் பிடுங்கலை பிடுங்கியபடி எப்படி இவனால் இப்படிப் பேச முடிகிறதோ..

“ஒருவேளை, மத்தவங்க அப்படி நினைக்கனும்னு தான் நீ பிளான் பண்ணறியா..?”

‘போடா.. டேய்ய்..’

அவள் இமைக்காமல் அவனைப் பார்த்ததில் அவனது புருவச் சுளிப்பு மறைந்து கண்களில் பழைய குறும்பும் விஷமமும் திரும்பியது..

“என்னடி..?” புருவங்களை உயர்த்தி இமைகளைச் சிமிட்டினான்..

விழிகளில் அவளுக்குப் பரிச்சயமான அந்தத் தீராக் கிறக்கம்..

“பாஸ்..” அவள் அழுது விட்டாள்..

அவள் தேடியது இந்தக் கிறக்கம் கலந்த மயக்கப் பார்வையைத்தானே.. இதில்தானே அவள் அவனிடம் மயங்கினாள்..

அடக்கி வைத்திருந்த கண்ணீர் பீறிட.. அவள் அவனது சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்து அவள் பக்கமாக அவனை இழுத்தாள்..

“ஏய்.. ஏய்.. பக்கத்தில கிடுகிடு பள்ளத்தாக்குடி..” அவன் ஜீப்பைப் சடன் பிரேக் போட்டு நிறுத்தி விட்டான்.. அவள் இழுத்த இழுப்பிற்கு ஒப்புக் கொடுத்து உடன்பட்டவனின் விழிகளில் மின்னல்..

“அசடாட்டம் அழறியேடி.. பைத்தியமா நீ..?” பிரியத்துடன் கடிந்து கொண்டான்..

“பைத்தியம்தான்.. உங்கள் மீது பைத்தியம்..” நந்தினி மூக்கை உறிஞ்சியபடி கேவினாள்..

“ஏய்ய்.. ச்சீ.. அழக்கூடாது..” ரவிச்சந்திரனின் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்து இறுக்கிக் கொண்டன..

அவன் மார்பில் முகம் புதைத்தவளுக்குள் ஆழ்கடலின் அமைதி வந்தது.. தலையைக் குடைந்த வண்டு காணாமல் போய்விட இதமான மனதுடன் அவனுக்குள் புதைந்தாள்.. அவளை மருட்டிய அனைத்து சந்தேகங்களும் இப்போது அர்த்தமற்றவையாகத் தோன்றின..

அவன்.. அவளுடைய ரவிச்சந்திரன்.. சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவன்.. அவன் துப்பாக்கியை வைத்திருந்தால் என்ன..? ஏ.கே.47-ஐ வைத்திருந்தால் என்ன..? இல்லை பீரங்கியையே வைத்திருந்தால்தான் என்ன..?

அவற்றுக்கெல்லாம் ஏதேனும் காரணம் இருக்கக்கூடும்.. காரணமில்லாமல் எதையும் வைத்துக் கொள்பவனல்ல அவன்..

‘ஈ ஆள் செமத்தியான கம்மாண்டரல்லோ..’ கம்மாண்டர் என்றால் துப்பாக்கியை வைத்திருக்க வேண்டுமல்லவா என்று அவனுக்கான காரணத்தைத் தேடிக் கண்டு பிடித்து மகிழ்ந்தது அவளது பேதை காதல் மனம்..

‘இதெல்லாம் சரி.. இவனிடம் பெல்ட்டும் இருந்தால் என்ன செய்வ..?’

காதல் மனதின் மறுபக்கமான அறிவார்ந்த மனம் சந்தேகமாக கேள்வியை எழுப்பியதில் அவள் திருதிருத்து அவனது பேண்ட்டை படு ஸ்டைலாக சுற்றி வளைத்திருந்த பெல்ட்டைப்

பார்த்தாள்.. உயர் தரத்தைப் பளிச்சிடும் வகையில் பறை சாற்றிக் கொண்டிருந்த பெல்ட்டின் மீது பொறாமையாக இருந்தது..

‘என்னைவிட இந்த பெல்ட் இவனுக்கு நெருக்கமா..?’

அந்த ஒரு காரணத்தினாலேயே அவளுக்கு அந்த பெல்ட்டைப் பிடிக்காமல் போய் விட்டது.. குரோதமாக அதை வெறித்தாள்.. அதைக் கண்டு விட்ட ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்திச் சிரித்தான்..

“என்னடி..? என் இடுப்பை முறைக்கிற..? இஞ்சி இடுப்பழகான்னு பாட்டுப் பாடப் போறியா என்ன..?”

அவன் சொன்ன பின்புதான் அவனது இடுப்பு அவளை ஈர்த்து வைத்தது.. இவன் இடுப்பழகன்தான் என்று நினைத்துக் கொண்டாள்..

‘கூடவே மஞ்சச் சிவப்பழகனாவும் இருந்து தொலைக்கனுமா..?’

அவனருகில் நின்றால் அவள் அவனுக்குப் பொருத்தமாக இருப்பாளா என்ற தாழ்வு மனப்பான்மை அவளை அலைக்கழித்தது..

‘ஈ மனுஷன் அதிரூப சுந்தரனாக இருந்து தொலைக்கிறானே.. ஞான் வெறும் சுந்தரியிலேயே சேர்த்தியில்லை.. அதி ரூப சுந்தரியாக என்ன செய்யும்..?’

“இப்ப என்ன..?” அவன் பார்வை கூர்மையாக அவளைத் துளைத்தது..

“ஒண்ணுமில்ல.. ஒண்ணுமே இல்லையே..” அவள் கைகளை விரித்து அபிநயித்தாள்..

“நீ சும்மா சொன்னால்கூட நம்பியிருப்பேன்.. இந்த அளவுக்குப் பில்ட்-அப் கொடுக்கிறதில சுத்தமா நம்பிக்கை வரலை..”

அவளை நெருங்கி அணைத்துக் கொண்டவன் அவளது உச்சந் தலையில் முத்தம் பதித்தான்.. அவளுக்கு உலகமே தட்டாமாலை சுற்றுவதைப் போல கிறுகிறுத்தது.. ‘ஜிவ்’வென அவளை இழுத்து அடித்த உணர்வலைகளின் ஆக்ரமிப்பிலிருந்து விடுபட முடியாமல் விழிகளை மூடிக் கொண்டாள்.. அவளது இமைகளில் அவனது ஈர உதடுகளின் ஸ்பரிசத்தை உணர்ந்தாள்.. ஆழ்கடலில் அமிழ்வதைப் போல அவளுக்கு மூச்சுத் திணறியது..

“சொல்லுடி..” அவன் கிசுகிசுத்தான்..

“எதைச் சொல்ல..?” அவளுக்கு குரல் எழும்பவில்லை.. கிணற்றுக்குள் இருந்து பேசுவதைப் போல சப்தம் எழுப்பாமல் பேசினாள்..

அவளுடைய உணர்வுகளை உணர்ந்து கொண்டவனுக்குள் உணர்வுகள் கிளர்ந்தன.. அவனது வெப்ப மூச்சுக்காற்று குளிருக்கு இதமாக அவளுக்கு கதகதப்பையூட்டியது.. முகமெங்கும் அவனது ஈர உதடுகள்

சூடான முத்தங்களைப் பதித்ததில் நந்தினி தன் வயமிழந்து தவிக்க ஆரம்பித்தாள்.. அவனது ஆலிங்கனத்தின் எல்லை எதுவரை போகக்கூடும் என்று அனுமானிக்க இயலாததாக எல்லைகளைக் கடந்து கொண்டிருந்ததில் தத்தளித்தாள்.. ரவிச்சந்திரன் அணை கட்ட முடியாத அருவியின் சுழல் போன்றவன்.. அவனாகத் தன்னைக் கட்டுப்படுத்தி விலகிக் கொண்டால்தான் உண்டு.. நந்தனியால் அவனை விலக்கி நிறுத்த முடியாது.. விலகி நிற்கவும் முடியாது..

“பாஸ்..”

அவளது தவிப்பில் அவளைப் புரிந்து கொண்டவன் நெற்றியில் முத்தம் பதித்து விலகிக் கொண்டான்..

‘விலகிட்டானே..’ அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது..

அதை விழிகளில் காட்டி விடாமல் இருக்க அரும்பாடு பட்டாள்.. அவனுக்கு மட்டும் அது தெரிந்து விட்டால் போதும்.. அவளை ஸ்வாஹா பண்ணாமல் விட்டு வைக்க மாட்டான்.. அவனைப் பார்த்தால் அவளை அவன் கண்டு பிடித்து விடுவான் என்று மலைமுகடுகளை மூடிக் கொண்டிருந்த பனிப்புகை சூழ்ந்த மேகங்களைப் பார்த்தாள்.. அவள் மனதை மூடியிருந்த சந்தேக மேகங்களைப் போல அவை எந்த

நொடியும் கலைந்து விடுவதைப் போன்று தெளிவில்லாமல் சஞ்சரித்தன..

“நந்தினி..” அவனது குரல் கரகரத்திருந்தது.. காதல் அதிகமானால் அவனது குரல் கரகரத்து விடும் என்று அறிந்து வைத்திருந்ததில் நெகிழ்ந்து போனாள் அவள்..

மன்மதனைப் போன்றவன் அவன்.. கேரளத்தின் பேரழகன்..!

“ம்ம்ம்..”

“நான் உன்னை எந்த அளவுக்கு காதலிக்கிறேன்னு உனக்கு இப்போது புரியாதுடி..”

புரியாமலா அவன் மீது மையல் கொண்டிருக்கிறாள்..?

நந்தினி அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள்.. அவளது பார்வையில் தெரிந்த ஆழ்ந்த காதலில் அவன் திருப்தி அடையாததைப் போல இருந்தது..

‘ஏன்..?’ திகைத்தாள்..

‘இதையும் தாண்டிய காதலை அவன் எதிர்பார்க்கிறானா என்ன..?’ நந்தினிக்குப் புரியவில்லை..

ரவிச்சந்திரன் புரியாத புதிர் என்று அவளுக்குத் தோன்றியது..

# அத்தியாயம் 216

**கு**ழந்தைத்தனத்துடன் கூடிய குழப்பம் அவளுள் நிறைந்ததில் மலங்க மலங்க விழித்தாள் நந்தினி.. ரவிச்சந்திரன் தேடும் காதல் பார்வையை குடுக்க இயலாமல் தவித்தாள்..

அவன்மீது அவள் உயிரையே வைத்திருக்கிறாள்.. அவனில்லாத வாழ்வை அவளால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது... இந்த உணர்வுகளை அவளது பார்வை பிரதிபலிக்கவில்லையா..? இவற்றையெல்லாம் தாண்டிய உணர்வுகள் உண்டா..?

ரவிச்சந்திரன் ஏக்கப் பெருமூச்சு விட்டான்.. அதை தாங்கிக் கொள்ள முடியாத நந்தினி.. “பாஸ்..” என்று தழுதழுத்தாள்..

அவளைப் பார்த்த அவனது பார்வை அவளைத் துளைத்தது.. அவளது மனதைத் துளைத்துத் தூண்டித் துருவுவதைப் போன்ற அந்தப் பார்வையில் அவள் மருகினாள்..

“நந்தினி..” தொலைதூர தொடுவானை அவன் வெறித்தான்..

‘இவனுக்கு என்னதான் வேண்டும்..?’

அவனுக்கு வேண்டியதைக் கொடுத்துவிட வேண்டும் என்ற துடிப்புடன் அவனை நெருங்கித் தோளில் சாய்ந்தவள்..

“நான் உங்களுடையவள் ரவி..” என்றாள்..

‘ரவி’ யென்ற அவளது அழைப்பில் அவன் பார்வையில் தெரிந்த வெறுமை விலகி விட்டது.. அடிக்கடி அவனைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டாள்.. அரிதாகத்தான் அழைப்பாள்.. அரிதான எதுவும் ஆகர்ஷிப்பதுதான்.. அவனைப் பெயர் சொல்லி அழைக்கும் அவளது அந்த அழைப்பும் அவனை ஆகர்ஷிப்பதுதான்..

“ஏய்ய்..”

அவளை நெருங்கி உதட்டோடு உதடு பதிய ஆழ்ந்த முத்தத்தைக் கொடுத்தவனுக்குள் இருந்த வெறுமை முற்றிலுமாக விலகி விட்டதைப் போலதான் இருந்தது.. சன்னமான விசிலுடன் ஜீப்பைக் கிளப்பினான்..

அஜந்தாவினால் உண்டாகியிருந்த கடுமை மறைந்து விட்டதைப் போலதான் இருந்தது..

‘எதுக்குக் கோபப்படனும்..? அவ என்ன அத்தனை பெரிய அப்பாடக்கரா..? இது க்கு முன்னாலே அவ இவனை வெறுப்பேத்தினதே இல்லையா..?’

அதற்கு முன்னால் அவனை அஜந்தா வெறுப்பேற்றிய போது ஒன்றுக்குப் பத்தாக அவன் கொடுத்துக் கட்டியிருக்கிறான் என்றாலும் இப்போது ஒன்றுக்கு நூறாகக் கொடுத்துக் கட்டியதைப் போல அவளுக்குத் தோன்றி வைத்தது.. அது எதனால் என்றும் அவளுக்குப் புரிய வில்லை.. அஜந்தா எதைப் பேசினாலும் அதற்கான கடுமையைக் காட்டி விட்டுத் தன் வேலையைப் பார்க்கக் கிளம்பி விடும் ரவிச்சந்திரன் இப்போது மட்டும் மணிக்கணக்காக அஜந்தாவின் பேச்சிலிருந்து வெளியே வராமல் அதில் உழன்று கொண்டிருப்பது ஏன்..? அவள் புதிதாக எதைச் சொல்லி விட்டாள்..?

‘அஜந்தா அரண்மனையைப் பற்றியோ.. சொத்து விவகாரங்களைப் பற்றியோ எதுவும் பேசலையே.. அவள் பேசியது பெல்ட் மன்னனைப் பற்றி மட்டும் தானே.. அதற்க்கா

இந்த அளவுக்கு அப்செட் ஆகிறான்..? என்ன கழுதைக்கு இப்படிக் கோபப்படனுமாம்..? பெல்ட் மன்னனைப் பற்றித்தான் இவனுக்குத் தெரியுமே.. அவனைப் பற்றிப் புதிதா எதையும் இவன் தெரிந்துக்கலையே..'

நந்தினி சாலையின் ஓரத்தில் அடர்ந்திருந்த காட்டுப் பூச்செடிகளை வேடிக்கை பார்ப்பதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. இல்லையென்றால் அவள் ஆழ்ந்த யோசனையிலிருப்பதை அவன் கண்டு பிடித்து விடுவான்.. அவளுக்குத்தான் அடுத்தது காட்டும் பளிங்கு போல நெஞ்சம் கடுத்ததைக் காட்டி விடும் முகமாயிற்றே..

நந்தினிக்குள் நெருடல் உண்டானது.. பெல்ட் மன்னனைப் பற்றிப் பேசினாலே ரவிச்சந்திரன் டென்ஷன் ஆவான்தான்.. நந்தினிக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை என்பதால் வரும் டென்சனென்று புரிந்து கொண்டு நந்தினி மௌனமாக இருந்து விடுவாள்.. அஜந்தா கேட்ட கேள்வி அப்படியில்லையே.. பெல்ட் மன்னன் யாரென்று உனக்குத் தெரியுமா என்றல்லவா கேட்டாள்..? பெல்ட் மன்னனுக்குப் பயந்து மாநிலம் விட்டு மாநிலம் ஓடி வந்திருப்பவளுக்கு அவன் யாரென்று தெரியாமல் இருக்குமா..? தெரிந்ததினால்தான்

அவள் ஓடி வந்திருக்கிறாள் என்று தெரியாத முட்டாளா அஜந்தா..?

அஜந்தா முட்டாள் என்று விரல் சுவைக்கும் கைக்குழந்தை கூடச் சொல்லாது..

எஸ்டேட்டின் முகப்பு வளைவு விழிகளில் பட்டது.. வெகுநாள் பிரிந்திருந்த தோழமையைச் சந்திக்கும் சந்தோஷம் அவளுக்கு உண்டானது..

“நம்ம எஸ்டேட் பாஸ்..” குழந்தையாகிக் குதூகலித்தாள்..

அவன் வெகு திருப்தியாக அவளைப் பார்த்து வைத்ததில் குழம்பிப் போனாள்..

‘ஈ ஆள் எதுக்காக இந்த மாதிரி பார்த்து வைக்கிறான்.. இறுக்கி அணைச்சு உம்மாக் கொடுத்திருந்தாக் கூட இப்படிப் பார்க்கிறதில ஒரு அர்த்தமிருக்கு.. நம்ம எஸ்டேட்டுன்னு சொன்னதுக்கா இந்தப் பார்வை..?’

என்ன பார்வை.. இவன் பார்வையென்று யோசித்தவளுக்கு அவளைக் கடித்துத் தின்று விடுவதைப்

போல அவன் பார்த்து வைத்ததிற்கான காரணம் பிடிபட்டு விட்டது..

‘ஓ..! நம்ம்ம்...ம எஸ்டேட்டுன்னு சொல்லிட்டேனாம்.. அதில மகிழ்ந்து போயிட்டான்..’

தன்னுடைய சொத்தை அவளுடைய சொத்தாக அவள் உரிமை கொண்டாடியதை கொண்டாடும் அந்தப் பிரியமானவனின் மீது அவளுக்குள் பிரியம் பெருக்கெடுத்தது..

எஸ்டேட் வளாகத்தில் ஜீப் நுழைந்து ரவிச்சந்திரனின் அலுவலகம் கட்டிடத்தின் முன்பு நின்றதுதான் தாமதம்.. எங்கிருந்தோ வந்து நின்றான் மோகன்..

“நந்தினி மேம்..”

ஒவ்வொரு எழுத்தையும் பிரேமத்துடன் அவன் உச்சரித்த விதத்தில் எரிச்சலாகிப் போன ரவிச்சந்திரன்..

“மோகன்.. நானும் இங்கே இருக்கிறேன்..” என்று கடுப்புடன் சொன்னான்..

“வணக்கம் சாரே..”

“வணக்கமெல்லாம் இருக்கட்டும்.. நீ இங்கே என்ன பண்ற..?”

“அச்சனுக்கு ஊன் கொண்டு வந்து..”

“உன் அப்பாவுக்கு சாப்பாட்டைக் கொண்டு வந்துக்கிட்டே இருந்தா காலேஜுக்கு எப்பப் போவ..?”

“ஆ நிமிஷத்தில போயி..”

“ஆ நிமிஷத்தில போகிறதை விட்டுட்டு இங்கே நின்று ‘ஆ’ன்னு பார்த்துக்கிட்டு இருந்தா எப்படி மோகன்..? படிக்கிற பையனுக்கு பொறுப்பு வேண்டாமா..?”

“ஞான் பையனல்ல சாரே.. சுந்தரனாக்கும்..”

மோகனின் பார்வை நந்தினியை மொய்த்தது.. அதில் அவள் சங்கடம் கொண்டாள்.. நந்தகுமாரின் சாயலில் இருந்தவனைக் கடிந்து கொள்ளவும் முடியவில்லை..

மோகனின் மீது ஏதோ ஒரு வகையில் பாசம் வைத்திருந்த நந்தினியையே அவனது பார்வை சங்கடப் படுத்தும்போது ரவிச்சந்திரனை விட்டு வைக்குமா என்ன..?

அவன் காண்டாகிக் கடுப்பாகிப் போனான்..

“நீ சுந்தரன்னு நீயே சொல்லிக்கிட்டா எப்படி மோகன்..?”

“நந்தினி மேமும் பறஞ் ..”

“அப்படி இவ பறஞ்சா இவ கன்னத்தில ஞான் அறயும்.. மனசிலாயி..?”

ரவிச்சந்திரன் விழிகளில் மோகனை மொத்திப் புரட்டியெடுத்து விடும் உத்தேசம் தெரிந்ததில் கலவரமாகிப் போனவன்..

“சாரே..?” என்று அரண்டான்..

“நான் ஒன், டூ, திரி சொல்லப் போறேன் மோகன்.. நம்பர் டென் வருகிறதுக்குள்ள நீ எஸ்டேட் சரவுண்டிங்கை விட்டே எஸ்கேப் ஆகியிருக்கனும்.. இல்லேன்னா என்ன நடக்கும்ன்னு நான் வாயில் சொல்ல மாட்டேன்..” கையில்தான் சொல்வான் என்பதில் கிலி கொண்ட மோகன் மறுநொடியில் மாயமானான்..

“ஆ சுந்தரன் காணாமல் போயி..” நந்தினி பொங்கிச் சிரித்தாள்..

“ஒரு அறை விட்டுக் காலேஜுக்குத் துரத்தி விடுகிறதை விட்டு விட்டு அசையாமல் நிற்கிற.. அவனைச் சொல்லக் கூடாது.. உன்னைச் சொல்லனும்..”

“சொல்லனுமா.. இல்லை கொல்லனுமா பாஸ்..?”

நந்தினி என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்.. ஏற்கனெவே அஜந்தாவினாலும், மோகனாலும் கடுப்பேறியிருந்த ரவிச்சந்திரன் சட்டென்று அவளது கன்னத்தில் அடித்து விட்டான்..

“பாஸ்..” கன்னத்தை பிடித்தபடி அசையாமல் நின்று விட்டாள் நந்தினி..

அடிபட்ட அவளது பார்வையைத் தாங்க முடியாதவனாய் அவளை இழுத்து அணைத்து அவளது கூந்தலில் முகம் புதைத்த ரவிச்சந்திரன் குமுறினான்..

“உன்னைக் கொன்னுட்டு நான் என்னடி பண்ண..? கூடச் சேர்ந்து நானும் சாகனும்.. வர்றியா.. சாகலாம்..”

“என்ன பேச்சுப் பேசறிங்க பாஸ்..”

அதிர்ந்து போனவளாக அவனது வாயை மூடினாள் நந்தினி.. மூடிய உள்ளங்கையில் சூடான அவனது இதழ்கள் படிந்தன.. அவளது முடிகோதி முத்தமிட்டவன்..

“உன்னைக் கொல்கிறதுக்காக இந்தப் பாடு பட்டேன்..?” என்று கேட்டான்..

‘என்ன பாடுபட்டான்..?’ புரியாமல் தலையை அசைத்து வைத்தாள் நந்தினி..

ஒருவேளை அவனது காதலை ஏற்க அவள் தாமதித்த போது காத்திருந்ததைச் சுட்டிக் காட்டுகிறானோ..

ஆழ்ந்த பெருமூச்சுடன் அவளை விலக்கி நிறுத்தியவன் இறுக்கமான முகபாவத்துடன் எங்கோ பார்த்தபடி சொன்னான்..

“ஆனால் ஒன்றுடி.. உன்னை இழக்க வேண்டி வந்தாக் கொன்றாலும் கொன்று விடுவேன்.. அதில் மாற்றமில்லை..”

“பாஸ்..”

நந்தினியின் உடல் நடுங்கியது.. என்ன மாதிரியான காதல் இது என்று தலை சுற்றியது.. அவனை இழக்க நேர்ந்தால் அவள் செத்து விடுவாள்.. அதில் சந்தேகமில்லை.. அவனைக் கொன்று விடுவாளா..?

அவன் அப்படிச் சொல்கிறானே..

“உன்னைக் கொன்று விட்டு எனக்கு மட்டும் என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கு..? நானும் உன்னுடன் வந்து விடுவேன்.. அதிலும் மாற்றமில்லை..”

“போதும்.. அச்சாணியமாப் பேசாதீங்க..”

நந்தினி அழுது விட்டாள்.. அவன் அழுகாதே என்று அவளைத் தடுக்கவில்லை.. யோசனையாகவே இருந்தான்.. திடிரென்று..

“உன் காதல் உண்மையானதுதானே..?” என்று கேட்டான்..

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. ஆழப்புலாவின் படகு வீடும் ‘சிநேகிதனே’ பாடலும் நினைவுக்கு வந்தன..

அதற்குப் பின்னாலும் இப்படியொரு கேள்வியைக் கேட்க எப்படி அவனுக்கு மனம் வந்தது..? அவனது நெஞ்சில் கை வைத்துத் தள்ளி விட்டு நடந்தாள்.. அவனது கை அவளது கையை இறுக்கிப் பிடித்து இழுத்து நிறுத்தியது..

“விட்டு விட்டுப் போக நினைக்காதே..” உறுமினான்..

“உங்களை விட்டுப் போக என்னால் முடியாது ரவி..” உதடுகள் துடிக்க அவள் சொன்னாள்..

‘ரவி’ யென்ற அழைப்பில் சற்று அமைதியானவன் சிந்தனையுடன் அவளை விடுவித்தான்.. எதையோ நினைத்து அவன் மன உளைச்சல் கொள்வதை நந்தினியால் புரிந்து

கொள்ள முடிந்தது.. அது எது என்றுதான் தெரியவில்லை.. எதுவாக இருந்தாலும் அதை நினைத்து அவன் மனம் உழல்வதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவளது விழிகளுக்கு அவன் முரட்டுச் சிறுவனாகத் தெரிந்தான்.. பரிவுடன் அவன் முகத்தை வளைத்து இழுத்து முத்தமிட்டாள் நந்தினி.. ஆறுதல் தேடி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தவனின் முடிகளுக்குள் விரல் விட்டுக் கலைத்தபடி.. “நானிருக்கேன் ரவி..” என்றாள்..

ஆறுதலாக அவள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் அவன் சடுதியில் விலகி நின்று அவளது முகத்தைக் கைகளில் ஏந்தி விழிகளுக்குள் உற்றுப் பார்த்தது எதற்காக என்று அவளுக்குப் புரியவே இல்லை..

அப்படி அவள் என்ன சொல்லி விட்டாள்..? எதனாலோ மன உளைச்சல் கொண்டிருக்கம் காதலனுக்கு ஆறுதல் அளிக்கும் பொறுப்புள்ள காதலியாக நானிருக்கேன் உனக்கு என்று சொல்லி விட்டாள்..

‘அதற்காகவா இப்படியொரு ரியாக்ஷன்..?’

“எப்போதும் என்னுடன் இருப்பாயா நந்தினி..? ஐ மீன்.. எது நடந்தாலும்.. உனக்கு எது தெரிய வந்தாலும்.. இதே காதலுடன் பிரியம் மாறாமல் என்னுடன் இருப்பாயா..?”

அலைபாயும் மனதைப் பற்றித்தான் அவள் கேள்விப் பட்டிருக்கிறாள்.. அலை பாயும் பார்வையை அவனிடம் தான் கண்டாள்.. அவனது பார்வை அலைபாய்ந்தது.. அவன் கூடப் பதட்டம் கொள்வான் என்பது அவளுக்கு அதிசயமாக இருந்தது..

‘ஆனால்.. ஏன் பதட்டப்படனும்..? எது நடக்கும்..? எது தெரிய வந்தாலும்ன்னு சொல்கிறானே.. எனக்கு எது தெரிந்திரும்ன்னு டென்ஷன் ஆகிறான்..?’

அவளது முகத்தைப் பற்றியிருந்த கைகளை அவள் தடவிக் கொடுத்தாள்.. அவள் எதிர்பார்த்ததைப் போலவே அந்த ஸ்பரிசம் அவனது டென்ஷனைக் குறைத்தது..

“ரிலாக்ஸ் பாஸ்..” அவனது கையை இறுக்கிப் பற்றி ஆறுதலளித்தவள் ஆழ்ந்த குரலில் கேட்டாள்..

“என்னிடமிருந்து எதையாவது மறைக்கறீங்களா பாஸ்..?”

அந்தக் கேள்வியில் அவன் அவளை உதறி விட்டு உள்ளே போய் விடுவான் என்று அவள் நினைக்கவே இல்லை..

# அத்தியாயம் 217

"**ந**ந்தினி மேம் இளைச்சுப் போயி.."

மகளைப் பார்க்கும் வாத்சல்யப் பார்வையுடன் சொன்னார் ஆனந்தன்.. பாசம் மிகுந்த அவரது பார்வையில் நந்தினியின் மனது நனைந்தது.. எதையோ தொலைத்து விட்டதைப் போல அலை பாய்ந்த மனது சமனப் பட்டதைப் போல இருந்தது..

உத்ரா வயநாட்டுக்கு வந்ததிலிருந்து நந்தினி எஸ்டேட் பக்கமாக தலை வைத்துக் கூடப் படுக்க வில்லையே.. உத்ரா சென்னைக்குத் திரும்பியதும் இவள் ரவிச்சந்திரனோடு ஆலப்புழாவிற்கு சென்று விட்டாள்.. நீண்ட நாள்களுக்குப் பிறகு அன்றைக்குத்தான் எஸ்டேட்டை அடையாளம் பார்க்கிறாள்..

"மேம்.. லாங் லீவில போயி.."

"அதனாலதான் உங்களுக்கு நான் இளைச்சிருக்கிறதைப் போலத் தோணுது சார்.. ஆக்சுவலா ஒரு சுற்றுப் பருமனாகி வந்திருக்கிறேனாக்கும்.." நந்தினி விளக்கம் சொல்லிக் கொண்டிருந்த போதே..

“அல்ல மேம்.. நிங்க கொடி போலல்லோ தெரிஞ்சு.. குண்டுன்னு ஆரானு பறஞ் ..” என்று ஜொள்ளிக் கொண்டே வந்து நின்றான் மோகன்..

“நீ காலேஜுக்குப் போகலையா மோகன்..?” கவலையுடன் ரவிச்சந்திரனின் அறையைப் பார்த்தாள் நந்தினி..

எந்த நொடியிலும் அவன் வந்து விடலாம் என்று பயமாக இருந்தது.. மோகனைப் பார்த்து விட்டால் அவ்வளவுதான்.. பந்தாடி விடுவான்.. கவலையெல்லாம் அவளுக்குத்தான்.. மோகனுக்கு பயமென்பதே இல்லை போல அவளையே பருகு பருகு எனப் பார்த்துக் கொண்டிருந்தான்.. எந்த நிமிடமும் ‘மலரே’ எனப் பாட்டுப் பாடி விடுவான் போலத் தெரிந்தான்.. அவன் காட்டிய ரொமான்ஸை சகிக்க முடியாமல் ‘பாஸ்’ என ரவிச்சந்திரனை அழைத்து மோகனை மாட்டி விட்டு விடலாமா என்று காண்டாகிப் போனாள் நந்தினி..

“காலேஜ் எப்பவும்தான் இருக்கும்.. நந்தினி மேம் அங்ஙனவா..? எப்பவாவதுதான் வந்து..”

“நான் வருவதற்கும் நீ காலேஜ் போகிறதுக்கும் என்ன கனெக்ஷன் மோகன்.. உன் வேலையை நீ பாரு.. என்

வேலையை நான் பார்க்கிறேன்..” “எண்ட ஜோலி நந்தினி மேமை நோக்கறதல்லோ..”

‘அடப்பாவி..’ ஆற்றாற்றுப் போனாள் நந்தினி..

‘சைட் அடிக்கிறதை எத்தனை தெளிவாய் ஒப்புக்கிறான்.. இதையும் கேட்டுக்கிட்டு இருக்கிற அப்பன் ஒரு அப்பனா..?’

மோகனின் மேலிருந்த கோபம் திசை மாறி ஆனந்தனின் பக்கம் தாவியது.. இப்படி ஒரு பிள்ளையைப் பெற்று ஊரைப் பார்வையிட வைத்துக் கொண்டிருக்கிறாயா என்று கேட்டு விடும் துடிப்புடன் ஆனந்தனைத் தேடினால் அவர் அங்கு இல்லை.. மோகன் உள்ளே வரும் போதே அவருக்கு அர்ஜண்ட் கால் ஒன்று வந்து விட்டதில் அவர் வேலையைப் பார்க்க அவரது ரூமிற்குப் போயிருந்தார்..

‘அதுசரி.. அப்பன் பக்கத்தில் இல்லைங்கிற தைரியத்திலதான் இவன் வழியறானா..?’ மோகனை முறைத்தாள்..

அவளது முறைப்பை அவன் சட்டை செய்ய வில்லை.. துடைத்துப் போட்டு விட்டுப் பேசும் கலையில் அவன் கைதேர்ந்தவனாக இருந்தான்.. ஒரு மார்க்கமாக இளித்து வைத்தான்..

‘உதை வாங்காமல் ஓட மாட்டான் போல இருக்கே..’

அடித்துவிடக் கூடாது என்று தனக்குள் ஜபம் போல ஜெபிக்க ஆரம்பித்தாள்.. அவளை யோகி ஆக விடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவனைப் போல அவளது கடுப்பைக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்தான் மோகன்..

“நந்தினி மேம் இங்ஙன இல்லாத திவசம் திவசமே இல்லையல்லோ..”

‘நானில்லாத நாள் இவனுக்கு நாளாவே இல்லையாம்..’

மனதுக்குள் மொழிபெயர்த்து பல்லைக் கடித்தாள் நந்தினி..

“எண்ட மனசு பூரா நிங்க விஜாரமல்லோ..”

“பட்ஷே மோகன்.. எனக்கு உன்னைப் பத்தின விஜாரமே வரலை.. தெரியுமா..?”

“நந்தினி மேம் இங்ஙன பறஞ்ஞா எண்ட மனசு தூள் தூளாயி..”

“முதல்ல உளருகிறதை.. நிப்பாட்டறயா.. சின்னப் பையனாச்சேன்னு பாக்கறேன்.. இல்லேன்னா நடக்கறதே வேற..”

“எவரானு கொச்சுபையன்.. ஞானோ..?”

“நீயேதான்..”

“ஞான் வல்லிய சுந்தரனாக்கும்..”

“இப்படியே பேசிக்கிட்டுத் திரி.. பைத்தியம் பிடித்துத்தான் அலைய போகிற.. உன் அப்பா அருமையான மனிதர்.. அவர் முகத்திற்காக பார்க்கிறேன்..”

“எந்துக்கு மேம் இங்ஙன பறஞ் .. எண்ட வதனம் திவ்ய சொரூப வதனமாக்கும்..”

“அப்படி நீதான் சொல்லிக்கனும்.. வேற யாரும் சொல்ல மாட்டாங்க..”

“நந்தினி மேம் எண்ட சொப்பனத்தில வந்து..”

“வேண்டாம் மோகன்.. நான் ஏற்கனெவே செம கடுப்பில இருக்கேன்.. நீ மேல மேல கடுப்பைக் கிளப்பி விட்டுக்கிட்டே இருக்க.. இது நல்லதுக்கில்ல.. சொல்லிட்டேன்..”

“கடுப்பு வந்தா நந்தினி மேம் எந்து செய்யும்..? எங்ஙட சாரைப் போல பெல்ட் கொண்டு விளாசுமோ..?”

“என்னது..?”

உடல் தூக்கிப் போட கதி கலங்கிப் போனாள் நந்தினி.. ‘இவன் என்ன சொல்கிறான்..? ரவிச்சந்திரன் பெல்ட்டால் விளாசுவானா..?’ மோகன் ஜொள் மன்னன் என்றாலும் பொய் சொல்லாதவன்.. வழிவதை மறைத்து நல்லவன் போல நடிக்கத் தெரியாவதன்.. அந்தக் குணத்தின் சிறப்பைச் சுட்டிக் காட்டினால் ரவிச்சந்திரனுக்கு கோபம் வந்து விடும்.. அவள் மலர் டீச்சராக நினைக்கிறாளா என்று வண்டை வண்டையாக கேட்டு வைப்பான்.. தேவையா என்று மோகனின் குணத்தை நந்தினி சிலாகிக்கவே மாட்டாள்.. அவள் சிலாகிப்பதால் என்ன நிகழ்ந்து விடப் போகிறது..? ரவிச்சந்திரன் மோகனுக்கு மெடலைக் குத்திப் பாராட்டு விழா நடத்தி விடுவானா என்ன..?

அப்பேற்பட்ட உண்மை விளம்பியான மோகன் எங்களின் சாரைப் போல பெல்ட்டால் விளாசி விடுவாயா என்று கேட்கிறான்..

‘இதுக்கு என்ன அர்த்தம்..?’

ரவிச்சந்திரனுக்கு கோபம் வந்தால் பெல்ட்டால் விளாசித் தள்ளி விடுவான் என்றுதானே அர்த்தம்..

“எந்துக்கு ஈ ரியாக்ஷன் மேம்..? சார் பெல்ட்டால தள்ளு (அடி) கொடுப்பதில ராஜாதி ராஜனெண்டு நிங்க அறியுமோ..?”

‘பெல்ட்டால் அடிப்பதில் ராஜாதி ராஜன்.. அதாவது மன்னாதி மன்னன்.. தட் மீன்ஸ் பெல்ட் மன்னன்..’

மனது கோர்த்த கோர்வையில் நந்தினி அதிர்ந்தாள்.. ஏன் இப்படித் தோன்றுகிறது என்று தலையைப் பிடித்துக் கொண்டு யோசித்தாள்.. அவளுடைய ரவிச்சந்திரனைப் பற்றி இப்படியெல்லாம் அவள் நினைக்கலாமா..? “மோகன்.. இவ்விடத்தே உனக்கு எந்து ஜோலி..?”

வேலையை முடித்து விட்டு அறையை விட்டு வெளியே வந்த ஆனந்தன் கோபப்பட்டார்..

“ஒந்நுமில்ல அச்சா..”

“ஒந்நுமில்லையெண்டா எந்துக்கு இவ்விடத்தில நின்னு..?”

“அம்மை அச்சனிடம் பறயனுமெண்டு ஒரு சேதி பறஞ் ..”

“எந்தா..?”

“ஞான் அதை மறந்து போயி..”

“மோகன்..”

வெப்பராளமே (கோபம்) கொள்ளாத சாது சிரோண்மணியான ஆனந்தனுக்கே வெப்பராளத்தை வரவழைத்து விட்ட அவருடைய புத்திர சிரோண்மணி அவர் உறுமிய உறுமலில் அந்த இடத்தை விட்டு ஓடோடிப் போனான்..

“விவரமில்லாப் பொடிப்பையன்..”

ஆனந்தன் சங்கடத்துடன் சிரித்தார்.. நந்தினி ரவிச்சந்திரனின் பிரியத்துக்குரியவள், வருங்கால எஜமானியென்ற விவரம் புரிந்த பெரிய மனிதர் அவர்.. அந்த விவரம் புரியாத விடலைப் பையனைப் பெற்று வைத்து விட்ட அலுப்பு அவர் முகத்தில் அப்பட்டமாக தெரிந்தது..

“இட்ஸ் ஆல் ரைட் சார்..” சிநேகிதமாக சிரித்து வைத்தாள் நந்தினி..

மோகன் விவரமில்லாத பொடிப் பையன் என்பதில் அவளுக்கு யாதொரு சந்தேகமுமில்லை.. அவன் விடலைப் பையனாக இருப்பதில் அவளுக்கு மிகுந்த ஆட்சேபமும்

தலைவேதனையும் உண்டு என்பதை ஆனந்தனிடம் சொல்ல விரும்பவில்லை.. அவர் மகன் மீது கோபப்படுவார்.. கடிந்து கொள்வார்.. எதற்காக பிரச்னையை பெரிது பண்ண வேண்டும் என்று அவள் நினைத்தாள்.. ரவிச்சந்திரனுக்கும் அவளுக்கும் திருமணம் ஆன பின்பு மோகனே விலகி நின்று விடப் போகிறான்.. ரவிச்சந்திரனின் மனைவியிடம் 'மலரே' என்று பாட்டுப் பாட அவனுக்கு என்ன பிராந்தையா (பைத்தியம்) பிடித்திருக்கிறது..?

'அதிலெல்லாம் அவன் தெளிவல்லோ..' அதுவரைக்கும் அவன் செய்யும் ஊமைச் சேட்டைகளைக் கண்டு கொள்ளாததைப் போலக் கடந்து விடுவதே சாலச்சிறந்தது.. அதுதான் அவளுக்கும் சேர்த்து ரவிச்சந்திரன் கண்டு கொள்கிறானே.. அது போதாதா..? ரவிச்சந்திரன் கொடுக்கும் கொடுப்பிற்கும் அசராமல் மோகன்

'மலர் டீச்சர்' என்று மலர்க் கணையைத் தொடுத்துத் தள்ளுவதுதான் சோதனை..

“எண்ட மோன மேம் ஷமிக்கனும்..”

“நீங்க தமிழிலேயே சம்சாரிக்கலாமே ஆனந்தன் சார்..”

“ஆகட்டும் மேம்.. மோகனுக்கோசரம் ஞான் மாப்புக் கேட்டு..”

“அதை விடுங்க சார்.. அவனுக்கு வயசுக் கோளாறு.. ஆக்ஷுவலா மோகனைப் பார்த்தா எனக்கு என் தம்பி ஞாபகம்தான் வருது..”

“ஓ..”

ஆனந்தன் மகிழ்ந்து போனார்.. அவரது மகனை நந்தினி தம்பியாக நினைக்கிறாளா..? எவ்வளவு அருமையான விஷயம் இது.. இதைப் புரிந்து கொள்ளாமல் அவர் பெற்ற அரைகுறை இம்சை செய்து தொலைக்கிறானே..

“நந்தினி மேமுக்குத் தம்பி, தங்கை உண்டோ..”

“தங்கை இல்லை.. ஒரேயொரு தம்பி மட்டும் உண்டு..”

நந்தகுமாரின் நினைவில் மனம் கனக்க கண் கலங்கினாள் நந்தினி.. ஆனந்தனுக்கு இரக்கமாக இருந்தது.. மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல்.. தொழிலாளி, முதலாளி பாகுபாடு இன்றி அனைவரிடமும் சிரித்த முகமாக பேசிப் பழகும் நந்தினியின் மீது அவருக்குத் தனிப்பட்ட வாஞ்சையுண்டு..

அவளிடம் அதிகம் பேசியதில்லையென்றாலும் அவளைப் பற்றி உயர்ந்த அபிப்ராயம் வைத்திருந்தார்..

“கரையாண்டாம் மோளே.. நிண்ட வல்லிய மனசுக்கு நல்லதே நடக்குமல்லோ..”

“தேங்க் யு சார்..”

கண்களைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கியபடி புன்னகைத்தாள் நந்தினி.. ஆனந்தனின் பரிவான வார்த்தைகளால் அவளது துயரம் குறைந்து விடவில்லை.. இன்னதென்று இனம் விளங்காத பயம் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது.. அதைப் புரிந்து கொண்டவராக..

“நிண்ட மனசில உள்ள கவலை எந்தா மோளே..?” என்று பரிவுடன் வினவினார் ஆனந்தன்..

“ஆனந்தன் சார்..”

“பறஞ் மோளே..”

“நம்ம பாஸ் பெல்ட்டால் அடிப்பாரா..?” படபடப்புடன் கேள்வி கேட்ட நந்தினியை விநோதமாகப் பார்த்தார் ஆனந்தன்.. இந்தப் பெண்ணுக்கு என்ன ஆனது என்ற குழப்பம் அவரது விழிகளில் தெரிந்தது.

“எந்துக்கு ஈ கொஸ்டின் மேம்..?”

“ப்ளீஸ்.. பதில் சொல்லுங்களேன்..”

“சார் வல்லிய கோபக்காரர் மேம்.. ஆ கோபத்தில கையில எது கிடைத்தாலும் விட்டு விளாசி விடுவாரல்லோ..”

“எதுவும்ன்னா..?”

“வல்லதும்தான் மேம்.. ஆரானும் தெற்று (தவறு) செஞ்சா.. நொனா (பொய்) பறஞ்ஞா சார் கோபம் கொண்டு.. ஆ மனுசங்களுக்கு சிஷா (தண்டனை) அளிச்சு..”

“துப்பாக்கியால் சுடுவாரா..?”

“ம்ம்ம்..”

“பெல்ட்டால் அடிப்பாரா..?”

“அடிப்பார் மேம்.. அடிப்பார்..”

இது போதும் என்று சோர்ந்து போனாள் நந்தினி.. மனது எதையெதையோ நினைத்து உழன்றது.. ரவிச்சந்திரனின் சட்டையைப் பிடித்து உலுக்கி.. நீ யார் என்று கூவ வேண்டும் போல இருந்தது.. அத்தனையும் அவன் அவளை அழைக்கும் வரைதான்..

“நந்தினி..” யென்ற அவனது அழைப்பில் அவளுக்கு அனைத்தும் மறந்து போனது..

“பாஸ்..” பரபரத்து பறந்து போனாள்..

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்த பார்வையில் காதலானாள்.. செக்கச் செவேலென்று சிவந்த முகமும்.. கரிய மீசையும் அவளைக் கவர்ந்து இழுத்தன..

“எங்கேடி போன..?”

அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை மயக்கி வைத்தான்.. அவள் மயங்கிக் கவிழ்ந்தாள்..

“உங்களை விட்டு நான் எங்கே போவேன் பாஸ்..?”

அவளுடைய ஒற்றைக் கேள்வியில் தொக்கி நின்ற மகத்தான காதலில் அவனது கோபமும் அவளது அவநம்பிக்கையும் இருக்கும் இடம் தெரியாமல் அடித்துச் செல்லப் பட்டன..

# அத்தியாயம் 218

மலையுச்சியில் நின்றிருந்ததில் நந்தினியின் உடல் சிலிர்த்தது.. காதோரமாக ரவிச்சந்திரன் பாடிய பாடலில் அவளது மனம் சிலிர்த்தது..

**“உன்னைவிட..**

**இந்த உலகத்தில்**

**ஒசந்தது ஒண்ணுமில்ல..**

**ஒண்ணுமில்ல..”**

யாருமற்ற தனிமை.. எங்கும் நிரம்பியிருந்த நிசப்தம்.. அதை அவ்வபோது கலைக்கும் காற்றின் ஓசை.. பறவைகளின் கீச்சொலி.. இது போன்ற சூழலில் இப்படியொரு பாடலைக் கேட்பதும் அந்தப் பாட்டுடை நாயகியாக ஆவதும் வரம்.. ரவிச்சந்திரன் அந்த வரத்தை அவளுக்கு அளித்துக் கொண்டிருந்தான்.. கண்களை மூடி அவன் தோளில் சாய்ந்த அவளும் பாடினாள்..

**“உன்னை விட..**

**ஒரு உறவுன்னு**

**சொல்லிக் கொள்ள யாருமில்ல..**

**யாருமில்ல..”**

ரவிச்சந்திரனுக்கு பிடித்தமான வார்த்தைகளைப் பாடினாள் நந்தினி.. அவளது தோளை வளைத்திருந்த அவனது கைகள் இறுக்கிப் பிடித்ததில் உடல் வலிக்கச் செல்லமாக அவனை மனதுக்குள் ‘விருமாண்டி..’ என்று கடிந்து கொண்டாள்..

**“வாக்கப்பட கிடைச்சான் விருமாண்டி..**

**சாட்சி சொல்ல சந்திரன் வருவாண்டி**

**சாதிசனம் எல்லாம் அவன்தாண்டி..**

**கேட்ட வரம் உடனே தந்தான்டி..”**

அவனது முகத்தை அண்ணாந்து பார்த்தவளின் விழிகளில் ததும்பிய காதலில் அவனது மனம் நிறைந்து தளும்பியது.. அவளது முடிகோதி கூந்தல் காட்டில் முகம் புதைத்துக் கொண்டவனின் கல்லுக்குள் ஈர மனதை புரிந்து வைத்திருந்த கர்வத்துடன்..

**“என்னைவிட உன்னை**

**சரிவர புரிஞ்சுக்க**

**யாருமில்ல.. எவளுமில்ல..**

**என்னை விட..”**

பாடினாள் அவள்.. அவன் புன்சிரிப்புடன் தலையை ஆட்டி அதை ஆமோதித்தான்.. அவன் தேடிய காதலை பரிசளித்தவளின் இமைகளில் முத்தமிட்டு மார்போடு அணைத்துக் கொண்டு..

**“உன்னைவிட**

**இந்த உலத்தில்**

**ஒசந்தது ஒண்ணுமில்ல..**

**ஒண்ணுமில்ல..”**

என்று பதிலுக்குப் பாடினான்.. அதில் அவளது கர்வம் அதிகமானது..

மலையுச்சியில் இருந்த சமவெளி புல்படுக்கை விரித்து அவர்களை சயனிக்க ‘வா, வா’ வென அழைத்தது.. மலையுச்சியின் ஓரம் அடர்ந்திருந்த பூச்செடிகளில் பூத்திருந்த பூக்களின் நறுமணம் அவர்கள் இருவரையும் மயக்கியது.. ரவிச்சந்திரனின் இதழ்கள் உரசியதில் உடல் கூச

பூங்கொடியாய் அவன் மார்பில் புதைந்து பின்னிப் பிணைந்தாள் நந்தினி..

**"அள்ளி கொடிய காத்து அசைக்குது..**

**அசையும் கோலத்தில உடம்பு கூசுது..**

**புல்லரிச்சு பாவம் என்னைப் போலவே**

**அலை பாயுது.."**

உடல் நடுங்க அவள் பாடியதில் உடல் சூடேறிய ரவிச்சந்திரனுக்குள் முதலிரவுக் கனவு விரிந்தது.. நிலவொளியில் புல்படுக்கையில் அவனும் அவளும் சுகிப்பதைப் போலக் கனவு கண்டான்..

**"நிலவில் காயும் வேட்டி சேலையும்**

**நம்மைப் பார்த்து ஜோடி சேருது..**

**சேர்த்து வைச்ச காத்தே துதிபாடுது..**

**சுத்தி சேருது.."**

அவனது கனவை அவளது காதுகளுக்கு அவன் இடம் பெயர்த்ததில் அவளது தேகம் தகித்தது.. விழிகளை மூடிக் கொண்டவளுக்குள் மோட்சம் தெரிந்தது..

**“என்ன புது தாகம்..?**

**அனல் ஆகுதே என் தேகம்..**

**யாரு சொல்லித் தந்து வந்தது..?**

**காணக் கனா வந்து கொல்லுது..**

**இதுக்குப் பேருதான்**

**மோட்சமா..? மோட்சமா..?**

**மோட்சமா..?”**

மலையுச்சியில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் மேய்ப்பனின் குச்சிக்குப் பயந்து ஒன்று சேர்ந்து மலையிறங்க ஆரம்பித்தன.. அவைகளின் கழுத்து மணி ஓசை, ஆலய மணியின் ஓசையைப் போல அந்தக் காதலர்களின் மனதை அமைதிப்படுத்தியது..

**“காட்டுவழி காளைங்க**

**கழுத்து மணி..**

**கேட்கையில் நமக்கு**

**அது கோவில் மணி..**

**ராத்திரியில் புல்வெளி**

**நனைக்கும் பனி..**

**போதிக்கிற நமக்கு**

**அது மூடு பனி..**

**உன்னை விட..**

**இந்த உலகத்தில ஒசந்தது**

**ஒண்ணுமில்ல..**

**ஒண்ணுமில்ல..”**

ரவிச்சந்திரனின் குரல் அவளைக் கானகத்துப் புல்வெளியில் சரிய வைத்தது.. கண்கள் மின்ன அவள்மீது சரிந்தவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு புரண்டாள் நந்தினி.. அவன் முடிகோதி பாடினாள்..

**“உன் கூட நான் கூடி இருந்திட..**

**எனக்கு ஜென்மம் ஒண்ணு போதுமா..?**

**நூறு ஜென்மம் வேணும்..**

**கேட்குறேன் சாமிய..”**

விழிகளில் நீர் ததும்ப பாடியவளின் குரல் உணர்ச்சி மிகுதியில் நடுங்கியது..

**“நூறு ஜென்மம் நமக்குப் போதுமா..?**

**வேறவரம் ஏதும் கேட்போமா..?**

**சாகாவரம் கேட்போம்..**

**அந்தச்சாமிய.. அந்தச்சாமிய..”**

அவன் சொன்னதற்கு ஆமாம் என்று தலையை ஆட்டி ஆமோதித்தாள் நந்தினி.. அவன் கண்ணானால் அவள் இமையாவாள் என்றாள்..

**“காத்தா அலைஞ்சாலும்..**

**கடலா நீ இருந்தாலும்..**

**ஆகாசமா ஆன போதிலும்..**

**என்ன உரு எடுத்தபோதிலும்..**

**சேர்ந்தேதான் பொறக்கனும்..**

**இருக்கனும்.. கலக்கனும்..**

**உன்னைவிட.. ஒரு உறவுன்னு**

**சொல்லிக்கொள்ள யாருமில்ல..**

**யாருமில்ல..”**

அவள் அடைந்த சரணாகதியில் அவன் மனதில் அமைதி சூழ்ந்தது..

**“உன்னைவிட.. இந்த உலகத்தில**

**ஒசந்தது ஒண்ணுமில்ல..**

**ஒண்ணுமில்ல..”**

என்று அவன் மனதை அவனும் சொன்னான்.. மனதில் சூழ்ந்திருந்த சந்தேகங்களும் சஞ்சலமும் விலகி ஓட நிர்மலமான இயற்கையின் மடியில் நிம்மதியை அடைந்தாள் நந்தினி..

**“வாழ்க்கை தர வந்தான் விருமாண்டி..**

**சாட்சி சொல்ல சந்திரன்**

**வருவாண்டி..**

**சாதிசனம் எல்லாம் அவன்தாண்டி..**

**கேட்டவரம் உடனே தந்தான்டி..”**

அவனது மார்பில் சயனித்துக் கண்மூடிப் படுத்திருந்தவளின் உதடுகள் மெலிதாக முணுமுணுத்துக் கொண்டிருந்தன.. நீயே எனக்கு எல்லாமும் என்பதை

ஒருவருக்கொருவர் உணர்த்தி விட்ட காதலர்கள் வெகு நேரம் அங்கேயே இருந்தார்கள்.. வானில் நிலவு பவனியைத் தொடங்கி விட்டது.. இருள் நிரம்பிய இரவுப் பொழுதின் வயநாட்டுக் குளிர் அவளது உடலைத் துளைக்க நந்தினி நடுங்கினாள்.. ரவிச்சந்திரன் புல்த்தரையின் ஈரத்திலிருந்து எழுந்து உட்கார்ந்த ரவிச்சந்திரன் தனது ஜெர்கினை அவிழ்த்து அவளுக்குப் போர்த்தி விட்டு அணைத்துக் கொண்டான்..

“குளிருது பாஸ்..” நந்தினியின் பற்கள் கிடுகிடுத்தன.

“ஜஸ்ட் ஃபியூ மினிட்ஸ்.. அரண்மனைக்குப் போய் விடலாம்..”

ஆறுதலாகச் சொன்ன ரவிச்சந்திரன் எழுந்து நின்று அவள் எழுந்து கொள்ளக் கை கொடுத்தான்.. கூட வந்த நந்தினியின் தோளை வளைத்து இழுத்து அணைத்துக் கொண்டான்.. அவனது உடல் சூட்டில் அவளது குளிர் குறைய இருவரும் ஜீப்பை நோக்கி நடந்தார்கள்.

இருள் சூழ்ந்திருந்த வயநாட்டின் மலையுச்சி அவளை அச்சுறுத்தியது.. ரவிச்சந்திரனிடம் அதைச் சொன்ன போது..

“என்ன பயம்..?” என்றான்..

“என்ன பாஸ் இப்படிக் கேட்டுட்டிங்க.. காட்டுக்குள்ள மலையுச்சியில இருட்டில தனியா நின்னா பயமாயிருக்காதா..?”

“நீ தனியாவா நிற்கிற..?”

ரவிச்சந்திரனின் ஆட்சேபத்தில் உதட்டைக் கடித்துக் கொண்ட நந்தினி..

“ஸாரி.. ஸாரி..” என்று காதைப் பிடித்துக் கொண்டாள்..

“பக்கத்தில் நானிருக்கும் போது நீ பயப்படக் கூடாது நந்தினி.. ஆலப்புழா படகு வீட்டிலும் இதைத்தான் சொன்ன..”
“எனக்குக் காடுன்னா பயம்..”

“அதுதான் ஏன்னு கேட்கிறேன்.. சிட்டிஸை விடக் காட்டில் குற்றங்கள் குறைவுடி.. உனக்கு அது தெரியலை..”

“தெரியவே வேணாம்..”

குழந்தையாய் சிணுங்கினாள் நந்தினி.. அவளது தோள் தட்டிச் சமாதானப் படுத்தியவனின் மனம் மிருதுவானது..

“தெரிய விட மாட்டேண்டி.. உன் பக்கத்தில் நானிருக்கிறப்ப எதுவும் நடக்காது.. என்னைத் தாண்டி யாரும் உன்னை நெருங்க முடியாது..” இரும்பு மனிதனின் குரல்

ஆணித்தரமாக ஒலித்த அதே நேரத்தில் தரங்கிணி வயநாட்டுக்கு வந்து இறங்கியிருந்தாள்.. அவளுக்காக காத்திருந்த அஜந்தாவிடம் பேச்சு வார்த்தை நடந்த ஆரம்பித்திருந்தாள்..

தரங்கிணியின் குடும்பத்துக்கு சொந்தமான அரண்மனையின் தோட்டத்தில் அமைந்திருந்த கொடி வீட்டின் முன்பாக போடப்பட்டிருந்த நாற்காலிகளில் எதிரும், புதிருமாக அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தார்கள்.. இப்படியொரு சந்திப்பு நிகழக்கூடும் என்று அவர்கள் இருவருமே நினைத்திருக்கவில்லை.. ஒருவரைப் பற்றி ஒருவர் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவிற்கு ஒருவரையொருவர் வெறுத்து வந்த இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்து நேருக்கு நேராக முகம் பார்த்துப் பேச வேண்டிய நிலைமை வந்து சேர்ந்து விட்டதில் இருவரின் மனதிலும் பொங்கிக் கொண்டிருந்த வெறுப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.. அரண்மனைக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தாள் தரங்கிணி.. அவளுக்கு எதிரில் அமர்ந்திருந்த அஜந்தா தரங்கிணியின் முகத்தைப் பார்க்க விரும்பாதவளாய் அரண்மனையை வெறித்துக் கொண்டிருந்தாள்.. கால் மேல் கால் போட்டு

அமர்ந்திருந்த தரங்கிணி அஜந்தாவின் முகச் சுளிப்பைக் கவனித்து விட்டு மனதுக்குள் வெகுண்டாள்..

‘என் கால்தூசிக்கு சமமாவாளா இவள்..? என் அரண்மனைத் தோட்டத்தில உட்கார்ந்துக்கிட்டு எனக்கே ஃபிலிம் காட்டறா..’

இகழ்ச்சியாக அஜந்தாவை ஏற இறங்க பார்வையிட்ட தரங்கிணி..

“ஈ தரவாடு எண்ட தரவாடு.. கேட்டே..” என்றாள்..

அஜந்தாவுக்கு ‘சுருக்’ கென்றிருந்தது.. தரங்கிணியின் அரண்மனையை விதியே என்று வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. தரங்கிணியின் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல்தானே வீட்டை வெறித்துக் கொண்டிருந்தாள்..? தரங்கிணியின் தரவாடு (பெரிய குடும்பத்தின் பெரிய வீடு..) அழகானது என்றா உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்..?

‘இவளையெல்லாம் மதித்துப் பேச வந்திருக்கிறேனில்ல.. அதான்.. திமிர் காட்டறா..’ அதுவரை சும்மா இருந்த அஜந்தா தரங்கிணியைப் போலக் கால் மேல் கால் போட்டு சாய்ந்து அமர்ந்தாள்.. தரங்கிணியின் திமிரைத் தூக்கிச் சாப்பிட்டது

அவளுடைய திமிர்.. அதில் தரங்கிணியின் ரத்த அழுத்தம் எகிறியது..

“ஈ வீடு தரவாடு.. எண்ட வயநாட்டு கொட்டாரத் தோட (அரண்மனை) பெகுமானத்துக்கு ஈ தரவாடு ஈடில்லையல்லோ..” அஜந்தா உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்..

“ஓ..” தரங்கிணி உதட்டைக் குவித்து பழிப்புக் காட்டினாள்..

“ஆ கொட்டாரம் எண்ட ரவியத்தானோட கொட்டாரமல்லோ.. நினக்கு ஏது கொட்டாரம்..? நிண்ட அச்சனோட தரவாடு கடனில் மூழ்கிப் போயி.. நீ எரப்பாளி (பிச்சைக்காரன்) மோளல்லோ..”

“தரங்கிணி..” அஜந்தா அலறினாள்..

“உஸ்ஸ்ஸ்..” வாயில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தாள் தரங்கிணி..

“அரிசில்தானே (பக்கத்தில்) ஞானிருக்கு..? எந்துக் கோசரம் வல்லிய சப்தம் எழுப்பி..? மெதுவா சம்சாரிக்கனும்.. கேட்டே..”

“எனக்கொண்டும் நிண்ட கூட சம்சாரிக்க இஷ்டமில்லா கேட்டே..”

“எனக்கும் அங்ஙனதான்.. கேட்டே.. நிண்ட கூட ஸ்நேகம் கொள்ள விளிக்கலையல்லோ..”

“வேற எந்துக்கோசரம் விளிச்சு..?”

“நினக்கு அதி தெரியாதோ..? நோக்கு அஜந்தா.. நீ ஒந்நும் பப்பா இல்ல.. ஞான் அறியும்.. எதுக்கோசரம் நின்னை ஞான் விளிச்சதெண்டு நீயும் அறியும்.. அறியாதெண்டு நொனா பறயாண்டாம்.. கேட்டே..”

“அதிக்கு நீ எரப்பாளி மோளெண்டு பறயாண்டாம்.. கேட்டே.. ஞான் அருள்மொழிவர்மனிட கொச்சு மோள்..!”

“ஹ..!” தரங்கிணியின் எகத்தாளப் பார்வையில் அஜந்தாவின் உயிர் துடித்தது..

உலகத்தில் உள்ள அத்தனை பேரையும் துச்சமாகப் பார்க்க அஜந்தாவால் முடியும்.. தரங்கிணியிடம் மட்டும் அது முடியாது.. அவள் இவளைத் துச்சத்திலும் துச்சமாகத் தூசியைத் தட்டி விடுவதைப் போலப் பார்த்து விட்டுப் போய் விடுவாள்.. நின்று ஒரு வார்த்தை பேச மாட்டாள்..

ரவிச்சந்திரனிடம் அவளுக்குத்தான் அத்தை மகள் சொந்தம் இருப்பதைப் போல ஈஷீவாள்.. கொஞ்சிக் குழாவுவாள்..

அஜந்தாவின் ரத்தம் கொதிக்கும்..

‘ஆரானு இவ..?’

கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்குப் போய் விட்டாள்.. இருவருக்கும் இடையே குடுமிப்பிடி சண்டை நடந்தது..

“ஞானல்லோ ரவியத்தானின் அப்பச்சி (அத்தை) மோள்.. நீ ஆரானு..?” என்ற அஜந்தாவின் கொக்களிப்பிற்கு..

“ஞான் ரவியத்தானை விவாகம் கழிக்கப் போகிற பெண் குட்டியாக்கும்.. ஈ கேரள தேசத்தின் வல்லிய சுந்தரி ஞானல்லோ..” என்று தரங்கிணி சொல்லி விட்டாள்..

அவ்வளவுதான்.. அஜந்தாவிற்கு நெஞ்சுவலியே வந்து விட்டது..

“நீ ரவியத்தானை விவாகம் கழிச்சோ..?”

“ஓ.. அதிதான் ஞான் பறஞ் ..”

“ஞானல்லோ ரவியத்தானுக்காக ஜனிச்சு..?”

“நீ அதிக்காக ஜனிக்கலையல்லோ.. எண்ட ரவியத்தானின் குடும்பச் சொத்தை அழிக்கிறதுக்காக நிண்ட அம்மை ஜனிச்சு.. அதிக்கு துணை போக நீ ஜனிச்சு.. ரவியத்தானை விவாகம் கழிக்கும் பெகுமானம் நினக்கு உண்டோ..? அதி எனிக்கு உண்டு.. எண்ட குடும்பத்துக்கு எண்டு ஒரு பெகுமானம் உண்டல்லோ.. நிண்ட குடும்பத்துக்கான பெகுமானம் எந்தா...? நீ யோகானந்தனோட மோள்.. அபராஜிதனிட அணியத்தி.. யோகானந்தன் ஆரானு எண்டு ஈ கேரள தேசமே அறிஞ் ..”

தரங்கிணி கேட்டாலும் கேட்டாள்.. வண்டை வண்டையாக அஜந்தா வாயைத் திறக்க முடியாத அளவிற்குக் கேட்டாள்..

# அத்தியாயம் 219

**அ**ஜந்தாவின் நெஞ்சினில் கூரிய அம்புகள் பாய்ந்த நாள் அது.. அன்று கேட்ட வார்த்தைகளை என்றுமே அஜந்தா மறக்க முடியாத அளவிற்குப் பேசி விட்டாள் தரங்கிணி..

“அபராஜிதனின் அணியத்திக்கு பெகுமானம் இல்லா.. யோகானந்தன் எங்ஙனமோ அங்ஙனமே அபராஜிதனும் பெகுமானமில்லாமல் அலைஞ் ... ஞான் அங்ஙன அல்ல.. எண்ட தரவாடு பெகுமானம் கொண்டதல்லோ.. ஞான் தனபாலனின் அணியத்தியாக்கும்.. தனபாலன் ஆரெண்டு ஈ கேரளமே அறியும்.. நீ அறிஞ் ..?”

அஜந்தா உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்... உணர்வுகள் பொங்கியெழுந்தன... தரங்கிணியின் நகையாடலில் இருந்த உண்மை அவளைச் சுட்டது.. தனபாலன் கேரள தேசத்தின் இளந்தொழிலதிபன்.. ராஜ வம்சப் பாரம்பர்யப் பெருமை கொண்ட கோடிஸ்வரன்.. பரம்பரைச் சொத்துக்களைப் பெருக்கிப் பன்மடங்காக்கிக் கொண்டிருப்பவன்..

அஜந்தாவின் அண்ணனான அபராஜிதன் அப்படியில்லையே.. அவன் யோகானந்தனைப் போல பலமடங்கு ஊதாரியாக இருந்தான்..

அடுத்தவரின் சொத்துக்கு ஆளாப் பறந்தான்.. கேடியிலும் கேடி பக்கா கேடியென்று பெயரெடுத்திருந்தான்.. யோகானந்தன் கடன் வாங்கினார்.. பல தலைமுறைகளுக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு இருந்த பரம்பரைச் சொத்துக்களை உலகம் சுற்றியே அழித்தார்.. பற்றாக்குறைக்கு மனைவியின் சொத்துக்களை ஸ்வாஹா பண்ணிவிட்டு மாமனாரின் சொத்தைக் கை வைத்தார்.. ஆயிரம் கோடி கடனில் அவரை ஜாடிக்குள் அடைபட்ட பூதமாய் மாற்றி ரவிச்சந்திரன் சிறை வைத்த பின்னால் வேறு வழியின்றி பல்லைக் கடித்துக் கொண்டு பழைய நாள்களின் மலரும் நினைவுகளுடன் மாமனாரின் அரண்மனையோடு மாப்பிள்ளையாக செட்டில் ஆகிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்.. இத்தனை அட்டூழியங்கள் செய்தாலும் யோகானந்தன் பெண்கள் விவகாரத்தில் நேர்மையானவர்.. கணக்கில்லாமல் கடன் வாங்குவார்.. சொத்துக்களை விற்றுத் தின்பார்.. ஆனால் எவரையும் ஏமாற்றிப் பிழைக்க நினைக்க மாட்டார்.. மாமனார் சொத்தையும், மைத்துனன் சொத்தையும்

தன் சொத்தாக நினைத்துக் கபளீகரம் பண்ண நினைப்பார்.. அதை நேரடியாகச் செய்து நெஞ்சுவலியை வரவைப்பாரே தவிர மறைமுகமாக செய்ய மாட்டார்..

அபராஜிதன் கேடியிலும் கேடி, கடைந்தெடுத்த கேடியாக இருந்தான்.. தூணுக்கு பெண்கள் உடையை அணிவித்திருந்தாலும் 'ஈ' யென பல்லைக் காட்டிக் கட்டிப் பிடித்து வைத்தான்.. அவன் இழுத்து வைக்கும் பெண் விவகாரங்களை அருள்மொழிவர்மனுக்குத் தெரியாமல் மறைப்பதற்குள் அவந்திகாவுக்கு உயிர் போய் உயிர் வரும்.. சிலவற்றைக் கேள்விப் படும் போது அஜந்தாவுக்கே குமட்டல் வந்து விடும்.. நீயெல்லாம் ஒரு மனிதனா என்று தமையனைத் திட்டித் தீர்த்து விடுவாள்.. ஆனாலும் அவன் தயவு அவளுக்கு வேண்டுமே.. ரம்ய மாலினியின் சிண்டைப் பிடிக்க இப்படிப்பட்ட அயோக்கிய அண்ணன்தான் வேண்டும் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துப் போவாள்.. தொழில் திறமையென்பது அபராஜிதனிடம் கடுகளவும் கிடையாது... அவன் கெட்டிக்காரனாக இருந்திருந்தால் ரவிச்சந்திரன் அளித்த உதவிகளையும், சலுகைகளையும், பதவிகளையும், பொறுப்புக்களையும் சரிவரப் பயன்படுத்தி உச்சத்திற்குப் போயிருக்கலாம் .. அவன் அப்படி முன்னேற

வேண்டும் என்றுதான் ரவிச்சந்திரனும் விரும்பினான்.. மறைமுகமாக உதவிக்கரம் நீட்டினான்..

அபராஜிதன் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவில்லை.. அடுத்தவரின் முதுகில் சவாரியேறிப் பழக்கப்பட்டிருந்தவன் உழைத்துப் பிழைக்க விரும்ப வில்லை.. உல்லாசியான யோகானந்தன் உலகத்தைச் சுற்ற மகனைப் பழக்கப் படுத்தியிருந்தார்.. அவன் கூடவே பெண்களை அழைத்துக் கொண்டு சுற்றப் பழகியிருந்தான்.. அவனிடம் இல்லாத கெட்ட பழக்கமில்லை.. அனைத்து வகையான தீய பழக்க வழக்கங்களுக்கும் ஒட்டு மொத்த உரிமையாளன் போல அவன் ஆடித் தீர்த்துக் கொண்டிருந்தான்.. அவன் ஆடும் ஆட்டத்தில் அஜந்தாவே கவலை அடைந்திருந்தாள்.. ஏற்கனெவே ரவிச்சந்திரன் அபராஜிதனை மாநிலம் விட்டு மாநிலம் கடத்தியிருந்தான்.. அப்படியும் அபராஜிதன் அடங்காததில் எந்த நொடியும் அவன் அபராஜிதனை தேசம் விட்டு தேசம் கடத்திவிடும் அபாயம் இருந்தது.. அதை உணர்ந்தாவது அபராஜிதன் அடக்கி வாசித்தால் தேவலையென்று அஜந்தா அபராஜிதனிடம் பலமுறை சொல்லி விட்டாள்.. அவன் செவிகளில் தங்கையின் அறிவுரை ஏறவே இல்லை..

# எண்ணியிருந்தது ஈடேற... 7

அபராஜிதனின் கல்யாண குணங்களை அறிந்து வைத்திருந்த கேரளத்தின் இளம்பெண்கள் அவனைக் கடுகளவும் மதிக்க மாட்டார்கள்.. ஏளனப் பார்வையுடன் நகர்ந்து விடுவார்கள்.. இவ்வாறு வயநாடு மட்டுமின்றி ஒட்டு மொத்த கேரளமும் அறியும் அளவுக்கு கேடித்தனம் நிறைந்த அபராஜிதனின் தங்கையென்று சொல்லிக் கொள்வதில் அஜந்தாவுக்கு என்ன பெருமை இருக்க முடியும்..?

தனபாலன் பெருமை மிக்கவன்.. அவனுடைய தந்தை பரம்பரைப் பெருமையை விட்டுக் கொடுக்காமல் கட்டிக் காப்பாற்றி மகனின் கைகளில் ஒப்படைத்தார்.. அவன் அதை மேலும் பெருக்கி கேரளத்தின் முக்கிய தொழிலதிபனாக மாறி விட்டான்... அவனுடைய தங்கையென்று தரங்கிணி பீற்றிக் கொள்வதில் அர்த்தமுள்ளது.. அஜந்தாவால் அபராஜிதனின் தங்கை நானென்று பீற்றிக் கொள்ள முடியுமா..? அதனால்தானே இன்னாரின் மகள், இன்னாரின் தங்கையென்ற அடையாளங்களைத் துறந்து அருள்மொழிவர்மனின் பேத்தி என்ற அடையாளத்தை மட்டும் முன்னிருத்துகிறாள்.. அதை இப்போதும் சுட்டிக் காட்டினாள் தரங்கிணி..

“நிண்ட அடையாளமெண்டு அருள்மொழிவர்மனிட கொச்சு மோளெண்ட அடையாளத்தைதானே நீ பறஞ்ஞோண்டே இருந்தாகனும்.. யோகானந்தனிட மோளெண்டோ, அபராஜிதனிட அணியத்தியெண்டோ பறஞ்ஞா எவ்விதமான பெருமானம் கிட்டுமென நீ அறியுமல்லோ.. நீ வல்லிய கெட்டிக்காரியல்லோ..”

“அங்ஙனவே இருக்கட்டும்.. அதில் நினக்கு எந்தா கஷ்டம்..? நிண்ட ஜோலிய நோக்கிட்டுப் போயி..”

“எந்துக்கு..?”

சட்டமாகக் கேட்டாள் தரங்கிணி.. போடி உன்னுடன் எனக்கென்ன பேச்சு என்று எழுந்து போய் விடலாம்தான்.. அப்படிப் போக முடியாமல் அஜந்தாவின் கால்கள் பிணைக்கப் பட்டிருந்தன.. அவளால் தரங்கிணியிடம் தோற்றுப் போக முடியும்.. நந்தினியிடம் தோற்க முடியாது.. அப்படித் தோற்கக் கூடாது என்ற ஆங்காரத்தினால்தான் தரங்கிணி பேச்சு வார்த்தைக்கு அழைத்ததும் சரியென்று கிளம்பி வந்திருக்கிறாள்..

“இப்ப எந்துக்கோசரம் என்ன நீ விளிச்சு..? பிணக்கு (சண்டை) கொள்கிறதுக்கோ..?”

# எண்ணியிருந்தது ஈடேற... 7

அஜந்தா எரிச்சலுடன் கேட்ட பின்பும் தரங்கிணி அடங்கவில்லை அஜந்தாவைப் போட்டுப் பார்த்தாள்..

“ஞான் உன்னுடன் சம்சாரிக்க வேண்டுமென விளிச்சு.. பட்ஷே.. நீ எண்ட தரவாடை வெறிச்சு.. ஈ தரவாடு எங்க தரவாடு.. மனசிலாயி..”

“ஞான் மட்டும் ஈ தரவாடு எங்க தரவாடெண்டா பறஞ் ..?”

“நீ பறஞ்ஞாலும் பறயலாம்.. ஆரானு நீ..? யோகானந்தனின் மோளல்லோ... ரவியத்தானிட கொட்டாரத்த நிங்க குடும்பத்தோட கொட்டாரமாக்கி உட்கார்ந்து ஊன் (சாப்பாடு) கழிச்சு.. (சாப்பிடுவது)..”

“அதில நினக்கு எந்துக்கு இம்புட்டு வருத்தம்..? எண்ட அம்மாவன் (மாமன்) மோனல்லோ ரவியத்தான்.. அவரிட கொட்டாரம் எண்ட கொட்டாரமல்லோ..”

“சொப்பனம் காணாண்டாம் அஜந்தா.. ரவியத்தான் எனிக்குத்தான்.. கேட்டே..”

“எண்ட அம்மாவன் மோன் எனிக்குத்தான்... கேட்டே..”

இருவரும் சண்டைக் கோழிகள் போல சினந்து எழுந்தார்கள்.. நந்தினியின் நினைவு வந்தவுடன் அடங்கி உட்கார்ந்தாள்..

“நோக்கு அஜந்தா.. எனிக்கு நிண்ட வதனத்த நோக்கத் துளியளவும் இஷ்டமில்ல..”

“எனிக்கும் அங்ஙனதான்.. நிண்ட வதனம் குரங்கு வதனம்..”

“நிண்ட எலி வதனத்தவிட எண்ட வதனம் வல்லியதல்லோ..”

“ஓ.. ஈ வயநாட்டில சுந்தரியெண்டு பறஞ்ஞா ஈ அஜந்தாவத்தான் பறஞ் .. அறியுமோ..?”

“ஞான் அறிஞ் எந்துக்கு ஆசி..? ரவியல்லவோ அறியனும்..? நீ சுந்தரியெண்டா ஆ நந்தினியெனும் பெண்குட்டி ஆரானு..?”

“பேயானு..”

வெறுப்புடன் சொன்னாள் அஜந்தா.. இந்தக் கருத்தில் மட்டும் ஒன்று பட்டு ஆமோதித்தாள் தரங்கிணி..

“ஒரப்பானு (நிச்சயமாய்) அவ பேய்தான்..”

“பேயோட்டி ஆகனுமல்லோ..”

“ஒரப்பானு பேயோட்டனுமல்லோ..”

“எந்து செய்யலாம்..?”

பிணக்கை மறந்து அவர்கள் ஒன்றுபட்டு யோசித்தார்கள்.. அஜந்தாவின் அழகுக்குப் பக்கத்தில் நந்தினியால் நிற்க முடியுமா என்று அஜந்தா கொந்தளித்தாள்.. தரங்கிணியின் பின்புலம் நந்தினிக்கு இருக்கிறதா என்று தரங்கிணி மறைமுகத் தாக்குதலைத் தொடுத்தாள்.. எதைச் செய்தாவது நந்தினியை வயநாட்டை விட்டு ஓட வைக்க வேண்டும் என்றாள் அஜந்தா.. அதைத் தான் பார்த்துக் கொள்வதாக வாக்களித்த தரங்கிணி நந்தினியைப் பற்றிய விவரங்கள் தெரிந்தால் சொல்லும்படி கேட்டாள்.. அதை வைத்து நந்தினியை விரட்ட முடியுமா என்று ஆலோசிக்க முடியும் என்று கூறினாள்..

“ஆ நந்தினி எவரென்று அறிஞ்சுக்கிறது எனிக்கு ஈஸிதான் அஜந்தா.. கேட்டே.. எனிக்கு அதி போதாதல்லோ.. அதிக்கும் மேலே அவளப் பத்தின ரகசியம் வல்லதும் தெரியனுமல்லோ.. நினக்கு வல்லதும் அறிஞ் மோ..?”

‘அதுக்குத்தானே காத்திருக்கேன்..’ அஜந்தா மனதுக்குள் நொடித்தாள்..

அவளறிந்து வைத்திருக்கும் ரகசியங்களை தரங்கிணியிடம் அவிழ்த்துக் கொட்ட அவளென்ன பைத்தியமா..? அவை அத்தனையும் தங்கச் சுரங்கங்கள்.. ரவிச்சந்திரனை விட்டு நந்தினியைத் துரத்தியடிக்கும் ரகசியப் பெட்டகங்கள்.. அவற்றை வைத்து நந்தினியைத் துரத்தியடித்துவிட்டு ரவிச்சந்திரனின் கரம் பற்றுவாள் அஜந்தா.. அதை விட்டு விட்டு நந்தினியைத் துரத்துவதற்காக தரங்கிணியிடம் ரவிச்சந்திரனை ஒப்புக் கொடுத்து விலகி நிற்க மாட்டாள்..

“எனிக்கு எதுவும் தெரியாது போயி.. ஞான் எந்து செய்யும்..? ஓர் திவசம் ஆ நந்தினிய பெர்சனல் செக்கரட்டரின்னு ரவியத்தான் பறஞ் அழைத்து வந்து.. அதி மட்டுமே ஞான் அறியும்..”

“ஓ…”

உனக்கா எதுவும் தெரியாது என்ற சினம் துளிர்க்க உதட்டைக் குவித்து ‘ஓ’ போட்டாள் தரங்கிணி.. அஜந்தா உலக மகா கேடியென்பதை தரங்கிணி அறிவாள்.. நந்தினியைப்

பற்றி எதையும் அறிந்து கொள்ளாமல் அஜந்தா விரல் சுவைத்து உட்கார்ந்திருக்கிறாள் என்று நம்ப தரங்கிணி ஒன்றும் விரல் சுவைக்கும் குழந்தையல்லவே..

அஜந்தாவின் நிலைமை என்னவென்பதை தரங்கிணி அறிவாள்.. எந்த நொடியிலும் ரவிச்சந்திரன் அஜந்தாவின் குடும்பத்தை வெளியேற்றி விடலாம்.. வயநாட்டு அரண்மனை வாழ்வு சாஸ்வதமல்ல என்பதை அறிந்து வைத்திருக்கும் அஜந்தா அது நிலைத்திருக்க எதையும் செய்வாள் என்பதையும் தரங்கிணி அறிவாள்.. ரவிச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே அஜந்தா நினைப்பது நடக்கும்.. அப்படியிருக்க எங்கிருந்தோ வந்த நந்தினி அஜந்தாவின் எதிர்காலக் கனவை பறிக்க விட்டு விடுவாளா..?

‘எனிக்கெல்லாம் இவள் ஒரு போட்டியே இல்லை..’

அலட்சியமாக உதட்டைச் சுழித்தாள் தரங்கிணி.. நந்தினியைப் பற்றிய விவரங்களை அறியாமலே அவளை வெல்லும் வித்தையை தரங்கிணி அறிவாள்.. அஜந்தா ஆயிரமாயிரம் ரகசியங்களை அடை காத்து என்ன செய்ய..? நந்தினியை அவள் விரட்டி விட்டாலும் ரவிச்சந்திரன் அவளுக்குக் கிடைக்க மாட்டான்.. அஜந்தாவின் மீதான

ரவிச்சந்திரனின் ஆழ்ந்த வெறுப்பை தரங்கிணி அறிவாள்.. இந்த உலகத்தின் கடைசிப் பெண்ணாக அஜந்தா இருந்தாலும் ரவிச்சந்திரன் அவளைத் திரும்பியும் பார்க்க மாட்டான் எனும்போது அஜந்தாவை நினைத்து தரங்கிணி கலங்க வேண்டிய அவசியமே இல்லையே..

“நீ ஒந்நும் அறியாப் பெண் குட்டிதான் அஜந்தா..”

“நீ அனைத்தும் அறிந்த பெண்குட்டியல்லோ..”

“இதி.. இதி.. இதை நீ விஜாரம் கொள்ளனும் அஜந்தா.. ஞான் அனைத்தும் அறிந்த பெண் குட்டிதான்..”

‘இதை எதற்காக என்னிடம் சொல்கிறாள்..’

“அந்த அனைத்திலும்ங்கிற வார்த்தையில ரவியத்தானை விவாகம் கழிக்கிறதும் அடங்குமல்லோ..”

“தரங்கிணி..” அலறினாள் அஜந்தா..

“உஸ்ஸ்.. சப்தம் எந்துக்கு அஜந்தா..” அடக்கினாள் தரங்கிணி..

“ரவி எண்ட அத்தான்..”

அஜந்தாவும் தரங்கிணியும் ஒருவரையொருவர் பகைமையுடன் பார்த்துக் கொண்டார்கள்..

# அத்தியாயம் 220

“ரவி உனக்கு அம்மாவன் மோனா இருக்கலாம்.. பட்ஷே.. எனிக்கு இனிமே அம்மாவன் மோனா ஆகப் போகிறாராக்கும்..”

“சொப்பனம் காணாண்டாம் தரங்கிணி..”

“நீ கண்டால்தான் அதி சொப்பனம்.. எனிக்கு நிதரிசனம்.. கேட்டே..”

“எதுக்கோசரம் இங்ஙன பறஞ் ..? ரவியத்தான் காதலிக்கிறது ஆ நந்தினியை.. மனசிலாயி..”

“அறியும் அஜந்தா.. அதி உன் மனசில விஜாரம் கொள்ளனும்.. ரவி காதலிக்கிறது ஆ நந்தினியெனும் பெண் குட்டியை.. விவாகம் கழிக்கப் போகிறது ஈ தரங்கிணியை.. கேட்டே..”

‘கேட்டே, கேட்டேன்னு இவ செய்கிற சேட்டையைத் தாங்க முடியலையே சோட்டானிக்கரை பகவதி..!’

“எந்து விஜாரம் அஜந்தா..?”

“ஒரப்பானு உன்னைப் பற்றின விஜாரமில்ல தரங்கிணி..”

“சந்தோஷஷம்.. நீ என்னிப் பத்தி விஜாரம் கொள்ளரதில்ல எனிக்கென்ன லாபம்..? ரவியல்லோ விஜாரம் கொள்ளனும்..?”

“ஆரைப் பத்தி..”

“என்னப் பத்தி..”

“நீ வயநாட்டு சொப்பன சுந்தரியா இருக்கலாம் தரங்கிணி.. அதுக்கோசரம் ரவியத்தான் உன்னிடம் மயக்கம் கொள்ளுமெண்டு சொப்பனம் காணாண்டாம்.. கேட்டே..”

“அதி என் பிரச்னையல்லோ..”

“அங்ஙனாங்கிற..?”

“ஓ..”

“உன் பிரச்னைங்கிறப்ப எனிக்கு எந்தா..? நந்தினி உனிக்கும் எனிக்கும் பொதுவான எதிரி.. அவளை ஈ வய நாட்டை விட்டு விரட்டியடிக்க எந்தா மார்க்கம்..? அதி பத்தி பறஞ் ..”

“நிண்ட ஆலோசனை எந்தா..?”

“எனிக்கு எந்த ஆலோசனையும் இல்லா..”

“இதி ஞான் நம்பனுமாக்கும்..?”

“அதி நிண்ட இஷ்டமல்லோ..”

கல்லில் இருந்து கூட நாரை உறித்து விடலாம்.. அஜந்தாவின் மனதிலிருக்கும் திட்டத்தை மட்டும் கறந்து விட முடியாது என்பதில் காண்டானாள் தரங்கிணி.. அஜந்தாவை துச்சமாக பார்த்தாள்.. பதிலுக்கு அவளை விடத் துச்சமாக அஜந்தா பார்த்து வைத்தாள்..

‘தாய்மாமன் வீட்டில் அண்டிப் பிழைத்தாலும் திமிருக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை..’

“எந்துக்கு தரங்கிணி இத்தரயும் ஆலோசிக்கனுது..? ஆ நந்தினியை எங்ஙன விரட்டறது எண்டு ஆலோசிச்சோ..?”

“அதி ஞான் அறியும்.. நீ புறப்படத் தயாராயி..”

“ஞான் போகட்டே..”

“ஈ வயநாட்டை விட்டோ..”

“அதி நீ போகும்.. ஞான் எண்ட கொட்டாரத்துக்குப் போயி..”

“எப்ப நீ அடங்குவ அஜந்தா..?”

“உன்னை அடக்கின பிறகுதான் தரங்கிணி..”

“அது சொப்பனம் அஜந்தா.. ஆ நந்தினியை எண்ட பாதையில இருந்து எங்ஙன விரட்டறதெண்டு ஞான் அறியும்..”

“ஓ.. அதி அறியுமெண்டா எதுக்கோசரம் என்ன நோக்கனுமெண்டு விளிச்சு..?”

“நோக்கு அஜந்தா.. ஆ நந்தினியோட ஸ்ட்ராங் பாயிண்ட் எந்துவெண்டா ரவியத்தான் அவளக் காதலிக்கிறதுதான்..”

“அதே.. அதே..”

“ஆ பெண்குட்டியை நீயோ, ஞானோ தனித்து நின்று விரட்ட முடியாது..”

‘இதுவும் ஒரு பாயிண்டாச்சே..’

விரோத பாவனையை விடுத்து நிமிர்ந்து உட்கார்ந்தாள் அஜந்தா..

“உனிக்குத் தெரிந்த ரகசியங்கள வைச்சு நீ அவளைத் துரத்து.. எனிக்குத் தெரிந்த பாதையிலே டிரை பண்ணி ஞான் அவளைத் துரத்தறேன்.. எங்ஙனவாவது ஆ நந்தினி ஈ கேரள

தேசத்தை விட்டு அவளோட தமிழ்நாட்டுக்கு ஓடிப் போனாப் போதுமல்லோ..”

“எனிக்கும் அதுதானல்லோ..”

“ஆ பெண்குட்டியத் துரத்துகிற வரைதான் நீயும், ஞானும் ஜோட்டுக்காரிக.. கேட்டே..”

“துரத்தறதுக்கு ஜோட்டுக்காரிகளா இருக்கனு மெண்டு அவசியமில்லையல்லோ.. எதிரிக்காரிகளாவே இருக்கலாம்.. தெற்றில்லை..”

“எனிக்கு ஒந்நும் உன்கூட ஜோட்டுக்காரியாகனு மெண்டு ஆக்ரஹம் இல்லையல்லோ..”

“எனிக்கு அதில வளர சந்தோஷம்.. அங்ஙனவே இரு..”

“அதிக்கு எந்தா.. அங்ஙனவே ஆகட்டுமல்லோ.. ஞான் பறயறது வேறல்லோ..”

“எந்தா..?”

“ஆ நந்தினி போன பின்பு ஞான் ரவியத்தானை விவாகம் கழிச்சு..”

“முடிஞ்சா செய்.. ஞான் வரட்டே..”

“வரவே வேண்டாமல்லோ..”

“ஓ.. அங்ஙனவெண்டா இங்ஙன பறயவா..?”

“எங்ஙன பறஞ் ..?”

“ஞான் போகட்டே..”

“ஆஹா.. எண்ட செவிக்குள்ள தணுப்பு (குளிர்) பரவுதல்லோ..”

“பரவும்.. பரவும்..”

முறைத்தபடி எழுந்து விடைபெறாமல் விரைந்து விட்டாள் அஜந்தா.. அவளுக்கு விடை கொடுக்காமல் வாய்க்குள் அவளைச் சகட்டு மேனிக்குத் திட்டித் தீர்த்தபடி வீட்டுக்குள் போனாள் தரங்கிணி.. நந்தினி மட்டும் ரவிச்சந்திரனின் வாழ்க்கைக்குள் வராமல் இருந்திருந்தால் அஜந்தாவுக்கும் தரங்கிணிக்கும் இடையே அப்படியொரு சந்திப்பு நடந்தே இருக்காது..

எதிர்மறைத் துருவங்களாக விறைத்துக் கொண்டு இருந்தவர்களை சந்திக்க வைத்து கூட்டுச்சதியைச் சிந்திக்கவும் வைத்த பெருமை நந்தினியையே சாரும்..

என்ன ஒன்று.. இப்படி இணையாத ரயில் தண்டவாளங்களைப் போல இருந்தவர்களை ஒரே நேர் கோட்டில் இணைய வைத்த பெருமை தனக்கானது என்பது நந்தினிக்குத் தெரியாது.. அவள் தானுண்டு.. ரவிச்சந்திரனுண்டு.. அவனுடைய அன்பான குடும்பம் உண்டு என்று தனித்த ஒரு உலகத்தில் இருந்தாள்..

ரவிச்சந்திரன் அட்டகாசமான காதலனாக இருந்தான்.. ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவங்களை அவளுக்கு அள்ளி வழங்கிக் கொண்டிருந்தான்.. அஜந்தா குறுக்கிட்டு பூடகமாக எதையாவது சொல்லி வைக்கும் போது மட்டும் வெறிகொண்ட சிங்கமாக மாறி உறுமினான்.. அது ஏன் என்று மட்டும் நந்தினிக்கு விளங்கவே இல்லை.. ரவிச்சந்திரன் மீது காதல் கொள்ளாத போதே வீணாவையும் ரம்ய மாலினியையும் நந்தினிக்கு மிகவும் பிடிக்கும்.. வீணாவின் புடவை முந்தானையைப் பிடித்துச் சுற்றிக் கொண்டேயிருப்பாள்.. ரம்ய மாலினியிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருப்பாள்..

இப்போதோ ரவிச்சந்திரனும் அவளும் ஈருடல், ஒருயிர் என்று ஆகி விட்டார்கள்.. வீணாவின் மீதான பாசமும், ரம்ய மாலினியின் மீதான பிரியமும் அதிகரித்திருந்தன.. நந்தினி

ரவிச்சந்திரனுடன் இல்லாத பொழுதுகளை வீணாவுடனும் ரம்ய மாலினியுடனும் செலவளித்தாள்.. அவர்கள் கோவிலுக்குப் போய் வரும் போது இவளும் ஒட்டிக் கொண்டாள்..

மூவருமாக சேர்ந்து கோவிலுக்குச் சென்று வருவதைப் பார்த்து அந்த அரண்மனையிலிருந்த மற்ற மூன்று பெண்களும் வயிறெரிந்தார்கள்..

“நோக்கினயோ அவந்திகா..”

“ஞான் நோக்கி அம்மே.. அஜந்தா நீ நோக்கினயோ..?”

“நோக்கி.. நோக்கி..”

“ஆ நந்தினிக் குட்டிய ஈ வீணாவும், ரம்ய மாலினியும் இணை சேர்த்து அம்பலத்துக்குப் (கோவிலுக்குப்) போயி..”

“இதி தினமும் நடக்கிற கதைதான் பாட்டி..”

“நீ அறியுமோ அவந்திகா..”

“அறியும் அம்மே.. அறிஞ் எந்து செய்யும்..? எனிக்கெண்டு ஈ கொட்டாரத்தில எந்து பெகுமானம் கிட்டி..?”

அவந்திகா துயரத்துடன் எழுந்தாள்.. அவளது கன்னங்களில் தாரை தாரையாய் வழிந்த கண்ணீரைக்

கண்ட யாழினியின் தாய் மனது பதறியது.. ஓர் நாள் ஓர் பொழுதாவது வீணாவும் ரம்ய மாலினியும் அவந்திகா, அஜந்தாவுடன் இணை சேர்ந்து இதுபோல கோவிலுக்குப் போய் வந்ததுண்டா என்று கோபம் கொண்டாள்.. அப்படிச் சென்றால்தானே அவந்திகாவுக்கும், அஜந்தாவுக்கும் மதிப்புக் கிட்டும்...? அவர்கள் இருவருடனும் சேராமல் வீணாவும் ரம்ய மாலினியும் தனித்துக் கோவில் குளம் என்று சென்று வந்தால் அவந்திகா அவர்களின் தயவில் ஒண்டி வாழ்கிறாள் என்று தானே ஊர் சொல்லும்..?

“வீணாவின் விஜாரம் அதுவல்லோ..”

அவந்திகா உருவேற்றினாள்... யாழினிக்கு மருமகளின் மீதான குரோதம் அதிகமாகியது..

“நம்மட அஜந்தா வீணாவுக்கு ஆரோ.. பட்ஷே.. ஆ நந்தினி வீணாவுக்கு ஆரானு அம்மே.. சேட்டன் மோளோ..?”

“அவந்திகா..”

“ஞான் பறயல அம்மே.. ஈ வயநாடு பறஞ் ..”

“வயநாடு பறஞ் ..? அதுக்கோசரம் எவளோ ஒரு பெண்குட்டி எண்ட மகனுக்கு அணியத்தி மோளா ஆகி விடுவாளோ..?”

“நிங்கட மோன் ஆ வீணாவோட ஹஸ்பெண்டாக்கும்.. அது பறஞ்ஞா எவளோ ஒரு பெண்குட்டி எண்ட சேட்டனோட அணியத்தி மோளா ஆகி விடுவாளல்லோ..”

எங்கே அடித்தால் வலி உண்டாகும் என்ற நுட்பம் அறிந்தவள் அவந்திகா.. ரவிவர்மனின் அன்னை என்ற பாசத்தை முன்னிறுத்தி அவரை அடிமைப் படுத்தி வைத்திருந்த யாழினியின் ஆதிக்க மனோபாவத்தை நன்கு அறிந்தவள்.. ரவிவர்மனின் மீதான தனது ஆளுமை குறைந்து வருவதில் யாழினி மனக்கிலேசம் கொண்டுள்ளதையும் அறிவாள்.. ரவிவர்மன் யாழினியின் வார்த்தையை விட வீணாவின் வார்த்தைக்குத்தான் மதிப்புத் தருவார் என்பதை யாழினியால் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்பதில் குறி பார்த்து அடி கொடுத்தாள்..

“எண்ட மோன் ஓர் பொழுதும் ஈ அம்மையின் வார்த்தையைத் தட்ட மாட்டானல்லோ..”

“அதி ஒரு சொப்பன காலம் அம்மே.. இப்போ உள்ள சேட்டன் பார்யாளின் வார்த்தையைத்தான் ஓர் பொழுதும் தட்ட மாட்டார்.. கேட்டே..”

“அவந்திகா..”

“என்னிடம் வெப்பராளம் கொண்டு எந்து பயன் அம்மே..? ஆ நந்தினி மீது வெப்பராளம் கொண்டு ஈ வயநாட்ட விட்டுத் துரத்தி விட்டால்தான் நிங்கட மோன் நிங்களுக்குச் சொந்தமாவார்.. ஆ வீணாவும், ரம்யாவும் நிங்கட பேச்சுக்கு அடங்கி இருப்பாங்க.. நிங்க எப்பவும் போல ஈ கொட்டாரத்தோட தம்புராட்டியா பரணம் (ஆட்சி) செய்யலாம்.. கேட்டே..” நந்தினியைத் துரத்தி விட யாழினியால் முடிந்ததைச் செய்யட்டும் என்று அவளைத் தேவையான அளவுக்கு தூண்டி விட்டாள் அவந்திகா..

‘ஊர் கூடித் தேரிழுத்தால் நல்லதல்லோ..’ எதற்கு எதை இணை சேர்ப்பது என்ற விவஸ்தையெல்லாம் அவந்திகாவுக்குக் கிடையாது.. அது போன்ற கோட்பாடுகளையும் வரையறைகளையும் வைத்துக் கொண்டால் பிழைப்பதெப்படி என்று கேட்டு வைக்கும் பிரகிருதி அவள்.. அஜந்தா அவளுக்கும் மேல் இருப்பாள்.. தான்

பிழைக்க எது செய்தாலும் தப்பில்லை என்பதே அவளது நிலைப்பாடு.. இப்படியாகத்தானே வயநாட்டு அரண்மனையில் நந்தினிக்கு எதிராக மாபெரும் சதிக்கூட்டமே திரண்டது.. அவர்கள் அத்தனை பேருக்கும் இணையான சதிகாரியான தரங்கிணியும் நந்தினியை விரட்டி விடத் தயாராகிக் கொண்டிருந்தாள்.. நந்தினியோ ஒரு பக்கம் ரவிச்சந்திரனுடன் காதல் டூயட் பாடுவதும், மறுபக்கம் வீணா, ரம்ய மாலினியுடன் கோவிலுக்குச் சென்று பக்திப் பாமாலை சூடுவதுமாக டூ இன் ஒண்ணாக சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தாள்..

**“ஆடுகின்றானடி, தில்லையிலே - அதைப்**

**பாட வந்தேன் அவன் எல்லையிலே..”**

கரம்கூப்பி நந்தினி பாடிய பாடலில் வீணா மனதுக்குள் சிதம்பரத்தில் நின்று கொண்டிருந்தாள்.. தாய் மண்ணாம், தமிழ் மண்ணின் வாசம் மனதை நிறைக்க மண் வாசனையை அவளுக்குள் கொண்டு வந்த பெண் மலரை அணைத்து உச்சி முகர்ந்தாள்..

“ம்மா.. வரவர நீங்க என்னை மறந்துட்டு நந்தினியையே செல்லம் கொஞ்சறீங்க..” ரம்ய மாலினி செல்லமாக பொய் கோபம் காட்டினாள்..

“அத்தை கொஞ்சலைன்னா என்ன..? நான் உங்களைக் கொஞ்சுகிறேன் ரம்யா..”

நந்தினி விளையாட்டாகத்தான் ரம்ய மாலினியை அணைத்து உச்சி முகர்ந்தாள்.. உண்மையான பாசத்துடன் ரம்ய மாலினி நந்தினியிடம் அடைக்கலமாவதைப் போலக் கண்மூடி நின்றதில் நந்தினிக்குள் பாசம் பெருக்கெடுத்தது.. ரம்ய மாலினிக்காக எதையும் செய்யலாம் என்று மனது உருகியது..

‘இவள் நன்றாக இருக்க வேண்டும்..’ நந்தினியின் மனம் பிரார்த்தித்தது..

# அத்தியாயம் 221

“**சொ**ல்லு ரம்யா..? உன் மனசில இருக்கிற அந்த மன்னாதி மன்னன் யார்..?”

நந்தினி தூண்டித் துருவினாள்.. ரம்ய மாலினி தலையை ஆட்டி ரசித்துச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் மறுப்பில்லாததில் நந்தினியின் சந்தேகம் அதிகரித்தது.. ரம்ய மாலினியுடன் தனியாக உலாவ வந்ததிற்கு பயன் உண்டாவதைப் போல இருந்தது..

வீணாவுடன் கோவிலுக்குச் செல்லும் போது வயநாட்டு மலைப்பாதையில் உலாவி வெகு நாள்களாகி விட்டன என்று விசனத்துடன் சொன்னாள் ரம்ய மாலினி..

“என்னங்க இது.. இப்படிச் சொல்கிறீங்க..? வயநாட்டு மலைராணியாய் பிறந்துட்டு மலைப் பாதையில உலா வர்றதுக்கு இம்புட்டு ஏக்கப்படறீங்களே..”

“இல்லை நந்தினி.. இந்த அபராஜிதன் பண்ணும் தொந்தரவால் அம்மா என்னைத் தனியே வெளியே அனுப்ப மாட்டாங்க.. அரண்மனையில் கூட அவங்க பக்கத்திலேயே

வைத்துக்குவாங்க..” ரம்ய மாலினியின் துயரம் ததும்பிய விழிகளை பார்த்த நந்தினிக்கு மனம் வலித்தது..

வயநாட்டின் ராஜகுமாரி அவள் நாட்டின் அழகை ரசிக்க முடியாமல் அரண்மனையில் சிறை படுவதா..? அதை நந்தினி பார்த்துக் கொண்டு இருப்பதா..?

“நானிருக்கப் பயமேன்..?”

நந்தினி களத்தில் இறங்கி விட்டாள்.. வீணாவிடம் அடம் பிடித்து அனுமதியும் வாங்கி விட்டாள்..

“அத்தை.. அத்தை..”

“என்னம்மா..”

“ராம்யாவும் நானும் மலைப்பாதையிலே ஒரு ஸ்மால் வாக் போயிட்டு வர்றோமே..”

“வேண்டாம்மா..”

“ப்ளீஸ் அத்தை.. பச்சைப் பசேல்ன்னு செடிகளும்.. கலர், கலரா பூக்களுமா பார்க்கவே அழகாயிருக்கும் அத்தை..”

“நம்ம அரண்மனைத் தோட்டத்தில இல்லாத செடிகளும் பூக்களுமா அங்கே இருக்கு..?”

வீணா மடக்க.. ரம்ய மாலினியின் முகம் சோர்ந்தது.. அம்மா அனுப்பவே மாட்டாங்க என்று நந்தினியிடம் அபிநயித்தாள்.. இரு.. நான் பார்த்துக் கொள்கிறேன் என்று பதிலுக்கு சைகை காட்டினாள் நந்தினி.. என்ன பார்த்துக் கொள்வாய் என்பதைப் போல ரம்ய மாலினி கைகளை விரிக்க.. எத்தனையோ பார்த்து விட்டேன்.. இதைப் பார்க்க மாட்டேனா என்று வலது கையைக் குவித்துக் காட்டினாள் நந்தினி..

“என்ன.. ரெண்டு பேரும் பயங்கரமா மோனோ ஆக்டிங் காண்பிக்கறீங்க..?”

வீணா ஓரக்கண்ணால் மகளையும் நந்தினியையும் பார்வையிட்டபடி கேட்டாள்..

“பார்த்தீங்களா..? வயசுப் பெண்கள் நாங்க.. எங்களுக்குள்ளே பேசிச் சிரிச்சுக்க பிரைவஸியே இல்லாமப் போச்சு.. வெறுமனே கையைக் காலை ஆட்டினதுக்கே கேள்வி கேட்டாச்சு.. இதில பேசிச் சிரிக்க எங்கே போகிறது..?”

“தோட்டத்துக்குப் போங்கன்னுதான் சொல்லியாச்சே..”

“தோட்டத்தில பிரைவஸி இருக்குன்னு யார் சொன்னது அத்தை.. நானும் ரம்யாவும் பேசனும்னு இல்லை.. சேர்ந்து

நின்றாலே போதும்.. 'டிஷ்'ன்னு அஜந்தா காட்சி கொடுத்திடறா.. என்னடா இதுன்னு கண்ணைச் சிமிட்டறதுக்குள்ள மாயமாகி பாட்டிகிட்ட கோள் மூட்டப் போயிடறா.. பாட்டி வந்து என்னை விட்டுட்டு ரம்யாவை பிடிபிடின்னு பிடிச்சுடறாங்க.. நந்தினி கூட வாக்கிங் போய் சிரிச்சுப் பேசத் தெரியுது.. அஜந்தாவைக் கண்டாலே ஏன் உனக்கு ஆக மாட்டேங்குதுன்னு கேட்டு வைக்கிறாங்க.. அஜந்தாவைக் கண்டா யாருக்குமே ஆகிறதில்லை.. அவங்களையெல்லாம் பாட்டியாலே கேள்வி கேட்க முடியுமா..?"

நந்தினி கேட்ட நியாயத்தில் வீணாவின் உதடுகள் துடித்தன.. சோர்ந்திருந்த மகளின் முகத்தைப் பார்த்தாள்.. கோடிஸ்வர ராஜ குடும்பத்தில் பிறந்த பெண்ணிடம் இருக்க வேண்டிய மலர்ச்சியும், மகிழ்வும் ரம்ய மாலினியிடம் இல்லாமல் போனதில் துயர் கொண்டாள்..

"பாட்டி கெட்டிக்காரங்க.. எங்கே அவங்களுடைய அதிகாரம் செல்லுபடியாகுமோ.. அங்கேதான் கேள்வி கேட்டாங்க.. அவங்களாலே அஜந்தாவைக் கேள்வி கேட்க முடியாது.. அவ கேள்வியின் நாயகி.. பிளேட்டை அப்படியே பாட்டி பக்கம் திருப்பி விட்டுக் கேள்வி, துணைக் கேள்வி,

துணைக்குத்துணை கேள்வின்னு கேட்டு பாட்டியையே ஒரு வழி பண்ணிருவா..”

நந்தினி விவரித்த தினுசில் ரம்ய மாலினி.. “களுக்..” என்று சிரித்து வைத்தாள்..

மகள் மலர்ந்து சிரித்ததில் வீணாவின் முகமும் மலர்ந்து விட்டது..

“போக்கிரி..” நந்தினியின் தலையில் செல்லமாக குட்டு வைத்து விட்டு இளையவர்களின் சிரிப்பில் அவளும் கலந்து கொண்டாள்..

“அதனாலதான் சொல்றேன் அத்தை.. அவங்க கண்ணை உறுத்துகிறதைப் போல தோட்டத்தில நின்னு மாட்டாடாம காதலர்களைப் போல நானும் ரம்யாவும் மலைப் பாதைக்கு ஓடி ஒளிந்து மறைந்து பேசிப் பழகப் போகிறோம்..”

“காதலர்களைப் போலவா..? ஹா.. ஹா..”

ரம்ய மாலினியின் சிரிப்பு விரிந்தது.. வீணா நந்தினியின் குறும்புப் பேச்சில் ஈர்க்கப் பட்டவளாக..

“உன் வாய் இருக்கே.. அப்பப்பா..” என்றாள்..

“அப்ப நானும் ரம்யாவும் பழகிப் பார்க்க ஆரம்பிக்கலாமா அத்தை..” போலி வினயத்துடன் கை கட்டி வாய் பொத்திகேட்டு வைத்தாள் நந்தினி..

“பேசியே ஆளைக் கவிழ்த்துருவியே.. அதுசரி.. அது என்ன பழகிப் பார்க்கிறது..? ரம்யாவை நீ முன்னே பின்னே பார்த்ததே இல்லையா..?”

“உண்மையாகச் சொல்லப் போனால் ரம்யாவைப் பார்த்ததோடு நிறுத்திக் கொண்டிருக்கிறேன்னுதான் தோணுது அத்தை.. சேர்ந்தாற்போல ரெண்டு வார்த்தை பேசிப் பழகியதில்லை..”

நந்தினியின் வார்த்தைகளில் தொனித்த உண்மையில் வீணா அனுமதி தந்து விட்டாள்..

“பத்திரமாப் போய் வரனும்..” என்று எச்சரிக்க மட்டும் மறக்கவில்லை..

“நாங்கள்ளாம் யாரு..? வயநாட்டு ரவிச்சந்திரனோட தங்கையும், செக்கரட்டரியுமாச்சே.. எங்களிடம் வம்பு பண்ணும் தைரியம் யாருக்கு உண்டு..?”

“அவந்திகாவின் பிள்ளைகளுக்கு உண்டு..” வெறுப்புடன் சொன்னாள் வீணா.. ரம்ய மாலினியின் முகத்திலும் அந்த வெறுப்பு பரவியது..

“வீட்டுக்கு உடையவர்களை ஒண்ட வந்தவங்க ஓடஓட விரட்டறாங்க பாருங்க.. இங்கேதான் இந்தக் கொடுமையைப் பார்க்கிறேன்..” நந்தினிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது..

“அவங்க ஒண்ட வந்தவர்களா தங்களை நினைத்துக் கிறதில்லை நந்தினி.. வீட்டுக்கு உடையவங்களாத்தான் தங்களை நினைத்துக்கிறாங்க.. நினைத்தால் நினைத்து விட்டுப் போகட்டும்.. இந்த அரண்மனையில் பிறந்த பெண்ணாயிற்றே என்று நானும் பெருந்தன்மையாய் விட்டுக் கொடுத்துப் போய் விடுவேன்.. அதுதான் தவறாகி விட்டது.. சொத்து சுகத்தை விட்டுக் கொடுக்கலாம்.. பெற்ற பிள்ளைகளை விட்டுக் கொடுக்க முடியுமா..?” மனம் கனக்க கேள்வி கேட்டாள் வீணா.. நந்தினியின் மனம் குழுங்கிப் பதறியது..

“எப்படியத்தை முடியும்..?” என்றாள் அவள்..

“ரவிச்சந்திரனுக்கு அஜந்தாவாம்.. ரம்யாவுக்கு அபராஜிதனாம்.. எப்படித் திட்டம் போடுகிறார்கள் பார்.. இதைப்

பற்றிக் கருத்துக் கூடக் கேட்பதில்லை... இவர்களுக்கு இவர்கள்தான்னு சர்வாதிகாரமா முடிவு பண்ணுகிறாங்க..”

“சர்வாதிகாரம்தான் அத்தை.. நான் சொல்கிறதை நீ கேட்டுத்தான் ஆகணும்ங்கிற சர்வாதிகாரம்..” தன்னையுமறியாமல் சொல்லி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டாள் நந்தினி..

“ஸாரி அத்தை.. உங்க ஃபேமிலி விஷயத்தில தேவையில்லாம இண்டர்பியர் ஆகிறேன்..”

“எங்க ஃபேமிலின்னு பிரிச்சுப் பேசினா அடிச்சுருவேன் நந்தினி.. இது உன் ஃபேமிலி..” வீணா நந்தினியை வாத்சல்யத்துடன் அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்..

“அத்தை..” மனம் நெகிழ்ந்தவளாக அவளது பாதம் பணிந்து எழுந்தாள் நந்தினி..

“ஹை..! உங்க அத்தையை எப்படிக் கைக்குள்ள வைத்துக்கிறதுங்கிற வித்தையைக் கற்று வைத்திருக்கீங்க.. பிழைத்துக்குவீங்க..” ரம்ய மாலினி விகல்பமில்லாமல் சிரித்தாள்..

‘இவளுடைய மனது வானம் போல பரந்து விரிந்தது..’ நந்தினியின் மனம் விகசித்தது.. ரம்ய மாலினி வீணாவின் வார்ப்பாக இருந்தாள்.. குணத்தில் குன்றாய், பெருந்தன்மையில் இமயமாய் நின்றாள்.. அவளுக்கான வாழ்க்கை அழகானதாக அமைய வேண்டும் என்று நந்தினி விரும்பினாள்.. ரம்ய மாலினியின் மனம் விரும்பும் வாழ்க்கையாக அது இருக்க வேண்டும்.. சுதந்திரமாக அவள் விருப்பம் போல வாழும் வாழ்க்கையாக அவளுக்கு கிட்ட வேண்டும்.. மொத்தத்தில் ரம்ய மாலினி வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ வேண்டும் என்று நந்தினி மனதார ஆசைப்பட்டாள்.. இதுவரை சிரிக்காத சிரிப்பை வாழ்நாள் முழுவதும் சிரித்தபடி நிறைவானதொரு வாழ்க்கையை ரம்ய மாலினி வாழ வேண்டும்..

நந்தினியின் உபயத்தால் ரம்ய மாலினி வெளியுலகில் சுதந்திரமாக கால் பதித்தாள்.. பூக்கள், பறவைகள், பனிமேகம் என்று ஒவ்வொன்றையும் அவள் ரசித்துக் கைகளைத் தட்டிக் குதூகலித்ததில் நந்தினியின் மனம் வலித்தது..

வயநாட்டு அரண்மனையின் இளவரசிக்கு இவையெல்லாம் அரிதானவைகளா..? இவை அத்தனையும் அரண்மனையின் தோட்டத்திலேயே கிடைத்து விடுமே.. அங்கு

இல்லாத பூக்களா..? செடிகளா..? பறவைகளா..? தொலைவானில் தெரியாத பனி மேகங்களா..? பசுமை படர்ந்த மலை முகடுகளை அரண்மனையின் பால்கனியிலிருந்தே பார்த்து ரசிக்கலாமே..

“அதற்கான மனநிலை இருக்க வேண்டாமா..?” நியாயமான கேள்வியைக் கேட்டாள் ரம்ய மாலினி..

“உண்மைதான்..” உடனடியாக ஒப்புக் கொண்டாள் நந்தினி..

அவந்திகாவும், அவளது பிள்ளைகளும் இருக்கும் இடத்தில் தொண்டையில் தண்ணீர் இறங்குவதே கடினமான ஒன்றாக இருக்கும்.. இதில் வயநாட்டின் இயற்கையழகை ரசித்து மகிழும் மனநிலை எங்கிருந்து வரும்..?

“தோட்டத்திற்குப் போக முடியாது நந்தினி.. அங்கே அபராஜிதன் வந்து வம்பிழுப்பான்.. அவனை அண்ணன் அடித்து விரட்டியதும் போய்த் தொலைந்தான்னு நிம்மதியாத் தோட்டத்துப் பக்கம் போனா அஜந்தா வந்து நிற்பா.. என்றைக்கு இருந்தாலும் நீ அபராஜிதனின் வொய்ப்தான்னு சபதம் போடுவா.. தோட்டத்துக்கும் போக முடியாது..” தெளிவாக காய் நகர்த்தி ரம்ய மாலினியின் சுதந்திரத்தை

அவந்திகாவின் குடும்பம் அபகரித்துக் கொண்டிருப்பதை நந்தினியால் புரிந்து கொள்ள முடிந்தது.. திட்டமிட்டு ரம்யாவை அறைக்குள்ளேயே அடைபட வைத்திருக்கிறார்கள்..

“அரண்மனையிலும் சுதந்திரமா இருக்க முடியாது.. பாட்டி கண்ணில பட்டு விட்டால் கூப்பிட்டு கிளாஸ் எடுப்பாங்க.. அபராஜிதனைத்தான் நான் மேரேஜ் பண்ணிக்கனும்.. அதுதான் குடும்பத்துக்கு நல்லதுன்னு சத்தம் போடுவாங்க..”

“யார் குடும்பத்துக்கு நல்லதாம்..?”

“அவங்க மகள் குடும்பத்துக்குத்தான் நல்லது.. மகன் குடும்பத்தைப் பற்றி அவங்க நினைத்துப் பார்த்ததே இல்லையே.. அப்பாவை தங்கையின் குடும்பத்துக்காக தியாகம் பண்ணனும்னு சொல்லிச் சொல்லியே ஒரு வழியாக்கிட்டாங்க.. அடுத்து அவரின் குடும்பத்தாரும் தியாகம் பண்ணித்தான் ஆகனும்னு ரூல் போடறாங்க..”

“இதெல்லாம் டூ மச் ரம்யா..”

விருப்பமில்லாத திருமணத்திற்கு பெற்றவர்கள் கட்டாயப் படுத்தினார்கள் என்று வீட்டை விட்டே வெளியேறியவள் நந்தினி.. இங்கே என்னடாவென்றால் தாத்தா, பாட்டி, அத்தை,

அத்தையின் குடும்பம் என்று உறவுகள் கட்டாயப் படுத்துகிறார்கள்..

‘பெண்ணுக்கென்று ஒரு மனம், அதில் புதைந்திருக்கும் ஆசைகள், எதிர்பார்ப்புகள், இவைகளைப் பற்றி எவரும் யோசிப்பதில்லை.. பெண்ணாக பிறந்து விட்டால் யோகியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்..’

“பாட்டி திரும்பத் திரும்ப ஃபோர்ஸ் பண்றாங்க நந்தினி.. நான் அபராஜிதனை லைக் பண்றேன்னு சொல்லிட்டா எல்லா பிராப்ளமும் சால்வ் ஆகிடும்ன்னு சொல்கிறாங்க.. என்னால் எப்படி அப்படிச் சொல்ல முடியும் நந்தினி..? அவனை நினைத்தாலே எனக்குக் குமட்டும்.. மனிதனா அவன்..? அவனைப் போய் என்னுடன் இணைத்துப் பேச பாட்டிக்கு எப்படித்தான் மனம் வருகிறதோ.. அதனாலேயே நான் ரூமை விட்டு வெளியே வருவதில்லை..”

“அத்தை, மாமா, பாஸ் இவங்கள்ளாம் உங்களை அவுட்டிங் அழைத்துக்கிட்டு போகிறதில்லையா..?”

“அம்மா கோவிலுக்குத்தான் கூப்பிட்டுக்கிட்டுப் போவாங்க.. அப்பாவுக்கு தனியாக குடும்பத்துடன் மட்டும்ன்னு அவுட்டிங் போக அனுமதியில்லை நந்தினி.. அவர் கிளம்பினா

ஒட்டு மொத்த அரண்மனையும் சேர்ந்து கிளம்பி விடும்.. தன் குடும்பம்ன்னு அவர் நினைத்து விடக் கூடாது.. பழகி விடக் கூடாதுங்கிறதில கவனமா இருப்பாங்க.. அதையும் மீறி அவர் கிளம்பினா குடும்பத்தைப் பிரிக்க நினைக்கிறாயான்னு சண்டை போட்டுக் களேபரம் பண்ணிருவாங்க.. அதுக்குப் பயந்தே நானும் அம்மாவும் அப்பாவை அவுட்டிங் கூப்பிட்டுக்கிட்டுப் போகச் சொல்லிக் கேட்கவே மாட்டோம்.. அண்ணனோட கதையே வேறு.. ஒவ்வொரு செகண்டும் விலை மதிப்பில்லாததுன்னு சொல்லும்.. உலகத்தைச் சுற்றி பிஸினெஸ் பண்ணுகிறதை அவுட்டிங் கூப்பிட்டுக்கிட்டுப் போகச் சொல்லி டிஸ்டர்ப் பண்ண முடியுமா நந்தினி..?”

“முடியாதுதான்..”

“பட்.. அண்ணன் எங்களை நினைத்துப் பார்த்து டூர் ஏற்பாடு பண்ணும்.. அம்மாவும், நானும் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்துட்டோம்.. அண்ணன் ஓர்முறை எங்களை வெர்ல்டு டூருக்கு அழைத்துக்கிட்டுப் போனது.. அப்பாதான் பாவம்.. எதிலும் ஜாயின் பண்ணிக்கலை..”

“மாமா ஜாயின் பண்ணினா உனக்கும், அத்தைக்குமான பிரைவசி பாதிக்கப்படும்ன்னு நினைச்சிருப்பார்..”

“அதே.. அதே..”

ரம்ய மாலினியின் தலையாட்டலில் தகப்பனைக் குறித்த பெருமிதம் இருந்தது.. அபரிதமான தந்தை பாசத்தை ரவிவர்மனிடம் கண்டாள் நந்தினி..

# அத்தியாயம் 222

**ர**விவர்மனின் பாசம் வியப்பிற்குரியது.. அவருக்கும் மனைவி, பிள்ளைகள் என்று சேர்ந்து வெளியில் செல்ல ஆசை இருந்திருக்கும்.. அப்படி அவர் கிளம்ப நினைத்த சில சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளை விவரித்தாள் ரம்ய மாலினி..

“அப்பாவும் எங்களுடன் வருகிறார்ன்னு தெரிஞ்ச அடுத்த நிமிசமே தாத்தா, பாட்டி, அத்தையின் குடும்பத்தார்ன்னு எல்லோரும் கிளம்பிட்டாங்க.. நாங்க மட்டும் போகிறோம்ன்னு சொல்ல முடியாம அப்பா தவித்தார்.. அண்ணன் வெளிப்படையா சொல்லி விட்டது.. பாட்டி நெஞ்சைப் பிடித்துக்கிட்டு உட்கார்ந்துட்டாங்க.. டாக்டருக்கு ஃபோன் போட்டு வீடே ஹாஸ்பிடலா மாறி யாருமே வெளியில் கிளம்ப முடியாம ஆகிப் போயிருச்சு.. அம்மாதான் அழுதுகிட்டே வருவாங்க.. அண்ணன் கோபப்படும்.. ஹார்ட் அட்டாக் வந்தா ஹாஸ்பிடலுக்குப் போன்னு சொல்லிட்டு கிளம்பி வந்துக்கிட்டே இருக்கனும்.. ஒரு தடவை அப்படிச் செய்து காட்டட்டும்.. அதற்கப்புறம் பாட்டி இதுபோல டிராமா பண்ண மாட்டாங்கன்னு சத்தம் போடும்..”

“அஜந்தாவோட ஃபேமிலிக்கு பிரச்னை இல்லை போல.. எங்கே கிளம்பறதா இருந்தாலும் ஜாலியா கிளம்பிப் போயிட்டு வர்றாங்களே..”

“அது அப்படித்தான்.. அத்தை ஃபேமிலி மட்டும் தனியே ஊர் சுத்தப் போவாங்க.. அவங்ககூட தாத்தாவும் பாட்டியும் ஜாயின் அடிக்க மாட்டாங்க.. அவந்திகா குடும்பம்ன்னு பிரிச்சுப் பேசுவாங்க.. அதுவே எங்க குடும்பம்ன்னு வந்தா தாத்தா, பாட்டி ஜாயின் அடிச்சு அத்தையின் குடும்பத்தையும் கூட்டுச் சேர்த்துக்குவாங்க.. எல்லோரும் ஓர் குடும்பம்ன்னு சொல்லுவாங்க.. இந்தக் கதையே வேண்டாம்ன்னு அண்ணன் சொல்லிரும்..”

“ஹா.. ஹா.. பாஸ் இருக்கிறாரே..” ரவிச்சந்திரனின் மனோதிடத்தை சிலாகித்து மகிழ்ந்து போனாள் நந்தினி.. அதை கண்டு பிடித்து விட்டதைப் போல அவளைக் கூர்ந்து பார்த்த ரம்ய மாலினி..

“அண்ணனைப் பற்றிய பேச்சுன்னா உங்களுக்கு ஸ்வீட் சாப்பிடறதைப் போல இனிப்பாய் இருக்குது போல..” என்று கண் சிமிட்டினாள்..

‘அண்ணனுக்கும்.. தங்கைக்கும் ஒரே மேனரிசம்தான்..’ கன்னம் சிவந்த நந்தினி.. “இல்லையே..” என்று மறுத்தாள்..

“இல்லைன்னு வாய்தான் சொல்லுது.. கண்ணிலே கள்ளத்தனம் தெரியுது.. ஆக்ஷுவலா நந்தினி.. அண்ணன் அடங்கி ஒரு இடத்தில இருக்காது.. ஓடிக்கிட்டே இருக்கும்.. அதை இழுத்துப் பிடித்து நிறுத்தி வைக்கிறது கஷ்டம்..”

‘இதையே எல்லோரும் சொல்கிறாங்க.. அப்படியொரு ஊர்சுத்தியா அவன் இருந்திருக்கான்..’

“ஆனாப் பாருங்க.. நீங்க வந்ததில இருந்து உங்களை விட்டு இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நகரலை.. எங்கே போனாலும் உங்களையும் கூப்பிட்டுக்கிட்டுத்தான் போகுது..”

‘அகப்பட்டுக்கிட்டேனா..’ நந்தினிக்கு லஜ்ஜையாக இருந்தது..

“அது வந்து ரம்யா.. நான் பாஸோட பெர்சனல் செக்கரட்டரியா.. அதனாலே அவர்கூடவே ஜர்ன் பண்ண வேண்டியதா இருக்கு..” ரம்ய மாலினியின் முகத்தைப் பார்க்காமல் சொன்னாள்..

“ஈஸிட்..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.. எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க..” என்று சொன்ன ரம்ய மாலினி,

நந்தினி ரம்ய மாலினியின் முகத்தைப் பார்க்க முடியாமல் தட்டுத் தடுமாறியதில்..

“ரொம்பத்தான் தடுமாறாதீங்க.. இது வயநாட்டு மலைப்பாதை.. உருண்டா கிடுகிடுப் பள்ளத்தாக்குதான்.. என் முகத்தைப் பார் க்கப் பயந்துக்கிட்டு பள்ளத்தாக்கில் உருண்டு விடப் போறிங்க..” என்று கேலி செய்தாள்..

“அப்படியே உன் அண்ணன்தான்..” வியந்தாள் நந்தினி..

“எதுக்காக இப்ப அண்ணனை இழுக்கறிங்க..?”

“உங்க அண்ணனை இழுத்துட்டாலும்..”

முகம் சிவந்த நந்தினி ‘களுக்’ கென்று சிரித்து வைத்தாள்.. ரம்ய மாலினி அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்ததில் முகச்சிகப்பு அதிகரிக்க..

“ஐய்யே..!! எதுக்காக இப்படிப் பார்க்கறிங்க..” என்று சிணுங்கினாள்..

“ஹையோ..! செம்ம அழகா இருக்கு.. இப்படித்தான் அண்ணனிடம் சிணுங்குவீங்களா..?” ரம்ய மாலினி விழி விரித்தாள்..

“எங்கே சுற்றினாலும் உங்க அண்ணனிடம்தான் வந்து நிற்பீங்களா..?”

“ஊஹும்.. நான் நிற்கலைங்க.. அண்ணன்தான் உலகத்தையே சுற்றிக்கிட்டு இருந்தது.. இப்ப உங்களை விட்டு நகராமல் நிற்குது..”

‘அப்படியா..?’

நந்தினிக்கு கிறுகிறுத்தது.. ரவிச்சந்திரன் ஆணழகன்.. அதிலும் பேரழகன்.. வீரத்திலும், தீரத்திலும் அவனுக்கு நிகர் எவருமில்லை.. உலகம் சுற்றும் வாலிபன்..

அவன் நந்தினிக்காக எங்கேயும் நகராமல் நங்கூர மிட்டது போல அவளருகில் தேங்கி நின்றிருக்கிறானா..?

‘அவனுக்கு நான் பொருத்தமா இருப்பேனா..?’ நந்தினியின் முகம் வாடியது..

“ஹேய்.. என்னாச்சு..?” ரம்ய மாலினி விசாரித்தாள்..

“ஒன்றுமில்லை.. ச்சும்மா.. வீட்டு நினைவு..” நந்தினி சமாளித்து விட்டாள்..

“வீட்டு நினைவு வரத்தானே செய்யும்.. பிடிக்காத மேரேஜ்.. நீங்க என்ன பண்ண முடியும்..? கவலைப்படாதீங்க.. எல்லாம் சரியாகி விடும்..” ரம்ய மாலினி ஆறுதல் சொன்னாள்..

“சரியாகனும் ரம்யா.. அப்பத்தான் என் மனசில இருக்கிற பாரம் இறங்கும்..” என்ற நந்தினி.. ஏதோ நினைத்துக் கொண்டவளாக..

“அத்தையும், மாமாவும் என்னைத் தப்பா நினைச்சிருப்பாங்க இல்ல..” என்று முகம் கன்றக் கேட்டாள்..

“உங்க அத்தையாவது, உங்களைத் தப்பா நினைக்கிறதாவது.. அவங்க எப்பவுமே உங்களைத் தப்பா நினைக்கவே மாட்டாங்க.. அப்பா வேற கேட்டகிரி.. அம்மா மேல அப்பாவுக்கு லவ்வுன்னா லவ், அவ்வ்வ்..வளவு லவ்.. அம்மாவுடைய நியாயத்தை கேள்வி கேட்காமல் அப்பா ஏற்றுக்குவார்.. ஸோ.. அப்பாவும் உங்களைத் தப்பா நினைக்க மாட்டார்.. நீங்க ஸேஃப் ஜோனில்தான் இருக்கறீங்க.. தைரியமா இருங்க..”

“ஸேஃப் ஜோனில் இருக்கிறேனா..?”

ரம்ய மாலினி சொன்ன விதத்தில் நந்தினி வாய் விட்டுச் சிரித்தாள்.. பூ ஒன்று மலர்ந்து இதழ் விரிப்பதைப் போன்ற அவளது சிரிப்பை ரசித்த ரம்ய மாலினி..

“நீங்க சிரிக்கும் போது ரொம்ப அழகா இருக்கீங்க..” என்றாள்..

‘இவளோட அண்ணனும் இதைத்தான் சொல்றான்..’

நந்தினிக்கு கண்ணாடி பார்க்க வேண்டும் போல இருந்தது.. பேரழகு அண்ணனும், பேரழகித் தங்கையும் ‘வாவ்’ என்று சொல்லும் அளவிற்கா அவளது மூஞ்சி இருக்கிறது..?

‘சும்மாக்காச்சும் சொல்லுதுகளோ..’

ரம்ய மாலினியின் முகத்தைப் பார்த்தால் பொய் சொல்கிறவளைப் போலத் தெரியவில்லை.. அவளுடைய அண்ணன் வேண்டுமானால் பொய் சொல்லலாம்.. ரம்யா பொய் சொல்ல மாட்டாள்..

‘அவன் கடைந்தெடுத்த கள்ளனல்லோ..’ நந்தினியின் மனதில் ஓடிக் கொண்டிருந்த சந்தேக மேகங்களைப் பற்றி

அறியாதவளாக ரம்ய மாலினி ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தவளாக கைகளை முன்புறம் கட்டி நின்று மலை முகடுகளில் படிந்திருந்த பனி மேகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவள் முகத்தில் சன்னமான துயரத்தின் சாயல் தெரிந்தது.. நந்தினிக்கு மனம் தாங்கவில்லை.. தேவதை துயரம் கொள்வதா..? ரம்ய மாலினி வரம் கொடுக்கும் தேவதையல்லவா..?

“என்னைத் திங்க் பண்ணக் கூடாதுன்னு கலாட்டா பண்ணிட்டு இப்ப நீங்க இந்த ரேன்ஜுக்குத் திங்க் பண்ணலாமா..? உங்களுக்கு மட்டும் இது ஷீட் ஆகுதுன்னா நினைக்கறிங்க..? விட்டா மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே தவம் பண்ணக் கிளம்பிப் போய் விடுவீங்க போல இருக்கே..”

நந்தினி விளையாட்டாய் பேசி ரம்ய மாலினியின் சோகமான மனநிலையை மாற்ற முயன்றாள்.. சோகையாய் சிரித்த ரம்ய மாலினி..

“மனம் விட்டுச் சிரிக்கறதுக்கும் ஒரு கொடுப்பினை இருக்கனும் நந்தினி.. உங்களுக்கு அது இருக்கிறது..” என்றாள்..

நந்தினியின் மனம் வலித்தது.. ராஜ பாரம்பர்யத்தில், கோடீஸ்வரக் குடும்பத்தில் செல்ல மகளாக பிறந்த பெண் மனம் விட்டுச் சிரிக்கும் சிரிப்பிற்காக ஏங்குகிறாளா..? "உங்களுக்குத் தெரியாது நந்தினி.. நான் பிறந்ததிலிருந்தே அத்தையின் குடும்பம் இங்குதான் இருக்கிறது.. எனக்கென்று அப்பா எதை வாங்கிக் கொடுத்தாலும் அஜந்தாவுக்கும் அது போல வாங்கிக் கொடுத்தாக வேண்டும்.. இது எங்கள் தாத்தா பாட்டி போட்டு வைத்திருக்கும் சட்டம்.. அஜந்தாவுக்கு மட்டும் தனியே வாங்கிக் கொடுப்பார்கள்.. எனக்கும் அது போல வேண்டுமென்று கேட்க முடியாது.. அவள் அத்தையின் மகள்.. அத்தைக்கும், அவர்களின் குடும்பத்துக்கும் நாங்கள் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்பார்கள்.."

இப்படியொரு அழிச்சாட்டியமான நியாயத்தை யாழினியால்தான் கூற முடியும் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. யாழினியின் அழகான முகத்திற்குப் பின்னாலிருக்கும் பாரபட்சமும், சுயநலமும், நியாயமற்ற குணமும் அவளுடைய அழகை அடியோடு மறக்கடித்து வெறுக்க வைத்து விடுகிறது என்பதை அவளறிவாளா என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

“இதெல்லாம் மேட்டரே இல்லை நந்தினி.. அப்பா அஜந்தாவுக்கும் வாங்கித் தருகிறாரேன்னு நானும் நினைக்க மாட்டேன்.. அம்மாவும் நினைக்க மாட்டாங்க..”

“நிறைகுடங்கள் தளும்பாது ரம்யா..”

“பட்.. நாங்க அப்படி நினைக்கிறோம்ன்னு அத்தை பாட்டியிடம் பொய்யாக கோள் மூட்டிப் போட்டுக் கொடுப்பாங்க.. பாட்டி அம்மா வையும் என்னையும் கண்டிப்பாங்க..”

‘எப்படியாப்பட்ட மனுஷங்க..’ நந்தினிக்கு வெறுப்பாக இருந்தது..

“குறைகுடங்கள் கூத்தாடத்தான் செய்யும் ரம்யா.. பொடித்தனமானவங்களுக்கு அப்படித்தான் தோணும்..”

“அம்மாவும் அண்ணனும் எனக்கு வாங்கிக் கொடுக்கிறதில அஜந்தா பங்குக்கு வர முடியலை.. மத்ததில் பெருந்தன்மையா விட்டுக் கொடுத்துப் போகும் அம்மா பிள்ளைகள் விஷயத்தில மட்டும் படு ஸ்டிரிக்ட்டா இருப்பாங்க.. என் பிள்ளைகள்தான் எனக்கு முதலில்ன்னு சொல்லிருவாங்க.. நாத்தனார் பிள்ளைகளை என் பிள்ளைகளா நினைக்க முடியாதுன்னு பாட்டியிடம்

நேரடியாகவே சொல்லி விட்டதில் பாட்டி அம்மாவிடம் வம்புக்கு வர மாட்டாங்க.. யு நோ நந்தினி.. அம்மா அப்ஜெக்ட் பண்ணி ஸ்ட்ராங்கா ஒரு விஷயத்தில நின்னுட்டாங்கன்னா பாட்டி அம்மாவிடம் மோதாம ஜகா வாங்கிருவாங்க..”

“கெட்டிக்கார பாட்டி..”

“அண்ணனிடம் தாத்தா பாட்டியின் பாச்சா பலிக்காது..”

“யாரோட பாச்சாவும் பலிக்காது ரம்யா..”

‘யாரு அவன்..!’ மனதின் உணர்வுகளை ரம்ய மாலினி அறியாமல் மறைக்க வெகுவாக சிரமப்பட்டாள் நந்தினி..

“அம்மா எனக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுத்தாங்க நந்தினி.. அண்ணன் தன்னை ப்ரூவ் பண்ணி ஸெல்பா எஸ்டாப்ளிஷ் ஆனதும் நான் இன்னும் அதிகமா ஸேஃப் ஆகிட்டேன் நந்தினி.. அது அஜந்தாவை கோபப் படுத்துது..”

“அவளுக்கு யார் நன்றாக இருந்தாலும் பொறுக்காது ரம்யா.. மட்டமான ஜென்மம்..”

“அவளுக்கு நான் சிரித்தால் பிடிக்காது நந்தினி..” ரம்ய மாலினி மெதுவான குரலில் சொன்னாள்.. உன்னிப்பாக கவனித்த நந்தினிக்குத் தூக்கி வாரிப் போட்டது..

“என்னங்க சொல்கிறீங்க..? நீங்க சிரித்தால் அவளுக்கென்ன..?” நம்பமுடியாமல் கேட்டாள்..

“அவளுக்கு என்ன ஆகிறது என்று தெரியாது நந்தினி.. நான் லேசாக சிரித்தால்கூட அவள் பொருமித் தள்ளி விடுவாள்.. உனக்கென்ன.. உன் அண்ணன் கோடிக் கணக்கில் சம்பாதித்துத் தள்ளறான்.. உன் அப்பா ஊதாரித்தனமா குடும்பப் பொறுப்பில்லாம ஊர் சுற்றாம பொறுப்பாய் வொய்ஃப், பிள்ளைகள்ன்னு தாங்கறார்.. எனக்கு அப்படியான்னு ஏதேதோ பேசி சண்டை போடுவாள்.. இதில் கொடுமை என்னன்னா பாட்டியும் அவ பேச்சுக்கு சப்போர்ட் பண்ணுவாங்க.. அஜந்தாவோட மனசில வருத்தம் இருக்கிறப்ப அதை அதிகப் படுத்தறதைப் போல நான் சந்தோஷம் கொண்டாடக் கூடாதுன்னு எனக்கு அட்வைஸ் பண்ணுவாங்க.. அவங்களுக்குப் பயந்து பயந்து எனக்கு சிரிப்பே மறந்து போயிருந்தது நந்தினி.. நீங்க வந்த பின்னால்தான் பயமில்லாம சிரிக்கிறேன்.. தேங்க்ஸ் நந்தினி..”

நெகிழ்ச்சியுடன் ரம்ய மாலினியின் கைகளைப் பிடித்து அழுத்தி மூக்கைச் சுருக்கித் தனது ஆட்சேபத்தைத் தெரியப் படுத்தினாள் நந்தினி.. நந்தினியின் கரங்களை பதிலுக்குப்

பிடித்து அழுத்திக் கையோடு கை கோர்த்து தனது நட்பை வெளிப்படுத்தினாள் ரம்ய மாலினி.. காலம் காலமாய் பழகிக் கொண்டிருப்பதைப் போன்றதொரு தோழமை உணர்வை இருவரும் உணர்ந்தார்கள்..

மலைப்பாதையின் இறக்கத்தில் சரிந்து இறங்கிய போது..

“ஓடலாமா..?” என்று கேட்டாள் நந்தினி..

“ஓ..” குதூகலமாக தலையை ஆட்டினாள் ரம்ய மாலினி..

சரிந்து இறங்கிய பாதையில் இருவரும் ஓடி ஊடே குறுக்கிட்ட பாலத்தின் கைபிடி சுவரில் சாய்ந்து நின்று மூச்சு வாங்கினார்கள்.. பாலத்தின் அடியே சலசலத்து ஓடிய ஆற்று நீர் ஸ்படிகம் போல தெளிவாக இருந்தது.. அடியில் கூழாங்கற்களையும் மீன்களின் கூட்டத்தையும் ரசித்த நந்தினி..

“கேரளாவில் ஆறுகளுக்கு பஞ்சமில்லை..” என்றாள்.

“ம்ம்ம்..” பெருமையாக தலையை ஆட்டினாள் ரம்ய மாலினி..

“இப்பேற்பட்ட அழகான ஊரிலே பிறந்திட்டு இதை ரசித்து அனுபவிக்காம வீட்டில அடைந்து இருக்க உனக்கு எப்படித்தான் மனது வந்ததோ..?”

“எனக்கும் ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசையாகத்தான் இருக்கும்.. மேரேஜ்ன்னு ஒன்று நடந்தால் அஜந்தாவின் கண் பார்வையில் இருந்து தப்பித்து வேறு ஒரு வீட்டிற்குப் போய் விடலாம்தானே.. அப்படியொரு காலம் வரும்போது ஆசை தீரச் சுற்றிப் பார்த்துக்கலாம்ன்னு பேசாமல் இருந்து விடுவேன்..”

“சரியாப் போச்சு போ.. அது உன் அரண்மனை ரம்யா.. அந்த அஜந்தா ஒண்ட வந்தவள்..”

“நீ வேற.. அது அவளோட அரண்மனை போல இல்ல அவ நடந்துக்கிறா.. நீ சொன்னது மட்டும் அவ காதில விழுந்ததுன்னு வை.. உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பா..”

“அப்படியா சொல்கிற..? வந்து பார் சண்டைக்குன்னு கூப்பிட்டு விடவா..?” தலையைச் சரித்துக் கேட்ட நந்தினி அப்போதுதான் அதை உணர்ந்தாள்..

# அத்தியாயம் 223

எப்போது அழைக்க ஆரம்பித்தார்கள் என்பதையே உணராமல் அவளும் ரம்ய மாலினியும் ஒருவரையொருவர் ஒருமையில் அழைத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அதை நந்தினி குறிப்பிட்ட போது..

“ஆமாமில்ல..” என்று விழிகளை மலர்த்திச் சிரித்தாள் ரம்ய மாலினி..

அதன் பின்னால் அவர்கள் இருவரும் என்னென்னவோ பேசிச் சிரித்தார்கள்.. தனது குழந்தைப் பருவம் முதல் குமரிப் பருவம் வரை மனதில் தேக்கி வைத்திருந்த அத்தனை உணர்வுகளையும் நந்தினியிடம் பகிர்ந்து கொண்டாள் ரம்ய மாலினி.. அவளுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சு வந்தபோது..

“பிடிக்காம மேரேஜ் பண்ணிக்கிறதை விட மேரேஜே பண்ணிக்காம இருக்கிறது பெட்டர் நந்தினி..” என்றாள் ரம்ய மாலினி..

“இதை என்னிடம் சொல்கிறயா..? பிடிக்காத மேரேஜிலிருந்து தப்பிக்க ஸ்டேட் விட்டு ஸ்டேட் ஓடி

வந்திருக்கிறவ நான்.. பட்.. உனக்குப் பிடிக்காத மேரேஜ் நடக்க சான்ஸே இல்லையே.. அத்தையும், மாமாவும் உன் மேல உயிரையே வைத்திருக்கிறாங்க.. பாஸ் உன்னைக் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்கிறார்.. உன் விருப்பம் போலதான் மேரேஜ் நடக்கும்..” தலையை ஆட்டியாட்டிப் பேசினாள் நந்தினி..

“அப்படியும் சொல்லி விட முடியாது நந்தினி.. அண்ணனுக்கு பிடிவாதம் அதிகம்.. எனக்கு எது நல்லதுன்னு என்னைவிட அதுக்குத்தான் அதிகம் தெரியும்ன்னு நினைக்கும்..”

“நிஜம்தானே..”

“நிஜம்தான் நந்தினி.. அந்த நினைப்பினால் என் விருப்பத்துக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுக்காம என் மேரேஜை பிக்ஸ் பண்ணினாலும் பண்ணலாம்.. யு ஸீ.. அம்மாவும், அப்பாவும் அண்ணன் ஒரு முடிவெடுத்துட்டா அதை மாற்றியமைக்க நினைக்கவே மாட்டாங்க.. அண்ணனோட டிசிஷன்தான் ஃபைனல் டிசிஷன்..”

“ஐ ஸீ...”

தன் வீட்டிலும் அப்படித்தானே நினைத்திருப்பார்கள் என்ற நினைவில் நந்தினியின் மனம் கனத்தது.. குற்ற உணர்வு வந்த போதிலும் பெல்ட் மன்னனை மாப்பிள்ளையாக ஏற்க மனம் மறுத்தது.. ஒருவேளை ரவிச்சந்திரனை அவள் சந்திக்காமல் இருந்திருந்தால் கூட பெற்றவர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு பெல்ட் மன்னனைத் திருமணம் செய்து கொள்ள சம்மதித்திருக்கலாம்.. இப்போது ரவிச்சந்திரனைத் தவிர வேறு ஒருவனை அவளால் மனதால் கூட நினைக்க முடியாது..

"மனதார ஒருத்தனை நினைச்சுட்டா மன்மதனே வந்து நின்னாலும் திரும்பிப் பார்க்க முடியாது.." கனவில் மிதப்பவள் போல சொன்னாள் நந்தினி..

"செர்ட்டன்லி.." அதே கனவில் மிதக்கும் குரலோடு ரம்ய மாலினி சொல்லி வைத்ததில் திகைப்பாகி..

"ஹேய்.." என்று ரம்ய மாலினியின் முன்னால் குனிந்து கைகளைக் குவித்தாள்.. "யார் அந்த லக்கி மேன்..?"

"யாருமில்லையே.." ரம்ய மாலினியின் முகத்தில் வெட்கச் சிகப்பு..

"யாருமே இல்லாமலா உன் கன்னம் காஷ்மீர் ரோஜாப்பூ நிறத்துக்கு மாறுது..?"

“ஹேய் நந்தினி.. சும்மா சிரிப்பு மூட்டாதே..”

“உள்ளதைச் சொன்னா உனக்குச் சிரிப்பு வருதா..? சொல்லு ரம்யா.. உன் மனசில யாரிருக்கிறாங்க..?”

“புரியலை..”

“உனக்கா புரியலை..?”

“யெஸ்..”

“புரியும்படி மறுபடியும் கேட்கவா..?”

“கேளேன்..”

“சொல்லு ரம்யா.. உன் மனசில இருக்கிற அந்த மன்னாதி மன்னன் யார்..?”

நந்தினி தூண்டித் துருவினாள்.. ரம்ய மாலினி தலையை ஆட்டி ரசித்துச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் மறுப்பில்லாததில் நந்தினியின் சந்தேகம் அதிகரித்தது.. ரம்ய மாலினியுடன் தனியாக உலாவ வந்ததிற்கு பயன் உண்டாவதைப் போல இருந்தது..

“மன்னாதி மன்னன்னா அது என் அண்ணன்தான் கேரளத்தில மன்னாதி மன்னன்னு அண்ணனைத்தான் அடையாளம் காட்டுவாங்க..”

“பார்றா.. உங்க அண்ணன் பெரிய பிஸ்தாவாக்கும்..”

சொல்லும்போதே நந்தினியின் நாக்கில் வெல்லக் கட்டியை வைத்ததைப் போல இனித்தது..

“இல்லையா பின்னே..”

“ஓகே.. என்னோட பாஸ் பெரிய பிஸ்தாதான்.. ஐ அக்ரி இட்.. இந்த கேரளாவில வேறு ஒரு மன்னன் இல்லையா..?”

“நீ இருக்கியே..”

“நான் இருக்கிறது இருக்கட்டும்.. வேறு ஒரு மன்னன் உன் மனதில் இல்லையா..?”

“சும்மா இரு..”

ரம்ய மாலினி விளையாட்டாய் மிரட்டிக் கொண்டிருந்த போது அவளது செல்ஃபோன் ஒலிக்க ஆரம்பித்து விட்டது..

“யார்..?” என்று பார்த்தவள்..

“என் ஃபிரண்ட்..” என்று நந்தினியிடம் சொல்லி விட்டுத் தள்ளிப் போய் பேச ஆரம்பித்து விட்டாள்..

மரங்கள் அடர்ந்திருந்த சரிவின் ஒருபக்கம் ரம்ய மாலினியும் மறுபக்கம் நந்தினியுமாக அவர்கள் பிரிந்து நின்றிருக்க.. நந்தினியின் காதோரமாக..

“ரம்ய மாலினியின் மனதில் இருக்கும் மன்னன் யார்ன்னு எனக்குத் தெரியும்.. சொல்லவா..?” என்ற பெண்குரல் ஒலித்தது..

‘எவ இவ..?’

வெடுக்கென்று கழுத்தை வெட்டித் திரும்பிய நந்தினி திடுக்கிட்டு நின்று விட்டாள்.. அவளுக்கு எதிரே அசூசையாக அவளைப் பார்த்தபடி தரங்கிணி நின்றிருந்தாள்..

‘இவளா..?’ நந்தினியின் மனம் நடுங்கியது..

அது என்னவோ தெரியவில்லை.. தரங்கிணியைக் கண்டாலே நந்தினியின் அடி மனதில் இன்னதென்று புரியாததொரு பயம் வந்து சூழ்ந்து கொள்கிறது..

‘அஜந்தாவை விட இவ தௌசண்ட் மடங்கு டேன்ஜரஸ்..’

“என்ன.. பேயடிச்சதைப் போல ஸ்டன்னாகி நின்னுட்ட..” எகத்தாளமாக கேட்டாள் தரங்கிணி..

‘நீ பேய்தானேடி..’ வெறுப்புடன் வேறு பக்கமாக பார்த்தாள் நந்தினி..

“உன்னிடமெல்லாம் நின்று பேச வேண்டியிருக்கேன்னு நான்தான் முகத்தைத் திருப்பிக்கனும்.. நீ உல்டாவா முகத்தைத் திருப்பி ஃபிலிம் காட்டற.. நினைப்புத்தான் உனக்கு..” ஏளனமாக சொன்னாள் தரங்கிணி..

“யார் நினைப்பு..?” பட்டென கேட்டு விட்டாள் நந்தினி..

என் மனதில் ரவிச்சந்திரனைப் பற்றிய நினைவுதான்.. என்பதைச் சொல்லாமல் அவள் சொல்லியதில் வெகுண்ட தரங்கிணி பார்த்த பயங்கரப் பார்வையில் நந்தினி பயந்து போனாள்..

“உனக்கு இருக்கும் பல நினைப்பு.. அதைப் பத்தியெல்லாம் நான் மைண்ட் பண்ணிக்கப் போகிறதில்லை.. தகுதிக்கு ஏற்றதைப் போல நினைப்பிருக்கனும்.. உனக்குத்தான் உன் தகுதியைப் பற்றிய நினைவே இல்லையே..”

தரங்கிணி பேசப்பேச.. நந்தினியின் மனதில் தரங்கிணியைப் பற்றி இருந்த பயம் ஓடியே போய்விட்டது..

‘இவள் யார் என்னைக் குறைவாக பேச..’ என்ற கோபம்தான் முன்னால் வந்து நின்றது..

நந்தினி பழைய நந்தினியாக நிமிர்ந்து நின்று தரங்கிணியை நேர் கொண்ட பார்வை பார்த்தாள்..

“என் தகுதி என்னன்னு எனக்குத் தெரியும்.. உனக்குத்தான் அது தெரியாமல் போச்சு..”

“உன் தகுதியைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரிந்து கொள்ளனும்ங்கிற அவசியமில்லை.. நீயெல்லாம் எனக்கு ஈக்குவல் பெர்சனா..?”

“உனக்கு ஈக்குவலா இருக்க எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை.. தெரிஞ்சுக்க.. என் லெவலே வேறு..”

நந்தினியின் அலட்சியமான உதட்டுச் சுழிப்பில்..

“ஷட் அப்..” என்று கத்தி விட்டாள் தரங்கிணி..

“உஸ்ஸ்..” ஆள்காட்டி விரலை வாயில் வைத்து அவளை அடக்கிய நந்தினி..

“சத்தம் போடக் கூடாது.. இதுக்கே இந்த சவுண்டுன்னா இன்னும் நான் டென்ஷனை ஏத்தி விட்டா இந்த வயநாட்டையே பிளந்து விடுகிறதைப் போல சவுண்டு

விட்டிருவ போல இருக்கே.. ஓவர் டென்ஷன் உடம்புக்கு ஆகாதும்மா..”

“அம்மாவா..?”

“யெஸ்.. அம்மா மீன்ஸ் மம்மி.. உன்னைப் பார்த்தால் பப்பா மாதிரியா இருக்கு..? பப்பா போல டிரஸ் போட்டுக் கிட்டா நீ பப்பா ஆகிருவியா..? நீயும்.. உன் டிரெஸ்ஸும்..” தரங்கிணி அணிந்திருந்த சின்ன அளவிலான மினி ஸ்கர்ட்டையும், ஸ்லீவ்லெஸ் பனியனையும் வெறுப்புடன் பார்த்தாள் நந்தினி..

“இந்த வயநாட்டுக் குளிருக்கு உல்லன் ஸ்வெட்டர், சால்வைன்னு எஸ்கிமோக்கள் போலக் கவர் பண்ணிக் கிட்டாக்கூடத் தாக்குப் பிடிக்க முடியலை.. நீயெல்லாம் எப்படித்தான் இத்தனூண்டு மினி ஸ்கர்ட்டோட அலைகிறயோ.. உனக்குக் குளிரவே குளிராதா..?”

“யு.. யு..”

“ஐ.. ஐ..?”

“கண்ட்ரி புரூட்..”

“கண்ட்ரி மீன்ஸ் ‘நாடு..’ நான் பக்கா தஞ்சாவூர்காரிம்மா.. நீதான் வயநாடு.. ஸோ.. கண்ட்ரி புரூட் யாரு..? நீயா இல்லை நானா..?”

“உன் லிமிட்டைத் தாண்டிப் பேசற..”

“என் லிமிட் எதுங்கிறதை நான்தான் டிசைட் பண்ணனும்.. நீ டிசைட் பண்ணக் கூடாது..”

“ஏய்ய்..”

“ம்ப்ச்.. சும்மா என்கிட்ட வந்து சவுண்டு விடக் கூடாது.. நீ யார்..? நான் யார்..? எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்..? என் வேலையை நான் பார்க்கிறேன்.. உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போவியா.. அதை விட்டுட்டு என்னிடம் வந்து லிமிட்டைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கிற.. உனக்கு என்னதான் வேணும்..?” நந்தினியின் கேள்வியில் அவளையே உறுத்துப் பார்த்த தரங்கிணி..

“எனக்கு வேணும்ங்கிறதைச் சொன்னால் விலகிப் போய் விடுவியா..?” என்று கேட்டாள்..

‘இவ கம்மாண்டரை.. மீன் பண்றா..’

நந்தினியின் ரத்த நாளங்கள் கொதித்தன.. அவளுடைய உடைமைப் பொருளை இறுக்கிப் பிடித்துப் பத்திரப் படுத்திக் கொள்ளும் வேகத்தோடு..

"எனக்குச் சொந்தமானதை ஒருநாளும் மத்தவங்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டேன்.. அதுக்கு வேற ஆளைப் பாரு.." என்று படபடத்து விட்டாள்..

"ஓ.." ஆங்காரத்துடன் நந்தினியை முறைத்த தரங்கிணி..

"உனக்குச் சொந்தமானதோ..?" என்று கொதித்தாள்..

"யெஸ்.. எனக்குச் சொந்தமானதுதான்.." நந்தினியின் உறுதியில்..

'அவன்மீது இத்தனை நம்பிக்கையா..?' என்று தரங்கிணியின் ஆங்காரம் அதிகமானது..

"உன் வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறதாச் சொல்கிறாயே.. செக்கரட்டரி வேலை பார்க்கதானே வந்த..? ஒரு நாள்கூட உருப்படியாய் நீ வேலை பார்த்த தில்லையாமே.. செக்கரட்டரி வேலையைத் தவிர மத்த எல்லா வேலைகளையும் பிளான் பண்ணி ஸ்கெட்ச் போட்டுத்

தூக்கிக்கிட்டு இருக்கிறயாமே..” இகழ்ச்சியாகத் தரங்கிணி சொல்ல, அலட்டிக் கொள்ளாமல் அவளை ஏற இறங்கப் பார்த்த நந்தினி..

“ஸ்கெட்ச் போட்டுத் தூக்கினேனா..? யாரை..?” என்று ஒன்றும் அறியாதவளைப் போல வினவி வைத்தாள்.

“நிச்சயமா என்னையில்லை...” தரங்கிணி தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்தாள்..

“உன்னைச் சூச்சுன்னு உச்சுக் கொட்டிக் கூப்பிட்டாலே ஓடி வந்திருவ.. இதில ஸ்கெட்ச் போட்டுத் தூக்குவாங்களா என்ன..? அந்த அளவுக்கு ஜீரோன்னு என்னை நினைச்சியா..?”

“உன்னைப் போய் ஜீரோன்னு நான் நினைப்பேனா..? யாரு நீ..?”

“நந்தினி..”

“அது ஊருக்கு.. எனக்கு நீ பக்கா கேடி..”

“உன்னைப் போல என்னையும் நினைத்தால் எப்படி..?”

எப்படிப் பேசினாலும் நந்தினியின் மனதை புண்படுத்த முடியவில்லை என்பதில் வெறியாகிப் போனாள் தரங்கிணி..

அதுவரை அவளுக்கு யாரும் இந்த அளவுக்குப் பதிலடி கொடுத்ததில்லை.. ஆனானப்பட்ட அஜந்தாவையே போட்டுத் தாக்கி விட்டு படு கூலாக கடந்து செல்பவள் தரங்கிணி.. அவள் கற்று வைத்திருந்த அத்தனை குரூரங்களையும் பிரயோகித்தும் நந்தினியை வெற்றி காண முடியாததில் அவளது வெறி தலைக்கு ஏறியது..

"உன்னையெல்லாம் வைக்கிற இடத்தில வைக்கனும்னு ரம்ய மாலினிக்குத் தெரியலை.."

"நீதான் சொல்லி கொடுத்து விட்டுப் போயேன்.."

"சொல்லத்தான் போகிறேன்.. நான் சொன்னால் அவள் கேட்பாள்.. ஏன் தெரியுமா..?"

தரங்கிணியின் சாகசமும் குரூரமும் சரிவிகிதத்தில் கலந்த பார்வை நந்தினியைத் துளைத்தது.. நந்தினிக்குள் குளிர் பரவியது.. அவளது உயிரைப் பறிக்கும் வார்த்தைகளை தரங்கிணி சொல்லப் போகிறாள் என்று அவளது உள்மனம் பதறியது... அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் நீ எதையோ உளறிக் கொள்.. எனக்கொன்றும் இல்லை என்பதைப் போல அசட்டையாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

தரங்கிணியின் விழிகளில் வெறி கொண்ட மிருகத்தின் வேட்டையாடும் கோபம் தெறித்தது..

“என்னவோ பெரிய இவளாட்டம் ரம்ய மாலினியிடம் உன் மனதில் இருக்கும் மன்னாதி மன்னன் யார்ன்னு கேட்டியே.. அதைத் தெரிந்து என்ன பண்ணப் போகிற..?”

தரங்கிணியின் கேள்விக்கும் நந்தினியின் காதலுக்கும் இடையே கண்ணுக்குத் தெரியாத நுட்பமானதொரு தொடர்பு இருப்பது நந்தினியின் அறிவுக்கு புலப்பட்டு விட்டது..

# அத்தியாயம் 224

**“உ**னக்குச் சொந்தமானதை ஓர்நாளும் மத்தவங்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டியா..? அவ்வளவு சுயநலமானவளா நீ..! அப்புறம் எதற்காக ரம்ய மாலினியின் மனதில் யார் இருக்கிறார்கள்ன்னு கேள்வி கேட்டுத் துளைத்த..?” ஊடுறுவும் துச்சப் பார்வையோடு ஏளனமாக கேட்டாள் தரங்கிணி..

‘இப்படியொரு பார்வை பார்க்க இவளால்தான் முடியும்..’ என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி..

தரங்கிணி பார்க்கும் பார்வையிலேயே ஒருவரைக் கூறு போட்டு விடும் தன்மை கொண்டவளாக இருந்தாள்.. போதாக் குறைக்கு ஏளனக் குரல் வேறு..

‘இளகிய குணமும் மனமும் கொண்டவங்க இவகிட்ட மாட்டினால் அவ்வளவுதான்..’ நந்தினியின் மேனி சிலிர்த்தது..

“இங்கே பார்..”

“உன்னைப் பார்க்க நீயென்ன மகாராணியா..?”

“மகாராணியாய் இருந்தால்தான் பார்ப்பியா..?”

“அஃப்கோர்ஸ்.. கேரளாவில் மட்டுமில்லை.. உலகத்திலேயே பணக்காரங்க வரிசையிலே இருக்கிறவங்க மட்டும்தான் என்னிடம் பேச முடியும்.. என் லெவலுக்கு உன்னிடம் நின்று பேசுவதே பெரிய விஷயம்..”

“லெவலைப் பத்தி நீ பேசற பார்.. குட் ஜோக்.. உன்னைப் போல பொடிபுத்தி படைச்ச லேடி, பெரிய விஷயங்களைப் பத்தி யோசிச்சுக்கூடப் பார்க்கக் கூடாது..”

“புரியலை..”

“என்னிடம் நின்று பேசுன்னு உன்னைத் தஞ்சாவூரு தவிலை அடிச்சு கும்பகோணம் கொழுந்து வெத்தலை பாக்கை வைச்சு நான் அழைக்கலை.. வயநாட்டு மகாராணிகூட நின்று பேசனும்னு எனக்குத் துளிக்கூட ஆசையில்லை.. ஸோ.. உன் லெவலுக்கு உச்சாணிக் கொம்பிலே ஏறி ஓடியே போயிரு..”

“யாரைப் பார்த்து ஓடச் சொல்கிற..? அது உன் புத்தி.. வீட்டை விட்டு ஓடி வந்து என் ரவியத்தானோட லைஃபில இண்டர்பியர் ஆகியிருக்கிறது நீ.. ஓடிப் போக வேண்டியது நீதான்.. நானில்லை..”

“ரவியத்தானா..? அஜந்தா அத்தான்னு சொன்னாக் கூடக் கேட்டுக்கலாம்.. அவரோட அத்தை மகள் அவள்.. நீயென்ன அத்தான்னு உரிமை கொண்டாடற..?”

“ஓ..”

தெளிவான மலையாள ‘ஓ’ போட்டுத் தான் மலையாள தேசத்தில் பிறந்தவள் என்பதை நிரூபித்தாள் தரங்கிணி..

‘இவர்கள் போடும் ‘ஓ’ படு வித்தியாசமாக இருக்கிறது..’ அந்த நிலைமையிலும் உச்சரிப்பைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினாள் நந்தினி..

‘ஜெமினி படத்தில விக்ரம் போடும் ‘ஓ’ போல இது இல்லை.. அந்த ‘ஓ’ செந்தமிழ் ‘ஓ..’ இந்த ‘ஓ’ வல்லிய மலையாள ‘ஓ’ வல்லோ..’

“நான் எண்ட ரவிய ரவியத்தான்னு உரிமை கொண்டாடறதை ஆ அஜந்தா அப்ஜெக்ட் பண்ணினாக் கூடக் கேட்டுக்கலாம்.. அத்தானோட அம்மாச்சி மோள் அவள்.. நீயென்ன அப்ஜெக்ட் பண்றது..? ஹு ஆர் யு..? ஆப்டர் ஆல் எண்ட அத்தானிடம் ஜோலி பார்க்கும் செக்கரட்டரி நீ.. எங்க ஃபேமிலி விஷயத்தில இண்டர்பியர் ஆகிற உரிமையை யார் உனக்குக் கொடுத்தது..”

“ரவிதான் கொடுத்தார்..”

நிறுத்தி நிதானமாகச் சொன்னாள் நந்தினி.. சொல்லித்தான் ஆக வேண்டும்.. இதில் மூடுதிரை போட என்ன இருக்கிறது..? ஒளிவு, மறைவாய் காதல் பண்ண வேண்டிய அவசியம் அவளுக்கும் இல்லை, ரவிச்சந்திரனுக்கும் இல்லையெனும்போது எதற்காக மறைக்க வேண்டும்...? என்றைக்கு இருந்தாலும் மற்றவர்களுக்கு அது தெரிந்துதானே ஆக வேண்டும்.. அதை இன்றே சொல்லி தரங்கிணியுடன் மோதி விடுவது சாலச் சிறந்தது அல்லவா..

“ரவி.. யா..?” தரங்கிணி ஆத்திரமடைந்தாள்..

“அத்தானின் பெயரைச் சொல்கிறாயா..? எந்தா தைரியம்..?”

“இந்தா தைரியம்.. அள்ளி வைத்துக்க.. ஆளைப் பாரு.. அவரோட பெயர் ரவிச்சந்திரன்தானே.. அதை சுருக்கி ‘ரவி, ரவி’ன்னுதான் அவரை நான் கூப்பிடுவேன்.. அதில அவருக்குச் சாலச் சந்தோஷம்.. மனசிலாயி..”

நந்தினி வேண்டுமென்றே ‘ரவி, ரவி,’ என்று அவன் பெயரை மட்டும் ஹஸ்கி வாய்சில் சொல்லி விட்டு மற்ற வார்த்தைகளை ஹார்டு வாய்சில் உச்சரித்ததில்..

“யு.. யு.. யு..” என எண்ணையில் போட்ட அப்பம் போலக் கோபத்தில் துள்ளிக் குதித்தாள் தரங்கிணி..

“பார்த்து.. பக்கத்தில் பள்ளத்தாக்கு இருக்கு.. உருண்டு விழுந்து விடப் போகிற..” கரிசனம் காட்டி கடுப்பேற்றி விட்டாள் நந்தினி..

“ஈ.. வயநாட்டிலதான் ஞான் ஜனிச்சு..”

“அதை ஞான் அறிஞ்சு..”

“எண்ட வயநாட்டப் பத்தி ஞான் அறியும்..”

“அதையும் ஞான் அறியும்.. என்னங்கிற..?” தரங்கிணி சுதாரித்தாள்..

அவளுடைய ஆத்திரத்தை நந்தினி கேலி செய்வதை புரிந்து கொண்டவளாக தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.. மூச்சை இழுத்து விட்டுத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள்..

‘பொறுமை.. தரங்கிணி.. பொறுமை.. பதறிய காரியம் சிதறி விடும்.. இவளிடம் கோபப் படுவதைவிட.. இவளை வயநாட்டை விட்டு ஓட வைக்க வேண்டும்.. அதுதான் முக்கியம்..’ தனக்குள் உருப் போட்டுக் கொண்டிருந்தவளை

விசித்திரமாகப் பார்வையிட்டு அவள் மனதில் இருப்பதை அவதானிக்க முயன்றாள் நந்தினி..

‘புலி பதுங்கினாப் புரிஞ்சுக்கலாம்.. நரி ஊளையிடுவதை நிறுத்தினா ஏதோ தந்திரம் பண்ணுதுன்னுல்ல அர்த்தமாகுது.. இவ என்னத்தைப் பிளான் பண்றா..?’

“உனக்கு ரவிமேல வளர இஷ்டமமோ..?”

இந்தக் கேள்வியை இத்தனை அமைதியாக தரங்கிணி கேட்டு வைப்பாள் என்று எவர் சொல்லியிருந் தாலும் நந்தினி நம்பியிருக்க மாட்டாள்.. அவளது கண்ணெதிரே தரங்கிணி நின்று வாயசைத்ததால் நம்பினாள்..

“வெறும் இஷ்டமில்லை.. ‘வள...ர..’ இஷ்டம்.. கேட்டே..” என்று ‘வளர’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்தாள்..

“ஓ..”

உதடுகளைக் குவித்த தரங்கிணியின் முகத்தில் ஆத்திரத்தின் அலைகளை எதிர்பார்த்து ஏமாந்து போனாள் நந்தினி.. யோகியைப் போல நிச்சலனமாக முகத்தை

வைத்துக் கொண்டு.. “அங்ஙனவோ..?” என்று தரங்கிணி இமை கொட்டியதில் அதிசயித்துப் போனாள்..

“அங்ஙனதான் அம்மே..” வேண்டுமென்றே வம்பிழுத்தாள்..

“ஞான் நினக்கு அம்மையோ..?”

“ஓ..”

“நந்தினி எண்ட மோளோ..”

“அதி எதுக்கு..? நான் என் அம்மாவின் மகளாக்கும்..”

“அதையே மெயின்டெயின் பண்ணு.. கொஞ்சம் அமைதியாய் பேசினா உனக்கு என்னை அம்மாவாக்கி விடுவாயா..?”

“நீ புத்த சாமியாரிணி போல ஃபிலிம் காட்டினா இப்படித்தான்.. ஒரிஜினல் தரங்கிணியை வெளியே கொண்டு வர வேணாமா..?”

“ஒரிஜினலைக் கண்டா நீ பயந்து விட மாட்டியா..?”

“உன்னிடமெல்லாம் எனக்குப் பயமே வராது தரங்கிணி..”

“ஓ.. உண்மையைக் கண்டா பயம் வராதோ..?”

“நீ உண்மையா..? ஹ..! உண்மைக்கும் உனக்கும் ரொம்பத் தூரம்ன்னு எனக்குத் தெரியும் தரங்கிணி.. கப்ஸா விடாம மேட்டருக்கு வா..”

“வரத்தானே வந்திருக்கிறேன்.. நினக்கு ரவிமேல இஷ்டம்..”

“வளர இஷ்டம்..”

“ரவிக்கு உன்மேல இஷ்டம்..”

‘அதில உனக்கு கஷ்டம்..’

“என்ன..? பதிலைக் காணோம்..”

“வளர.. வளர.. இஷ்டம்.. போதுமா..”

“போதாதே.. கூடவே ரவிக்கு ரம்ய மாலினி மேல வளர.. வளர.. இஷ்டமாச்சே..”

“இதோ பார்.. நாத்தனார் காய்ச்சலெல்லாம் எனக்குக் கிடையாது.. ரம்ய மாலினியைப் போல சாந்தமான குணம் படைச்ச தேவதைப்பெண் தங்கையாய் வாய்த்தால் பிரியம் காட்டத்தான் செய்வார்கள்.. உன் மீதே உன் அண்ணன்

பிரியம் காட்டும் போது ரம்யாவின் அண்ணன் அவள் மீது பிரியமாக இருப்பதில் என்ன ஆச்சரியம் வேண்டிக் கிடக்கு..?"

"என் அண்ணன் யாருன்னு உனக்குத் தெரியுமா..?"

"இதைச் சொல்லவா இவ்வளவு பில்ட்-அப் காட்டின..? உன் அண்ணன் யாருன்னு எனக்குத் தெரியாது.. அவரைத் தெரிந்துக்கனுங்கிற அவசியமும் எனக்கு இல்லை.. அவர் யாராக இருந்தால் எனக்கென்ன..?"

"உனக்கென்னவா..? அப்படியெல்லாம் நீ சொல்லி விட முடியாதும்மா.."

"அம்மாவா..?" நந்தினியின் முகம் அஷ்ட கோணலானது..

'இப்ப இவ முறையா..?..' நந்தினியின் மனதில் கலவரம் சூழ்ந்தது..

"அம்மையேதான்.. நினக்கு ஞான் அம்மையாகும் போது எனிக்கு நீ அம்மையாகக் கூடாதோ.."

'ஆமாண்டி.. அதுக்குத்தான் ஞான் வயநாட்டுக்கு வந்து..'

"எந்து பதிலையும் காணோமே.."

“உன்னைப் போல மகள் இருந்தா என்ன செய்திருப்பேன்னு நினைச்சுப் பார்த்தேன்.. ஒழுங்கா இருப்பியா, இருப்பியான்னு நான் போடற போட்டில வாலைச் சுருட்டி மடக்கி ஓரமா ஒதுக்கி உட்கார்ந்திருக்கனும்.. நீ தப்பிச்சிட்ட தரங்கிணி..”

“பட்ஷே.. நீ தப்பிக்கலையே நந்தினி..”

“எதிலிருந்து..”

“ரவியை விட்டு விலகி ஓடுவதிலிருந்து..”

தரங்கிணி சொல்லி வாய் மூடுவதற்குள் அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறையை விட்டாள் நந்தினி.. எதிர்பாராமல் விழுந்த அறையில் கண்களில் பொறி பறக்க கன்னத்தைப் பிடித்தபடி தள்ளாடினாள் தரங்கிணி..

“கொன்று புதைச்சிருவேன்..” ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தாள் நந்தினி..

“வெறும் வாய் வார்த்தைக்கே கொன்று புதைக்கிற வரை போகிறாயே.. நிஜமாவே அதுதானே நடக்கப் போகுது..”

“எது..?”

“நீ ரவியை விட்டு விலகி ஓடுவது..”

அடிவாங்கியும் அடங்காமல் நந்தினியை நேருக்கு நேர் பார்த்தபடி சொன்ன தரங்கிணியிடம் தெரிந்த உறுதியில் பதறிப் போனாள் நந்தினி..

‘கடவுளே..! இவ என்னதான் சொல்ல வர்றா..’

“என் அண்ணன் யார்ன்னு உனக்குத் தெரியாதுன்னு சொன்னியே.. அவன் யார்ன்னு இப்பச் சொல்லவா..?”

“சொல்லித் தொலை.. அவரென்ன பெரிய அப்பாடக்கரா..?”

“அதெல்லாம் இல்லை அம்மே.. ரம்ய மாலினியின் மனதில் இருக்கும் மன்னாதி மன்னன் யாருன்னு கேட்டுக்கிட்டு இருந்தியே.. அந்த மன்னாதி மன்னன் வேறு யாருமில்லை.. என் அண்ணன்தான்..”

“என்ன..?” ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள் நந்தினி..

பூகம்பத்தை அவளுக்குள் விதைத்து விட்டு எதுவுமே நடக்காததைப் போல படு அமைதியாக தோள்களைக் குலுக்கி கைகளை விரித்து.. “ஊம்..” என்றாள் தரங்கிணி..

“உன் அண்ணனை ரம்ய மாலினி நினைத்துக் கொண்டிருக்கிறாளா..?”

“பிரேமம் கொண்டிருக்கிறாள் நந்தினியம்மே..”

“பொய் சொல்லாதே..”

“அவளிடம் என்கொயர் பண்ணி விட்டு நான் சொல்வது பொய்யா, மெய்யான்னு ஒரு முடிவுக்கு வா..”

“ரம்யா அரண்மனைக்குள் இருப்பவள்..”

“பட்ஷே.. சொந்தபந்தங்களின் ஃபங்ஷனுக்கு ஃபேமிலியுடன் அட்டெண்ட் பண்ணுகிறவள்.. யு நோ.. எங்க ஃபேமிலி ரவியோட ஃபேமிலிக்கு குளோஸ் ரிலேடிவ்.. இதை நந்தினி அறியுமோ..”

‘நீ ஓடி வந்தவள்..’ தரங்கிணியின் விழிகள் சொல்லியதில் தொய்ந்து போனாள் நந்தினி..

“தனபாலன்..! என் அண்ணன்..! கேரளத்தின் ஸ்டார் இமேஜில் இருக்கிற கோடிஸ்வர பிஸினெஸ் மேன்களில் ஃபர்ஸ்ட் பொசிஷன் ரவியத்தானுக்கென்றால் செகண்ட் பொசிஷனில் என் அண்ணன் இருக்கிறான்..”

“இல்லையே.. செகண்ட் பொசிஷனில் நிறையப் பேர் இருக்கிறதா நான் பிஸினெஸ் மேகசின்ல படிச்சேனே..”

தரங்கிணியின் முகம் அவளது இயல்பான பயங்கரத்துக்கு ஓர் கணம் மாறியது.. மறுகணத்தில் சுதாரித்தவள்..

“என் அண்ணனோடு சிலர் இருக்கலாம்.. பட்ஷே.. என் அண்ணன் ரம்ய மாலினியை விவாகம் கழித்து விட்டால் செகண்ட் பொசிஷனில் என் அண்ணன் மட்டும் தான் இருப்பான்.. அவனுடன் இருப்பவர்கள் தேர்டு பொசிஷனிற்குப் போய் விடுவார்கள்..” என்று சொன்னாள்..

சொன்னவள் அத்துடன் நிறுத்தாமல்..

“அந்த நாள் வெகு தொலைவில் இல்லை..” என்றாள்..

அவளது கண்களில் மிதந்த கனவில் நந்தினிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது..

“யு ஸீ நந்தினி.. ரம்ய மாலினிக்காக எதையும் செய்யும் ரவியத்தான் அவளுடைய காதலை நிறைவேற்றி வைக்க டிரை பண்ணிக் கொண்டிருக்கிறார் பட்ஷே.. என் அண்ணன் என்னை ரவியத்தான் மேரேஜ் பண்ணிக் கொண்டால்தான் அவன் ரம்ய மாலினியை மேரேஜ் பண்ணிக் கொள்வான்

என்கிற கண்டிஷனை முன்னால் வைத்திருக்கிறான்.. இதுவரை அதை மறுக்காத ரவி இனி அதை மறுக்க நினைக்கலாம்.. அப்படி மறுத்தால் நிச்சயமாக என் அண்ணன் ரம்யாவை மேரேஜ் பண்ணிக்க மாட்டான்.. ரவி அதைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்க மாட்டார்.. தங்கைக்கு துரோகம் செய்து விட்ட குற்ற உணர்வு அவர் மனதில் வந்து விடும்.. முழு மனதோடு நிம்மதியாக உன்னை அவர் மேரேஜ் பண்ணிக் கொள்வாருன்னா நினைக்கிற..?”

‘கடவுளே..!’ விழி மூடி தோற்றுப் போனவளாக தளர்ந்து நின்று விட்ட நந்தினியைத் திருப்தியுடன் பார்த்தாள் தரங்கிணி..

‘இது.. இது.. இது.. இதைத்தானே எதிர்பார்த்தேன்..’

நந்தினியின் மனதில் குருதியைக் கொட்ட வைத்து சந்தோஷம் தரங்கிணியின் மனதினில் குளிர்ச்சியைக் கொட்டியது..

# அத்தியாயம் 225

“ரவியின் மனதை விடு.. அவர் மனது கல் மனது.. தங்கை மனதில் யாரை நினைத்தால் என்னன்னு உன்னை மேரேஜ் பண்ணிக்க நினைக்கலாம்.. ரம்யாவின் மனது அங்ஙனவா..? அவள் மனது பூப்போல மென்மையானதாச்சே நந்தினி.. என் அண்ணனை மறந்து அவள் எங்ஙன ஜீவிப்பாள்..?”

‘அந்த அளவுக்கா தனபாலனை ரம்ய மாலினி காதலிக்கிறாள்..?’ நந்தினிக்கு மயக்கம் வருவதைப் போல இருந்தது..

“உனக்கென்ன வந்தது நந்தினி..? நீ எங்கிருந்தோ வந்தவள்.. ரம்ய மாலினியைப் பற்றியும் அவளுடைய காதலைப் பற்றியும் உனக்கென்ன கவலை..? உனக்குத்தான் கனவிலும் நினைக்காத வாழ்க்கை கிடைக்கப் போகிறதே.. என்ஜாய் இட் வித் ஹேப்பி.. யார் எப்படிப் போனால் உனக்கென்ன..?”

நந்தினிக்கு தொண்டையை அடைத்தது.. இப்படியொரு இடர் வருமென்று அவள் நினைத்தும் பார்க்கவில்லையே..

வயநாட்டில் ஒளிந்து மறைந்து வேலை பார்க்கத்தான் வந்தாள்.. வந்த இடத்தில் ரவிச்சந்திரனின் கவர்ந்திழுக்கும் கவர்ச்சி நிரம்பிய அழகில் மயங்கிப் போனாலும் மனதை இழுத்துப் பிடித்துத் தள்ளி நின்றாளே.. அவன் காதல் சொல்லியும் அவனது காதலை ஏற்றுக் கொள்ளாமல் விலகி நின்றாளே..

‘அப்போல்லாம் இந்தக் காதலெனும் மாயப்பிசாசு என் மனசுக்குள் புகுந்து கொன்று திங்கலையே..’ நந்தினிக்கு அழ வேண்டும் போல இருந்தது.. ரவிச்சந்திரன் அவளுக்குக் கிடைப்பானா என்ற பயம் எழுந்து மனம் முழுவதையும் ஆக்ரமித்தது.. அவளுடைய காதல் நிறைவேற யாதொரு தடையும் இருக்காது என்று அடிமனதில் வேர் விட்டு ஆலவிருட்சமாக எழுந்து நின்ற நம்பிக்கை தகர்ந்து சரிந்தது..

‘‘ரவிச்சந்திரனுக்கு வேண்டுமென்றால் காதல் பெரிதாக இருக்கலாம் பட்ஷே.. எண்ட சேட்டனுக்கு ஞான் மட்டுமே பெரிது.. என்னை ரவிச்சந்திரன் இக்னோர் பண்ணினால் டெபனிட்டா அவன் ரம்ய மாலினியை இக்னோர் பண்ணுவான்.. மனசிலாயி.. பை.. ஸீ யு.. மறுபடியும் உன்னைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை தான்.. நீயாக

ஓடிப் போனால் சரி.. போகலைன்னா பார்த்துத்தானே ஆகனும்..? அதுதான்.. ஸீ யு ன்னு சொன்னேன்..”

தான் சொன்ன ‘ஸீ யு’க்கான தன்னிலை விளக்கத்தைக் கொடுத்து விட்டு ‘ராணி நடை’ போட்டு சாலையில் நிறுத்தி வைத்திருந்த காருக்குச் சென்று விட்டாள் தரங்கிணி.. அவள் காரைக் கிளப்புவதற்கும் ரம்ய மாலினி செல்ஃபோன் பேச்சை முடித்து விட்டு அருகில் வருவதற்கும் மிகச் சரியாக இருந்தது..

“ஸாரி நந்தினி.. லேட் ஆகிருச்சு..” தாமதத்திற்கு வருத்தம் தெரிவித்தவள் தரங்கிணியின் காரைப் பார்த்ததும் பிரகாசமானாள்..

“தரங்கிணியின் கார் போல இருக்கே..” ரம்ய மாலினியின் ஆவலில் நந்தினியின் மனம் தொய்ந்தது..

“ஆமாம்.. அது அவங்க கார்தான்..” என்றாள் சோர்வாக..

“அவங்களா வந்திருக்காங்க..?”

ரம்ய மாலினி கேட்டுக் கொண்டிருந்தபோதே தரங்கிணியின் கார் பறந்து விட்டது.. ரம்ய மாலினியின்

முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தை நந்தினியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

‘இந்த ஏமாற்றம் எதற்காக..? அப்படின்னா தரங்கிணி சொன்னது உண்மைதானா..?’

“அவங்க உன்னுடன் பேசினாங்களா நந்தினி..?” அவளுடன் ஒன்றுபட்டு விட்ட உணர்வையும், நட்பின் நெருக்கத்தையும் தந்த ‘நீ, உன்’ என்பது போன்ற ஒருமை விளிப்பு அப்போது ஓர் விதமான அன்னியப்பட்டு விட்ட தனிமையுணர்வை நந்தினிக்குள் விதைத்தது.. தரங்கிணியை மட்டும் அவள் ‘அவங்க’ என்று மரியாதையுடன் அழைப்பதா என்று நந்தினியின் மனது சிணுங்கியது..

“ம்ம்ம்.. பேசினாங்க ரம்யா..”

“நானும் உன்னுடன் வந்திருக்கிறேன்னு அவங்களிடம் சொன்னாயா..?”

“ம்ம்ம்.. சொன்னேன் ரம்யா..”

“தெரிந்துமா எனக்காக வெயிட் பண்ணி என்னைப் பார்த்துப் பேசாமல் போயிட்டாங்க..”

‘தெரிந்தேதான் அவள் போயிருக்கிறாள்..’ நந்தினியின் மனம் சோர்ந்தது.. வேண்டுமென்றே தான் தரங்கிணி ரம்ய மாலினியைச் சந்திக்காமல் போயிருக்கிறாள் என்பது நந்தினிக்குப் புரிந்தது.. ரம்ய மாலினிக்கு எப்படி அதை புரிய வைப்பாள்..? ரம்ய மாலினியுடன் பேசாமல் விலகிச் சென்றால் ரம்ய மாலினி எந்த அளவுக்கு வருத்தப்படுவாள் என்பதை நந்தினி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே ரம்ய மாலினியைக் கவனிக்காததைப் போல புறக்கணித்து விலகிச் சென்றிருக்கிறாள்..

“என்மீது அங்களுக்கு ரொம்பப் பிரியம் நந்தினி..”

‘இல்லை ரம்யா.. அவளுக்கு உன்மீது உண்மையான பிரியம் இருந்ததில்லை.. இனி இருக்கப் போவதும் இல்லை.. அவளுக்குத் தேவையானது உன் அண்ணனின் மனைவியென்ற பெருமை.. உன் அண்ணன்மீது கூட அவளுக்குக் காதலில்லை.. பிரியமில்லை..’

“அன்புன்னா அன்பு.. அப்படியொரு அன்பு நந்தினி..”

“ஓ...”

ரம்ய மாலினி எதையோ சொல்லத் துடித்து நாணம் வந்ததினால் அதை மறைத்து தவித்ததில் நந்தினி தவித்துப் போனாள்..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“நந்தினி..”

“சொல்லு.. ரம்யா..”

“நந்தினி.. நான்..”

அன்றொரு நாள் தன் மனதிலிருந்த காதலை உத்ராவிடம் சொல்ல முடியாமல் நந்தினி திணறிய திணறலை ரம்ய மாலினியிடம் கண்டாள் அவள்.. அது உணர்த்தியது ஒன்றுதான்.. ரம்ய மாலினியின் மனதில் காதல் உணர்வுகள் மலர்ந்திருக்கின்றன..

ரம்ய மாலினி திணறிய திணறலைக் காணச் சகிக்காமல் அவளே கேட்டு விட்டாள்..

“ரம்யா.. உன் மனதில் யார் மீதாவது எண்ணம் இருக்கிறதா..? ஐ மீன்.. உன் மனதில் உண்மையாகவே மன்னாதி மன்னன் யாராவது இருக்கிறாங்களா..?”

“நந்தினி..”

ரம்ய மாலினியின் சிவந்த முகம் மேலும் சிவந்தது.. ரகசியத்தை தோழியிடம் பகிர்ந்து கொள்ளப் போகும் குறுகுறுப்பை அவள் விழிகளில் கண்டாள் நந்தினி..

“இப்போப் போனாங்கள்ல.. தரங்கிணி..”

“ம்ம்ம்...”

எந்த விவரம் நந்தினியின் வாழ்வைப் பாதிக்கப் போகிறதோ.. அந்த விவரத்தை மனம் கனக்க செவி மடுத்தாள் நந்தினி..

“தரங்கிணியோட அண்ணன்.. தனபாலன்..” மேலே பேச முடியாமல் ரம்ய மாலினி தடுமாறினாள்..

“அவரை நீ காதலிக்கிறயா ரம்யா..?” வெறுமையான குரலில் கேட்டாள் நந்தினி.. அவளுக்குள் பரவிய வெறுமையில் அவளுக்கே அவள் மீது கோபம் வந்தது.. அவளுக்கொரு நியாயம்.. ரம்ய மாலினிக்கு ஒரு நியாயமா..?

அவள் மனதில் காதல் வந்திருப்பதைப் போல ரம்ய மாலினிக்கும் காதல் வரக் கூடாதா..?

“காதல்ன்னு இல்லை நந்தினி..”

நந்தினியின் வயிற்றில் பாலை வார்த்தாள் ரம்ய மாலினி..

“அப்ப.. நீ அவரைக் காதலிக்கலையா..?” நந்தினி பரபரத்தாள்..

“என் மனதில் அவர் மீது ஒரு பிடித்தம் இருக்கிறது நந்தினி.. அது காதலான்னு எனக்குத் தெரியாது.. பட்.. அவரை மட்டும்தான் நான் ஸ்பெஷலா நினைத்துப் பார்த்திருக்கிறேன்.. வேறு யாரையும் அப்படி நினைத்துப் பார்த்ததில்லை..”

பரபரத்த நந்தினியின் உற்சாகம் புஸ்வாணமாகி விட்டது.. காற்றுப் போன பலூனாக அவள் தொய்ந்து போனாள்.. ரம்ய மாலினி தேவதைப் பெண்.. அவள் மனதில் பிரத்யேகமாக ஒருவனைப் பற்றி நினைத்திருக்கிறாள் எனும் போது அந்த நினைவுகளுக்கான மரியாதையைக் கொடுக்க வேண்டாமா..?

“உனக்கு அவரைப் பிடித்திருக்கில்லை.. அப்புறம் என்ன..?”

நந்தினி சடுதியில் தன்னையும் தன் நலனையும் மறந்து ரம்ய மாலினியின் தோழியாக மென்மையாக முறுவலித்தாள்..

“அப்புறம் என்னன்னா..?” ரகசியச் சிரிப்புடன் கேட்ட ரம்ய மாலினியின் முகத்தில் சந்தோஷப் பூ மலர்ந்திருந்தது..

“அவரை உங்களுக்குப் பிடித்திருக்கிற விவரத்தை அத்தை, மாமாவிடம் சொல்லலாமே..”

“அவர்கள் சொல்லித்தானே என் மனசில் அவரைப் பத்தின நினைவு வந்தது..”

“ஓ..”

தெரிந்த விவரத்தை தெரியாத விவரம் போல அப்போதுதான் தெரிந்து கொள்வதைப் போலப் பாவனை செய்ய வெகுவாக சிரமப்பட்டாள் நந்தினி.. அவளுக்கு நடிக்க வராது.. அஜந்தாவுக்கு அது கைவந்த கலையாக இருக்கக் கூடுமென்ற தேவையில்லாத நினைவு ஊடாடி எரிச்சலைக் கிளப்பியது..

மனதின் வலியில் கிளம்பியிருக்கும் எரிச்சலுக்கான காரணமாக அஜந்தாவை முன்னிருத்தத் தோதாக அவளது நினைப்பை வலிய இழுத்து வந்திருக்கிறது அவள் மனது என்று அவளுக்குப் புரியவில்லை.. மாறாக இன்னதென்று வரையறுக்க முடியாத எரிச்சல் உணர்வுக்கு ஆட்பட்டு அவள் துடிதுடித்தா ள்.. அதை உணராமல் தன் மனதிலிருந்த

உணர்வுகளைத் தோழியிடம் பகிர்ந்து கொள்ளும் உற்சாகத்தோடு பேசிக் கொண்டிருந்தாள் நந்தினி..

“தரங்கிணியின் ஃபேமிலி எங்க ஃபேமிலிக்கு ரிலேட்டிவ் நந்தினி.. குளோஸ் ரிலேட்டிவ்ன்னு கூடச் சொல்லலாம்..”

“ஓ...”

“குளோஸ் ரிலேட்டிவ்ன்னா அஜந்தா உரிமை கொண்டாடற அளவுக்கு குளோஸ் ரிலேட்டிவ்..”

“அப்படியா..?”

“அஜந்தா அப்பாவுக்குத் தங்கை மகள்ன்னு சொல்லிக்கிறா இல்லையா.. தரங்கிணியும் ஒருவகையில் அப்படித்தான்.. தரங்கிணியின் அம்மா அப்பாவுக்கு சித்தப்பா மகளாம்.. தட் மீன்ஸ்.. எங்க தாத்தாவுடைய கூடப் பிறந்த தம்பியின் மகள்.. இவங்களுக்குச் சப்போர்ட்டா எங்க தாத்தாவின் தங்கைகள் இருக்கிறாங்க.. அவங்களுக்கு அத்தையையும் அவங்க குடும்பத்தையும் பிடிக்காது..”

‘இந்த ஒரு காரணத்தினாலேயே இவளுக்கு தனபாலனைப் பிடித்திருக்க வேண்டும்..’ ரம்ய மாலினியும் அதைத்தான் சொன்னாள்..

“எங்க ரிலேட்டிவ்ஸ்ல எங்க அத்தையின் குடும்பத்தை எதிர்த்து நிற்கிற துணிச்சல் இவங்க குடும்பத்துக்கு மட்டும்தான் இருக்கு நந்தினி..

மத்தவங்க அவந்திகா அத்தையின் குடும்பத்தை எதிர்த்து நிற்கத் தயங்குவாங்க..”

‘இப்படியொன்னு இருக்கா..’

“தரங்கிணி இருக்காங்களே.. அவங்க அசால்ட்டா அஜந்தாவை டாமினேட் பண்ணிட்டுப் போய்க்கிட்டே இருப்பாங்க.. அவங்க பண்ணுகிற இன்சல்ட்டில அஜந்தா நான்கு நாள்களுக்கு எழுந்திருக்க முடியாம குளிர் ஜுரம்ன்னு படுத்திருவா..”

‘இவ அஜந்தாவை விட டேன்ஜரஸ்ன்னு இதிலிருந்தே உனக்குப் புரியலையா ரம்யா..?’ கேட்க நினைத்ததைக் கேட்க முடியாமல் ஊமையானாள் நந்தினி.. இதைக் கேட்க அவள் யார் என்ற தன்னிரக்கம் அவளைக் கலக்கியது..

“தனபாலன் ஹேண்ட்சம், அண்ணனுக்கு அடுத்த படியாப் பேசப்படற யங் பிஸினெஸ் மென்களில ஒருத்தர் அப்படிங்கிற ரீசனுக்காக எல்லாம் அவர் மேல சாப்ட் கார்னர் வரலை நந்தினி.. என் அண்ணனைப் பத்தி உனக்கே

தெரியும்.. இவரை விடப் பெரிய பொஸிஷனில இருக்கிறவரா.. இன்னும் ஹேண்ட்சம்மா, பெட்டரா ஒருத்தரை எனக்காக அண்ணன் செலக்ட் பண்ணிக் கொண்டு வந்து நிறுத்தும்..”

‘அப்புறமும் ஏன் ரம்யா தரங்கிணியின் குடும்பத்தில போய் மாட்ட நினைக்கிற..?’

ரவிச்சந்திரன் தரங்கிணியின் அண்ணனுக்கு ரம்யவைக் கொடுக்கக் கூடாது என்று பேசியதாக ஒரு நினைவு நந்தினிக்குள் வந்து வந்து போனது.. அன்று இதைக் குறித்த அக்கறையோ ஆவலோ இல்லாமல்.. ஏதோ ஒரு செய்தியாக மட்டும் அவள் கேட்டுக் கொண்டாள்..

‘அது ரம்யாவுக்குத் தெரியுமா..?’ தெரியவில்லையென்றால் அதைத் தெரியப் படுத்த ஒரு போதும் நந்தினி முயல மாட்டாள்.. அந்த வேலைகளை அஜந்தாவும், தரங்கிணியும்தான் செய்வார்கள்.. நந்தினியால் செய்ய முடியாது.. அது அவளது குணமல்ல.. ரம்ய மாலினி தன் அண்ணனின் ஆளுமையின் மீது பிரியம் கொண்டவள்.. அவனைக் கதாநாயகனாகப் பார்த்துப் பெருமை கொள்பவள்.. அவன்தான் அவளுக்கு எல்லாமும்.. வீணாவின் தாய்மடியையும் தாண்டிய பாதுகாப்பை ரவிச்சந்திரன்தான்

தங்கைக்கு அளித்துக் கொண்டிருந்தான்.. அனைத்து அடையாளங்களையும் மறந்து தன்னை ரவிச்சந்திரனின் தங்கையென்று மட்டுமே முதன்மையாக அடையாளம் சொல்லும் ரம்ய மாலினிக்கு மட்டும் ரவிச்சந்திரனின் முடிவு தெரிந்திருந்தால் தனபாலனை ஓர் நொடியில் மறந்து விட மாட்டாளா..?

# அத்தியாயம் 226

**நி**ச்சயமாக ரம்ய மாலினி அதைச் செய்வாள்.. அண்ணனுக்குப் பிடிக்காத எதுவும் அவளுக்கும் பிடிக்காது.. ரவிச்சந்திரனுக்குத் தரங்கிணியைப் பிடிக்கவில்லை.. அவளது குணம் மோசம் என்பதை அவன் கணித்து விட்டான்.. அவள் இருக்கும் குடும்பத்தில் அவனது தங்கை நிம்மதியாக வாழ முடியாது என்று முடிவெடுத்து விட்டான் என்பது ரம்ய மாலினிக்குத் தெரியாதே..

அவளுக்குத் தெரிந்ததெல்லாம் தனபாலன் ரவிச்சந்திரனின் நண்பன், தனபாலனின் தங்கையான தரங்கிணியிடம் ரவிச்சந்திரன் இன்முகத்துடன் பேசுவான் என்பதுதான்.. நண்பனின் தங்கை.. நெருங்கிய உறவினர்.. ரம்ய மாலினியை தனபாலனுக்காக பெண் கேட்டிருக் கிறார்கள்.. இந்தக் காரணங்களினால் மட்டுமே ரவிச்சந்திரன் தரங்கிணியிடம் பேசிப் பழகினான் என்பதை தரங்கிணி கண்டு வைத்திருந்தாள்.. ரம்ய மாலினிக்குத்தான் அது தெரியாமல் போய் விட்டது..

“எனக்குத் தனபாலன் மேல சாஃப்ட் கார்னர் வருகிறதுக்கான ஒரேயொரு காரணம் என்ன தெரியுமா..?”

‘என்னவாக இருக்கும்..’

அதை அறிந்து கொள்ளும் ஆவலில்லா விட்டாலும் எதற்காக ரம்ய மாலினி தனபாலனுக்குத் தன் மனதில் இடம் கொடுத்தாள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று நந்தினியின் மனம் படபடத்தது..

ரம்ய மாலினியைப் போன்ற தேவதைப் பெண்ணின் மனதில் இடம் பிடிக்க தரங்கிணியின் அண்ணனுக்கு என்ன தகுதி இருக்கக் கூடும்..?

அபராஜிதனை எதிர்த்து நிற்பதற்கான தகுதியிருந்தால் போதும் என்று அந்த தேவதைப் பெண் சொன்னாள்..

“அவனெல்லாம் ஒரு ஆளா..? உன் அண்ணன் நினைச்சா ஒரு செகண்டில அவனை இருக்கிற இடம் தெரியாம ஆக்கி விடுவாரே ரம்யா..”

“உண்மைதான் நந்தினி.. அப்படி அண்ணன் செய்து விட்டால் அண்ணனுடைய வாழ்க்கை முழுவதும் அந்தப் பழி

தொடர்ந்து வந்துக்கிட்டே இருக்கும்.. என்னால் அண்ணன் அந்தப் பழியை ஏற்றுக்கனுமா..?"

"என்ன பேசற நீ.. தங்கைக்காக அண்ணன் பழியேத்துக்கிட்டா தப்பில்லை.. அத்தோடு அபராஜிதனே ஒரு அயோக்கியன்.. நேர்மையில்லாதவன்.. அவனை ஒழித்துக் கட்டினா பாராட்டத்தானே செய்வாங்க.. யார் பழி போடுவாங்க..?"

"எங்க தாத்தாவும் பாட்டியும் பழி போடுவாங்க.."

"ஓ.. பட்.. பாட்டி பழி போடத்தான் செய்வாங்க.. தாத்தா உன் அண்ணனுடன் அனுசரித்துப் போகிறவராச்சே.."

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.." வருத்தத்துடன் சிரித்தாள் ரம்ய மாலினி.. அவளின் அந்த வருத்தம் நந்தினியின் மனதை என்னவோ செய்தது.. பாதித்தது.. ரம்ய மாலினி ராஜபரம்பரையில் பிறந்த கோடிஸ்வரி.. உலகம் முழுவதும் வியக்கும் நட்சத்திர அந்தஸ்து கொண்ட இளம் கோடிஸ்வர தொழிலதிபனின் பிரியத்துக்குரிய செல்லத் தங்கை.. அவள் சிரிப்பில் வருத்தம் நிரம்பியிருக்கிறது என்றால் இதை என்னவென்று சொல்வது..? கடல்நீர் நடுவே குடிநீர் தேடும் துயரம் என்பது இதுதானோ..

“வருத்தப்படாதே ரம்யா..”

“வருத்தப் படத்தான் இந்த வாழ்க்கைங்கிறதைப் போல ஆகிப் போச்சு நந்தினி.. தாத்தா அண்ணனுடன் அட்ஜஸ்ட் பண்ணிப் போகிறதுக்கான ரீஸனே வேறு.. நியாய குணத்தாலேயும் அண்ணன் மேலே இருக்கிற பாசத்தினாலும் அவர் அட்ஜஸ்ட் பண்ணிப் போகலை.. நியாய குணம் இருக்கிறவரா இருந்தால் பெற்ற பிள்ளைகளுக்கு மத்தியில் ஃபார்ஷியாலிட்டி பார்த்திருக்க மாட்டார்.. இவருக்கு இவருடைய அப்பா பொறுப்பைத் தந்து ஒதுங்கிக் கொண்டதைப் போல என் அப்பாவிடம் பொறுப்பைக் கொடுத்து ஒதுங்கியிருப்பார்.. இத்தனைக்கும் தாத்தாவுக்கு தம்பி இருக்கிறார்.. அப்பாவுடன் பிறந்தது அவந்திகா அத்தை மட்டும்தான்.. இருந்தும் தாத்தா அப்பாவிடம் பொறுப்பைக் கொடுக்காம இறுக்கிப் பிடிச்சுக்கிட்டார்.. அவரோட டாமினேஷன் குறையவே இல்லை.. அப்பாவை தலையெடுக்க விடவேயில்லை..”

‘அதுதான் தெரிந்த கதையாச்சே..’

இதை வருத்தப்பட்டு மனபாரத்தை இறக்கி வைத்துக் கொண்டிருக்கும் தோழியிடம் சொல்ல முடியுமா..?

அதனால் வெறுமனே “ஊம்” கொட்டி வைத்தாள் நந்தினி..

“அத்தை மட்டும் செல்வாக்கா வாழ்ந்திருந்தா தாத்தா அண்ணனுடன் அட்ஜஸ்ட் பண்ணிப் போகவே மாட்டார்.. இந்த அரண்மனையும் ‘தம்புரான்’ பட்டமும் அவருக்கு மட்டும்தான் சொந்தம்ன்னு ஆணவம் காட்டியிருப்பார்.. அப்படி ஆட முடியாம அத்தை அவங்க லைஃபில தோற்றுப் போய் எங்க அரண்மனையிலேயே குடும்பத்தோடு செட்டில் ஆகிட்டாங்க.. மாமாவோட ஊதாரித்தனத்திலே தாத்தாவோட அத்தனை புராப்பர்ட்டீஸும் அண்ணன் பெயருக்கு மாறி விட்டது.. தாத்தாவே நினைத்துப் பார்க்க முடியாத லெவலிலே அண்ணன் உயர்ந்து நிற்குது.. இன்றைக்கான தாத்தாவின் ஐடெண்ட்டி ‘தி கிரேட் பிஸினெஸ் மேக்னெட் ரவிச்சந்திரனின் தாத்தா..’ என்பது

தான்.. அண்ணன் தள்ளி நின்றால் இந்த வயநாட்டில் பறக்கும் குயில்கூட தாத்தாவை மதிக்காது.. ஸோ.. இன்றைக்கு இருக்கும் நிலைமையிலே தாத்தாவுக்கு அண்ணனை அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போகிறதைத் தவிர வேறு வழியே இல்லை..”

“ம்ம்ம்..”

“அத்தைக்கு அதிக பாதிப்பில்லை.. அத்தையோட ஃபேமிலி எங்க அரண்மனையிலே வசதியாக வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க.. அத்தை பிள்ளைகளை அண்ணன் படிக்க வைத்தது... அபராஜிதனை கேரளாவுக்குள் கால் வைக்கக் கூடாதுன்னு விரட்டி விட்டாலும் மும்பையில் பொறுப்பான பதவி கொடுத்துத்தான் தங்க வைத்திருக்குது... அஜந்தாவுக்கும் அப்படித்தான்.. நாளைக்கு அவளுக்கு மேரேஜ்ன்னு வருகிற போது குறைவில்லாம சீர் செய்துதான் அண்ணன் மேரேஜ் பண்ணி வைக்கும்..”

“ம்ம்ம்..”

“இதில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் தாத்தாவின் ஒரிஜினல் முகம் வெளியில் வந்து விடும் நந்தினி.. இது அண்ணனுக்கும் தெரியும்.. அவந்திகா அத்தைக்கும் அவங்களோட குடும்பத்துக்கும் தெரியும்.. அதனால்தான் அவங்க திமிரா இருக்கிறாங்க.. அண்ணன் தாத்தா, பாட்டி மேலே ஒட்டுதல் இல்லாம இருக்கு..”

‘நன்றியில்லாத மனிதர்கள்..’

எப்படிப்பட்ட சொந்தங்களின் மத்தியில் அவளுடைய கம்மாண்டர் வாழ்கிறான் என்று துயரம் கொண்டாள் நந்தினி.. சதா சர்வ காலமும் உழைத்துக் கொண்டிருப்பவனின் நிழலில் சகலவிதமான சௌகரியங்களுடன் வாழ்கிறவர்களின் மனதில் ரவிச்சந்திரனின் மீது அன்பும், மதிப்பும், மரியாதையும் இருக்க வேண்டாமா..?

‘எங்கே..? இவங்க மனசில் குரோதமும், காழ்ப்புணர்ச்சியும்தானே கொட்டிக் கிடக்கு..?’

“அபராஜிதனுக்கு அண்ணனாலே ஏதாவது ஆச்சுன்னு தெரிஞ்சா தாத்தா எந்த எல்லைக்கும் போவார்..”

“அவரால் என்ன பண்ண முடியும்..?”

“பழிபோட முடியும்.. இப்பப் புரிந்ததா..?”

நந்தினிக்குப் புரிந்தது.. அருள்மொழிவர்மனும், யாழினியும் பழி போடுவார்கள் என்பதற்காக அஞ்சி விலகுபவனல்ல ரவிச்சந்திரன்.. ரம்ய மாலினியும் அதைத்தான் சொன்னாள்.. “இவங்க பழி போடுவாங்கன்னு அண்ணன் யோசிக்காது.. அம்மா யோசிக்கிறாங்க.. பெரியவங்களின் மனவருத்தம் பிள்ளைகளைப் பாதிக்கக் கூடாதுன்னு நினைக்கிறாங்க.. அத்தையின் பிள்ளைகள் வாழ

வழி செய்ன்னு அண்ணனிடம் அம்மாதான் ரெக்கமண்ட் பண்ணினாங்க.. அவங்க கெட்டவங்களா இருந்தாலும் நீ அவங்களுக்கு கெடுதல் செய்து விடாதேன்னு அம்மாதான் ரிக்வஸ்ட் பண்ணினாங்க.. தாத்தா, பாட்டி சொந்த பந்தங்களிடம் அழுது புலம்பினா அது அண்ணனின் இமேஜை பாதித்துரும்ன்னு அம்மா நினைக்கிறாங்க..” நந்தினி பெருமூச்சு விட்டாள்.. பணமும் பலமும் இருந்தால் மட்டும் போதுமென்று யார் சொன்னது.? அதையும் தாண்டி சுற்றியிருப்பவர்கள் சூழ்ச்சியில்லாதவர்களாக இருக்க வேண்டும்..

‘நிம்மதியில்லாத வாழ்வு என்ன வாழ்வு..?’ ரம்ய மாலினி எதனால் சிரிப்பை மறந்தாள் என்று இப்போது நந்தினிக்குப் புரிந்தது.. இப்படிப்பட்ட மனிதர்களின் மத்தியில் எப்படி அவளால் சிரித்து சந்தோஷம் கொண்டாட முடியும்..?

‘அப்படி ஒதுங்கிப் போகிறவளையும் கண்ணிலே காண விடாமல் கரித்துக் கொட்டித் துன்பப் படுத்துகிறார்களே..’ “அபராஜிதனை அடக்குவது சிரமம் நந்தினி.. அண்ணனிடம் மட்டும்தான் அவன் பயப்படுவான்... எனக்கு அது போதாது.. என்னை மேரேஜ் பண்ணிக் கொள்கிறவனிடமும் அவன் பயப்பட வேண்டும்.. என் நிழலை நெருங்கக்கூட அஞ்சி

நடுங்க வேண்டும்.. என் பெயரே சிம்ம சொப்பனமாக இருக்க வேண்டும்.. தெளிவாகச் சொல்வதாக இருந்தால் என் அண்ணனின் பராக்கிரமத்தில் பாதியாவது என்னை மேரேஜ் பண்ணிக் கொள்ளப் போகிறவனிடம் இருக்க வேண்டும்..

அபராஜிதனை ஓடவிட்டு மிதிக்கிறவனாக எவன் அஞ்சாமையுடன் இருக்கிறானோ அவனே என்னை மேரேஜ் பண்ணிக் கொள்ள முடியும்.. நான் என் அண்ணனின் சிறகுகளுக்கடியில் பாதுகாக்கப்பட்டு வளர்ந்தவள் நந்தினி.. அண்ணனின் போல்ட்னெஸ்ஸைப் பார்த்துப் பிரமித்திருக்கிறேன்.. அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் பாதியளவாவது என்னை மேரேஜ் பண்ணிக் கொள்ளப் போகிறவரிடம் இருந்தால்தான் என்னை ஸேவ் பண்ண முடியும்ன்னு நினைக்கிறேன் நந்தினி.. அபராஜிதனைப் பற்றி எனக்குத் தெரியும்.. எனக்கு மேரேஜ் ஆனாலும் என்னை அவன் நிம்மதியாக வாழவிட மாட்டான்..”

“உன் அண்ணன் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார் ரம்யா..”

“உண்டு இல்லையென்று பண்ணி விடும்தான்.. அது எனக்குப் பெருமை சேர்க்குமா..? என் ஹஸ்பெண்ட் அதைச்

செய்யனும் நந்தினி.. அதுதான் எனக்குப் பெருமையாக இருக்கும்..”

இதுதான் பெண்மனது.. நாடாளும் ராஜாவின் மகளாக இருந்தாலும் கணவனின் பலத்திலும், பணத்திலும் வாழவே சுயமரியாதையுள்ள மனைவி நினைப்பாள்.. இது இந்தியப் பெண்களின் நிலைப்பாடு..

“நினைத்துப் பார் நந்தினி.. உனக்கு அண்ணனைப் பிடிக்கும்தானே..”

“ரம்யா..”

“உன் மனது எனக்குத் தெரியும் நந்தினி.. உனக்கு எதனால் அண்ணனைப் பிடித்திருக்கிறது..?”

பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள் நந்தினி.. அது, இது என்று வரையறுத்துச் சொல்ல முடிவதா அவனது குண இயல்பு..? வரையறுக்க முடியாத மாவீரனல்லவா அவன்..!

“அண்ணன் இரும்பு மனிதன் நந்தினி.. அவன் பக்கத்தில் இருக்கும் வரை யாருக்கும் எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது.. அதுவே அவன் பக்கத்தில் இல்லாமல் வேறு ஒருவரின் பாதுகாவலுக்கு நான மாறும் போது அவனளவுக்கு

இல்லாவிட்டாலும் அவனில் பாதியளவாவது பலவானாக அவர் இருக்க வேண்டுமல்லவா..?”

ரம்ய மாலினியின் கேள்வியில் பொதிந்திருந்த நியாயம் நந்தினியை வாயடைக்க வைத்தது.. அவள் மனம் கலங்கியது..

‘எனக்கான கம்மாண்டரின் பாதுகாவல் எப்போதும் நிலைக்குமா..? அவன் பக்கத்தில் நானிருக்க முடியுமா..? கடைசி வரை எனது காதலனாக, காவலனாக வாழ்க்கைப் பயணத்தில் கூட வருவானா..?’

“இப்போது சொல்லு நந்தினி.. நான் தரங்கிணியின் அண்ணன் மீது சாஃப்ட் கார்னர் வைத்திருப்பதில் தவறேதும் இல்லையே..” நந்தினி சோகையாக சிரித்து வைத்தாள்.. ஒன்று மட்டும் அவளது மனதில் பதிந்தது.. ரம்ய மாலினி தனபாலனின் மீது காதல் கொண்டிருப்பதாக சொல்லவே யில்லை.. அவன்மீது ஒருவகையான சாப்ட் கார்னர் இருப்பதாகத்தான் சொல்கிறாள்..

‘இதுவே பெரிதானதுதானே..’

“வயநாட்டில் ஒரு காலத்தில் தாத்தாவின் ஆதிக்கம் பெரிதாக இருந்தது நந்தினி.. அவருடைய அத்தனை

புகழையும் செல்வாக்கையும் அவந்திகா அத்தை தன்பக்கமாகவும் தன் குடும்பத்தின் பக்கமாகவும் திருப்பி விட்டுட்டாங்க.. என்னவோ தாத்தாவுக்கு அவங்க மட்டும்தான் ஒரே பெண்ணாய் பிறந்தது போலவும், அப்பா அவங்களுக்கு சேவகம் பண்ணும் சேவகனைப் போலவும் நடந்துக்குவாங்க.. அப்பா, அம்மாவை மேரேஜ் பண்ணி அண்ணனும், நானும் பிறந்த பின்னாலும் தாத்தாவோட பேரப் பிள்ளைகள் நாங்க என்கிற ஐடெண்டி எங்களுக்கு கிடைக்கவேயில்லை.. அந்த ஐடெண்ட்டி ஆட்டோ மேட்டிக்கா அவந்திகா அத்தையோட பிள்ளைகளுக்கு சொந்தமாகிருச்சு.. இதை முதலில் இருந்தே சொல்லிக் காட்டியது தரங்கிணியோட குடும்பம் மட்டும்தான் நந்தினி.. அவந்திகா அத்தையையும், அஜந்தாவையும் அவங்க கன்சிடர் பண்ணிக்கவே மாட்டாங்க.. அபராஜிதனை ஒரு ஆளா மதிக்கவே மாட்டாங்க.. அத்தை குடும்பத்தோட சூழ்ச்சி அவங்களிடம் எடுபட்டதில்லை நந்தினி.. தரங்கிணி குடும்பத்தின் மீது எனக்கிருக்கும் அட்டாச்மெண்ட்டுக்கான இம்பார்ட்டண்ட் ரீசன் இது மட்டும்தான்..”

அஜந்தா குடும்பத்தின் சூழ்ச்சியே தரங்கிணியின் குடும்பத்திடம் எடுபடாது என்றால் தரங்கிணியின் குடும்பம் எப்பேர்பட்ட சூழ்ச்சிக்கார குடும்பமாக இருக்கும்..?

# அத்தியாயம் 227

‘இதை ஏன் ரம்யா யோசித்துப் பார்க்கவில்லை..?’

மனதில் அலைமோதிய கேள்வியுடன் நடந்தாள் நந்தினி.. ரம்ய மாலினியுடன் தனியே உலாவ வந்ததில் நன்மையடைந்திருப்பது அவளா இல்லை ரம்ய மாலினியா என்று மனது சோர்ந்தது.. இருவருமே இல்லை என்று தோன்றியது.. ஏன் அப்படித் தோன்றுகிறது என்று யோசித்துப் பார்த்தவளுக்கு தெளிவான விடை கிடைத்தது.

அது.. ரம்ய மாலினி என்ற தேவதைப் பெண் வாழ்வதற்குத் தகுதியான இல்லம் தரங்கிணியின் இல்லமல்ல என்பதுதான்.. பொடித்தனமில்லாத, சூழ்ச்சிகளைப் பற்றி யோசிக்கத் தெரியாத, பெருந்தன்மை மிக்க சாந்தமான ரம்ய மாலினிக்குத் தரங்கிணியைப் போன்ற சூழ்ச்சி மிக்க சூனியக்காரி நாத்தனாராக அமைவதா..? தரங்கிணி பிறந்த வீடா.. ரம்ய மாலினிக்கு புகுந்த வீடாக அமைய வேண்டும்..? அங்கே ரம்ய மாலினியால் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து விட முடியுமா..? “ஏன் பேசாமலே வர்றீங்க..?”

‘என்னத்தைப் பேச..?’

பதில் சொல்லாமல் புன்முறுவல் பூத்தாள் நந்தினி.. அரண்மனை நெருங்கி விட்டதில் ரம்ய மாலினியும் பேசுவதை நிறுத்தி விட்டாள்... போர்டிகோவில் நின்றிருந்த அஜந்தா இருவரையும் குரோதமாக முறைத்துப் பார்த்தாள்..

‘இவளாலும் இவ குடும்பத்தினாலும்தான் ரம்யாவின் மனதில் தரங்கிணியின் குடும்பத்தைப் பற்றிய எண்ணம் விழுந்திருக்கு..’

மனதுக்குள் திரண்டிருந்த ஒட்டு மொத்த ஆத்திரத்தையும், வெறுப்பையும் ஒன்று திரட்டி பதிலுக்கு முறைத்துப் பார்த்தாள் நந்தினி..

‘விட்டா குரல்வளையை நெறித்துருவா போல இருக்கே..’ அஜந்தாவே அரண்டு போனாள்..

“அம்மே..! சாய் கொண்டு வரட்டே..?” ஓமனா பிரசன்னமானாள்..

“ம்ப்ச்..” முகம் சுளித்தாள் நந்தினி..

அந்த முகச்சுளிப்பு தனக்கானது என்பதில் அஜந்தா பல்லைக் கடித்தாள்.. அது புரியாத ஓமனா..

“மேமை அம்மேன்னு ஞான் விளிச்சு.. அதில மேம் வெப்பராளம் கொண்டோ..?” என்று திருதிருத்தாள்..

“தெரியுதில்ல.. தெரிஞ்சுக்கிட்டே ஏன் திரும்பத் திரும்ப அதையே செய்கிற..? உனக்கெல்லாம் ஒரு தடவை சொன்னா மண்டையில ஏறாதா..?” சிடுசிடுத்தாள் நந்தினி..

“அம்மே..”

அவளுடைய செல்ல ‘அம்மை..’ சிடுசிடுத்ததில் திகைத்துப் போய் தழுதழுத்தாள் ஓமனாக்குட்டி..

“ஒண்ட வந்த பிடாரி, ஊர் பிடாரியை விரட்டுச்சாம்.”

நந்தினியின் முதுமொழியில் அஜந்தா பத்ரகாளியானாள்..

“யாரை பிடாரின்னு சொல்கிற..?” என்று அவள் பாய்ந்ததில் ஓமனாவின் அறிவுக் கண் திறந்து கொண்டது.

‘ஓ.. எண்ட அம்மை ஈ அஜந்தாவயல்ல பறஞ் ..’ சந்தோஷமாகி அவளும் சம்சாரிக்க ஆரம்பித்து விட்டாள்..

“எந்தா அம்மே.. நந்தினி மேம் என்னியல்லா பறஞ் ..” ஊடே புகுந்தாள்..

“அவள் மேம்..! ஞான் உனக்கு அம்மையா..?” அஜந்தா உக்கிரமானாள்..

“ஞான் அம்மையெண்டு விளிக்கனுமெண்டு நிங்கதான் பறஞ் அம்மே..” ஒன்றுமறியாத சின்னப் பெண்ணாய் இமை கொட்டி மறுபடியும் ‘அம்மே’ போட்டாள் ஓமனா.. அஜந்தாவினால் பேச முடியவில்லை.. அவள் அப்படி ஒரு கட்டளையைப் பிறப்பித்திருப்பது உண்மைதான்.. வீட்டில் உள்ள மற்ற பெண்களான யாழினி, அவந்திகா, வீணா முதலியோரை ஓமனா ‘அம்மே’ என்று விளிக்கும் போது அஜந்தா மட்டும் ‘மேம்’ என்று விளிக்கப் படுவதா என்ற உரிமை முழக்கத்தில் அப்படியொரு கட்டளையைப் பிறப்பித்திருந்தாள்.. அதை வகையாய் இப்போது ஓமனா ஞாபகப்படுத்தியதில் பொறியில் மாட்டிய எலியானாள்..

“ஒ.. ஞான் சொல்வதையெல்லாம் நீ கேட்டு விட்டுத்தான் வேறு ஜோலி பார்க்கிறயோ..?” தோல்வியை ஒப்புக் கொள்ளாத அஜந்தாவாக பாய்ந்தாள்..

“அங்ஙன செவி மடுக்கலையெண்டா எண்ட ஜோலி போயிடுமல்லோ..” அப்பாவியாக கேட்டாள் ஓமனா..

‘ஈ நந்தினிக் கழுதை வந்த பின்னாலே வேலைக்காரிகூட யோசிச்சுப் பேச ஆரம்பிச்சுட்டா..’

அஜந்தாவுக்கு யோசனைகள் பிடிக்காது.. அதுவும் மற்றவர்கள் யோசிப்பதை அறவே விரும்ப மாட்டாள்.. வயநாட்டு அரண்மனையில் இருப்பவர்கள் யோசிக்க ஆரம்பித்து விட்டால் அஜந்தாவின் குடும்பம் என்ன ஆவது..?

“அதிகம் பேசாதே.. சொன்னதைச் செய்..” அதிகாரமாக உத்தரவிட்டாள் அஜந்தா..

“அம்மை வல்லதும் பறஞ்ஞோ..?” அவள் எதுவும் சொல்லவில்லையே என்று இமை கொட்டி கடுப்பேற்றினாள் ஓமனா..

“உன்னிடம் வல்லதும் (ஏதாவது) பறஞ் ட்டாலும்.. கேட்டு விட்டுத்தான் வேறு ஜோலி பார்ப்ப..”

“அம்மே.. ஞான் வல்லதும் தெற்று (குற்றம்) செய்யலையல்லோ.. அம்மே எந்துக்காக என்னிய வேறு ஜோலி நோக்கச் சொல்லிப் பறஞ் ...”

‘இவளை எப்ப நான் வேறு இடத்தில் ஜோலி பார்க்கப் போகச் சொன்னேன்..?’ அஜந்தாவுக்கு தலை வேதனையானது.. ஓமனா அந்த அரண்மனையில் உள்ளவர்களுக்கு இன்றியமையாத பணிப்பெண்.. யாழினிக்குக் கால்வலி தைலம் தடவி விட்டு..

அருள்மொழிவர்மனுக்குத் தலைவலி தைலம் எடுத்துக் கொடுத்து.. அவந்திகாவுக்கு கை பிடித்து விட்டு.. நொடிக்கொருதரம் அஜந்தா சொல்லும் வேலைகளை சுறுசுறுப்பாக ஓடியோடி செய்து கொடுத்து என்று ஓமனாக் குட்டியின் சிட்டுக்குருவி சுறுசுறுப்பிற்கு எந்தப் பணிப் பெண்ணாலும் ஈடு கொடுக்க முடியாது..

‘இவள் ஓடி விட்டால் அவ்வளவுதான்..’ ஆனானப்பட்ட அரச குடும்பமாக இருந்தாலும் சுறுசுறுப்பான பணிப்பெண்ணை அனுசரித்துத்தான் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.. அவர்களுக்கு என்ன.. இந்த அரண்மனை இல்லாவிட்டால் வேறு அரண்மனை.. ஓமனா இல்லாவிட்டால் வேறு ஒரு பணிப்பெண் அத்தனை வேலைகளை அதிவிரைவாக செய்து முடிப்பாளா..?

கேரளத்தில் ராஜ குடும்பங்களுக்கா பஞ்சம்..? தடுக்கி விழுந்தால் சமஸ்தானம்.. ஊருக்கு ஒரு ராஜ குடும்பம்..

“இதுதான் சாக்குன்னு வேறு இடத்தில ஜோலி பார்க்க ஓடிப் போயிடலாம்ன்னு ஐடியா பண்றயா..?”

“ஆ ஐடியா எனிக்கு இல்லா.. எந்து கொட்டாரமாக இருந்தாலும் ஈ வயநாட்டு கொட்டாரத்துக்கு நிகரில்லா.. ஈ

கொட்டாரத்திட தம்புராட்டி எண்ட வீணா அம்மையாக்கும்.. அவரிட ஜோலி பார்த்த ஞான் வேறு ஒரு தம்புராட்டியிட ஜோலி பார்ப்பதோ..? கேட்டே..”

‘ஈ ஓமனாக்குட்டி வீணா அத்தையை தம்புராட்டி என்று சொல்கிறா.. இதை பாட்டியிடம் பற்ற வைக்கனுமே..’

அஜந்தா ஒரு தீப்பந்தம்..! அவள் பற்ற வைத்தால்.. என்றால் படு விரைவில் பற்றிக் கொள்ளும்.. கொழுத்திப் போட அவளுக்குத் தீக்குச்சித் தேவையே இல்லை..

அங்கிருந்து பறந்து விரையத் துடித்தாள் அஜந்தா.. போகிற போக்கில் ஓமனாவை நோக்கி..

“இவ்வளவு நேரமா இங்கே கால் கடுக்க நின்றுக்கிட்டு இருக்கிறேன்.. என்னைப் பார்த்து சாய் கொண்டு வரட்டேன்னு ஒரு வார்த்தை கேட்கலை.. இவள் வந்தவுடன் ஓடி வந்து சாய் கொண்டு வரட்டேன்னு பறக்கிற.. அதுசரி.. வேலைக்காரிக்கு வேலைக்காரிதானே ஆதரவு கொடுத்தாகனும்..” என்று ஒரு அம்பை எய்து வைக்க.. அது நந்தினியின் மனதில் தைத்து வலியை உண்டாக்கியது..

“வேலைக்காரின்னா மட்டமில்லை ஓமனா.. நாம வேலை செய்து பிழைக்கிறோம்.. மத்தவங்களை அண்டிப் பிழைக்கலை..” பதிலுக்குப் பதில் கொடுத்து விட்டாள்..

“குட் ஷாட் நந்தினி..”

குதூகலமாக கைநீட்டி நந்தினியின் கை பற்றிக் குலுக்கினாள் ரம்ய மாலினி.. அஜந்தாவின் முகம் பயங்கரமாய் மாறியதில் விகாரமானது..

‘என்னை அண்டிப் பிழைக்கிறவன்னு சொல்கிறா..’

இதையும் யாழினியிடம் பற்ற வைக்கும் விதத்தில் பற்ற வைக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் அஜந்தா..

‘ஓமனா வீணா அத்தையைத் தம்புராட்டின்னு சொன்னா.. பாட்டியொன்னும் தம்புராட்டியில்லை.. வீணா அத்தையை அண்டிப் பிழைக்கிறாங்கன்னு ஈ நந்தினி சொன்னான்னு பாட்டியிடம் பற்ற வைக்கனும்..’

பற்ற வைக்கும் வம்புத் தீயில் நந்தினியை முக்கிய குற்றவாளியாக கோர்த்து விடத் திட்டம் தீட்டி விட்ட அஜந்தா அதைச் செயல்படுத்த விரைந்தோடினாள்.

“எண்ட நந்தினி மேம் வல்லிய கெட்டிக்காரியாக்கும்.. ஆ அஜந்தா அம்மை ஓடியே போயி.. எண்ட மேம் அம்மையை ஓட வைச்சு.. கேட்டே..” ஓமனா மகிழ்ந்து போனாள்..

“கேட்டே, கேட்டேன்னு கேட்டுக்கிட்டே இருக்கிறயே.. சாய் கொண்டு வரட்டேன்னு கேட்டதை மட்டும் தோதா மறந்திட்டயே.. ஞான் வல்லிய கெட்டிக்காரியல்ல ஓமனா.. நீதான் வல்லிய கெட்டிக்காரி..” சிரிக்காமல் நந்தினி சொல்ல ரம்ய மாலினி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்..

“ஹைய்யோ.. எண்ட மேம் ஜோக்கு பறஞ் .. மேம் பறஞ்ஞாலே சிரிப்புத்தானல்லோ..” ஓமனா சிரித்து மகிழ்ந்தபடி சாய் கொண்டு வர ஓடினாள்..

‘என் பிழைப்பு இப்படியாகி விட்டதே..’ நந்தினி வானத்தை வெறித்தாள்.. பனி படர்ந்த கரும் மேகங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் முகடுகளை முற்றுகையிட விரைந்து கொண்டிருந்தன.. நந்தினியின் மனம் கனத்தது.. சிரிப்பை மூட்டி விடும் விகடகவியாக மட்டும் அவள் விலகி நின்று விடுவாளோ என்ற பயம் வந்தது..

“எங்கே போயிருந்த..?”

காதில் விழுந்த கனத்த ஆண் குரலில் ரணமான மனம் சடுதியில் ஆறிவிட எழுச்சியுடன் திரும்பினாள்.. அவளையே இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் நெருங்கி வந்தான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் மனம் பொங்கியது.. அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன..

“நந்தினி..?”

“பாஸ்..”

தாயைத் தேடும் மழலையாக தேம்பியது அவள் குரல்.. ரம்ய மாலினி அதை உணராமல்..

“அண்ணா..” என்றாள் மலர்ச்சியாக..

அவளும் அங்கே இருக்கிறாள் என்ற உணர்வில் காதலர்கள் தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றார்கள்.. ரவிச்சந்திரனை விட்டு விலகாமல் மொய்த்து நின்றது நந்தினியின் பார்வை.. அவளது பார்வை வட்டத்திலிருந்து அவன் விலகினால் எங்கே அவளது வாழ்க்கைப் பாதையிலிருந்தே அவன் விலகி விடுவானோ என்று பயந்து நடுங்கியது நந்தினியின் பார்வை.. அதை

உணர்ந்தவனாக அவளையே பார்த்தபடி தங்கையிடம் பேச்சுக் கொடுத்தான் ரவிச்சந்திரன்..

“என் செக்கரட்டரியை எங்கே கடத்திக் கொண்டு போயிருந்த..?”

நந்தினியிடம் எங்கே போயிருந்தாய் என்று நேரடியாகக் கேட்ட கேள்வியை தங்கையிடம் அவன் நாசுக்காக கேட்டதில் மருண்டாள் நந்தினி..

மிகச் சின்ன விஷயத்தில் கூட தங்கையின் மனம் நோகக் கூடாது என்று இதமாக மாற்றிக் கேள்வி கேட்பவன் தங்கையின் மனதிலிருக்கும் எண்ணத்தை அறிந்தால் நந்தினியை விட்டு விலகி தரங்கிணியின் பக்கமாக சென்று விட மாட்டானா..?

“நாங்க வாக்கிங் போனோமே..”

சின்னக் குழந்தையின் குதூகலத்தோடு சொன்ன ரம்ய மாலினியின் கூந்தலைக் கனிவுடன் கோதி விட்டான் ரவிச்சந்திரன்.. நந்தினியை மறந்தவனாகத் தங்கையின் சந்தோஷத்தை அவன் ரசிக்கத் தொடங்கியதில் ஏக்கம் கொண்டாள் நந்தினி..

“என்னவோ வெர்ல்டு டூர் போனதைப் போல சந்தோஷப் படறியே..”

“இது வெர்ல்டு டூரை விட மேல் அண்ணா..”

“ஓ..”

ரவிச்சந்திரன் நெகிழ்ந்து போனான்.. மயிலிறகின் மன வருடலாக தங்கையை வாத்சல்யத்துடன் வருடிக் கொடுத்தது அவன் பார்வை.. அந்த நொடியில் அருமை மிகு அண்ணனாக.. சுபத்திரையின் கண்ணனாக அவனைக் கண்டாள் நந்தினி.. தம்பியுடன் பிறந்தவளின் மனம் நந்தகுமாரின் தங்கையாகப் பிறக்கவில்லையே என்று ஏங்கியது..

“வாக்கிங் போன இடத்தில உங்களுக்கு வேண்டியவங்களைப் பார்த்தோமே..”

நந்தினி துணுக்குற்றாள்.. தரங்கிணி ரவிச்சந்திரனுக்கு வேண்டியவளா.. இல்லை.. ரம்ய மாலினிக்கு வேண்டியவளா..? தங்கைக்கு வேண்டப்பட்டவள் தமையனுக்கும் வேண்டப்பட்டவளாக ஆகி விடுவாளோ..

“யாரது..?”

இயல்பாகத்தான் கேட்டான் ரவிச்சந்திரன்.. நந்தினிக்குத்தான் அதில் ஒரு எதிர்பார்ப்பு நிறைந்திருப்பதைப் போல தோன்றி வைத்தது.. அவளது மனம் ‘தடக், தடக்’ என்று மங்களூர் எக்ஸ்பிரஸின் வேக ஒலியைப் போல அடித்துக் கொண்டது..

“தரங்கிணி..!”

கண்களையும், கைகளையும் விரித்து முகம் மலர ரம்ய மாலினி சொன்னாள்.. ரவிச்சந்திரனின் மலர்ந்திருந்த முகம் ஒரு நொடியில் சுருங்கி விட்டது.

# அத்தியாயம் 228

அந்த ஓர் நொடியே நந்தினிக்குப் போதுமானதாக இருந்தது.. அவளைச் சுற்றிக் கவிந்திருந்த மன இருள் விலகி அங்கே பிரகாச வெள்ளம் பீறிட்டுப் பாய்ந்தது.. கழிந்த மணித்துளிகளில் அவளை உயிர்ப்பித்த அந்த மணித்துளியை சேகரித்து தன் மனதில் பத்திரப்படுத்திக் கொண்டாள் நந்தினி.. அவளுடைய மனதுக்கு இனியவனின் மனதுக்கு இனியவளாக தரங்கிணி இல்லையென்பதில் அவளது மனம் ஆறுதலடைந்தது..

“அவள் எனக்கு வேண்டியவளா..?”

முகம் சுருங்க ரவிச்சந்திரன் கேட்ட தொனி கடினமாக இருந்து வைத்ததில் ரம்ய மாலினியின் முகம் வாடி விட்டது.. அதில் நந்தினியின் மனது சங்கடம் கொண்டது..

“ரம்யா ஒன்றும் தப்பாய் சொல்லவில்லையே..” ரம்யாவுக்காக பரிந்து பேசினாள்..

“உன்னைக் கேட்டேனா..?” ரவிச்சந்திரன் அவளை உறுத்துப் பார்த்த பார்வையில் நந்தினிக்குள் நடுக்கம் கலந்த சுகம் உண்டானது..

அவனது கோபத்தில் பயம் வந்தாலும் அந்தக் கோபம் தரங்கிணியைப் பற்றிய பேச்சின் மீதானது என்பதில் சுகம் வந்தது..

“இல்லை.. நானும் ரம்யாவும் தான் வாக்கிங் போனோம்..” நந்தினி சொல்ல ஆரம்பிக்கும் போதே..

“ஷட்-அப்..” என்று உறுமினான் ரவிச்சந்திரன்.. உடல் தூக்கிப் போட வாயை மூடிக் கொண்டாள் நந்தினி..

“வாயை மூடுன்னு சொன்னேன்.. ஒரு தரம் சொன்னால் புரியாதா..? சொல்பேச்சுக் கேட்கக் கூடாதுன்னு பிடிவாதமா..?”

இல்லை பாஸ் என்று சொல்லத்தான் நினைத்தாள்.. அதைச் சொல்ல வாயைத் திறந்தாக வேண்டுமே.. அவன்தான் வாயை மூடச் சொல்லிக் கத்திக் கொண்டிருக்கிறானே.. வாயைத் திறந்து வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமே என்று வாய்க்கு இரட்டைத் தாழ்ப்பாள் இறுக்கி மூடி விட்டாள்..

“லுக் அட் மி ரம்யா.. தரங்கிணியொன்றும் எனக்கு வேண்டியவளில்லை.. அவளுடைய அண்ணன் என் கிளாஸ்மேட் அண்ட் ஃபிரண்ட்.. அவங்க ஃபேமிலி நமக்கு

ரிலேட்டிவ்ஸ்.. தட்ஸ் ஆல்.. தனியாய் எனக்கும் அவளுக்கும் முடிச்சுப் போடாதே..”

“ஐ ஆம் ஸாரி அண்ணா..” ரம்ய மாலினி கண்கலங்கி விட்டாள்..

‘இப்போதுதான் கொஞ்சம் சிரித்தாள்.. ரிலாக்ஸாய் வெளியில் போய் வந்தாள்.. அதற்குள் அழ வேண்டியதாகி விட்டது..’ நந்தினியின் மனம் கனத்தது..

மனம் விட்டுச் சிரிக்கக் கூட முடியாமல் சிறை பட்டிருக்கும் அந்த அரண்மனைக் கிளியின் விலங்குகளை உடைத்துச் சுதந்திர வானில் பறக்க விட வேண்டுமென்று அவள் ஆதங்கப் பட்டாள்..

‘அதற்கு உன் காதலை விட்டுக் கொடுத்தாக வேண்டுமே..’

அறிவு அறிவுறுத்தியதில் உதட்டைக் கடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டாள்..

அந்த ஒலியில் அவளைப் பார்த்த ரவிச்சந்திரனின் புருவங்கள் மறுபடியும் முடிச்சிட்டன.. கலக்கம் நிறைந்த

காதலியின் விழிகளுக்குள் எதையோ துழாவுவதைப் போல ஊன்றிப் பார்த்தான்..

இமைகள் படபடக்க நந்தினியும் கண் கலங்கினாள்.. அதை ரம்ய மாலினி அறிந்து விடாத வண்ணம் இமைகளைச் சிமிட்டி முகம் திருப்பினாள்.. அவளது துக்கத்தை அவளால் ரம்ய மாலினியிடமிருந்து மறைத்து விட முடிந்தது.. ரவிச்சந்திரனிடமிருந்து மறைத்து விட முடியவில்லை..

“வாக்கிங் போனா சீனரியை மட்டும் பார்த்து விட்டு வரனும்.. சீன் போடறவங்களை பார்த்து விட்டு வந்து தேவையில்லாத பிராப்ளத்தையெல்லாம் கிரியேட் பண்ணிக்கிட்டு இருக்கக் கூடாது..”

ரம்ய மாலினியின் கண்ணீரைக் கவனிக்காததைப் போலக் கண்டிப்புடன் சொன்னான் ரவிச்சந்திரன்.. நந்தினியால் தாள முடியவில்லை.. தன் சுயநலத்திற்காக ரம்ய மாலினியை விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள் என்று அவளது மனச்சாட்சி உறுத்த ஆரம்பித்து விட்டது.

“வாட் இஸ் திஸ் பாஸ்.. நாங்க ஒன்றும் தரங்கிணியைத் தேடிப் போய் பேசலை.. அவங்களாத்தான் வந்தாங்க.. பேசினாங்க.. போனாங்க.. அதுவும் என்னுடன் தான்

பேசினாங்க.. அவங்க வந்து போனதுகூட ரம்யாவுக்குத் தெரியாது.. ஃபோன் காலை அண்டெண்ட் பண்ணப் போய் விட்டா.. ஃபோன் பேசி முடித்து ரம்யா வர்றப்ப தரங்கிணி காரில் ஏறியாச்சு..”

அவன் திட்டினால் திட்டிக் கொள்ளட்டும் என்று விளக்கம் சொல்ல ஊடே புகுந்து விட்டாள் நந்தினி.. அவன் அவளை முறைத்ததை பொருட்படுத்தாமல் விறைப்பாக நின்றாள்.. துளைக்கும் பார்வையுடன் அவளை ஊன்றிப் பார்த்து சோதித்து வைத்தான் அவன்.. அவள் அயரவில்லை..

“ஓ..” அவன் தாடையைத் தடவினான்..

‘எதுக்கு இந்த ‘ஓ..?’’

“காரில ஏறினவ ரம்யாவைப் பார்க்கலையா..?”

“எனக்குத் தெரியாது..”

“தட் மீன்ஸ்.. ரம்யாவைப் பார்த்தும் அவ காரை விட்டு இறங்கிப் பேசாம போயிட்டா.. ஆம் ஐ கரெக்ட்..?”

‘எவ்வளவு சரியாக எடை போடுகிறான்..’ வியந்து போனாள் நந்தினி..

“யு ஆர் கரெக்ட் அண்ணா.. நான் வருகிறதை அவங்களும் பார்த்தாங்க.. தரங்கிணியின் காரா அதுன்னு கேட்டுக் கொண்டிருக்கும் போதே காரைக் கிளப்பிப் போய் விட்டாங்க.. நானும் நந்தினியுடன் வந்திருக்கிறது அவங்களுக்குத் தெரியுமான்னு நந்தினியிடம் கேட்டேன்.. தெரியும்ன்னு நந்தினி சொன்னா.. தெரிந்தே அவங்க வெயிட் பண்ணி என்னிடம் பேசாமல் கிளம்பிப் போயிட்டாங்க அண்ணா..”

நந்தினியும், ரம்யாவும் ஒருவரையொருவர் அவள், இவள் என்று சிநேகிதிகளைப் போலப் பேசிக் கொள்வதைக் கவனித்தான் ரவிச்சந்திரன்.. அவர்களுக்கு இடையே ஏற்பட்டிருந்த தோழமை அவனுக்குப் பிடித்தமானதாக இருந்தது.. தரங்கிணியைப் பற்றிய பேச்சுத்தான் அவனுக்குப் பிடித்தமானதாக இல்லை..

“நீ அவளிடம் பேசனும்னு அவதான் எதிர்பார்க்கனும் ரம்யா.. அவ உன்னிடம் பேசனும்னு நீ எதிர்பார்க்கக் கூடாது.. தட்’ஸ் நாட் ஃபேர்.. நீ ரவிச்சந்திரனின் தங்கை.. மைண்ட் இட்..”

“அண்ணா..”

“எதற்காக அவளுக்கு இவ்வளவு இம்பார்டன்ஸ் கொடுக்கிற..? அவ அஜந்தாவை விட டேன்ஜரஸ்..”

அப்பாடி என்றிருந்தது நந்தினிக்கு... இதை எப்படி ரம்யாவிடம் சொல்வது என்று மலைத்துக் கொண்டிருந்தவளின் பிரச்னையை வெகு இலகுவாக தீர்த்து வைத்து விட்டான் அவளது காதலன்.. ரம்யாவின் முகம் கூம்பி விட்டது.. அவள் எதுவும் சொல்லாமல் நகர்ந்து விட்டாள்.. அதற்கு முன்னால் நந்தினி அவளை அப்படியொரு முக பாவனையுடன் கண்டதில்லை.. சஞ்சலமும், சிந்தனையும், கலக்கமும் கலவையாய் முகமெங்கும் படிந்திருக்க அந்த அரண்மனையின் இளவரசி சொல்லவொண்ணா மனத்துயருடன் நடந்து விட்டாள்.. நந்தினிக்குள் துயரம் வந்தது.. வாய் விட்டு ‘ஓ’வென அழ வேண்டும் போல துக்கித்தாள்.. ‘என்னால்தானே..’ என்ற குற்றஉணர்வு அவளுக்குள் கவிவதை அவளால் தடுக்க முடியவில்லை.

“உனக்கு என்னடி ஆச்சு..?” ரவிச்சந்திரன் அதட்டினான்..

“ரம்யா மனசு சங்கடப்பட்டுப் போகிறா..” நந்தினி கண்கலங்கினாள்..

“சொல்கிறதைப் புரிந்துக்காம சங்கடப்பட்டா என்ன செய்கிறது..? நெருப்புச் சுடும்ன்னு சொன்னாக் கேட்டுக்கனும்.. இல்லை தொட்டுத்தான் தெரிந்துக்குவேன்னு அடம் பிடித்தா பார்த்துக்கிட்டு இருக்க முடியாது.. புரியுதா..”

“அவளுக்கு அது புரியனுமே..”

“அது என் கவலை.. நான் பார்த்துக்கறேன்..”

‘இதற்கென்ன அர்த்தம்..?’ நந்தினியின் மனம் சிணுங்கியது..

அவனது கவலையில் அவளுக்குப் பங்கு இல்லையென்று தள்ளி நிறுத்துகிறானா..?

“நான் உங்களுக்குத் தேர்ட் பெர்சனா..?”

“ஏய்ய்..”

ரவிச்சந்திரன் முரட்டுத்தனமாக அவளை இழுத்து எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கி அணைத்தான்.. அந்த உடல்வலியில் அவளது மனவலி ஓடி விட்டது..

“ரவி..”

அவன் மார்பில் முகம் புதைத்த நந்தினி தேம்பியழுதாள்.. மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அந்தப் பக்கமாக அவன்

நின்றிருப்பதைப் போல மருண்டிருந்தவளின் மனபயம் அணையுடைத்து வெளிப்பட்டது..

“ம்ப்ச்.. அழக்கூடாது.. அந்தத் தரங்கிணியெல்லாம் ஒரு ஆள்.. அவள் எதையோ சொன்னாள்ன்னு பயந்து அழுவியாடி.. யாரு நீ..?”

“உங்க பெண்டாட்டி..” அவள் மூக்கை உறிஞ்சினாள்..

“ஏய்ய்.. அழுமூஞ்சிப் பெண்டாட்டி..” அவளது புருஷனாக அவன் கிளர்ந்தான்..

“நாம பிரிஞ்சிருவோமோன்னு பயமா இருக்கு..”

“என்னடி சொன்ன..?”

அவளை விலக்கி நிறுத்தி அவன் உலுக்கிய உலுக்கலில் நிலை குலைந்து விழப் போனாள் நந்தினி.. தாக்கியவனே தாங்கிப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்.. வெறி கொண்ட அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் நடுங்கிப் போனாள்.. ரௌத்ரம் நிரம்பிய அவனது விழிகள் ரத்தமெனச் சிவந்திருந்தன..

“விலகிப் போயிருவியா..?” அவன் உறுமினான்..

“பாஸ்.. அப்படி எங்கே நான் சொன்னேன்..?”

“பாஸ்..? உங்க பெண்டாட்டின்னு சொன்னவ செக்கரட்டரியாகிட்டாளா..?”

“எல்லாத்தையும் குற்றமா எடுத்துக்கிட்டா என்னதான் செய்கிறது..?”

“அதனால என்னை விட்டுப் போயிடலாம்ன்னு டிசைட் பண்ணிட்ட..?”

“வேண்டாம் பாஸ்.. வாய் வார்த்தைக்குக் கூட அப்படிச் சொல்லாதீங்க.. செத்துருவேன்..”

உதடுகள் துடிக்கச் சொன்னவளை இறுக்கிக் கொண்டவனிடம் மெதுவாக அமைதி திரும்ப ஆரம்பித்தது.. கோபம் குறைந்தவனாக அவளது கூந்தலில் முகம் புதைத்து செவியோரம் முணுமுணுத்தான்..

“யு ஆர் மை வொய்ஃப்.. இதிலிருந்து மாறாதே.. அவ்வளவுதான் சொல்வேன்.. மாற நினைத்தேன்னா நான் நானா இருக்க மாட்டேண்டி.. என்னுடைய இன்னொரு முகத்தை நீ பார்க்க வேண்டியிருக்கும்..”

நந்தினி பேசாமடந்தை போல பதுமையாக நின்றாள்.. எதையும் பேசத் தோன்றவில்லை.. எதைப் பேசினாலும் அந்த

நொடியின் இனிமை கலைந்து விடுமோ என்று அச்சமாக இருந்தது.. அவளுக்கான அவனது ரௌத்ரத்தை அவள் விரும்பி ரசித்து நுகர்ந்தாள்.. நீ வேண்டும்.. நீ மட்டுமே வேண்டும் என்ற அவனது தேடலில் புதையுண்டு போனாள்..

அவனாக அவளை விலக்கி நிறுத்தும்வரை அவனது அணைப்பிலிருந்து அவள் விலகவில்லை.. அதில் அவன் திருப்தி அடைந்தான்.. அவளுக்கு விடதலை கொடுத்து விலகி நின்றவன்..

“தரங்கிணியை மைண்ட் பண்ணிக்காதே..” என்றான்..

“பட்.. ரம்யா வேறு ஒன்றைச் சொல்கிறாளே..”

“என்னத்தைச் சொல்வா.. அவளுடைய அண்ணனுக்கு ரம்யாவை மேரேஜ் பண்ணிக்கிற புரபோசல் இருக்குன்னு சொல்லுவா.. ஸோ வாட்..? உனக்கும் அது தெரியுமே.. அதை வேண்டாம்ன்னு நான் டிசைட் பண்ணியதும் தெரியுமே..”

“இல்லை பாஸ்.. இது அதுக்கும் மேலே..”

“அதுக்கும் மேலேன்னா..?”

ரவிச்சந்திரனின் முகம் கடினமானது... உறுத்து விழித்தவனைப் பார்க்க நந்தினிக்குப் பயமாக இருந்தது..

ரம்ய மாலினியை காட்டிக் கொடுக்கிறாளோ என்றும் தயங்கினாள்.. அவன் விடவில்லை..

“சொல்ல வந்ததைச் சொல்லப் போகிறயா இல்லையா..”

அவன் போட்ட சப்தத்தில் பயந்து போனவளாக..

“சத்தம் போடாதீங்களேன்..” என்று கெஞ்சினாள் நந்தினி..

“ஓகே.. சப்தம் போடவில்லை.. என்னன்னு சொல்லு..”

“தரங்கிணி சொல்கிறா..”

“என்னன்னு..?”

“ரம்யா மனசில தரங்கிணியின் அண்ணன் மேலே ஒரு சாஃப்ட் கார்னர் இருக்குன்னு..”

“ரப்பிஷ்..”

உறுதியாக மறுத்தான் ரவிச்சந்திரன்.. இப்படிச் சொல்கிறவனிடம் எப்படி ரம்ய மாலினியின் மனதைப் பற்றி எடுத்துச் சொல்வது என்று நந்தினிக்குத் திகைப்பாக இருந்தது..

“அவள் உளருகிறதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாதே.. ரம்யாவைப் பற்றி எனக்குத் தெரியும்.. நீ

மனதை ரிலாக்ஸாய் வைத்துக் கொள்.. நாளை நாம் திருவனந்தபுரத்துக்குப் போக வேண்டியிருக்கு.. திரும்பி வர ஒன் வீக்காகலாம்.. உன் திங்ஸை பேக் பண்ணி வைத்துக்க..”

அதுவரை அவர்களுக்கு நேரம் கொடுத்து பொறுமை காத்த செல்ஃபோனை பொறுமையிழந்து அலற ஆரம்பித்தது.. ரவிச்சந்திரன் ஒரு பறக்கும் முத்தத்தை நந்தினியின் பக்கம் ஊதிப் பறக்க விட்டு விட்டு செல்ஃபோனில் பேச ஆரம்பித்து விட்டான்.

# அத்தியாயம் 229

“**யெ**ஸ்.. யெஸ்.. ஐ கேட்ச் இட்..”

இவன் எதைப் பிடித்து விட்டான் என்ற நினைவோடு அரண்மனைக்குள் விரைந்தாள் நந்தினி.. அவனுடன் திருவனந்தபுரம் போகப் போகிறாள் என்று நினைத்தாலே இனித்தது.. ஆலப்புழாவின் படகு வீட்டின் தனிமையும் இனிமையும் திருவனந்தபுரத்திலும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உடலும் மனமும் பரபரத்தன..

‘திங்ஸை பேக் பண்ணனும்..’

வேகமாக மாடிப்படிகளில் தாவி ஏறி அவளது அறை இருந்த திசைப்பக்கம் வளைந்து திரும்பியவள் அஜந்தாவின் மீது மோதி விட்டாள்..

‘இவளுக்கு இதுவே வேலையாகி விட்டது.. யாழினி பாட்டியிடம் பற்ற வைக்கப் போனவ இங்கே என்ன பண்ணுகிறா..? வேவு பார்க்கிறாளா..?’

எரிச்சலுடன் இவள் முகம் சுளிக்க.. அவளோ..

“உன் ஃபிரண்ட் என்னன்னா முகத்தை குழ நீளத்துக்கு தூக்கி வைத்துக்கிட்டு மொட்டை மாடியில் போய் உட்கார்ந்திருக்கிறா... நீ என்னடான்னா அவளோட அண்ணன்கூடக் கட்டிப் பிடித்து ரொமான்ஸ் பண்ணிட்டு வர்றே.. என்னே ஓர் தோழமை..! வாஹ்ரே வா.. மூழ்காத ஷிப் உங்க ஃபிரண்ட்ஷிப்தான் போ..” என்றாள்..

‘ரம்யாவை மறந்துட்டேனே..’ நந்தினி தவித்துப் போனாள்..

அஜந்தா சொல்வது உண்மைதானே என்றிருந்தது.. ரம்யாவைப் பற்றிய எண்ணமில்லாமல் சுயநலமாய் ரவிச்சந்திரனுடன் காதல் செய்த குற்றஉணர்வு வந்தது.. அதை அஜந்தாவிடம் காட்டிக் கொள்ளாமல்..

“எங்க ஃபிரண்ட்ஷிப்பை நீ பாராட்டறது இருக்கட்டும்.. உன்னோட பேச்சுத்தமிழை நான் பாராட்டித்தான் ஆகனும்.. தஞ்சாவூர்காரியான எனக்கே இப்படி சரளமா தமிழ் கொஞ்சி விளையாடாது.. உன்னிடம் விளையாடுது பாரு.. இப்படிப் பேசற நீ, உன் தாத்தா, பாட்டியின் முன்னாலே என்கிட்டப் பேசறப்ப ‘ஞான், எண்ட’ன்னு மலையாளத்தை துவம்சம் பண்ணியே.. ஏன்..? நீ மலையாளம், நான் தமிழ்ன்னு

பிரிச்சுக் காண்பிக்கிற எட்டப்பி வேலைதானே..?” என்று பேச்சை மாற்றினாள்..

“எட்டப்பியா..? அது என்ன எட்டப்பி..?”

“எட்டப்பனுக்கு பெண் பால்.. உனக்கான பொருத்தமான நிக் நேம்.. உனக்குச் சொன்னாப் புரியாது..”

“ஓகே.. லீவ் இட்..”

அஜந்தா அலட்சியமாக தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்ததில் நந்தினிக்கு ஆச்சரியமாகி விட்டது.

அவ்வளவுதானா..? வேறு ஒன்றுமே இல்லையா..? எப்படி..? அஜந்தா எந்த ஒரு சின்ன நிகழ்வையும் ஊதியே பெரிய நிகழ்வாக்கி இமயமலையைப் போல உருவாக்கி விடுபவள் என்ற உண்மை நந்தினியை நிரடியது..

அப்பேற்பட்ட லங்கிணியான அஜந்தாவுக்கு ‘எட்டப்பி’ என்ற பட்டப் பெயரை நந்தினி சூட்டிக் கொண்டிருக்கிறாள்.. அதை இரண்டு கைகளையும் விரித்துத் தோள்களைக் குலுக்கி ‘ஓகே.. லீவ் இட்..’ என்று மூன்றே வார்த்தைகளில் அஜந்தா புறம் தள்ளுகிறாள் என்றால் நம்பும்படியாகவா இருக்கிறது..?

அதிலும் அப்போதுதான் நந்தினி அஜந்தாவின் மூக்கை உடைத்து ஒட்டி விட்டிருக்கிறாள்..

‘இவள் அஜந்தாதானா..? நந்தினி இமைகளைக் கொட்டி உறுத்துப் பார்த்தாள்..’

‘ஏன் இன்னும் இவ யாழினி பாட்டியிடம் பற்ற வைக்கப் போகலை..?’

‘‘என்ன அப்படிப் பார்க்கிற..?’’

‘‘நத்திங்..’’

‘‘உனக்கு ஏற்கனெவே சொல்லியிருக்கிறேன் நந்தினி.. ஒன்றுமில்லையென்று நாம் நினைப்பதிலேதான் நிறைய உண்மைகள் ஒளிந்திருக்கும்..’’

மர்மப்பார்வையுடன் அமானுஷ்யக் குரலில் தலையை ஆட்டியபடி மோகினி போல அஜந்தா பேசிய தினுசில் நந்தினிக்குத் ‘திக்’கென்று ஆனது.

‘‘உண்மைகளைப் பற்றி நீ பேசக் கூடாது அஜந்தா.. உண்மைக்கும் உனக்கும் ரொம்பத் தூரம்ன்னு விரல் சுவைக்கிற பிள்ளை கூடச் சொல்லி விடும்..’’

மனதின் பயத்தை மறைத்தபடி அலட்சியமாகச் சொன்னாள் நந்தினி..

“ஸோ வாட் நந்தினி..?”

அந்தக் கேள்வியையும் அஜந்தா அனாசியமாகக் கடந்ததில் நந்தினியை பயம் பீடித்துக் கொண்டது.. இனம் புரியாத பயம்.. மனதில் செல்லரிக்கிற பயம்.. துரத்தும் அந்த பயத்திடமிருந்து ஓடி ஒளிந்து கொள்ள இடமில்லாமல் களைத்துப் போனாள் நந்தினி..

அஜந்தா பேசும் பேச்சுக்களில் ஏதோ மறைபொருள் இருப்பதைப் போல அவளுக்குத் தோன்றி வைத்தது.. அந்த மறைபொருள் வெளிப்படுமானால் நந்தினியின் நிம்மதி குலையக் கூடும் என்று அவளின் ஆழ்மனம் எச்சரித்து அறிவுறுத்தியது. ஆழ்மனதின் உந்துதலால் நந்தினி கூடுமான வரை அஜந்தாவின் பார்வையில் அகப்படாமல் தள்ளியே இருந்தாள்.. அந்த அரண்மனைக்குள் வந்ததிலிருந்தே அஜந்தாவைக் கண்டால் அவள் ஆறடிக்குத் தள்ளி நிற்பவள்தான் என்றாலும் இப்போது அது அதிகமாக ஆறடி நூறடியாகியிருந்தது..

அஜந்தாவிடமிருந்து விலகி நிற்க நந்தினி நினைத்தாலும் அஜந்தா அதற்கு விடுவதாக இல்லையே.. அஜந்தாவின் கண் பார்வைக்கு அகப்படாமல் பதுங்கிப் பதுங்கி நந்தினி நடமாடினாலும் அவளுடைய முதுகுக்குப் பின்னால் வந்து நின்று சொரிந்து விட்டுத் தன் இருப்பை உணர்த்திக் கொண்டிருந்தாள் அஜந்தா..

‘இப்படிக் கண்ணைக் கட்டிக்கிட்டு மயக்கம் வருகிற அளவுக்கு சோதித்து வைக்கிறாளே..’ நந்தினிக்கு ரோதனையாக இருந்தது.. எங்கிருந்தோ வந்தவளையே இந்த அளவுக்கு அஜந்தா சோதித்து வைக்கிறாளே.. அந்த அரண்மனையில் பிறந்து வளர்ந்த ரம்ய மாலினியை எந்த அளவுக்கு வாட்டி வதக்கியிருப்பாள்..?

‘பாவம் ரம்யா..’

உடனடியாக ரம்யாவைப் பார்த்து ஆறுதல் கூற வேண்டும் என்று அவளது மனது பறந்தது.. நகரவிடாமல் வழியை மறைத்து அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருந்தாள் அஜந்தா..

“எந்தா நந்தினி..? எந்துக்கு நந்தினி இத்தரயும் ஆலோசிக்கனுமாம்..?”

“இதோ பார்.. நான் யோசிக்கிறதையெல்லாம் நீ கேள்வி கேட்கக் கூடாது.. அதைச் சொன்னா நீ தாங்க மாட்ட..”

“ஓ..! நந்தினியா அப்படியொரு முடிவுக்கு வந்து விடலாமோ.. ஈ அஜந்தாவின் மனது எதையும் தாங்கும் இரும்பு மனது..”

“கல் மனசுன்னு சொல்லு.. கேட்டுக்கறேன்.. இரும்பு மனசுன்னு சொல்லாதே.. ஆமாம்.. உனக்கெதுக்கு இந்த வேலை..? என் மனசு.. என் யோசனை.. அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போற..?”

“எத்தனையோ செய்யலாம்..”

“நீ எதையோ செய்து தொலை.. அதையெல்லாம் மத்தவங்க யோசனையைக் கேட்டுச் செய்து தொலை.. என் யோசனையைப் பத்திக் கேள்வி கேட்டு பி.ஹெச்.டி பட்டம் வாங்கனும்னு மட்டும் நினைக்காதே..”

“எந்துக்கு நந்தினி இத்தரயும் அலுத்துக்கறதாம்..?”

“ஒண்ணு தமிழில் பேசு... இல்லேன்னா மலையாளத்தில சம்சாரி ரெண்டும் கெட்டானாய் என் உயிரைக் குறைக்காதே..”

“ரெண்டும் கெட்டானா..? ஞானோ..? ஹா.. ஹா.. வல்லிய ஜோக்கல்லோ..”

கடகடவென்று நகைத்தவளைப் பதைப்புடன் பார்த்தாள் நந்தினி.. இத்தனை பேச்சுக்கு இந்நேரம் கலவரம் வெடித்திருக்க வேண்டும்.. ஒன்றும் இல்லாத பேச்சிற்கே அந்த அரண்மனையை கலவர பூமியாக்கி விட்டு ஓய்பவள் அஜந்தா.. அவளை வன்மையாகத் தாக்கும் வார்த்தைகளை வெகு இலகுவாக கடக்கிறாள் என்றால் அது நன்மைக்கான அறிகுறியல்ல.. ஆழப் புதைந்து கிடக்கும் பூகம்பத்திற்கான அறிகுறி..

“உன்னை ரெண்டும் கெட்டான்னு யாரும் சொல்ல மாட்டாங்க அஜந்தா.. உன்னால் ஆக்கவும் முடியும்.. அழிக்கவும் முடியும்ன்னு எனக்குத் தெரியும்.. ஜெகஜால கில்லாடி நீ..”

“ஓ.. நந்தினி அங்ஙன பறஞ்ஞோ..?”

“அங்ஙனதான் பறஞ் .. வழியை விடறயா..?”

“எந்துக்கு இத்தனை வேகம் நந்தினி..? உண்மையைத் தேடி ஒடுகிறயா..?”

“ஆமாம்ன்னுதான் வைத்துக்கயேன்..”

“அந்த உண்மை எது அல்லது யார் நந்தினி..? ரவி அத்தானோ..?”

“இந்தக் கேள்விக்கு கன்பர்மா ஆமாம்ன்னுதான் பதில் சொல்வேன்.. ரவிக்கு மறுபெயர் உண்மை..”

“அங்ஙனவோ..? ஹா.. ஹா.. நீ அப்ப பறஞ்சதை விட இதுவல்லோ வல்லிய ஜோக்.. ஹா.. ஹா..”

“அஜந்தா..”

“அடங்கு நந்தினி அடங்கு.. ஓவர் ஆட்டம் உனக்கு ஆகாது..”

“இதை நான் சொல்லனும்..”

“இப்போ இதை நான் சொல்லி நீ கேட்க வேண்டிய நேரம் வந்திருக்கு.. ரவியத்தான் உன்னிடம் சொன்னாரே.. அவருடைய இன்னொரு முகத்தை நீ பார்க்க வேண்டியிருக்கும்ன்னு.. அந்த இன்னொரு முகம் எதுவென்று உனக்குத் தெரியுமா..?” நந்தினிக்குள் அதிர்வலைகள் தோன்றின..

‘ஓடி விடு நந்தினி..’ என்று அவளது அடி மனது கூக்குரலிட்டது.. அவளுக்குத் தெரியாத ரகசியம் ஒன்றை அஜந்தா அறிந்து வைத்திருக்கிறாள் என்று தோன்றியது.. அது நந்தினியின் காதலை வேரோடு பிடுங்கி எறிந்து விடும் ரகசியமாகவும் இருக்கலாம்.. அதையறிந்தால் நந்தினி உயிர் வாழ்வாளா..?

“ரவியைப் பற்றி எனக்குத் தெரியும்.. நீ சொல்லித் தெரிந்துக்கனும்ங்கிற அவசியமில்லை..” நந்தினி விரைய முயன்றாள்..

“ஓ..ஓ..ஓ...” அஜந்தா கை நீட்டி அவளைத் தடுத்தாள்..

“உனக்கென்ன பைத்தியமா..?”

“ஊஹும்.. உனக்குத்தான் பைத்தியம்..”

“எதுக்கு இப்ப வழியை மறைக்கிற..? உன் பாட்டியிடம் பற்ற வைக்கப் போகலையா..?”

“நீயேன் ஓடப் பார்க்கிற..?”

“உன்னைக் கண்டால் ஓடித்தானே ஆகனும்..?”

“உண்மையைக் கண்டு நீ ஓடற நந்தினி.. என்னைக் கண்டு நீ ஓடலை.. உண்மையை ஃபேஸ் பண்ண உனக்கு பயம்..”

இப்படியொரு நேர் கொண்ட பார்வையை அஜந்தா பார்க்கக் கூடும் என்று எவரேனும் சொல்லியிருந்தால் ‘ஹ..’ என்ற ஒற்றை எழுத்தில் அதைப் புறக்கணித்து கெக்கலி கொட்டிச் சிரித்திருப்பாள் நந்தினி..

எவரும் சொல்லாமல் நேருக்கு நேராய் அவள் பார்வையை சந்திக்க நேரிட்டதில் விதிர்த்துப் போய் விட்டாள்.. ‘பயமா..? எனக்கா..? ஹ..!’ என்று ஏன் அவளால் சொல்ல முடியவில்லை..?

“நீ தூண்டிலைப் போட்டு விலங்கை இழுக்கிற ஆளு.. உன்னிடம் எனக்கென்ன பேச்சு..?” விரைய முயன்றாள்..

“ஓடப் பார்க்கிறயா..? எத்தனை நாள் ஓடி ஒளிவ நந்தினி..? உண்மையை ஓர்நாள் ஃபேஸ் பண்ணித்தானே ஆகனும்..?”

அஜந்தாவின் அழுத்தமான கேள்வியில் அசையாமல் நின்றாள் நந்தினி.. இமைகளை ஓர்முறை இறுக்கி மூடித் திறந்தாள் அவளது மனம் படபடவென அடித்துக் கொண்டது..

சிந்தனையை ஓர்முகப் படுத்தி யோசிக்கும் போது அஜந்தா சொல்வது சரிதானோ என்ற கேள்வி எழுந்தது.. அவள் ஏன் அஞ்சுகிறாள்..? அஜந்தா சொல்லப் போகும் உண்மை அவள் வாழ்வை சூறாவளியாக்கி சிதைத்து விடும் என்ற பயமா..?

ஓடக்கூடாது என்று தீர்மானித்தாள் நந்தினி.. ஓட முயன்றால்தான் அஜந்தா கேள்வி மேல் கேள்வியாக கேட்டு ஒரு வழியாக்குவாள்.. ஓடாமல் எதிர்த்து நின்றால் என்ன செய்வாள்..?

“என்ன உண்மை..?” நந்தினி நிதானமாக கேட்டாள்..

“ஓ.. உண்மையை ஃபேஸ் பண்ண நந்தினி தயாராயி..” அஜந்தா உதட்டைக் குவித்தாள்..

“உண்மையைப் பேச நீயே தயாராக இருக்கும் போது அதை ஃபேஸ் பண்ண நான் தயாரா இருக்க மாட்டேனா..? சொல்லு.. சொல்லு..”

“சொல்லவா..?”

“ஏய்ய்.. சொல்லுன்னுதானே நானும் சொல்றேன்..”

“ரவியத்தானுக்கு இன்னொரு முகம் உண்டு..”

அஜந்தா நிறுத்தி நிதானமாகச் சொன்னாள்.. ஊடுறுவும் அவளது பார்வையில் நந்தினியின் முதுகுத் தண்டு ஜில்லிட்டது.. உறைபனியின் குளிர் முழுவதையும் அவளுக்குள் அவள் உணர்ந்தாள்..

“இருக்கட்டும்.. அதைப்பற்றி உனக்கென்ன வந்தது..?”

“எனக்கென்ன வந்ததா..? என் கண் முன் நடக்கும் கண்ணாமூச்சி விளையாட்டைப் பற்றி உன்னிடம் சொல்ல வேண்டாமா..?”

“வேண்டாம்..”

“வேண்டாமா..? உண்மை விளம்பியான நந்தினியா இதைச் சொல்வது..?”

“உனக்கு என்னதான் வேண்டும் அஜந்தா..?”

ஓய்ந்து போனவளாக கேட்டாள் நந்தினி.. அஜந்தா ஆடும் கண்ணாமூச்சி விளையாட்டைத் தாங்கி நிற்கும் சக்தி அவளுக்கு இல்லை..

“நீ ஓடிப் போக வேண்டும்.. இந்த வயநாட்டை விட்டு.. ரவியத்தானின் வாழ்க்கையை விட்டு திரும்பிப் பார்க்காமல்

வந்த வழியே தஞ்சாவூரைப் பார்த்துத் தலை தெறிக்க ஓடிப் போக வேண்டும்.. என்ன..? ஓடிப் போயிடறயா..?"

ஓடிவிடு.. ஓடிவிடு.. ஓடிவிடு.. நந்தினியின் காதுகளில் பெருத்த கூக்குரல் ஒலிப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டது.

# அத்தியாயம் 230

**த**ரங்கிணியும் நந்தினியை ஓடி விடச் சொல்கிறாள்.. அஜந்தாவும் ஓடிவிடச் சொல்கிறாள்.. நந்தினியை ஓட வைப்பதில் அவர்கள் இருவரும் காட்டிய ஆர்வத்தில் நந்தினிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது..

எதிலும் ஒன்று படாமல் எதிரும் புதிருமாக நிற்கும் அஜந்தாவும் தரங்கிணியும் இந்த ஒன்றில் மட்டும் ஒன்று பட்டு நிற்கிறார்களே.. ஒருவருக்கொருவர் எதிரியாக இருப்பவர்களின் பொது எதிரியாக நந்தினி மாறி விட்டாளா..?

“உனக்குப் பிடித்ததைச் செய்யத்தான் நான் பிறப்பெடுத்திருக்கிறேனா..? ஓடிப் போயிடுன்னு நீ சொன்னா நான் ஓடிப் போயிடுவேனா..? இருந்தாலும் உனக்கு இத்தனை தைரியம் ஆகாது அஜந்தா..”

“அப்ப நீ ஓடிப் போக மாட்ட..”

“மாட்டவே மாட்டேன்..”

“இங்கேயே இருந்து ரவியத்தானை விவாகம் கழிக்கப் போற..?”

“அஃதே.. அஃதே..”

“ஓ.. ஏன் நந்தினி.. எதுக்காக நீ தஞ்சாவூரை விட்டு ஓடி வந்த..?”

“அது உனக்குத் தேவையில்லாத விஷயம்..”

“அங்ஙனம் நீ பறயக் கூடாது நந்தினி.. எனிக்கு எதி வேணும்னு ஞான்தான் பறயனும்..”

“உனக்குத்தானே.. உன் முதுகில் ஒரு கோடியை வைத்துக்கிட்டு அடுத்தவங்க முதுகில் ஒன்றாவது கிடைக்காதான்னு தேடிக்கிட்டு அலைகிற ஜென்மம் தானே நீ..”

“சொல்லிக்க.. நான் அங்ஙனதான்.. எந்தா இப்ப.. எவரோ ஒரு பெல்ட் மன்னனாமே.. ஆ ஆளை விவாகம் கழிக்க மாட்டேன்னு நீ வயநாட்டுக்கு ஓடி வந்தாயாமே..”

“ஆமாம்.. அதுக்கு என்ன இப்ப..?”

“இதிக்கு நீ வயநாட்டுக்கு ஓடி வந்திருக்க வேண்டிய தேவையே இல்லையே நந்தினி.. பேசாம தஞ்சாவூரிலேயே இருந்திருக்கலாமே..”

“என்ன உளருகிற..?”

நந்தினி சீறினாள்.. அஜந்தா சொல்ல வருவதில் இருக்கும் உண்மை எதுவாக இருக்கக்கூடும் என்று அறிய விரும்பாமல் அவளது மனம் பதைத்தது.. அஜந்தா ஒன்றும் நந்தினியின் நலம் விரும்பியல்லவே.. அவள் சொல்லப் போகும் உண்மை எதுவாக இருந்தாலும் அது நந்தினிக்கு நலம் உண்டாக்குவதாக நிச்சயம் இருக்காது.. "அவதான் உளருகிறான்னு தெரியுதில்ல.. அப்புறமும் ஏன் இங்கே நின்று டயத்தை வேஸ்ட் பண்ணிக்கிட்டு இருக்கிற..?" ரவிச்சந்திரனின் கடுமையான குரல் அவளைக் காப்பாற்றி விட்டது.. அவன் வந்து விட்டான் என்ற நிம்மதியில் நந்தினியின் சுவாசம் சீரானது.. அவளது திணறல் குறைவதை ஓர் எள்ளலுடன் கவனித்த அஜந்தா..

"நந்தினியிடம் பெல்ட் மன்னனைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும் போதே நினைத்தேன்.. அத்தான் உடனடியாய் வந்து விடுவார்ன்னு.. நினைத்தது நடந்து விட்டது.." என்று குத்தலாகச் சொன்னாள்..

"பாஸ்.." நந்தினி ஆரம்பிக்கும் போதே..

"நீ.. போ.." என்று பட்டுக் கத்தரித்தான் ரவிச்சந்திரன்.

அவனது முகத்தைப் பார்த்த நந்தினி திகைத்தாள்.. கட்டுக்கடங்காத ஆத்திரத்தை அவன் கட்டுப் படுத்திக் கொண்டிருந்தான்.. சினத்தில் அவனது கண்கள் சிவந்து பளபளத்தன..

'என்ன ஆச்சு இவனுக்கு..' நந்ணிவீ தயங்கினாள்..

"உன்னைப் போகச் சொன்னேன்.." ரவிச்சந்திரன் காட்டுக் கத்தலாகக் கத்தினான்.. அவன் போட்ட சப்தத்தில் ஆங்காங்கே வேலை செய்து கொண்டிருந்த வேலையாள்கள் கையிலிருந்ததை நழுவ விட்டு நடுங்கி நின்றார்கள்.. நடுக்கத்துடன் பின் வாங்கிய நந்தினி ஒரே ஓட்டமாக மாடிப் படிகளில் ஏறி ஓடி விட்டாள்.. அவளது அறைக்கப் போக வேண்டுமானால் அஜந்தாவைக் கடந்து செல்ல வேண்டும்.. அப்படிக் கடக்கும் போது அஜந்தா வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாள்.. வம்பிழுப்பாள்.. நந்தினி அவளையுமறியாமல் தேங்கி நின்று விடுவாள்.. ரவிச்சந்திரன் இருக்கும் நிலைமையில் நந்தினி தேங்கி நின்றால் சும்மா விடமாட்டான் என்று தோன்றியது..

'அடி பின்னி விடுவான்..'

ஏற்கனெவே களைத்துப் போன மனதுடன் ஓய்ந்திருந்தவளுக்கு அடி வாங்கத் தெம்பில்லை.. அதனால் அங்கேயிருந்து தப்பித்தால் போதுமென்று அவள் கால் போன போக்கில் மாடிப் படிகளில் ஏறி விட்டாள்.. படிகளின் முடிவில் இருந்த அரண்மனையில் மேல்மாடி 'தொங்கும் தோட்டம்' போல அவளை 'வா' வென்று வசீகரித்து அழைத்தது..

எங்கு பார்த்தாலும் தொட்டிச் செடிகள்.. இரும்பு வளைவுகளில் படர்ந்திருந்த கொடி முல்லை.. உட்கார்ந்து ரசிக்க சாய்வான நாற்காலிகள்..

அங்கிருந்து பார்த்தால் வயநாட்டின் மலைப்பாதையும், தேயிலைத் தோட்டங்களும் வரைபடம் வைத்து வரைந்து தீட்டிய சித்திரம் போல கவின் மிகு அழகோடு காட்சியளித்தன.. பக்கத்தில் நிற்பதைப் போல மேற்கு தொடர்ச்சி மலைகள் பனிபடர்ந்த மேகங்களோடு மயக்கின..

'இத்தனை நாளா இங்கே வராம மிஸ் பண்ணிட்டேனே..'

அஜந்தாவையும், தரங்கிணியையும் மறந்தவளாய் இயற்கையழகில் தன்னை மறந்து லயித்து சுற்றி வந்தாள் நந்தினி.. மெலிதான கேவல் ஒலி அவளது ரசனையைக் கலைத்தது.

‘யார் அழுகிறது..?’

கொடி வீட்டுக்குள் எட்டிப் பார்த்தால் அங்கே ரம்ய மாலினி தன்னந் தனியளாய் அமர்ந்து விசும்பிக் கொண்டிருந்தாள்..

வயநாட்டு அரண்மனையின் இளவரசி அநாதை போல தனித்து அமர்ந்து விசும்பிக் கொண்டிருந்தது நந்தினியின் மனதை பாதித்தது.. தன் துக்கத்தை மறந்தவளாக அவள் தோழியின் துக்கத்தை ஆற்ற அருகில் விரைந்தாள்..

“ரம்யா..”

“நந்தினி..”

ஆறுதலளிக்க தோழி வந்து விட்டதில் வாய் விட்டுத் தேம்பி அழுதாள் ரம்ய மாலினி.

“ம்ப்ச்.. அழக் கூடாது.. உன் அண்ணன் சொன்னதுக்கா இப்படி அழுகிற..?” பக்கத்தில் உட்கார்ந்து தோழியைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டாள் நந்தினி.

“இல்லை நந்தினி.. அண்ணன் கோபப்படுதுன்னு அழலை.. அண்ணனுக்குத் தரங்கிணியைக் கண்டால் ஆகாம போயிருச்சேன்னுதான் அழுகிறேன்..” ரம்யா விம்மினாள்..

தன்னைக் கட்டுக்குள் கொண்டுவர வெகுவாக சிரமப்பட்டாள் நந்தினி.. எவளால் நந்தினியின் வாழ்க்கை அழிந்து விடுமோ.. அவளைத் தன் தமையன் விலக்கி நிறுத்துகிறான் என்று அழுது கொண்டிருக்கிறாள் ரம்ய மாலினி.. அவளுக்கு நந்தினி ஆறுதல் சொல்லியாக வேண்டும்..

'என்ன கொடுமை இது சரவணன்..!' திருப்பரங்குன்றத்தில் இருக்கும் சரவணப் பெருமானை அழைத்து பெருமூச்சு விட்டாள் நந்தினி..

"தரங்கிணியை அண்ணனுக்கு பிடிக்காமப் போனதுன்னா அவங்களோட அண்ணனையும் அண்ணனுக்குப் பிடிக்காம போயிரும் நந்தினி.." ரம்யா புலம்பினாள்..

"அப்படியேன் நினைக்கிற..? உன் அண்ணன் சொல்வதும் உண்மையாய் இருக்கலாமில்லையா..? அஜந்தாவை விட தரங்கிணி டேன்ஜரஸ் லேடின்னு உன் அண்ணன் நினைக்கிறார்.. அதனால் உன்னை வார்ன் பண்ணுகிறார்.. இது தப்பில்லையே.."

"இது எனக்குத் தெரியாதுன்னா நினைக்கிற..?"

ரம்ய மாலினியின் கேள்வியில் நந்தினிக்குத் தூக்கிவாரிப் போட்டது.. தெரிந்தும்மா அழுது கொண்டிருக்கிறாள் என்ற வியப்பு மேலிட்டவளாக..

“என்னப்பா சொல்கிற..?” என்று கேட்டாள்..

“அஜந்தாவை விட தரங்கிணி டேன்ஜரஸ்தான்.. அதனால்தான் அவங்களை எனக்கு ரொம்ப ரொம்ப பிடித்திருக்கிறது.. யு நோ.. அஜந்தா தரங்கிணியிடம் பயப்படுவாள்.. அபராஜிதனையே ஓர் வழி பண்ணி விடும் திறமை தரங்கிணியிடம் இருக்கிறது நந்தினி..”

எங்கே சுற்றினாலும் இவள் அபராஜிதனிடம் வந்துதான் நிற்பாள் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அஜந்தாவையும் அபராஜிதனையும் எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி.. அவர்கள் ரம்ய மாலினியின் ஆதர்சத்திற்கு உரியவர்கள் என்பதில் நந்தினியின் மனம் வலித்தது..

“சரி சரி.. விடு ரம்யா.. உன் அண்ணன் ஏதோ மூட் அவுட்டில் இருந்திருப்பார்.. சுள்ளுன்னு பேசிட்டார்.. நாளைக்கே நாம் எடுத்துச் சொன்னால் கேட்டுக்குவார்..” மனம் கனக்க தோழியை சமாதானப் படுத்தினாள் அவள்..

“அண்ணனாவது.. நாம் சொல்கிறதை கேட்டுக் கொள்வதாவது அண்ணனைப் பற்றி நீ இன்னும் சரியாத் தெரிந்துக்கலை நந்தினி..”

ரம்யா என்னவோ இயல்பாகத்தான் இதைச் சொன்னாள்.. நந்தினிக்குத்தான் அது சுளீர் என்று மனதில் தைத்தது..

‘இதைத்தானே அஜந்தாவும் சொல்கிறா.. நான் அவனைச் சரியாத் தெரிந்துக்கலைங்கிறா.. எனக்குத் தெரிந்த ரவிச்சந்திரன் வேறு ஒருவனா..? உண்மையில் அவன் யார்..?’

‘பெல்ட் மன்னன்..’ அஜந்தாவின் குரல் ஒலிப்பதைப் போல பிரமை ஏற்பட காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. ரம்ய மாலினிக்கு இருந்த மனநிலையில் அவள் நந்தினி படும் பாட்டைக் கவனிக்கவே இல்லை.. தன் போக்கில் புலம்பிக் கொண்டிருந்தாள்..

“அண்ணன் ஒருவரைப் பற்றி இப்படின்னு டிசைட் பண்ணி வைத்துட்டா அதிலிருந்து மாறவே மாறாது.. யார் சொன்னாலும் கேட்டுக்காது.. அத்தோடு அண்ணனுக்குப் பிடிக்காத எதையும் யாரும் பேச மாட்டாங்க நந்தினி..”

“உன் அத்தையும், அத்தை குடும்பமும், தாத்தா பாட்டியும் பேசுவாங்களே..”

நந்தினி சிரிக்காமல் சொன்னாள்.. ரம்ய மாலினி மெல்லச் சிரித்தாள்.. அவளது இதழ்களில் விரிந்த புன்னகையில் நந்தினியின் மனம் சற்று லேசானது..

“நீ இருக்கியே..”

செல்லமாக தோழியின் கைகளைத் தட்டினாள் ரம்யா.. மெதுவாக பேச்சை மாற்ற முயற்ச்சித்தாள் நந்தினி.. அவளது முயற்சிக்குத்தான் பலன் உண்டாகவில்லை.. எந்தத் திசையில் பேச்சைத் திருப்பினாலும் தரங்கிணியைப் பற்றிய பேச்சிற்கே வந்து நின்றாள் ரம்ய மாலினி..

“நான் இருக்கேனில்ல.. அழாம எழுந்து வா..”

“அண்ணன் ஏன் தரங்கிணி மேலே கோபமா இருக்கு..?”

“யாருக்குத் தெரியும்..? ஏதாவது ரீசன் இருக்கும்.. அந்த மலையைப் பார்த்தியா.. மிஸ்ட் படிஞ்சு பார்க்க அழகா இருக்கில்ல..”

“தரங்கிணி மேலே இருக்கிற கோபம் அவங்க அண்ணன் மீதும் இடம் மாறிரும் நந்தினி..”

“அவங்க ஃபிரண்ட்ஸ்.. இன்றைக்கு அடித்துக்கு வாங்க.. நாளைக்கு கூடிக்குவாங்க.. நீ அந்தப் பறவையைப் பாரேன்..”

“அண்ணன் தனபாலனோடு அடித்துக்கக் கூடாது நந்தினி.. கூடிக்கனும்.. அதுதான் எனக்கு வேண்டும்..”

“அப்படியே நடக்கட்டும்.. நீ அதை விட்டு வெளியில் வா ரம்யா.. ஆக்ஷுவலா உங்க அரண்மனையின் மொட்டை மாடியிலும் தோட்டம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியவே தெரியாது.. தெரிஞ்சிருந்தா தினமும் இங்கேதான் டேரா போட்டிருப்பேன் தெரியுமா..?”

“அண்ணனுக்கு ஏன் என் மனது தெரியாமல் போனது நந்தினி..?”

நந்தினிக்கு கொடி வீட்டில் முட்டிக் கொள்ளலாமா என்றிருந்தது.. வாழ்க்கையே வெறுத்துப் போனது.. அவள் என்னதான் செய்வாள்..? என்னதான் செய்ய வேண்டும்..?

“எனக்காக ஒன்று செய்வாயா நந்தினி..?”

ரம்ய மாலினியே கேட்டு விட்டாள்.. என்ன செய்வது என்று தெரியாமல் வெறுத்துப் போய் உட்கார்ந்திருந்த நந்தினி இயந்திரம் போல தலையை ஆட்டி வைத்தாள்..

எதுவுமே செய்யாமல் இருப்பதற்கு ஏதேனும் ஒன்றைச் செய்து தொலைக்கலாம் அல்லவா..?

# அத்தியாயம் 231

“**உ**னக்காக எதையும் செய்வேன்..”

நந்தினி வாக்குக் கொடுத்து விட்டாள்.. அதனால் ஏற்படப் போகும் பின் விளைவுகள் எதுவாக இருந்தாலும் அதுவே ஆண்டவன் விட்ட வழி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவளது மனம் முடிவெடுத்தது.. தரங்கிணிக்கும் அஜந்தாவிற்கும் இடையே அல்லல் படுவதற்கு பதில் ரம்யமாலினியின் மன அமைதிக்காக எதையும் செய்து விட்டு தொலைந்து விடலாம்..

“அண்ணனிடம் எனக்காக பேசுவாயா..?”

“நிச்சயமாய் பேசுவேன்.. கவலைப் படாதே..”

ரம்யமாலினியைச் சமாதானப்படுத்திக் கீழே அழைத்துக் கொண்டு போனாள்.. மேல்மாடித் தோட்டத்தின் அழகில் லயிக்க முடியாமல் அவளது மனது ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.. ரவிச்சந்திரன் யார் என்ற கேள்வி அவளது மனதை குடைந்து கொண்டிருந்தது.. அஜந்தா எதை உணர்த்த முயல்கிறாள்..?

‘ஆ வல்லிய சுந்தரன் எண்ட கம்மாண்டரா..? இல்ல.. பெல்ட் மன்னனா..?’

யோசித்து யோசித்து தலை வலித்ததுதான் மிச்சம்.. எதுவும் பிடிபடவில்லை.. அஜந்தாவிடம் பேசினால் தெளிவாகும் என்று தோன்றியதில் அதிர்ந்து போனாள் நந்தினி..

அவளா அஜந்தாவின் துணையை நாட நினைக்கிறாள்..?

‘கடவுளே..!’

கண்களை இறுக மூடி சோபாவில் கால் மடித்து உட்கார்ந்து மறுகினாள்.. மனதுக்குள் பல சிந்தனைகள் முட்டி மோதிக் கலவரப் படுத்தின.. வீணா தமிழகத்தில் பிறந்தவள் என்பது திடிரென்று நினைவுக்கு வந்தது..

‘அம்மாவோட பால்யகால சிநேகிதியா, மாமன் மகளா இவங்க ஏன் இருக்கக் கூடாது..’ சிந்தனைகள் பின்னல்களாகி கோர்வையாக ஒன்று சேர்ந்தன.. அவற்றை உருவகப் படுத்தினால் ஓர் வடிவம் கிடைத்தது.. அது தெளிவாக ரவிச்சந்திரன் பெல்ட் மன்னனாக இருக்கக் கூடும் என்ற பிம்பத்தைப் பிரதிபலித்தது..

‘மோகன் சொன்னானே.. சாருக்கு கோபம் வந்தால் பெல்ட்டை எடுத்து விளாசிடுவார்ன்னானே.. அதை ஆனந்தன் சாரும் ஒப்புக்கிட்டாரே.. ரவியிடம் துப்பாக்கி இருக்கிறதே.. அவன் ஷூட் பண்ணினதுண்டுன்னு ஆனந்தன் சார் சொன்னாரே..’

நந்தினிக்குத் தலை வலித்தது... நெற்றிப் பொட்டுக்கள் ‘விண், விண்’ என்று தெறித்தன... விரல்களால் அழுத்திக் கொடுத்தாள்.. வலி குறைய வில்லை.. மனதில் நந்தகுமார் சொல்லிய வார்த்தைகள் அலைமோதின..

‘கோபம் வந்தால் பெல்ட்டாலே விளாசித் தள்ளிருவானாம்.. கன்னைக் கையிலெடுத்தா சுடாமக் கீழே வைக்க மாட்டானாம்.. பாவம்க்கா நீ..’

கடைசியில் அவள் பாவப்பட்ட ஜன்மமாக ஆகி விட்டாளா..? பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க வயநாட்டுக்கு ஓடி வந்தாளே.. அந்தத் திருமணத்திலிருந்து தப்பித்து விட்டாளா..? இதற்கு நீ வயநாட்டிலேயே இருந்திருக்கலாமே என்று ஏளனமாக அஜந்தா பரிதாபப் படும் நிலைமையிலா அவள் இருக்கிறாள்..?

‘மலர் டீச்சர்..!’

நந்தினியைப் பார்த்தாலே விழிகள் செறுக மோகன் மயக்கத்துடன் உச்சரிக்கும் இந்தப் பெயரைக் கேட்டு நந்தினிக்கு ஏன் கோபம் வரவில்லை..? நந்தகுமாரின் நினைவு ஏன் வந்தது..?

பெல்ட் மன்னனின் தங்கையை நந்தகுமார்..

'மலர் டீச்சர்..'

என்று வர்ணித்தானே.. அந்த நினைவு மன ஆழத்தில் இருந்து தடுத்ததினால்தானே சகோதர பாசம் வந்தது..

'நந்தகுமார் சொன்ன மலர் டீச்சர் ரம்யமாலினியா..?'

அப்படியும் இருக்குமோ என்ற சஞ்சலத்தில் தவித்துப் போனாள் நந்தினி.. ஆழ்ந்து யோசிக்க யோசிக்க அனைத்தும் பொருந்தி வந்தன..

வீணா தமிழகத்தில் பிறந்தவள்... அவளும் ரம்யமாலினியும் அடிக்கடி தமிழகக் கோவில்களைச் சுற்றிப் பார்த்து வணங்கி வரக் கிளம்பிப் போய் வருவார்கள்...

அரண்மனைக்குள் சிறைபட்டிருக்கும் மகளை வெளியுலகிற்கு அழைத்துச் செல்ல வீணா கையாண்ட யுக்தி இது... ரவிச்சந்திரனால் அவர்களோடு அனைத்து

இடங்களுக்கும் போய் வர முடிந்ததில்லை... நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பவன் அவன்... ரவிவர்மனால் மனைவி, மகளென்று கிளம்பி விடமுடியாது.. அவர் தனியொரு குடும்பத்தின் தலைவனல்ல.. அருள் மொழிவர்மனின் மகன், அவந்திகாவின் அண்ணனென்று யாழினி போர் முரசு கொட்டி விடுவாள்.. மகளுக்கான அமைதி கெட்டு விடக் கூடாது என்று ரவிவர்மன் பின் வாங்கி விடுவார்.. உலகம் முழுவதையும் தாய், தங்கையுடன் சுற்றி வந்த ரவிச்சந்திரனால் தந்தையைத் தங்களுடன் இணைத்துக் கொள்ள முடிந்ததில்லை..

'ஸோ.. அத்தையும் ரம்யாவும் மட்டும் தஞ்சாவூர் கோவிலுக்கு வந்திருக்க சான்ஸ் இருக்கு..'

எந்தத் திசையில் திரும்பினாலும் நிம்மதி கிடைக்க வில்லை ரவிச்சந்திரன்தான் பெல்ட் மன்னன் என்று அனைத்து ஆதாரங்களும் அடித்துக் கூறின.. நந்தகுமாரின் வர்ணனைகள் வீணாவுக்கும், ரம்யமாலினிக்கும் பொருந்தி வந்தன.. அவன் பெல்ட் மன்னனின் குணாதிசியங்களாக பிட்டுப் பிட்டு வைத்த அனைத்தும் ரவிச்சந்திரனின் குணாதிசயங்களாக இருந்தன..

ரவிச்சந்திரனின் கோபம்.. கண்டிப்பு.. கறார்த்தன்மை.. எதற்கெடுத்தாலும் அடித்து விடும் மூர்க்கம் என்று அவளறிந்த ரவிச்சந்திரன் பெல்ட் மன்னனின் பிம்பமாகத்தானே இருக்கிறான்..

‘இவனை நான் காதலிக்கிறேனே..’ நந்தினியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.. சொன்னாளே.. அன்று உத்ராவிடம் சொன்னாளே..

“நீ பெல்ட்டாலே விழுகிற அடியைப் பத்தியும், ரிவால்வரில வர்ற குண்டைப் பத்தியும் மட்டுமே பேசற உத்ரா.. அதுக்கு நான் பயப்படறேன்னு நினைக்கிற.. இல்லைடி.. என் பயமே வேற உத்ரா.. என் சுயமரியாதை அழியப் போகுதேன்னு நான் பயப்படறேன்.. அடிமையைப் போல வாழவேண்டி வந்துருமோன்னு நான் பயப்படறேன்..”

இப்படிப் பேசின நந்தினி தோற்றுப் போனாளா..? எவனை வெறுத்து வீட்டை விட்டு ஓடி வந்தாளோ அவனிடமே காதல் எனும் பெயரில் அடிமையாகப் போகிறாளா..?

“நான் மனுஷியா.. இல்லை நான்கு கால் ஜீவனா..? பெல்ட்டாலே அடிச்சுத்தான் என்னைக் கண்ட்ரோலில் வைச்சுக்கனும்னா அன்பு, பாசம், காதல் என்கிற இதெல்லாம்

எதுக்கு உத்ரா..? அதெல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் காணாமல் போயிராதா.. ? அப்படிப்பட்ட வாழ்க்கை என்னை அவமானப் படுத்தும் உத்ரா.. என் மேலேயே எனக்கு மரியாதை இருக்காது.. இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் வந்திரும்.. அதுக்குப் பேசாம நான் செத்துப் போயிரலாம்..”

இதையெல்லாம் சொன்ன நந்தினி எங்கே போனாள்..? செஞ்சிக் கோட்டையிலிருந்து குதித்துச் சாகத் துணிந்த நந்தினியா இந்த நந்தினி..?

‘இதெல்லாம் உத்ராவுக்குத் தெரியுமா..?

இவன்தான் பெல்ட் மன்னன்னு தெரிந்துதான் குறிப்பா வயநாட்டைக் கைகாட்டி என்னை அனுப்பி வைத்தாளா..?’

அப்படித்தான் நடந்திருக்கிறது என்று தோன்றியது.. நந்தினியின் தற்கொலை முயற்ச்சியை உத்ரா நந்தகுமாருக்குத் தெரியப் படுத்தியிருக்கலாம்.. அவன் வீட்டில் சத்தம் போட்டிருக்கலாம்.. மேகநாதன் பதறிப் போய் பெல்ட் மன்னனுக்கு விவரம் சொல்லியிருக்கலாம்..

‘அப்பா கல்யாணத்தை நிறுத்தத் துணிஞ்சிருப்பார்.. இவன்தான் தோல்வியை ஒப்புக் கொள்ளாதவனாச்சே.. என்னுடன் வயநாட்டுக்கு அனுப்பி வையுங்க.. உங்க பெண்

மனதை நான் மாற்றிக் காட்டறேன்.. கட்டினா இவனைத்தான் கட்டுவேன்னு கை காட்ட வைக்கிறேன்னு சேலன்ஜ் பண்ணியிருக்கலாம்.. அட் லாஸ்ட் சேலன்ஜில் இவன் ஜெயித்து விட்டான்..' கசப்புடன் புன்னகைத்தாள் நந்தினி.. எப்படியொரு பைத்தியக்காரியாய் அவள் இருந்திருக்கிறாள் என்று மனம் குமுறியது..

எதிரிலிருந்த கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தைப் பார்த்துக் கொண்டாள்..

'இந்த மூஞ்சி மேல எப்படி அவனுக்கு இப்படியொரு காவியக் காதல் வந்ததுன்னு இப்பத்தானே தெரியுது.. அடிநந்தினி.. உன் மூஞ்சியும் நீயும் பிடித்துப் போனதினால அவன் உன்னைக் காதலிக்கலை.. அவனைக் கட்டிக்க மாட்டேன்னு சூசைட் பண்ணிக் கொள்கிற ரேன்ஜிக்கு ஒருத்தி மறுத்திட்டாளேங்கிற ஈகோதான் அவனை உன்னைக் காதலிக்க வைத்திருக்கு..'

கதவு தட்டப்படும் ஒலியில் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.. கதவைத் திறந்தாள்..

"அம்மே.." வாயெல்லாம் பல்லாக உள்ளே வந்தாள் ஓமனாக் குட்டி..

நந்தினி எப்படிப்பட்ட வீராதி வீரி..! சூராதி சூரி..! அஜந்தாவிடம் எப்படியெல்லாம் திறமையாக சொற்போர் புரிந்து புறமுதுகு காட்டி ஓட வைத்தாள் என்பதையெல்லாம் பாராட்டிப் பேசி விட்டு..

“அம்மை ஊன் கழிக்க வரணுமெண்டு அம்மை விளிச்சு..” என்றாள்..

‘எந்த அம்மை எந்த அம்மையை விளிச்சு..?’ என்ற கேள்வியையும்..

‘ஞான் உனக்கு அம்மையோ..’ என்ற கோபத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தவளுக்கு..

“எனக்குப் பசியில்லை ஓமனா...” என்ற வெறுமையான பதில் திகைப்பைத் தந்தது..

‘ஆரானு இது..? நந்தினி மேமோ..’ சந்தேகத்துடன் உற்றுப் பார்த்தாள்..

தூசி படிந்த ஓவியம் போல வாடிய முகத்துடன் இருந்த நந்தினியைக் கண்டதும் துணுக்குற்றாள்..

“எந்தா மேம் இது..? அம்மையெண்டு ஞான் விளிச்சதில மேம் வெப்பராளம் கொள்ளலையோ..?”

“நீ அப்படியா சொன்ன..? நான் கவனிக்கலை ஓமனா..”

“எந்துக்கு மேமோட வதனம் வாடிப் போயி..?

சிரசு நொம்பரமோ..?”

“தலைவலியெல்லாம் இல்லை ஓமனா..”

“வல்லதும் விஜாரம் கொண்டோ..?”

“எதையும் நினைக்கலை.. போதுமா..”

“எந்தா பறயுனு மேம்..? ஷீனம் (நோய்) உண்டெண்டு நிங்க வதனம் பறஞ் .. மேம் இல்லேண்டு பறஞ் .. தணுப்பு (குளிர்) வாட்டுதோ..?”

“இல்லைன்னு சொல்றேனில்ல..”

“சுகமானோ மேம்..?”

“வளர சுகம்.. நீ போயேன்..”

“ஞான் அம்மையிடம் எந்து பறயும்..?”

“எனக்கு பசியில்லைன்னு சொல்லு..”

ஓமனா நகர மனமில்லாமல் நகர்ந்தாள்..

கதவை அடைத்துவிட்டு படுக்கையில் வீழ்ந்தாள் நந்தினி.. அவளுக்குள் பிரளயம் வெடித்தது.. திட்டமிட்டு அவளை ரவிச்சந்திரன ஜெயித்து விட்டான் என்று மனம் குமுறினாள்.. அவள் வாயாலே அவனிடம் காதல் சொல்ல வைத்து விட்டான்..

“டொக்.. டொக்..”

அறைக்கதவு மறுபடியும் தட்டப்பட்டதில் அவளுக்கு கோபம் வந்தது.. காலிங்பெல் என்ற ஒன்று எதற்கு இருக்கிறது..? அதைப்பற்றிய நினைவே இல்லாமல் ஓமனா ஒருத்திதான் கதவைத் தட்டி வைப்பாள்..

“உனக்கு அறிவு இருக்கிறதா இல்லையா..?”

சப்தம் போட்டபடி கதவைத் திறந்தாள்..

“இருக்குன்னுதான் இந்த உலகம் சொல்லுது..” என்றபடி உள்ளே வந்தான் ரவிச்சந்திரன்..

‘இவனா..?’

நந்தினி தொய்ந்தாள்.. அந்த மனநிலையில் அவனை எதிர் நோக்கும் சக்தி அவளிடம் இல்லை... அவளை அறியாதவன் போல மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் அறிமுகமாகி..

கோழிக் கோடில் பேகிப் பழகி.. வயநாட்டுக்கு கொண்டு வந்து வசியம் பண்ணி மயக்கி விட்ட மாயக்காரன் இவன் என்ற கோபம் அவளுக்குள் கொந்தளித்தது..

“வாட் ஹேப்பன்ட்..?”

ரவிச்சந்திரனின் பார்வை ஊசிக் குளிராய் அவளது உடலைத் துளைத்தது.. அவளது விழிகளுடன் விழிகள் கலக்க ஆழ்ந்து பார்த்தான்.. நந்தினி சலனம் கொண்டாள்.. வெறுக்க முடியாமல் விலக முடியாமல் மறுகினாள்.. அவளை நெருங்கி அவன் அணைத்தபோது அனைத்து சஞ்சலங்களும், சந்தேகங்களும் விலகி ஓடி விட மயங்கி நின்றாள்.. அவன் குனிந்தான்.. நந்தினி ஓடி விடு என்று மனது அலற.. அவள் சிலையாக நின்றாள்.. அவளது உதட்டோடு உதடு படிய அவன் கொடுத்த ஆழ்ந்த முத்தத்தில் மூச்சுத் திணறினாள்..

“ஏன் பசிக்கலை..? சாப்பிட வாடி..”

கிசுகிசுப்பாய் அவன் அழைத்த போது மறுக்க முடியவில்லை.. ஆட்டுக்குட்டியைப் போல அவனைப் பின் தொடர்ந்தவளுக்குள் தோற்றுப் போனவளின் சோர்வு வந்தது..

‘நானே நானா..? யாரோதானா..?’ என்ற கேள்வி எழுந்தது..

# அத்தியாயம் 232

**அ**டர்ந்த தென்னந்தோப்புகளைத் தூரத்திலிருந்து பார்த்த போது பச்சைக் கம்பளம் பரந்து விரிந்திருந்ததைப் போல இருந்தது..

தஞ்சைக்கு அருகேயுள்ள மேகநாதனின் பூர்விக கிராமத்தில் தென்னந்தோப்புகள் உண்டு.. தஞ்சை மண் விவசாயத்திற்குப் பெயர் பெற்றது.. காவிரிப் பாசனம் என்பதால் கரையோரம் தென்னந்தோப்புகள் இருக்கும்.. பசுமை நிரம்பிய தென்னந்தோப்புகள் நந்தினிக்குப் பரிச்சயமானவைதான்.. புதிதானவையல்ல..

ஆனால்.. கோவளம் கடற்கரையில் குவிந்திருக்கும் தென்னந்தோப்புகள் வித்தியாசமானவயாக இருந்தன.. மலையாளத்தில் கோவளம் என்ற வார்த்தைக்கு ‘தென்னந் தோப்பு..’ என்று அர்த்தமாம்.. பெயருக்கு ஏற்றபடி இங்கே ஏராளமான தென்னந் தோப்புகள் இருந்தன.. கடற்கரை முழுவதும் வரிசை கட்டி அடர்ந்திருந்த தென்னந்தோப்புகளில் காற்றாட உலாவுவது சுகமானதாக இருந்தது..

“காஷ்மீர் ‘வடக்கின் சொர்க்கபுரி..’ என்றால் கோவளம் ‘தெற்கின் சொர்க்கபுரி..’” என்றான் ரவிச்சந்திரன்..

அதி முக்கியமான வேலையென்று அவளை அழைத்து வந்திருந்தவன் சுற்றுலாப் பயணியைப் போல ஜீன்ஸ் பேண்ட், டிசர்ட், கூலிங்கிளாஸ் என்று அளப்பறையாய் இருந்தான்.. திருவனந்தபுரத்தின் ‘யாழ்’ ஹோட்டலில் தங்கியிருந்தார்கள்.. முதல் நாள்தான் வயநாட்டிலிருந்து வந்திருந்தார்கள்.. மறுநாளே ஊரைச் சுற்றிப் பார்க்க அழைத்து வந்து விட்டான்..

“வேலைன்னு சொன்னீங்களே..” நந்தினி ஞாபகப் படுத்தினாள்..

“யாழ் ஹோட்டலை செக் பண்றதும் வேலைதாண்டி..” அறிவுறுத்தினான் அவன்..

‘இவனுக்குத்தான் எந்த ஊருக்குப் போனாலும் அங்கே ஒரு பிஸினெஸ் இருக்குமே..’

“அது சரி.. என் வேலையைப் பற்றி உனக்கென்ன கவலை..? என்னுடன் ஊர் சுற்றப் பிடிக்கலையா..?”

அவன் பார்வை கூர்மையாக துளைத்ததில் அவள் முகம் சிவந்தாள்.. அவனது கேள்வி என்னைப் பிடிக்க வில்லையா என்பதைப் போல இருந்ததில் மனம் படபடக்க...

“அப்படியொன்னும் சொல்லலையே..” என்று முணுமுணுத்தாள்..

“வாய் விட்டுச் சொல்லலை..”

“புரியலை..”

“புரியலை..?”

“ம்ம்ம்.. புரியலை..”

“உன் மனசு சொல்லுதுடி..”

“நீங்க கண்டிங்க..”

“கேட்டேன்..”

“எதை..?”

“உன் மனது சொல்லுவதை..”

ஆளை மயக்கும் அந்த ஆணழகன் அவள் கை தொட்டு அருகில் இழுத்தான்.. அவனது கை வளைவுக்குள் சிறைபட்டவளின் முகத்தோடு முகம் வைத்து..

“உன் மனது பேசுவதை என் மனது கேட்கும்டி..” என்றான்..

உதடுகள் துடிக்க அவன் மார்பில் முகம் புதைத்து தழுவிக் கொண்டாள் நந்தினி.. நீதான் எனக்காக நிச்சயிக்கப்பட்ட பெல்ட் மன்னனா என்று மனம் கதறியது.. அஜந்தா எதைச் சொல்ல யத்தனிக்கிறாள்..? அவளைச் சொல்ல விடாமல் ஏன் அவன் தடுக்கிறான்..? மனம் முழுவதும் கேள்விகளும் குமுறல்களுமே சுழன்று கொண்டிருந்தன.. அவன் அவளை ஜெயிக்க நினைத்தான் என்பதில் நந்தினி நிலைகுலைந்து போயிருந்தாள்.. அவளை ஜெயிக்க அவனுக்கு வேறு வழியே அகப்படவில்லையா..? காதல் என்ற வார்த்தையை முன்னிருத்தித்தான் அவளை வென்றிருக்க வேண்டுமா..? நந்தினிக்கு கருப்பு வெள்ளைத் திரைப்படம் ஒன்று நினைவுக்கு வந்தது.. பழைய படம்..

‘புதிய பறவை..’ என்ற அந்தத் திரைப்படத்தில் நடிகர் திலகமும், அபிநய சரஸ்வதி சரோஜா தேவியும் இணைந்து நடித்திருப்பார்கள்.. அந்தப் படத்தின் உச்சகட்டக் காட்சியின் இறுதிப் பகுதியில் சிவாஜி கணேசன் சரோஜா தேவியைப் பார்த்து..

“ஏம்மா.. என் குற்றத்தைக் கண்டு பிடிக்க உனக்கு வேறு வழியே தெரியலையா.. காதல் என்ற பொய்தான் கிடைத்ததா..?” என்பதைப் போலக் கேட்டு வைப்பார்..

அதே மனத்துடிப்பைத்தான் நந்தினியும் அனுபவித்துக் கொண்டிருந்தாள்..

‘ஏன் இதை மறைத்தாய்..?’

அவனுள் புதைந்தபடி அவனிடம் மனதுக்குள் கேட்டாள்.. அவள் மனது சொல்வதை அவன் மனது கேட்கும் என்றானே..

இந்த மருகலை ஏன் கேட்கவில்லை..?

‘தற்கொலைக்கு முயன்றேனே.. உனக்குப் பயந்து ஊரை விட்டு ஓடி வந்து உன்னிடமே அனாதை போல அகதியாக தஞ்சம் புகுந்தேனே.. உன் மனதில் என்னை என்னவென்று நினைத்தாய்..? நீ சொல்வதைப் போல நான் ‘தத்தி’ தாண்டா.. புத்திசாலியில்லை..’

“என் நந்தினி..” அவளை இறுக்கிக் கொண்டவனின் காதோர முணுமுணுப்பில் அவள் கிறுகிறுத்தாள்..

‘நீ வேண்டாம்ன்னு ஓடி வந்தவளை இப்படி நீயே எல்லாமும்ன்னு சரண்டர் ஆக வைச்சிட்டயேடா.. எவ்வளவு

வேதனைப் பட்டேன் தெரியுமா..? மனசெல்லாம் ரணமா இருந்ததுடா.. அன்றைக்கு நான் பட்ட வேதனைகளை உன்னால் அழித்து விட முடியுமா..? அம்மா, அப்பா, தம்பி, பாட்டி, தாத்தா மற்றும் என் சொந்த பந்தம்ன்னு கலகலப்பா இருந்தவளை நிராதரவாய் நிற்கதியாய் நிற்க வைத்தது நீதான்னு தெரியாமல் உன்னை என் காவலனா நினைத்தேனே.. அதெல்லாம் பொய்யா..?'

"ம்ஹா.. வாசனையாய் இருக்கியேடி.." அவளது கூந்தலில் முகம் புரட்டி வாசம் பிடித்து அவளை வதைத்தான் அவன்..

'கொல்லறயேடா நிராதரவாக நான் நின்ற பொழுதுகளை உன்னால் இல்லாமல் ஆக்கிவிட முடியுமா..? நான் யார் என்று தெரிந்திருந்தும் என் மனம் நோக நீ பேசினாயே.. அது ஏன்..? உன்னை வேண்டாமென்று நான் சொன்னதற்கு ஆங்காரப் பட்டாயே.. உன் காதலை மறுத்ததிற்கு கோபப்பட்டதாய் நான் நினைத்தேனே.. உன்னையே மறுத்ததிற்கு கோபப்பட்டாய்ன்னு தெரியாமல் போய் விட்டதே..'

"நீயில்லாத வாழ்வை இத்தனை நாள் எப்படிடீ வாழ்ந்தேன்..?"

அவளது முகத்தை கைகளில் ஏந்தி காதல் ததும்ப ரவிச்சந்திரன் கேட்டபோது அவனது கண்களில் பொய்யில்லை... நந்தினி தவித்துப் போனாள்... அவனில்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கக் கூட அவளுக்குத் தெம்பில்லையே..

‘ஏண்டா இத்தனை காதலை எனக்குள் வர வைத்தாய்..? நீயே சகலமும்ன்னு ஆகிப் போனேனே.. இப்போது வந்து உன் உண்மை முகத்தைக் காட்டுகிறயே.. இத்தனை நாளாய் பொய் முகத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்தாய்ன்னு எனக்குத் தெரியாமல் போய் விட்டதே.. உன்மீது உயிரை வைத்து விட்டேனே.. நீ பொய்காரன்னு தெரிஞ்சும் பிரிய மனசு மறுக்குதே.. நீ இரக்கமில்லாத ராட்சண்டா.. அழகிய அசுரன்..! என்னை அலைக்கழிக்கப் பிறந்தவன்.. நீ யாரென்பதை மறைத்து என்னை ஏமாற்றி உன்னைக் காதலிக்க வைத்தவன்.. நீபொய்.. உன் வார்த்தைகள் பொய்.. ஆனால்.. ஆனால்..’ நந்தினி தவியாய் தவித்தாள்.. அந்த பொய்காரனின் முகத்தை ஊன்றிப் பார்த்தாள்.. உன்மத்தமான காதல்தான் தெரிந்தது..

‘உன் காதல் மட்டும் மெய்யாய் இருந்து தொலைக்குதேடா.. நான் என்ன செய்வேன்..?’

பெல்ட் மன்னன் என்று அவளால் அழைக்கப்பட்டவனின் மீது அவள் கொண்டிருந்த ஆழமான வெறுப்பு ரவிச்சந்திரனை முழுமனதாக ஏற்றுக் கொள்ள முடியாமல் அவளை தடுத்துக் கொண்டிருந்தது.. அவனில்லாமல் அவளில்லை.. அதே தருணத்தில்.. அவன் பெல்ட் மன்னனாக இருந்தால் அவனுக்கு அவளில்லை..

‘நீ வேண்டாமென்று ஓடி வந்தவளிடம் உன்னை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.. பேசிப் புரிய வைத்திருக்க வேண்டும்.. பொய் நாடகமாடி என்னை ஏமாற்றியிருக்கக் கூடாது.. உன்னை என் சுவாசமாய் நினைக்க வைத்திருக்கக் கூடாது.. பொய்யில் என்னை வீழ்த்தி விட நினைத்தாயா..?’

“அதிகமா யோசிக்காதேடி.. சீரியஸா முகத்தை வைச்சுக்காதே.. இது உனக்கு ஸூட் ஆகலை.. துருதுரு குறுகுறு நந்தினிதான் எனக்குப் பிடிச்ச நந்தினி..”

‘அவதானே ஏமாளி.. உனக்குப் பிடிக்கும்தான்..’

“ஹேய் வாயாடி.. எதுக்காக ஊமை வேடம் போடற..?”

“எனக்கு வேஷம் போடத் தெரியாது.. என்னையும் உங்களைப் போல நினைத்தால் எப்படி பாஸ்..?”

வெடுக்கென்றுதான் அவள் சொன்னாள்.. அவனுக்கு உறைக்கட்டும் என்றுதான் சொன்னாள்.. நான் வேடம் போடுகிறவனா என்று சண்டைக்கு வரட்டும்.. அப்போது ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று கருவிக் கொண்டிருந்தவளுக்கு அதற்கான வாய்ப்பையே அவன் கொடுக்கவில்லை..

“ஹா.. ஹா.. என் செல்லத்துக்கு கோபம் வந்து விட்டது.. இதுதான் என் நந்தினி.. மை ஸ்வீட் ஹார்ட்..” என்று முத்தம் கொடுத்துக் கொஞ்சினான்..

‘ஏண்டா இப்படிப் படுத்தற..?’ தாள முடியாத வேதனையுடன் வெட்கம் போல அவன் தோள் வளைவில் முகம் புதைத்துத் தப்பித்தாள் நந்தினி..

அடர்ந்திருந்த தென்னந்தோப்பின் ஓரமாக கடலலைகள் வந்து மோதி கரையைத் தொட்டுச் சென்றன.. அந்த அழகில் நந்தினியின் காயப்பட்டிருந்த மனம் லேசாக ஆற யத்தனித்தது..

கேரளா என்றாலே சுற்றுலா என்றுதான் சொல்வார்கள்.. அந்த அளவுக்கு உலகத்தில் உள்ளவர்களின் கருத்தைக் கவர்ந்திருந்த கவின் மிகு அழகு தேசம் கேரளா.. கேரளத்தின்

கடற்கரைகள் தனித்துவ மானவை.. அடர்ந்த தென்னந்தோப்புகளுடன் வரிசையாக அமைந்திருக்கும்.. கோவளம் கடற்கரை பிரசித்தி பெற்றது.

திருவனந்தபுரத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது கோவளம்.. இங்குள்ள கடற்கரை வளைவான வடிவத்துடன் உலகப் புகழ்பெற்ற அழகிய கடற்கரை என்ற பெருமையைக் கொண்டது..

“இங்கேதான் ‘செம்மீன்..’ பிலிமை ஷூட் பண்ணினாங்களாம்..”

ரவிச்சந்திரன் சொன்னதும் சட்டென முகம் திருப்பிக் கடற்கரையைப் பார்த்தாள் நந்தினி.. பச்சைப் பசேலென்ற தென்னந்தோப்புகளின் பக்கத்தில் கடலைகள் கால் நனைக்க கடலோரமாக ‘செம்மீன்’ திரைப்படத்தின் கதாநாயகி ஓடி வருவதைப் போல ஓர் தோற்றம் தோன்றி மறைந்தது..

**“கடலின் அக்கர போனாரே..**

**காணாப் பொண்ணுனு**

**போனாரே..**

**போய் வரும் போழ்**

**என்ன கொண்டு வரும்..?**

**கை நிறைய என்ன கொண்டு வரும்..?**

**பதினாறாம் ராவிலே..**

**பாலாறு திறையிலே..”**

ரவிச்சந்திரன் பாடிய பாடலில் கரைந்து போனாள் நந்தினி.. நிறைவேறாத காதலின் துயரத்தைச் சுமந்து வந்த பாடலைக் கேட்கும் சக்தியற்றவளாக அவன் வாய்பொத்தி தடுத்து விம்மினாள்..

“வேணாம் பாஸ்.. பாடாதீங்க..”

“ஏண்டி..?”

“மனசை என்னவோ செய்யுது..”

“பைத்தியம்..”

அவளை இறுக்கிக் கொண்டவனின் அணைப்பில் இறுகியவள் அவனை இறுக்கிக் கொண்டாள்... விடுபட்டால் அவனை விட்டு விலகி ஓடி விடுவாளோ என்ற பயம் மனதுக்குள் புகுந்து ஆட்டுவித்தது.. அவன் பெல்ட் மன்னனாகவே இருக்கட்டும்.. அவன் பொய் என்பதால் அவனது காதலும் பொய்யாகி விடுமா..?

அவளது மனப் போராட்டத்தை உணர்ந்தவனாக அவளைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தினான் ரவிச்சந்திரன்.. மழலைக்கான தாலாட்டைப் போல மெல்ல மெல்ல அவளது மனதை அமைதிப் படுத்தியது அவனது தட்டுதல்..

தாய்ப் பறவையின் சிறகுக்கடியில் உணரும் பாதுகாப்பை அன்றும் அவனிடம் உணர்ந்தவளுக்கு இவனா பொய்காரன் என்று மனம் வலித்தது.. அலைகள் வீசும் கடலோரமாக அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்.. அவளை விலக விடாமல் அவளது தோளைச் சுற்றிக் கைபோட்டு அணைத்துச் சேர்த்து நடந்து கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. அவர்களைக் கடந்து சென்ற வயோதிகத் தம்பதி சிநேகிதமாக சிரித்தார்கள்.. உடையும் முக அமைப்பும் அந்தத் தம்பதியை வடநாட்டை சேர்ந்தவர்கள் என்று அறைகூவி அறிமுகப் படுத்தின.. அதை மெய்ப்பிப்பது போல அந்தத் தம்பதி தங்களுக்குள் இந்தியில் பேசிக் கொண்டார்கள்..

“ஆர் யு ஹனிமூன் கப்புள்..?” அந்தப் பெண்மணி வினவினாள்..

நந்தினிக்கு லஜ்ஜையாகி விட்டது..

'இப்படி ஈஷிக் கொண்டு வந்தால் இப்படித்தானே கேட்பார்கள்..' என்ற சங்கடத்துடன் விலக முயன்றாள்..

ரவிச்சந்திரனின் கரம் அவளது தோள் மீது அழுத்தமாக பதிந்து அவளது விலகலை ஆட்சேபித்தது..

"யெஸ்.. வீ ஆர்.." என்றான் அவன்..

"ஃபைன்.. ஃபைன்.." அவர்கள் நடந்து விட..

"ஏன் அப்படிச் சொன்னீங்க..?" என்று சீறினாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் கண்கள் இடுங்கின..

# அத்தியாயம் 233

கடற்கரையில் குவிந்து கிடந்த பாறைகள் அரண்போல கடல்நீரைத் தடுத்து ஒரு அழகிய வளைகுடாப் பகுதியை ஏற்படுத்தியிருந்தது.. கோவளம் கடற்கரையின் தனிச் சிறப்பான இந்த அமைப்பு குளிப்பதற்குத் தோதான இடமாக இருந்ததால் சுற்றுலாவாசிகள் குளித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்..

வேறு ஒரு தருணமாக இருந்திருந்தால் நாமும் குளிக்கலாம் என்று நந்தினியையும் இழுத்துக் கொண்டு கடலில் இறங்கியிருப்பான் ரவிச்சந்திரன்.. நந்தினியும் குதியாட்டம் போட்டு கடல் குளியலை ரசித்திருப்பாள்..

அந்த உல்லாச மனநிலை அவர்களிடம் விடை பெற்றிருக்க எதிரும் புதிருமாக நின்ற இருவரும் ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டிருந்தார்கள்..

“நான் சொன்னதில் என்னடி தப்பு..?” உறுத்துப் பார்த்தபடி கேட்டான் ரவிச்சந்திரன்..

“நாம என்ன ஹனிமூன் கப்புளா..?”

“பின்னே.. இல்லையா..?”

நிதானமாக கேட்டவனின் பிடிவாதத்தில் அவளது மனம் தளர்ந்தது.. இல்லை என்று சொல்ல வாய் வராமலும் ஆமாம் தானே என்று ஏற்றுக் கொள்ள மனம் இல்லாததாலும் அவள் சுணங்கி நின்றாள்.. ரவிச்சந்திரனின் தீர்க்கமான பார்வை அவளது முகத்தை ஆராய்ந்தது.. நந்தினியால் அவனது பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை... தவறு செய்தது அவன்.. பொய் சொன்னது அவன்.. ஆனால் அவன் தைரியமாக அவளை உற்று உற்றுப் பார்க்கிறான்.. பாதிக்கப்பட்ட அவளோ குற்றவாளியைப் போல தலையைக் கவிழ்ந்து கொள்கிறாள் என்றால் இந்த வழக்குக்கு முடிவுதான் என்ன..?

“நான் உன்னை நோட் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்டி.. கொஞ்ச நாளாவே நீ நீயாக இல்லை.. உன் மனதில் ஏதோ குடையுது.. அதை என்னிடமிருந்து மறைக்கிற..”

“மறைக்கிறது நானில்லை..”

“பின்னே.. நானா..?”

“ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்..”

கடல்காற்று அவர்களின் முகத்தில் மோதியது.. கரையின் மீது அலைகள் மோதிச் சிதறிக் கடலுக்குள் திரும்பின.. துயர அலைகளை மனதுக்குள் சுமந்தாள் நந்தினி.. எத்துனை அழகான கடற்கரை..! ஒரு புறம் நீலக்கடல்..! மறுபுறம் பசுமையான தென்னந் தோப்பு..! இரண்டுக்கும் இடையே வளைகுடாவைப் போல ஒயிலாக வளைந்து மயக்கும் கடற்கரை..! நீச்சல் குளத்தைப் போன்ற கடல்பகுதி..! அதில் நீந்திக் குளிக்கும் சுற்றுலா வாசிகள்..!

இத்தகைய கடற்கரையில் அலைகள் வீசும் கடலை ரசித்தபடி இதமான மணற்பகுதியில் எதிர்காலக் கனவுகளை பகிர்ந்தபடி நடக்கும் அனுபவம் பேரானந்தம் கொண்டதல்லவா.. அந்த ஆனந்தத்தை அனுபவிக்க முடியாத சாபம் வாங்கிய துரதிர்ஷ்டசாலியாக பேதலித்து நின்றாள் அவள்..

“ஓ.. ஒன்றுக்கு மூன்றாய் ‘ஆமாம்’ வருகிறதென்றால் இதைப்பற்றி நாள் கணக்கில் நீ யோசித்திருக்க வேண்டும்.. இதற்கான உன் பதிலும் ‘ஆமாம்’ ஆகத்தான் இருக்க வேண்டும்..”

“ஆமாம்..”

“நினைத்தேன்டி.. நீ இப்படித்தான் சொல்வேன்னு நினைத்தேன்.. சொல்லிட்ட.. மேடம் இத்தனை ஸ்ட்ராங்கா சொல்கிறதா இருந்தா ரீசனும் ஸ்ட்ராங்கா இருந்தாகனுமே.. என்ன ரீசன்..?”

“நீங்கள் யார்..?”

புருவங்களை நெறித்தபடி அவளைத் தீர்க்கமாக அவன் பார்த்து வைத்தான்.. துக்கம் படிந்திருந்த நந்தினியின் முகத்தில் தெரிந்த தீவிரத்தில் அவனது புருவங்கள் சுருங்கின..

“நான் யாருன்னு தெரியாமலா நீலிமலைக் காட்டில் வுட்ஹவுஸில என்னோடு இரண்டு நாள் தங்கின..?” சீறிப் பாய்ந்த அவனது கேள்வியில்..

“பாஸ்..” என்று அதிர்ச்சியானாள் நந்தினி..

‘என்ன வார்த்தைகளைக் கேட்டு விட்டான்..’

அவளுக்கு நெஞ்சை அடைப்பதைப் போல இருந்தது..

‘இவனா என் காதலன்..? இவனையா நான் உருகி உருகி காதலிக்கிறேன்..?’ வெறுத்துப் போனது..

அவள் மனதில் மண்ட ஆரம்பித்த வெறுப்பைப் பற்றிய கவலை துளியும் இல்லாமல் படு அலட்சியமாக அடுத்த கேள்வியை கேட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“நான் யாருன்னு தெரியாமலா ஆலப்புழா படகு வீட்டில என்னோடு கொஞ்சிக் குழாவி குடும்பம் நடத்தின..?”

“ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்..” நந்தினி வெடித்தாள்..

“அடங்குடி..” புறங்கையை வீசிய ரவிச்சந்திரன் அதற்கும் அடுத்த கேள்வியை கேட்டு விட்டுத்தான் பேச்சை நிறுத்தினான்..

“நாம திருவனந்தபுரத்துக்கு வந்து இரண்டு நாள் ஆச்சு.. இஷ்டத்துக்கு ஊர் சுத்திக்கிட்டு இருக்கிறோம்.. கோழிக் கோடிலும் இதே கதைதான்.. நான் யாருன்னு தெரியாமலே என்னுடன் ஊர் சுற்றுகிறாயா..?”

‘அப்பேற்பட்டவளா நீ..’ என்ற அவனது எள்ளலில் அவளது ரத்தம் கொதித்தது.. விரல்களை மடக்கி உள்ளங்கைகளுக்கு குவித்து, இமைகளை மூடி, மூச்சை இழுத்து விட்டுத் தன்னைச் சமன் படுத்திக் கொண்டாள்.. அலட்சியமாக கால் விரித்து நின்று.. முன்னங்கைகளை

முன்புறமாக மடித்துக் கட்டியபடி அவளை ஊடுறுவும் பார்வையை பார்த்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

“குட்..” என்றாள் நந்தினி..

எதற்கு என்று அவன் கேட்கவில்லை.. இமைக்காமல் அவளைப் பார்த்த பார்வையை விலக்காமல் நின்றான்.. கடற்காற்றில் அலை பாய்ந்த அவனது தலைமுடியில் அவள் மனம் சிக்கித் தவித்தது.. அவன் மீதான வெறுப்பையும் மீறி பொங்கி வரும் காதலை அணை கட்ட முடியாமல் அவள் துயரம் கொண்டாள்..

‘இல்லை..’ தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

‘நான் தோற்று விடக் கூடாது.. திட்டம் போட்டு என்னை இவன் ஏமாற்றியிருக்கிறான்.. காதல் சொல்லி என் மனதைக் கலைத்து விட்டுக் கேட்கக் கூடாத கேள்விகளை கேட்டுக் கொண்டிருக்கிறான்.. இவனுக்கு என்மீது இருப்பது காதலல்ல.. வன்மம்.. இவனை வேண்டாமென்று நான் சொன்னதற்காக பழிவாங்க என்னைக் காதலிப்பதைப் போல நடித்திருக்கிறான்.. இவன் தான் வேண்டுமென்று என்வாயால் நான் சொல்ல வேண்டும்.. அது மட்டும் தான் இவனுக்கு வேண்டும்.. நான் வேண்டாம்.. நான் வேண்டுமென்று

நினைத்திருந்தால் இப்படியெல்லாம் பேசியிருக்க மாட்டான் ..' உயிருக்குயிராய் காதலிப்பவன் ஏமாற்றுக்காரனாக இருந்தாலும் அவனைப் பிரிய நேர்வது மிகப் பெரும் வலி.. அந்த வலியை அப்போது அனுபவித்துத் துடித்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

குற்றுயிரும் குலையுயிருமாக அவள் துடித்த துடிப்பின் வேதனையை அவள் முகத்தில் கண்ட ரவிச்சந்திரனின் முகம் இறுகியது..

எதற்காக இந்தத் துடிப்பு என்று தனக்குள் அவன் கேட்டுக் கொண்டான்..

எதையும் இலகுவாக எதிர் கொள்ளும் குழந்தை மனம் கொண்ட நந்தினியின் விழிகளில் இது போன்ற வேதனை வருமானால் அவள் எந்த அளவுக்கு யோசித்திருக்க வேண்டும்..? எத்தனை தினங்களாக யோசித்திருக்க வேண்டும்..? அவன் மீதான நம்பிக்கையை அவள் கை விட்டு விட்டதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்ட ரவிச்சந்திரனின் முகம் இறுகியது.. அவனறியாத ரகசியங்களும் அவள் மனதில் இருக்கக் கூடும் என்பதில்

அவன் கோபம் கொண்டான்.. அவனது பார்வையின் தீட்சண்யத்தில் அவள் கோபம் கொண்டாள்..

‘செய்வதையெல்லாம் செய்து விட்டு பார்க்கிற பார்வையைப் பாரேன்.. இவன்மீது குற்றத்தை வைத்துக்கிட்டு நான் என்னவோ குற்றம் செய்ததைப் போலயில்ல பார்த்து வைக்கிறான்..’

மனதுக்குள் கோபம் கோபமாக வந்தது.. கூடவே துக்கமும் சேர்ந்து வந்தது..

‘விரும்பி வந்தவளைத் தொலைத்து விடப் போகிறாயா..?’

அவளது மருகும் பார்வையைத் தாள மாட்டாதவனாக ரவிச்சந்திரன் ஓரடி எடுத்து வைத்தான்..

“கிட்ட வராதீங்க..” நந்தினி கண்களை இறுக மூடி வலது கையை நீட்டிக் கத்தியதில் அப்படியே நின்று விட்டான்..

“நீங்கள் ஏமாற்றுக்காரர்..” அவள் குமுறினாள்..

புருவங்கள் சுருங்க அவன் பார்த்த பார்வையில் அவள் பயந்து போனாள்.. ரத்தமென சிவந்த கண்களுடன்.

“யாரை ஏமாற்றினேன்..?” என்று அவன் அதட்டினான்..

“மத்தவங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.. என்னை நீங்க ஏமாற்றிட்டிங்க.. அதைப்பத்தி மட்டும் தான் நான் சொல்ல முடியும்..” துணிவைத் திரட்டிக் கொண்டு பதில் சொன்னாள்..

“மத்தவங்களுமா..? ஓ..! அப்படி எத்தனை பேரை ஏமாற்றியிருப்பேன்னு நினைக்கிற..?”

“யாருக்குத் தெரியும்..?”

“இந்த ஏமாற்றக்காரனை நம்பித்தான் ஊர் விட்டு ஊர் வந்த.. நினைவிருக்கட்டும்..”

“அந்த முட்டாள்தனத்துக்குத்தான் விலை கொடுத்துக் கொண்டிருக்கிறேனே.. எவளோ ஒளிந்து கொள்ள போலிஸ் ஆபிசரின் வீட்டைத் தேடினானாம்.. அந்தக் கதையாய் என் கதை ஆகிப்போச்சு..”

“இப்ப என்னதாண்டி ஆகியிருக்கு..?”

“நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க..”

“என்னடி கேட்ட..?”

“நீங்கள் யார்..?”

அவன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.. இமைக்காத அவனது பார்வையில் அவளது இதயம் சிலிர்த்தது.. ஓடிப் போய் அவனது கழுத்தைக் கட்டி கைகளால் வளைத்து ஊஞ்சலாடி விட உள்ளம் துடித்தது.. அவன் மீதான கட்டுக்கடங்காத காதலுக்கு கரை போட முடியாமல் தடுமாறித் தவித்தாள் நந்தினி..

“நீயே சொல்லு.. நான் யார்..?”

அவன் கெட்டிக்காரத்தனமாக கேள்வியை அவள் பக்கமாக திருப்பி விட்டு விட்டான்..

“நீங்கள்.. நீங்கள்.. ஏமாற்றுக்காரர்..”

“ஈஸிட்..? என்னடி செய்தேன்..? உன் கையில் என் குழந்தையைக் கொடுத்து விட்டுக் கை கழுவப் பார்க்கிறேனா..?”

பட்டவர்த்தனமாக அவன் கேட்ட கேள்வியில்..

“பாஸ்..” என்று முகம் சிவக்கப் பேச்சு வராமல் திணறிப் போனாள் நந்தனி..

அவன் ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்த வண்ணம் உதட்டைச் சுழித்தான்.. அந்த அழகில் மயங்கிக் கிறங்கிப் போனவளின் மனம்..

‘ஏண்டா என்னை ஏமாற்றின..?’ என்று குமுறியது..

“சொல்லுடி..” அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி அவளை கொன்று தின்றான்..

“பேசாமல் நின்றால் எப்படி..? என்னவோ நான் ஏமாற்றுக் காரன்னு குற்றப் பத்திரிக்கை வாசித்த.. என்ன ஏமாற்றுனேன்னு கேட்டால் பேசாமல் நிற்கிற..? பேசுடி.. பேசக்கூடாததையெல்லாம் பேசிட்டு இதுக்குப் பதில் பேசாம நின்றால் எப்படி..?”

“பேசக் கூடாததை பேசினேனா..? நானா..?” மயக்கம் கலைந்தவளாக அவள் சீறிச் சினந்தாள்.. அவன்மீது குற்றமில்லாததைப் போல அவன் பேசிய பேச்சில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

“நீங்கதான் செய்யக் கூடாததை செய்துட்டு நிற்கறிங்க..”

கோபத்தில் கொதித்து விட்டு ‘ஐயோடா..’ என்று வாயடைத்து நின்றாள்..

‘சும்மாவே இவன் கேட்கக் கூடாத கேள்வியையெல்லாம் கேட்டு வைத்தான்.. இந்தப் பேச்சுக்கு என்னவெல்லாம் பேசி வைக்கப் போகிறானோ..’

அவள் பயந்ததைப் போலதான் நடந்தது.. இரை கிடைத்து விட்ட சிங்கத்தின் விழிகளைப் போல அவனது கண்கள் பளபளத்தன..

“செய்யக் கூடாததை செய்து விட்டேனா..? உன்னிடமா..? எங்கே..? எப்போது..?” என்று ஆரம்பித்து அறியாப்பிள்ளை போல அவன் கேட்ட கேள்விகளின் பசுமை தாங்க முடியாதவளாக அவள் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் வெட்கம் பிடுங்கித் தின்றது..

‘இப்படியெல்லாம் இவன் பேசுவானா..?’ அவன் அதற்கும் மேல் பேசி வைத்தான்.. மங்களூர் எக்ஸ்பிரஸின் இரவு நேரப் பயணத்தில் ஒரே கூபேயில் இருவரும் தனித்துப் பயணம் செய்ததில் ஆரம்பித்து நீலிமலை மரவீடு, ஆலப்புழா படகு வீடு என்று அத்தனையையும் இழுத்து வைத்து பச்சை நிறமே, பச்சை நிறமே என்று பாடாத குறையாய் கேள்விகளைக் கேட்டு விட்டுத்தான் ஓய்ந்தான்..

இதில் காதுகளில் விரல்களை விட்டு நின்றவளின் அருகே வந்து விரல்களைப் பிடுங்கி விட்டு காதருகே குனிந்து வண்டை வண்டையாக அவன் கேட்டு வைத்ததுதான் ஹைலைட்..

“அக்லி மேன்..”

கோபத்துடன் அவன் நெஞ்சில் கைகளால் குத்தியவளின் கைகளைச் சேர்த்துப் பிடித்து இழுத்து அணைத்து மூச்சு முட்ட முத்தம் பதித்தான் அந்த ‘அக்லி மேன்..’

# அத்தியாயம் 234

“**வா**ட்’ஸ் யுவர் பிராப்ளம் நந்தினி..?” முகத்தோடு முகம் வைத்துக் கேட்டவனிடம் வெறுப்பைப் பொழிய முடியவில்லை.. அசிங்கம் பிடித்தவன் என்று ஒதுங்க முடியவில்லை.. அவன் பச்சை பச்சையாகக் கேட்ட அசிங்கம் பிடித்த கேள்விகளுக்காக கோபப் பட முடியவில்லை.. உன் முகத்தில் விழிக்கப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியவில்லை..

இயலாமையுடன் தோற்றுப் போனவளாக பொங்கி அழுதாள் நந்தினி.. அவன் பதறிப் போனான்..

“ஹேய்.. மக்கு.. நான் கோபத்தில் பேசிட்டேண்டி.. நீயே சொல்லு.. உன்மீது உயிரையே வைத்திருக்கிறேன்.. என்னைப் பார்த்து நீ ஏமாற்றுக்காரன்னு சொல்லலாமா..? அதனால்தான் அப்படியெல்லாம் பேசிட்டேன்.. இதுக்குப் போய் இப்படி அழுகறியே.. தத்தி, தத்தி..”

“அதைத்தான் புரூவ் பண்ணிட்டிங்களே..”

“எதை..?”

“நான் மக்கு, தத்திங்கிறதை..”

“ஹா.. ஹா.. நீ மக்கு, தத்திதாண்டி.. வாயால் பேசினதுக்கே இந்த அழுகை அழுகறியே.. உன்னை மேரேஜ் பண்ணிய பின்னாலே இத்தனையையும் ஆக்ஷன்ல காண்பிப்பேனே.. அப்ப என்னடி செய்வ..?”

“பாஸ்..”

நந்தினியின் முகம் ரத்தமென சிவந்தது.. அதை ரசித்துப் பார்த்தவனின் மேய்ச்சல் பார்வையில் அவளது உடல் முழுவதும் கூசியது..

‘இவனை வெறுக்க வேண்டுமே..’ அவளது மனம் பதறியது..

“ஹேய்.. குடாக்..!” காதோரமாக கிசுகிசுத்தான்..

‘புதுசு புதுசா பெயரைச் சொல்வான்..’

அவளது மனம் சிணுங்கியது.

“யாராவது ஏதாவது சொன்னாங்களா..?”

‘வாயைப் பிடுங்கப் பார்க்கிறானா..? ஆமாம்டா.. உன் அத்தை மகள்தான் உண்மையைச் சொன்னாள்ன்னு சொன்னா என்ன செய்வான்..? அவளை வீட்டை விட்டுத் துரத்தி விடுவானா..?’

அஜந்தா அந்த அரண்மனையை விட்டுப் போவதில் நந்தினிக்கு யாதொரு ஆட்சேபமுமில்லை.. போய்த் தொலையட்டும்.. ரம்ய மாலினி நிம்மதியாக இருப்பாள் என்றுதான் நினைப்பாள்.. ஆனால் நந்தினியிடம் ரவிச்சந்திரன்தான் பெல்ட் மன்னன் என்ற உண்மையைச் சொன்னதற்காக அவள் வீட்டை விட்டு வெளியேற்றப் பட்டால் என்றால் நந்தினியால் தாங்க முடியாது.. தன்னால்தானே என்ற குற்ற உணர்வினால் துடித்துப் போவாள்..

நந்தினியின் நல்வாழ்வைப் பற்றிய அக்கறையினால் ஒன்றும் அஜந்தா ரவிச்சந்திரனைக் காட்டிக் கொடுத்து விடவில்லை என்பதை அவள் நன்றாகவே அறிவாள்.. நந்தினியும் ரவிச்சந்திரனும் திருமணம் செய்து கொள்வதை அஜந்தா அட்சதை தூவி வாழ்த்தி வரவேற்க மாட்டாள்.. அதைக் குலைக்க அனைத்து வேலைகளையும் செய்வாள் என்பதும் அவளுக்குத் தெரியும்..

அஜந்தாவின் சுயநலத்துக்காகவே அவள் ரவிச்சந்திரனைக் காட்டிக் கொடுத்தாலும் உண்மை உண்மைதானே.. ரவிச்சந்திரன் தான்தான் பெல்ட் மன்னன் என்பதை மறைத்து நந்தினியிடம் அறிமுகமில்லாதவன் போல நடித்துக் காதலைச் சொன்னது தவறுதானே.. ரவிச்சந்திரனைப்

போன்ற தீரன் தான் இன்னார் என்பதை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லி விட்டு அதற்குப் பின்னால் காதலை முன்னிருத்தியிருக்க வேண்டாமா..? யார் இதைச் செய்திருந்தாலும் அவளால் மன்னித்து மறந்திருக்க முடியும்.. ரவிச்சந்திரன் செய்து விட்டான் என்பதைத்தான் மன்னிக்க முடியவில்லை..

‘ரவியா இதைச் செய்தான்..?’

இந்தக் கேள்விதான் அவள் மனதை நெருஞ்சி முள்ளாய் நெருடிக் கொண்டிருந்தது.. எதற்கும் அஞ்சாத அஞ்சா நெஞ்சனா அவளிடம் பொய்யுரைத்து தான் இன்னார் என்பதை மறைத்துக் கபட நாடகம் ஆடினான்..?

“தரங்கிணி உன் மனதைக் குழப்பி விட்டாளா..?”

அவன் அஜந்தாவைக் கேட்கவில்லை என்பதில் அவளுக்கு ஆச்சரியம் வந்தது.. தரங்கிணிக்கு ரவிச்சந்திரன் தான் நந்தினிக்காக நிச்சயிக்கப்பட்ட பெல்ட் மன்னன் என்று தெரிந்திருக்காது என்றே அவள் நினைத்தாள்.. தெரிந்திருந்தால் அதைத்தான் முதலில் சொல்லியிருப்பாள்... ரம்ய மாலினியின் மனதில் தனபாலனின் மீதான சாப்ட் கார்னர் இருக்கிறது என்பதை அடுத்ததாகத்தான் சொல்லியிருப்பாள்..

“அவ என்னதாண்டி சொன்னா..?”

“அவ சொன்னதை உங்களிடம் ஏற்கனெவே சொல்லியாச்சு..”

“என்ன..? ரம்யா மனசில அந்த தனபாலன் மேலே ஒரு சாப்ட் கார்னர் இருக்குன்னு ஏதோ சொன்னியே.. அதுவா..? ம்ம்ம்..? அதுக்கா என்னுடன் சண்டை போட்டுக்கிட்டு இருக்கிற..?”

ஒருநொடி அனைத்தையும் தூக்கிப் போட்டு விட்டு அவனிடம் அடைக்கலமாகிவிட வேண்டும் போல இருந்தது... அப்படித்தானே இருக்கிறாள்... அவள் அப்படி இருப்பதாகத்தானே அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.. அவள் மனதில் புகுந்திருக்கும் சந்தேகப் பேயைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்..

‘ஊஹும்.. இது முடியாது..’

அவனது அருகாமையில் இருந்தால் எதிர்க்க முடியாது என்று தோன்ற அவள் விலகி நடக்க யத்தனித்தாள்.. அவனது இரும்புக் கரம் அவளைப் பிடித்து இழுத்து நிறுத்தியது..

“நில்லுடி..”

அவள் மனதில் 'நில்லென்று சொன்னால் மனம் நின்றா போகும்..?' என்ற பாடல் எதிரொலித்தது.. கட்டுக்கடங்காத மனம் அவனது ஒற்றைச் சொல்லில் நின்று விடுமா..?

என்ன ஒரு ஆச்சரியம்.. அலையடித்த அவளது மனது அமைதியானது.. கட்டுக்கடங்காத மனது அவன் சொல்லுக்கு கட்டுப்பட்டு நின்றது.. தன்னிச்சையாய் அவளது கால்கள் தேங்கி நின்றன.. அவனது பார்வை அவள் மனதைக் கட்டும் கயிறானது விந்தையிலும் விந்தை.. மனதுக்குத் தளை போட முடியுமா..? இவன் போடுகிறானே..

"உன்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன் நந்தினி.. என்னை விட்டு விலகனும்னு நினைக்காதே.. அது நடக்காது.. நான் அனுமதித்தால்தான் உண்டு.. அதுவும் நடக்காது.."

'எவ்வளவு தெனாவெட்டாப் பேசறான்..'

நந்தினியின் ரத்தம் கொதித்தது..

'இதுக்கும் மேலே என்ன வேண்டும்..? இவன் வேண்டாம்ன்னு நான் சொல்லக் கூடாதாம்.. அது நடக்காதாம்.. யாருன்னு சொல்லாம வயநாட்டுக்கு கடத்திக்கிட்டு வந்திருக்கிறானில்ல.. அந்த ஆணவம்.. இவனக் காதலிக்க வைத்துட்டானில்ல.. அந்தத் திமிர்..'

“உன் மனதில என்ன சதியாலோசனை ஓடுது..?”

“சதியெல்லாம் உங்களுக்குத்தான் கை வந்த கலையாச்சே.. நான் ‘தத்தி’ பாஸ்.. மக்கு.. எனக்கு புத்திசாலித்தனம் பத்தாது பாஸ்..”

“ஹா.. ஹா.. இன்றைக்கு என்னடி.. எல்லாத்தையும் ரொம்பப் பெருமையா ஒப்புக்கிற..?”

“தோற்றுவிட்டவ ஒப்புக்கிட்டுத்தானே ஆகணும்..?” வறண்ட குரலில் சொன்னாள் நந்தினி.. அவளது குரல் வறட்சியில் அவளை உற்றுப் பார்த்தவன்.. தலையை யோசனையாய் ஆட்டி விட்டு..

“ஊஹும்.. உன்னிடம் ஏதோ சரியில்லை நந்தினி.. நீ பொடி வைத்துப் பேசுகிறதைப் போலவே இருக்கு..” என்றான்.

“தத்திக்கு பொடி வைத்துப் பேசத் தெரியுமா..?”

“நீ தத்தியா..?”

“அப்படித்தானே பாஸ் நீங்க சொன்னீங்க..?”

“அடித்தேன்னா பாரு..” கையை ஓங்கினான் ரவிச்சந்திரன்..

அனிச்சையாக நந்தினி தலையைச் சரித்துப் பின் வாங்கியதில் அவனது முகம் மென்மையானது.

“உன்னைப் போய் அடிப்பேனாடி..?” அணைத்துக் கொண்டான்..

“அடித்ததே இல்லையா..?” அவள் விலக முயன்றாள்..

“அதெல்லாம் என் மனதை நீ புரிந்துக்கலை என்கிற கோபத்தில அடித்தது.. இப்ப அப்படியில்லையே..”

“இப்பவும் அப்படித்தான் பாஸ்.. உங்களைப் புரிந்துக்க முடியாமல்தான் தத்தியா நிற்கிறேன்..”

நந்தினியின் தொண்டை கமறியது.. அவளது முகத்தை இரு கைகளாலும் இறுக்கிப் பிடித்து முகம் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவனது இரும்புக் கைகளின் இறுக்கத்தில் அவளது கன்னத்தின் தசை வலித்தது.. முகம் கன்ற அவனது கைகளின் மீது அவளது கைகள் படிந்தன..

“நான் தத்தின்னு சொன்னதுக்கா இந்த அளவுக்கு அப்செக்ட் ஆகிற..?”

“தத்தியை தத்தின்னு சொன்னா ஒரு தப்புமில்ல பாஸ்..”

“உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்டி..” நந்தினி உடைந்தாள்.. அவன் கோபத்தைக் காட்டினால் எதிர்த்து நிற்கலாம்.. பேராடலாம்.. காதலை முன்னிருத்தி நிற்கிறானே.. மனம் முழுவதும் அவன் மீதான காதலை சுமந்து கொண்டு நிற்பவளால் அவனது குற்றத்தைச் சுட்டிக்காட்டிச் சண்டை போட முடிய வில்லையே..

“வேண்டாம்.. வேண்டாம்.. சொன்னால் கேட்கனும்..”

அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு தலையைத் தடவிக் கொடுத்துச் சமாதானப் படுத்தினான் ரவிச்சந்திரன்..

“உன் மனது எதனாலோ அமைதியில்லாம இருக்குது.. தரங்கிணி பேசினதில நீ கலங்கியிருக்கிறன்னு நினைக்கிறேன்.. ரம்யா மனதில தனபாலன் மேலே சாஃப்ட் கார்னர் இருக்குன்னு அவ சொல்லியிருப்பான்னு கெஸ் பண்றேன்.. தரங்கிணியை நான் மேரேஜ் பண்ணிக்கலைன்னா ரம்யாவை தனபாலன் மேரேஜ் பண்ணிக்க மாட்டான்னு பயமுறுத்தியிருப்பா.. நீயும் அதைக் கேட்டுவிட்டு உன்னாலே ரம்யாவுக்கு பிடித்த மாப்பிள்ளை

கிடைக்காமல் போய் விடுவானோன்னு அழுதுகிட்டு இருக்கிற.. ஆம் ஐ கரெக்ட்..?"

'இதுவும் கரெக்ட்தானே..' நந்தினி தேம்பியவாறு இருந்தாள்..

"முட்டாளாடி நீ..?"

'அதை உன் திருவாயால் எத்தனை தரம்தான் சொல்லுவ..? முட்டாளா இருக்கப் போய்த்தான் பெல்ட் மன்னனிடமிருந்து தப்பித்து விட்டேன்னு மங்களூர் எக்ஸ்ப்பிரஸில் ஏறி பெல்ட் மன்னனிடமே மாட்டியிருக் கிறேன்..'

"தரங்கிணியின் அண்ணன் எப்படியிருப்பான்..? தரங்கிணியைத் தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு செல்ஃபிஷ் மேனாகத்தானே இருப்பான்..? உன் தங்கையையும் குடும்பத்தையும் தூக்கியெறிந்து விட்டு வா.. உனக்கு என் தங்கையை மேரேஜ் பண்ணித் தருகிறேன்னு நான் ஒரு வார்த்தை சொன்னால் போதும்.. அடுத்த செகண்டே அவன் தரங்கிணியையும் அவனைப் பெத்தவங்களையும் தூக்கிக் கடாசிட்டு வந்து விடுவான்.. அவன் குடும்பம் அவனுக்கும் மேலே இருக்கும்.. உங்கள் வீட்டில் சம்பந்தம் பண்ண

உங்கள் மகள் தரங்கிணிதான் இடைஞ்சலாக இருக்கிறாள்ன்னு நேரடியாகக் கூட இல்லை.. நான் மறைமுகமாகச் சொன்னாலே மகளை காய்ச்சு காய்ச்சென்று காய்ச்சி உடனடியாக மாப்பிள்ளை பார்த்து மேரேஜ் பண்ணி வைத்து அனுப்பி விடுவார்கள்.. தனபாலனுக்கும் அவனைப் பெற்றவர்களுக்கும் தேவையானது ஒன்றே ஒன்றுதான்.. தனபாலன் என் தங்கையின் கணவன் என்ற பட்டம்.. அந்த ஒரு அடையாளம் அவனை உச்சத்திற்கு கொண்டு போய் நிறுத்தி விடும்.. அதற்காக அவனும் அவனைப் பெற்றவர்களும் தரங்கிணியை உதறித்தள்ளத் தயங்கவே மாட்டார்கள்.. அப்படிப்பட்ட சுயநலம் பிடித்த ஃபேமிலி அது..”

“நிஜமாவா..?”

அவன் ‘பெல்ட் மன்னன்’ என்பதை மறந்து.. தான் அவனிடம் தோற்றுப் போனோம் என்பதையும் மறந்து ரம்யமாலினியின் மனதிலிருக்கும் எண்ணம் தடையின்றி நிறைவேறி விட வாய்ப்புள்ளது என்பதில் ஆவலாகி அண்ணாந்து அவன் முகம் பார்த்து வினவினாள் நந்தினி..

“இப்பத்தான் நீ என் நந்தினியா இருக்கிறடி..”

நிம்மதியுடன் குனிந்து அவளது இமைகளில் முத்தமிட்டான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் மனம் வலித்தது.. இப்போதும் அவள் அவனுடைய நந்தினியாக இல்லை.. தற்காலிகமாக அவன் பெல்ட் மன்னன் என்ற எதிர்பபை மறந்திருக்கிறாள் என்பதை அவன் அறிவானா..?

“தனபாலனுக்கும் ரம்யாவுக்கும் மேரேஜை ஃபிக்ஸ் பண்ணி நடத்த எனக்கு தரங்கிணி ஒரு தடையாக இல்லை.. தனபாலனுக்கும் அவளுடைய பேரண்ட்ஸுக்கும் இவள் நடத்துகிற டிராமாவைப் பத்தித் தெரிய வந்தால் இவளை உண்டு இல்லைன்னு ஆக்கிருவாங்க.. உனக்கு அதெல்லாம் தெரியாதுன்னு சும்மா மிரட்டிப் பார்க்கிறா.. பயப்படாதே..”

“அப்படின்னா ரம்யாவை தனபாலனுக்கு மேரேஜ் பண்ணிக் கொடுத்துருவீங்கதானே..?” ஆவலுடன் கேட்டாள் நந்தினி..

அவளது ஆவலில் ரவிச்சந்திரனின் மனம் மிருதுவானது..

‘இவளுக்குத்தான் என் தங்கையின் மீது எவ்வளவு பிரியம்..!’ என்று நெகிழ்ந்தான்..

அதனால்தானே அவள் அவன் மனதுக்குப் பிடித்தவளாக மாறினாள்.. இவளை நீ திருமணம் செய்து கொண்டால் நான்

சந்தோஷப் படுவேன் ரவி என்று என்றைக்கு வீணா நந்தினியின் போட்டோவைக் காட்டிச் சொன்னாளோ.. அன்றைக்கு அவன் மனதில் அரியாசனம் போட்டு அமர்ந்து விட்டவள் அல்லவா அவள்..!

நந்தினி வீணா தேர்ந்தெடுத்த மருமகள்... அதனாலேயே ரம்யமாலினிக்கு நந்தினியைப் பிடித்திருந்தது..

“போட்டோவில் கூட என்னமா துருதுருன்னு இருக்காங்க பாருண்ணா.. இவங்க சிரிக்கிறப்ப கண்களும் சேர்ந்து சிரிக்கிறதைப் போலவே இருக்கில்ல.. இவங்க சிரிப்பு எனக்குப் பிடித்திருக்கு அண்ணா..” என்று நந்தினியின் அடையாளமான அந்த மலர்ந்த சிரிப்பை அவனுக்கு அடையாளம் காட்டியவள் ரம்ய மாலினி..

எது அரிதோ அதுதானே மனித ஜீவன்களுக்கு மிகவும் பிடிக்கும்..?

ரம்ய மாலினிக்கு மனம் விட்டுச் சிரிக்கும் சிரிப்பு அரிதானதாக இருந்தது.. வீணாவுக்கு வயநாட்டு அரண்மனையில் உண்மையான பாசமும் பிரியமும் காட்டும் உறவினர் அரிதானவர்களாக இருந்தார்கள்.. அந்த இருவரின் ஏக்கத்தையும் இட்டு நிரப்பும் உயிர்ப்புக் கொண்டவளாக

நந்தினி இருந்தாள்.. இருவரும் ஓர் மனதாக ரவிச்சந்திரனிடம் நந்தினியின் போட்டோவைக் காட்டினார்கள்.. தாயும் தங்கையும் ஆசைப்படுகிறார்களே என்றுதான் ரவிச்சந்திரன் அந்த போட்டோவை வாங்கிப் பார்த்தான்.. தலையைச் சரித்துச் சாய்வாக குனிந்து அடிக்கண்களால் சிரிக்கும் பார்வை பார்த்தபடி கழுத்தில் கிடந்த சங்கிலியை எடுத்துப் பற்களால் கடித்துக் கொண்டிருந்தாள் போட்டோவிலிருந்த நந்தினி..

ரவிச்சந்திரனுக்குள் ஓர் மின்னல் வெட்டியது.. போட்டோவிலிருந்த நந்தினி அவனைக் காந்தமென ஈர்த்து இழுத்தாள்..

அந்த நொடியிலிருந்து அவன் வேறு எந்தப் பெண்ணையும் ஏறிட்டும் பார்க்கவில்லை என்பதை அவள் அறிவாளா..?

# அத்தியாயம் 235

**க**ருமை நிறம் மேவிய மணற்பரப்பின் மீது தன் போக்கில் நடந்து கொண்டிருந்தாள் நந்தினி.. மனம் ஒரு நிலையாக இல்லாமல் அலையடிக்கும் அலைகடலாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்து.. ரவிச்சந்திரன் அவளுடன் வரவில்லை.. முக்கியமான பிஸினெஸ் மீட்டிங் என்று 'ஹவா..' பீச்சுக்குச் சென்றிருந்தான்.. நியுஸிலாந்தைச் சேர்ந்த கம்பெனியொன்றின் பிரதிநிதிகள் அங்குதான் தங்கியிருந்தார்கள்.. திருவனந்தபுரத்தின் 'யாழ்' ஹோட்டல் தவிர கோவளத்தின் மூன்று 'பீச்'களிலும் ரவிச்சந்திரனுக்கு ரிசார்ட்டுகள் இருந்தன.. அவற்றில் 'ஹவா' பீச்சிலிருந்த ரிஸார்ட்டைத்தான் நியுசிலாந்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்தனராம்..

"பிகாஸ்... ஹவா பீச் சூரியக் குளியல் கலாச்சாரத்திற்குப் பெயர் பெற்றது..." என்றான் ரவிச்சந்திரன்..

"சூரியக் குளியல்ன்னா..?" அப்பாவியாய் கேட்டாள் நந்தினி..

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்பு வந்தது..

குருகுருவென அவளைப் பார்த்தபடி ‘ஹவா..’ பீச் பக்கம் காரை ஓட்டிக் காட்டினான்.. நீச்சல் உடைகளுடன் கடற்கரை வெயிலில் கால் நீட்டி ஈஸிசேரில் படுத்திருந்த வெளிநாட்டு ஆண், பெண்களைப் பார்த்ததும் நந்தினிக்கு வெட்கமாகி விட்டது.. அவளது முகச் சிகப்பை ரசித்தவன்..

“நீயும் ‘சன் பாத்’ எடுத்துக்கயேன்..” என்றான்..

“அடி வாங்கப் போறிங்க..” அவனுடனான சண்டையை மறந்து மிரட்டினாள் அவள்..

“ஹேய்.. அவங்களை விட உனக்கு ஸ்விம்மிங் டிரஸ் படு ஷீட்டா இருக்கும்டி..”

பார்வையாலேயே அவளது உடல் வளைவுகளை அளவெடுத்தான் ரவிச்சந்திரன்..

‘ராஸ்கல்..’ உடல் கூச துப்பட்டாவை இழுத்து விட்டுக் கொண்டாள் அவள்..

“ஓ..” உதட்டைச் சுழித்து வளைத்து ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் அவன்..

‘இவன் சன் பாத் எடுத்தால் எப்படியிருக்கும்..’ தறிகெட்டு ஓடியது அவள் மனது..

செக்கச் சிவந்த உடலும்.. ரோமங்கள் அடர்ந்த மார்புமாக உடலை இறுக்கிப் பிடிக்கும் அடர் ஊதா வண்ண டிராயருமாக அவனை நீச்சலுடையில் கற்பனை பண்ணிப் பார்த்தவளுக்கு 'ஜிவ்'வென்று ஆகிப் போனது.. அவன் பெல்ட் மன்னன் என்பதையும் மறந்து..

'இவன் எனக்கே எனக்கா..?' என்று சொக்கிப் போனாள் அந்த சொப்பன சுந்தரி..

"ம்ஹும்.. நீ குடுத்து வைத்தது அவ்வளவுதான்.. சன் பாத் எடுத்தா அப்படியொரு ரிலீஃபா இருக்கும்.. இதுக்குன்னே நான் 'ஹவா' பீச்சுக்கு வருவேன்.. தெரியுமா..?" என்றான் அவன்.. "என்னது..! நீங்க சன் பாத் எடுப்பீங்களா..?" அரண்டு போனாள் நந்தினி..

"ஊம்.. எனக்கு அது பிடிக்கும்.."

நந்தினியின் பார்வை கடற்கரையைச் சுற்றிச் சூழன்றது.. கோவளத்தின் இரண்டாவது பெரிய பீச்சான 'ஹவா' பீச்சின் கடற்கரை முழுவதும் வெண்மை நிற அழகிகள் நீச்சலுடையுடன் வலம் வந்து கொண்டிருந்தார்கள்..

"எது பிடிக்கும்..?"

அவர்களைப் பார்த்தபடி பல்லைக் கடித்தாள் நந்தினி.. அவளது பார்வை போன திக்கில் பார்த்தவன்..

“உன் புத்தியிருக்கே..” என்று அவளது பின் மண்டையில் தட்டினான்..

“என் புத்திக்கென்னவாம்..? அது நல்லாத்தான் இருக்கு.. உங்க புத்திதான் மேய்ச்சல் புத்தியா இருக்கு..”

“இது கட்டுக்கடங்காத காளைடி.. மேயறதா இருந்தா சொந்த மேய்ச்சல் நிலத்திலதான் மேயும்..”

அவனது பேச்சில் அவளது முகம் குங்குமமானது.. அவன் சரசம் பேச ஆரம்பித்தாலே அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்து விடுகிறது.. பொல்லாதவன் இவன் என்ற கோபம் வருகிறது.. அவனது பார்வை மேய்ந்த மேயலில் எக்ஸிமோக்கள் போல உடல் முழுவதும் கவசம் போல போர்த்திக் கொள்ள வேண்டும் போல ஆகிப் போனது..

‘இப்படிப் பார்க்காதேடா..’ முகம் சிவக்க உதட்டைக் கடித்தாள் அவள்..

“ஆஹாஹா.. இந்தக் காளை இதுக்கு முன்னாலே வேற மேய்ச்சல் நிலத்தில மேய்ந்ததே இல்லையாக்கும்..” பேச்சு வாக்கில் சொல்லி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

‘கோபித்துக் கொள்வானோ..’ பயத்துடன் விழித்தாள்.

“இல்லேடி..” கோபமில்லாமல் ஆனால் தீவிரமான முகபாவத்துடன் அவன் தலையை அசைத்தான்..

“உன்னைப் பார்த்த பின்னால் நான் வேறு பெண்ணைப் பார்த்ததில்லை.. இதை நம்பறதும் நம்பாததும் உன் விருப்பம்.. நான் என்ன சொல்ல..? பட்..” யோசனையுடன் தலையை ஆட்டியவன் கடலை வெறித்தான்..

“நீ கேட்கலாம்.. இப்போது ராமனாய் இருக்கிறதினால இதுக்கு முன்னால் கிருஷ்ணனாய் இருந்த காலங்கள் இல்லாமல் போயிருமான்னு.. அப்போதும் இப்போதும் நான் ராமனாய்த்தாண்டி இருந்தேன், இருக்கிறேன்.. மனதால் கூட எந்தப் பெண்ணையும் விரும்பினதில்லை.. நான் விரும்பிய, விரும்புகிற முதலும், முடிவுமான பெண் நீ மட்டும்தான்.. புரிந்துக்க..

கிருஷ்ணன் ராதையைக் காதலித்தான்.. ருக்மிணியை மேரேஜ் பண்ணிக்கிட்டான்.. நான் அப்படியில்லடி.. என்னோட ராதையும் நீதான்.. ருக்மிணியும் நீதான்..”

கண்கள் கலங்க நந்தினியும் கடலை வெறித்தாள்.. அவன் சொல்லும் வார்த்தைகள் சத்தியமானவை.. அவனது காதல் ஆத்மார்த்தமானது.. இது எல்லாமே அவளுக்குப் புரிகின்றது.. இதையும் தாண்டி அவன்தான் ‘பெல்ட் மன்னன்’ என்று அவளுக்குத் தெரிய வந்திருக்கும் ரகசியம் அவளைத் துரத்துகின்றதே.. அவள் என்ன செய்வாள்..?

எதற்கும் கவலைப்படாமல் ‘க..க..போ..’ என்று இருந்த பிள்ளை மனது எங்கு போனது என்று ஏங்கினாள் நந்தினி.. இந்த நந்தினி அவளில்லை.. சிட்டுக் குருவியைப் போல விட்டுச் சிறகடிக்க முடியாமல் பாரமாக அவள் மனதில் துயரம் ஏறி அமர்ந்திருந்தது..

அவள் வேறு, அவன் வேறு என்று அவன் நினைக்க வில்லையே.. அவன் மனதை அழுத்திக் கொண்டிருந்த எண்ணங்களை அவளுடன் பகிர்ந்து கொண்டானே..

“தனபாலனை நான் வேண்டாம்ன்னு ரிஜக்ட் பண்ணுகிறதுக்கு இதுதான் ரீசன் நந்தினி.. தனபாலன்

கிருஷ்ணன் கேரக்டர்டி.. காலேஜில் படிக்கும் போதே வருடத்திற்கு நான்கு பேரை சின்சியராக் காதலிப்பான்.. இரண்டு மூன்று மாதங்களிலேயே காதல் ‘பிரேக்-அப்’ ஆகிவிட்டதுன்னு அடுத்த காதலுக்குப் போய் விடுவான்.. காதலுக்கு பிரேக்-அப் சொல்கிறவன் கல்யாணத்துக்கு டைவர்ஸ் சொல்ல எவ்வளவு நேரமாகும்..? காதலோட வேல்யூ தெரியாதவனுக்கு கல்யாணத்தோட வேல்யூவும், ஃபேமிலி வேல்யூவும் தெரிந்து விடுமா..? ரம்யா தனபாலனை தனபாலனுக்காக விரும்பலாம்.. பட், அவன் ரம்யாவை ரம்யாவுக்காக விரும்பலை.. என் தங்கைங்கிற அவளோட ஐடெண்டிக்காக விரும்புகிறான்.. ரம்யாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா கேரளத்திலயும், பிஸினெஸ் வெர்ல்டிலயும் அவனோட இமேஜும் மதிப்பும் பலமடங்கு இன்கிரிஸாகும்.. அதுதான் அவனுடைய எண்ணம்.. யோசித்துப் பார்.. என்னுடைய தங்கை என்பது மட்டுமே ரம்ய மாலினியின் அடையாளமா..?”

“இல்லவே இல்லை..” உடனடியாக மறுத்தாள் நந்தினி..

“தட்ஸ் குட்.. ரம்ய மாலினி ஃசாப்ட்டானவ.. ஷி இஸ் ஸோ குட்.. யாருக்கும் கெடுதல் நினைக்காத நைஸ் பெர்சன்.. அவளோட அருமை தெரிந்தவனிடம் தான் அவளை

ஒப்படைப்பேன்.. தனபாலனைப் போன்ற செல்ஃபிஷ் மேனுக்கு ஓர்நாளும் அவளை மேரேஜ் பண்ணிக் கொடுக்க மாட்டேன்..”

“பட்.. ரம்யா வேறு ஒன்றைச் சொல்கிறாளே..”

“என்னவாம்..?”

“தரங்கிணியின் குடும்பம் மட்டும்தான் அஜந்தாவின் குடும்பத்தை எதிர்த்து நிற்க முடியுமாம்..”

“அப்படின்னா இவங்க எப்பேற்பட்ட கிரிமினல்ஸா இருப்பாங்கன்னு நினைத்துப் பாரு..”

ரவிச்சந்திரன் சுட்டிக் காட்டிய கோணத்தில் ‘ஆமாம்தானே..’ என்று தோன்றியது நந்தினிக்கு..

“அப்படியிருந்தாத்தான் அபராஜிதனை மிரட்டி வைக்க முடியும்ன்னு அவ நினைக்கிறாளே..”

“ரப்பிஷ்..! அபராஜிதன் என்ன அவ்வளவு பெரிய தாதாவா..? அவனை இல்லாமல் பண்ணிவிட எனக்கு ஒரு செகண்ட் ஆகாது.. அப்பாவுக்காக பார்க்கிறேன்.. என் அத்தையின் மகனாகி விட்டான்.. பிழைத்துப் போகட்டும் என்று விட்டு வைத்திருக்கிறேன்.. இதற்காகவெல்லாம்

தனபாலனை சூஸ் பண்ணக் கூடாது..” ரம்ய மாலினியின் மனதில் தனபாலனின் மீது எண்ணம் இருக்கிறதே என்ற கலக்கம் நந்தினியின் மனதை விட்டு அகலவில்லை.. ரவிச்சந்திரன் ஓர் முடிவெடுத்து விட்டால் அதிலிருந்து மாறவே மாட்டான் என்பது அவளது மனதைப் போட்டு அரித்தது.. ரம்யாவின் மனம் போல வாழ்க்கை கிடைக்க என்ன வழி என்ற சிந்தனை வேறு நந்தினியின் மனதை குடைந்து கொண்டிருந்தது..

ரவிச்சந்திரன் ‘ஹவா’ பீச்சுக்குக் கிளம்பிப் போய் விட்டான்..

“ரூமுக்குள்ளேயே அடைந்து கிடக்காமல் பீச்சோரமா நடந்துவிட்டு வா.. உன் முகமே வாடியிருக்கு.. வெளியில் சுற்றி விட்டு வந்தா ரீலிஃபா இருக்கும்.. இன்றைக்கு முழுவதும் நான் பிஸி.. ஹெவி வொர்க் காத்திருக்கு.. உனக்காக கார் அரேன்ஜ் பண்ணியிருக்கிறேன்.. ஓகேவா..?”

கிளம்புவதற்கு முன் அவன் காட்டிய கரிசனத்தில் அவளது மனம் நெகிழ்ந்து போனது..

“நானும் கூட வரவா..?” அவனது செக்கரட்டரியாக அவளும் பதிலுக்கு கரிசனம் காட்டினாள்..

“எதுக்கு..? சன் பாத் எடுத்துக்கிட்டு இருக்கிற நியுசிலாந்துக்காரங்க.. அதை மறந்துட்டு உன்னை சைட் அடிக்க ஆரம்பிச்சுருவாங்க.. எனக்குத் தாங்காது.. உங்க டீலிங்கே வேண்டாம்ன்னு காண்ட்ராக்டைக் கேன்சல் பண்ணிட்டு நெக்ஸ்ட் ஃபிளைட்டில அவங்களை நியுசிலாந்துக்கு பேக்-அப் பண்ணிருவேன்.. அந்தக் கலவரமெல்லாம் நடக்காம இருக்கனுமுன்னா நீ ‘ஹவா’ பீச் பக்கம் கால் வைத்து விடாதே...”

அவனது பேச்சில் ‘ஆமாம்டா.. நான் பெரிய உலகப் பேரழகி..’ என்ற சிரிப்பு வந்தது.. அவன் வாயால் அவளை உயர்த்திப் பேசியது இனிப்பாக இருந்தது.. அவன்தான் பெல்ட் மன்னன் என்ற சஞ்சலத்தில் இனிப்பின் ஊடே கசப்பு பரவியது.. மனதை அழுத்திய சஞ்சலத்தை தாங்க மாட்டாமல் அவள் கடற்கரைப் பக்கம் சுற்றிப் பார்க்கத் தனித்துப் புறப்பட்டு விட்டாள்..

கோவளத்தின் பசுமை கருத்தைக் கவரவில்லை.. பசுந்தென்னந்தோப்புகளின் ஓரமாக பரந்திருந்த கடற்கரையின் மணற்பரப்பு சற்று கருமை கலந்ததாக காணப்பட்டது..

# எண்ணியிருந்தது ஈடேற... 7

“மோனசைட்டும், லைம்னைட்டும் இந்த மணலில் கலந்திருக்குடி..” என்று ரவிச்சந்திரன் சொல்லியிருந்தான்.

ஒருபுறம் பசுமையான தென்னந்தோப்பு.. மறுபுறம் வெண்மையான அலைகளின் நுரைகளோடு கூடிய நீலக்கடலின் சத்தம் என்று நந்தினியின் கவலைகளை மறக்க வைக்கும் இயற்கையின் அழகு அவளை வசீகரித்துக் கொண்டிருந்தது.. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அந்த இயற்கையழகில் மனதை பறி கொடுத்த நந்தினி கவலையை மறந்து கோவளத்துக் கடற்கரையின் அழகை ரசிக்க ஆரம்பித்து விட்டாள்.. கோவளத்துக் கடலின் அழகு விவரிக்க முடியாத பரவசத்தை அவள் மனதில் விதைத்தது.. கோவளத்தில் மூன்று பீச்சுகள் இருந்தன.. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் என்று அற்புதத் தரிசனங்களை அதிகாலையிலும், பின்மாலையிலும் அள்ளி வழங்கின.. மூன்று கடற்கரைகளும் 17கி.மீ நீளத்துக்கு கடலை யொட்டிக் காணப்பட்டன.. கடினமான பாறை அமைப்புகள் இம்மூன்று கடற்கரைகளையும் பிரிப்பது போல அமைந்திருந்தன..

முதன் முதலில் அந்தப் பாறைகளைப் பார்த்த போது..

“வாவ்..” என்று வாய் விட்டு ரசித்த நந்தினி அந்தப் பாறைகளின் அழகில் ஈர்க்கப் பட்டவளாக கால் வைத்துத் தாவ முயன்றாள்.. சரேல் என அவை வழுக்கி விட்டதில் சரிந்து விழப் போனவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

“இதெல்லாம் வழுக்குப் பாறைகள்டி.. கவனமா நடக்கனும்.. இல்லேன்னா வழுக்கி விட்டு விடும்..” என்று சிரித்தான்..

‘நீ ஏண்டா பெல்ட் மன்னனா இருந்து தொலைத்த..?’ மனதுக்குள் மருகினாள் நந்தினி..

அவன் அருகில் இல்லாத அந்தப் பொழுதிலும் அவனைப்பற்றிய எண்ணங்களே அவள் மனதை வியாபித்திருந்தன.. அண்ணாந்து பார்த்தாள்.. ‘குரும்கல்’ என்ற பாறையின்மீது 35மீட்டர் உயரத்தில் அமைந்திருந்த ‘லைட் ஹவுஸ்’ அவளது பார்வையில் பட்டது.. அவள் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த பீச்சிற்கு ‘லைட் ஹவுஸ் பீச்..’ என்றுதான் பெயராம்.. உயரமான லைட் ஹவுஸ் இருக்கும் பீச் என்பதால் அந்தப் பெயர் வைக்கப் பட்டிருக்கிறதாம்..

அருகில் நடந்து சென்ற சுற்றுலாப் பயணிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டு சென்றார்கள்.

கோவளத்தின் மூன்று கடற்கரைகளில் லைட் ஹவுஸ் பீச்தான் பெரியது என்று ரவிச்சந்திரன் சொல்லியிருந்தான்.. அடுத்த பெரிய பீச் 'ஹவா பீச்..' மூன்றாவது பீச்.. 'சமுத்ரா பீச்..' 'சமுத்ரா பீச்..' மிக எளிமையான பீச்.. தனிமையானதும் கூட.. மனதின் பாரம் குறைய தனிமை வேண்டி அங்கே சற்று நேரம் அமர்ந்திருக்க விரும்பிய நந்தினி கடற்கரை மணலில் உட்கார்ந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

“ஹலோ..”

பழக்கப்பட்ட குரல் என்று திரும்பிப் பார்த்தால் அங்கே அபராஜிதன் நின்று கொண்டிருந்தான்..

# அத்தியாயம் 236

**எ**ப்படி இவனால் எதுவுமே நடக்காததைப் போல ‘ஈ’யென்று பல்லைக் காட்ட முடிகிறது என்ற ஆச்சரியம்தான் நந்தினிக்கு முதலில் வந்தது.. அவள் முன்னாடிதான் ரவிச்சந்திரன் அபராஜிதனை அடித்துத் துரத்தினான்.. இனி கேரளாப்பக்கம் கால் வைக்கக் கூடாது என்று எச்சரித்தான்.. வயநாட்டை விட்டு ஓடி இரண்டு மாதம்கூட ஆகவில்லை.. திருவனந்தபுரத்துக்கு அபராஜிதன் வந்து நின்று விட்டான் என்றால் அவனை நினைத்து ரம்யமாலினி பயப்படுவதில் ஓர் அர்த்தமுள்ளது என்பது நந்தினிக்குப் புரிந்தது.. அது ரவிச்சந்திரனுக்கும் புரிய வேண்டுமே.. அத்தைமகன் என்பதால் அவன் காட்டும் சிறிதளவு கருணையே அபராஜிதனுக்கு அசாத்திய தைரியத்தைக் கொடுக்கிறதே..

நந்தினி சுற்று முற்றும் பார்த்தாள்.. ஆள் நடமாட்டம் அதிகமில்லாத ‘சமுத்ரா’ பீச்சின் தனிமை அவளைக் கலவரப் படுத்தியது..

அபராஜிதனைப் போன்ற கயவன் எதற்கும் அஞ்ச மாட்டானே..

அவசரமாக எழுந்து கொள்ள முனைந்த நந்தினியின் பக்கத்தில் உட்கார்ந்த அபராஜிதன் மன்றாடும் குரலில்..

“பயப்பட வேண்டாம் நந்தினி.. எனக்கு உங்களிடம் பேச வேண்டும் அவ்வளவுதான்.. பேசி முடித்ததும் போய் விடுவேன்.. இப்படி சிங்கம், புலி, கரடியைக் கண்டதைப் போல ஓட நினைக்காதீங்க.. மனது வலிக்கிறது..” என்றான்.

‘என்னடா இது.. பெருச்சாளி ஜீன்ஸ் பேண்டும், டிசர்ட்டுமா டிஸ்கோ ஆடுது.. எப்பவுமே இது டிரஸ்ஸில்லாமத்தான ஓடும்..’ நந்தினிக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் வந்தது..

‘இவனிடம் நான் பயப்படுகிறேனாம்.. என்ன கழுதைக்காம்.. துஷ்டனைக் கண்டாத் தூர விலகனும் பாங்க.. அதைச் செய்ய நினைத்தால் இவனென்ன சிங்கம் புலி கரடியான்னு கேட்டு வைக்கிறான்.. சிங்கம் புலி கரடி சண்டைக்கு வந்திராதா..? நினைப்புத்தான் இவனுக்கு..’

நந்தினி பதில் பேசாமல் கிளம்ப முனைந்தாள்..

“நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன் நந்தினி.. உங்க ஃபிரண்டிடம் நான் பேசிய விதம் தவறானதுதான்..”

‘அதில் இவனுக்குச் சந்தேகம் வேற இருக்கா..’

“உங்க ஃபிரண்டுக்கும் உங்களுக்கும் இடையில் சண்டை மூட்டிவிட டிரை பண்ணியிருக்கக் கூடாதுதான்.”

‘டிரை பண்ணினயா.. பாவி..! கேவலமா ஐடியா பண்ணினேடா.. நீயெல்லாம் எதில் சேர்த்தி..?’

“உங்களுக்குத் தெரியாது நந்தினி.. நான் உங்களை உயிருக்குயிராக காதலிக்கிறேன்..”

“என்னது..?”

தூக்கிவாரிப் போட அபராஜிதனை திகைப்புடன் பார்த்தாள் நந்தினி.. இதை நாடக வசனம் போல இல்லாமல் ஆத்மார்த்தமாக அடிமனதிலிருந்து சொல்வதைப் போல அவன் சொன்ன விதத்தில் கடலில் அவனைத் தளளி விட்டால்தான் என்ன என்ற ஆத்திரம் வந்தது..

“யெஸ் நந்தினி.. ஐ லவ் யு..”

இதே போல ரம்ய மாலினியிடம் சொல்லி மாத்து வாங்கி மும்பைக்கு துரத்தப்பட்டவன் அபராஜிதன்.. அந்தக் கதையெல்லாம் நந்தினிக்குத் தெரியாது என்று அவன் நினைத்து விட்டானா என்ன என்ற பல்லைக் கடித்தாள் நந்தினி..

“செஞ்சிக்கு நான் வந்தது உங்களைப் பார்க்கத்தான் நந்தினி.. மத்தபடி ஹிஸ்டரி மேல எனக்கு எந்தவிதமான இண்ட்ரெஸ்ட்டும் கிடையாது.. ஒரு இடத்துக்குப் போகிறதா இருந்தால் அந்த இடத்தைப் பற்றின அத்தனை இன்பர்மேஷனையும் கேதர் பண்ணி வைச்சுக்குவேன்.. செஞ்சிக் கோட்டையைப் பற்றி நான் தெரிந்து வைத்துக் கிட்டதும் அப்படித்தான்..”

‘அதுதான் தெரியுமே..’

அபராஜிதனின் இந்தக் குணாதிசியத்தைப் பற்றி ரவிச்சந்திரன் நந்தினியிடம் சொல்லியிருந்தான்.. இந்தத் திறமையை நேர் வழியில் அபராஜிதன் பயன் படுத்தியிருந்தால் வாழ்க்கையில் உயர்ந்திருப்பான் என்றும் சொன்னான்..

“கிரிமினல்ஸ் எல்லாருமே அதி புத்திசாலியாத்தான் இருப்பாங்க நந்தினி.. அதற்கான பெஸ்ட் எக்ஸாம்பிள் அபராஜிதனும், அஜந்தாவும்தான்.. இரண்டு பேருக்குமே தலை முழுவதும் மூளைதான்.. இவங்க யோகிக்கிற லெவலைக் கேட்டா அசந்து போவ.. அந்த அளவுக்கு ஸ்கெட்ச் போட்டுப் பிளான் பண்றதில கில்லாடிக.. இந்த நாலெட்ஜை

பாஸிட்டிவ்வா யூஸ் பண்ணினா நல்ல லெவலுக்கு வந்து விடலாம்.. நெகட்டிவ் வேலைகளுக்குத்தான் யூஸ் பண்ணுவாங்க.. சொல்லித் திருந்துகிற ஜென்மங்களா இருந்தா சொல்லித் திருத்தலாம்.. இவர்கள் சொல் பேச்சுக் கேட்கா ஜென்மங்கள்.. எத்தனைதான் மெனக்கெட்டாலும் திருத்த முடியாது.. நடக்காத வேலைக்கு நம்ம எனர்ஜியைச் செலவளிக்க முடியாதில்லையா..? ஸோ.. நான் இவங்களைப் பத்தி யோசிக்கக் கூட மாட்டேன்..”

அபராஜிதன் அத்துடனும் நிற்கவில்லை..

ரவிச்சந்திரனின் நடையுடை பாவனைகள் முதற் கொண்டு காப்பியடித்தான்.. ரவிச்சந்திரனைப் போலவே தோரணையாக பேசி வைத்தான்.. பல இடங்களில் தானே ரவிச்சந்திரன் என்பதைப் போல நடித்துவிட்டு ரவிச்சந்திரனிடம் வாங்கிக் கட்டிக் கொள்வான் என்றும் ரவிச்சந்திரன் சொல்லியிருந்தான்..

‘மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில இவன்தான் ஒர்ஜினல் ரவிச்சந்திரன்னு என்னிடம் கப்ஸா விட்டவன்தானே இவன்.’

“செஞ்சிக்கு உங்களைத் தேடித்தான் வந்தேன்.. என்னடா.. நம்மை இவனுக்கு எப்படித் தெரியும்ன்னு நினைக்கறீங்களா..? உங்களைச் சுற்றி என்ன நடக்குதுன்னு

உங்களுக்குத் தெரியாது நந்தினி.. பட்ஷே.. எனிக்கு அதி நல்லாவே தெரியும்..”

நந்தினி திக்பிரமையில் உறைந்து போனாள்.. அபராஜிதன் அவளைச் சந்தித்த நிகழ்வு தற்செயலானதாக இருக்க முடியாது என்று ஏன் அவளுக்குத் தோன்றவில்லை..? செஞ்சியில் சந்தித்ததினால் ரோமியோ போல நினைத்துக் கொண்டு அவளை சென்னையின் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் பின் தொடர்ந்தான் என்று தானே நினைத்திருந்தாள்.. அதற்கும் முன்னால் செஞ்சிக்கு வந்ததே நந்தினியைப் பார்க்கத்தான் என்று அபராஜிதன் சொல்கிறானே..

“உங்க போட்டோவைப் பார்த்ததிலிருந்தே ஞான் உங்கமேல பிரேமம் கொண்டு.. பிரேமம் எண்டால் வல்லிய பிரேமம் நந்தினி.. காவியக் காதல்..”

‘போடா..’ தலையைப் பிடித்துக் கொண்டாள் நந்தினி..

‘என் போட்டோ இவன் கைக்கு எப்படிப் போனது..?’

“ரவியத்தான் ஃபாரின் போயிருந்த சமயத்தில ஞான் வயநாட்டுக்குப் போயி..”

‘அவன் இருந்தா உன்னை மொத்து மொத்துன்னு மொத்தி விரட்டியிருப்பான்.. அதனால அவன் இல்லாத சமயத்தில வந்து போயிருப்ப..’

ரவிச்சந்திரன் வயநாட்டு அரண்மனையில் இல்லாத தருணங்களை அஜந்தாவும், அபராஜிதனும் எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றிருந்தது அவளுக்கு.. அதனால்தான் வீணா, மகன் அரண்மனையில் இல்லாத தருணங்களில் மகளை அழைத்துக் கொண்டு கோவில், குளம்ன்னு கிளம்பிப் போய் விடுகிறாளோ..

‘படுபாவி.. சொந்த அரண்மனையிலே நிம்மதியா இருக்க விடாம அத்தையையும், ரம்யாவையும் சித்திரவதை பண்ணிக்கிட்டு இருக்கான்..’

‘‘ஆ சமயத்தில அத்தையும், ரம்யாவும் தமிழ்நாட்டுக் கோவில்களுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்திருந்தாங்க.. ரவியத்தானும் ஃபாரின்லேயிருந்து வயநாட்டுக்கு வந்திருந்தார்.. தஞ்சாவூரில் உனக்குப் பெண் பார்த்திருக்கேன்னு ரவியத்தானிடம் சொல்லிக்கிட்டு இருந்தாங்க..’’

‘ஒட்டுக் கேட்டிருக்கான்.. ராஸ்கல்..’

“ஃபோட்டோ கொண்டு வந்திருக்கிறதா அவங்க சொன்னதும் நைஸா அவங்க ரூமுக்குப் போய் ஃபோட்டோவைத் தேடினேன்..”

‘திருட்டு வேலை செய்ததை வீர சாகசம் போல பெருமையா சொல்லிக்கிறான்.. திருட்டு நாய்..!’

“உங்க போட்டோவைப் பார்த்து விட்டேன் நந்தினி.. சொன்னால் நம்ப மாட்டிங்க..”

‘நீ என்ன சொன்னாலும் நம்ப மாட்டேன்னு உனக்கே தெரிந்திருக்கே.. அப்புறமும் ஏண்டா தொண்டைத் தண்ணியை வற்ற வைச்சுக்கிட்டுக் கதை சொல்கிற..?’

“கண்டதும் காதல்ங்கிறது இதுதான் போல..”

‘நீயெல்லாம் காதல்ங்கிற வார்த்தையைச் சொல்லவே கூடாது..’

“உங்க ஃபோட்டோவைப் பார்த்த அந்த செகண்டில மயங்கிப் போனவன்தான்.. இன்னும் எழுந்திருக்கலை..”

‘மயக்கம் போட்டு விழுந்ததில உன் மண்டை உடைந்திருந்தா நல்லாயிருந்திருக்கும்.. ரம்யாவும் உன்னை நினைச்சு பயந்து தரங்கிணியின் அண்ணனிடம் மாட்ட

நினைத்திருக்க மாட்டா.. எங்கே.. அப்படியாப்பட்ட நல்ல விஷயங்களெல்லாம் நடக்கவே மாட்டேங்குதே..’

நந்தினிக்கு அவன் சொன்ன காவியக் காதல் கதையில் துளியும் நம்பிக்கை ஏற்படவில்லை.. ரவிச்சந்திரன் மணக்கப் போகும் பெண் யார் என்று பார்க்க அஜந்தா அவனை அனுப்பி வைத்திருப்பாள் என்றுதான் நினைத்தாள்..

‘இதுக டிசைன் அப்படித்தான்..’

“உண்மையைச் சொல்லனும்னா ரவியத்தானுக்கு பிக்ஸ் பண்ணியிருக்கிற பெண் யார்ன்னு பார்த்து அந்த மேரேஜை கலைத்து விடனும் என்கிறதுதான் எங்க பிளான்..”

‘என்னடா இது.. இவன்கூட உண்மையை ஒப்புக்கிறான்..’

“பட்ஷே.. உங்க போட்டோவைப் பார்த்ததும் ஏற்பட்ட அட்ராக்ஷன் இருக்கே.. ஹௌ ஸ்வீட்.. இவனுக்கு இப்பேற்பட்ட பெண் கிடைக்கப் போகிறாளான்னு ரவியத்தான் மேல ஜெலஸ் வந்திருச்சு.. அஜந்தாவைத் தான் ரவியத்தான் மேரேஜ் பண்ணிக்கனும்னு நாங்க நினைத்தோம்..”

‘இதைச் சொல்லு.. இதுவல்லவோ உண்மை..’

“ஒரே கல்லில் இரண்டு மாங்காய்ன்னு நான் பிளான் பண்ணினேன்.. தஞ்சைக்கு வந்து உங்களைப் பார்த்து நான்தான் ரவியத்தான்னு சொல்லிப் பேசிப் பழகி உங்க மனதில காதலை வர வைக்கனும்..”

‘மின்னலே பட ஃபார்முலாவை யூஸ் பண்ண பிளான் பண்ணியிருக்கான்.. மாஸ்டர் பிளான்தான் போ..’

“மேரேஜ் நெருங்கி வர சமயத்தில எப்படியும் உங்களுக்கு உண்மை தெரிந்து விடும்.. ரவியத்தான் வேண்டாம்ன்னு சொல்லி அவரை ரிஜக்ட் பண்ணிட்டு என்னைக் கை காட்டிருவீங்க..”

‘கொன்னுருவேண்டா.. அந்த அளவுக்கு நான் தத்தியில்லை..’

“மேரேஜ் டயத்தில அது நின்று போனா குடும்ப கௌரவம் அபெக்ட் ஆகும்ன்னு வேறு வழியில்லாம அஜந்தாவை ரவியத்தான் மேரேஜ் பண்ணிக்குவார்.. ரவியத்தானுக்கு ஃபிக்ஸ் ஆன உங்களை நான் மேரேஜ் பண்ணி அவரைப் பழிவாங்கி விடுவேன்..”

‘இதை என்னிடமே சொல்கிற பார்த்தியா.. ரவி பெல்ட் மன்னன்னா, நீ தில் மன்னன்டா..’

“தஞ்சாவூருக்கு உங்களைத் தேடிப் போனேன்.. நீங்க ஃபிரண்ட்டோட மேரேஜ் எங்கேஜ்மெண்ட்டில கலந்துக்கிறதுக்காக செஞ்சிக்குப் போயிருக்கிறதா இன்பர்மேஷன் கிடைச்சது.. செஞ்சியில் உங்க ஃபிரண்டோட வீட்டைச் சுற்றிக் கண்காணித்துக்கிட்டு இருந்தேன்.. நீங்க இரண்டு பேரும் செஞ்சிக் கோட்டைக்குக் கிளம்பி வந்தீங்க.. நானும் ஃபாலோ பண்ணினேன்.. செஞ்சிக் கோட்டையில் தற்செயலாய் இன்ட்ரொடுயூஸ் ஆவதைப் போல இண்ட்ரொடுயூஸ் ஆகி செஞ்சிக் கோட்டை மேலே எனக்கு இண்ட்ரெஸ்ட் இருக்கிறதைப் போலக் காட்டிக்கிட்டேன்.. செஞ்சிக் கோட்டையைப் பற்றி நான் கேதர் பண்ணி வைத்திருந்த விவரங்களை அள்ளி விட்டேன்.. உங்களுக்குப் பதில் உத்ரா இம்ப்ரெஸ் ஆகிட்டாங்க.. பட்ஷே.. உங்களுக்கு ரவியத்தானைப் பிடிக்கவில்லை.. மேரேஜை நிறுத்த சூசைட் அட்டெம்ப்ட் பண்ணுகிற லெவலுக்குப் போவீங்கன்னு எனக்குத் தெரியாது..”

‘தெரிஞ்சதும் ஓடித் தொலைக்க வேண்டியது தானேடா..’

“அஜந்தாவிடம் அதைப் பற்றிப் ஃபோனில் சொன்ன போது சந்தோஷப்பட்டுப் போனாள்.. என்னை மும்பைக்குத் திரும்பி விடச் சொன்னாள்.. தானாய் நின்று போகப் போகிற

மேரேஜுக்கு நாம் ஸ்டெப் எடுத்து டயத்தை வேஸ்ட் பண்ண வேண்டாம் என்றாள்.. என்னால் உங்களை விட்டு விலக முடியலை.. சென்னை வரைக்கும் ஃபாலோ பண்ணினேன்.. நீங்க மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் எங்கோ போகிறீங்கன்னுதான் நினைத்தேன்.. வயநாட்டுக்கு வரச் போறிங்கன்னோ.. எந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று சூசைட் அட்டெம்ட் பண்ணிக்கப் போனீங்களோ, அந்த ரவிச்சந்திரனிடமே வேலை பார்க்கப் போறிங்கன்னோ தெரியாது.. ரயில்வே ஸ்டேஷனில் அத்தானைப் பார்த்ததும் ஓடிட்டேன்..”

அசைவற்று அமர்ந்திருந்தாள் நந்தினி.. இதோ அவளைச் சுற்றி நடந்த வலைப் பின்னல்களை எவனோ ஒருவன் பிட்டுப் பிட்டு வைத்துக் கொண்டிருக்கிறான்.. அதில் சம்பந்தப்பட்ட அவளுக்கு எதுவுமே தெரியாது.. தானாக தேடி வந்து வலையில் சிக்கிக் கொள்கிறாள் என்றால் அவள் தத்திதானே..

“ரவியத்தான் எதற்காக உங்களிடம் உண்மையை மறைக்கிறார்ன்னும் எனக்குத் தெரியலை.. அவர் ரொம்பவும் கோபப்படுவார் நந்தினி.. எஸ்டேட்டில் ஒருத்தனை பெல்ட்டால விளாசின விளாசலில் அவன் ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகி சாவைத் தொட்டு விட்டுத் திரும்பி வந்தான்..

இன்னொருத்தனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டார்.. பணம் இருந்தா யாரும் எதையும் செய்யலாம் போல... செத்தவனுக்கு யாருமில்லையாம்.. கேள்வி கேட்கவும் யாருமில்லை.. பட்ஷே.. நீங்க அப்படியில்லையே நந்தினி.. உங்களுக்கு குடும்பம், சொந்தம்ன்னு இருக்காங்களே..''

விண் விண் என்று தெரிந்த நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டாள் நந்தினி.. எங்காவது ஓடிவிட வேண்டும் போல இருந்தது.. தோல்வியைத் தழுவி பிடிக்காத வாழ்வை பிடித்தமானதாக்கி வாழ்வதை விட ஓடி ஒளிவது மேல்.

''ரவியத்தானுக்கு விரும்பியது கிடைத்தாகனும்.. அதுக்காக எந்த எல்லைக்கம் போவார்.. பட்ஷே.. உங்க மேல அவருக்கு விருப்பம் இருக்கிறதைப் போல எனக்குத் தோணலை நந்தினி.. உலகமே வியந்து அப்ரிஷியேட் பண்ணும் ஸ்டார் இமேஜ் கொண்ட பிஸினெஸ் மேன் ரவியத்தான்.. அவருக்குப் பெண் கொடுக்க மல்ட்டி மில்லினியர்ஸ் போட்டி போட்டுக்கிட்டு இருக்காங்க.. அவரை மேரேஜ் பண்ணிக்கனும்னு அஜந்தா, தரங்கிணி உட்பட உலகப் பேரழகிகள் ஏங்கிக்கிட்டு இருக்காங்க.. பட்ஷே.. தஞ்சாவூரில பிறந்து வளர்ந்த பெண்ணொருத்தி அவரை வேண்டாம்ன்னு சொல்லி தற்கொலை வரைக்கும்

போகிறான்னா அது அவரோட சுயமரியாதையைப் பாதிக்காதா..? அவரை வேண்டாம்ன்னு சொன்ன பெண்ணை அவர்தான் வேண்டும்ன்னு சொல்ல வைக்க நினைத்திருக்கிறார்.. தட்ஸ் ஆல்.. அதுக்கும் மேலே எதுவுமே இல்லை.. பை..”

# அத்தியாயம் 237

**ப**ற்ற வைக்க வேண்டியதை பற்ற வைத்து விட்டு போலி அனுதாபத்துடன் விடை பெற்றுப் போய் விட்டான் அபராஜிதன்.. அலையடிக்கும் சமுத்ரா பீச்சின் தனிமையிலே மூழ்கியவளாக அறைக்குத் திரும்பும் எண்ணமேயில்லாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள் நந்தினி.. ஆள் நடமாட்டம் இல்லை என்பது அவளை அச்சுறுத்தவே இல்லை.. இடி மேல் இடியாக அவள் கேட்ட கதைகளில் இடிந்து போய் முழங்கால்களில் தலையைக் கவிழ்த்துக் கண்ணீரை உகுத்துக் கொண்டிருந்தாள்.. அவளது தலைமீது ஓர் கரம் படிந்தது.. உடல் தூக்கிப் போட்டாலும் உள்ளுணர்வு அது யார் என்பதைச் சொல்லி விட்டதில் மெதுவாகவே தலையை உயர்த்தினாள்..

“ஏய்ய்.. குடாக்..! நேரமாகிருச்சு.. ரூமுக்குத் திரும்பாம இங்கே உட்கார்ந்து அழுதுகிட்டு இருக்கியே.. என்னடி ஆச்சு.. வீட்டு நினைவு வந்து விட்டதா..?”

கனிவாக வினவியபடி அவள் பக்கத்தில் உட்கார்ந்து மடிசாய்த்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அந்தக் கனிவில்

அவள் பொங்கி அழுதாள்.. அவன்தான் பெல்ட் மன்னன் என்று அறிந்த பின்பு பழைய நெருக்கத்தைக் காட்ட முடியாமல் மனம் சண்டித்தனம் செய்தது..

“ஏர்லியராவே மீட்டிங் முடிந்து விட்டது.. டீல் ஓகேயாகி காண்ட்ராக்டில் சைன் பண்ணியாச்சு.. வொர்க் ஓவர்ன்னு உன்னோடு டைம் ஸ்பெண்ட் பண்ணலாம்ன்னு ரூமுக்கு வந்தா நீயில்லை.. லைட் ஹவுஸ் பீச்சில் தேடிப் பார்த்தேன்.. ஹவா பீச்சு பக்கம் நீ வரமாட்டேன்னு தெரியும்.. இப்பல்லாம் தனிமை விரும்பியா ஆகிக்கிட்டு வர்றியா.. ஸோ.. நீ சமுத்ரா பீச்லதான் இருப்பேன்னு நினைத்தேன்.. நீ இங்கேதான் இருக்க..”

அவன் மடியில் முகம் புதைத்திருந்தவளின் தலையைக் கோதி விட்டபடி அவன் பேசிக் கொண்டேயிருந்தான்.. நிற்காமல் பெருகிக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைக்க மனமில்லாமல் அப்படியே படுத்திருந்தாள் நந்தினி.. அவனது வலிமையான விரல்கள் அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டன.. அவளது கன்னத்தில் தட்டிக் கொடுத்து எழுப்பி உட்கார வைத்தான்.

“ம்ப்ச்.. இப்ப என்ன ஆச்சுன்னு இப்படி அழுதுகிட்டு இருக்கிற.. எல்லா பிராப்ளமும் சால்வ் ஆகப் போகிற சமயத்தில நீ இப்படி அழலாமா..? அம்மா, அப்பா, ரம்யாவிடம் நம் காதலைப் பற்றிச் சொல்லி விட்டேன்.. தாத்தா, பாட்டி கெஸ் பண்ணிட்டாங்க.. இனி உன் ஃபேமிலிக்கு கன்வே பண்ண வேண்டியதுதான் பாக்கி.. அதை நாங்க பார்த்துக்குவோம்.. ஒன் ஆர் டூ வீக்கில உன்னோட பேரண்ட்ஸும் தம்பியும் உன்னைத் தஞ்சாவூருக்கு அழைத்துக்கிட்டுப் போக வயநாட்டுக்கு வருவாங்க பாரேன்..”

‘இதுதான் பிளானா..?’

நந்தகுமாருக்கும் இது தெரிந்திருக்க வேண்டும் என்று நினைக்கும் போதே மனம் வலித்தது.. பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிப் போக அவன் துணை நின்றிருக்கிறான் என்று நினைத்தாளே.. அவளுக்குப் பிடிக்காத திருமணத்தை பிடித்த திருமணமாக மாற்றுவதற்கு அவன் துணை நின்றிருக்கிறான் என்று தெரியாமல் போய் விட்டதே.. உத்ரா கூட நந்தினியிடம் நடித்திருக்கிறாளே.. பெல்ட் மன்னனிடமிருந்து காப்பாற்றி அனுப்பி வைப்பதைப் போல பாவ்லா பண்ணிப் பெல்ட் மன்னனிடமே அனுப்பி வைத்து விட்டாளே.. வினித் அண்ணாவும் இதில் உள் கையா..?

யோசித்து யோசித்து தலை வலித்தது.. அவளைச் சுற்றியிருந்த அனைவர்மீதும் சந்தேகம் வந்தது.. எல்லோரும் அவளை நம்ப வைத்து ஏமாற்றி விட்டார்கள் என்று மனம் குமுறினாள்..

“நம்ம மேரேஜை எங்கே வைத்துக்கலாம்..? நீலிமலை வுட்-ஹவுஸில் வைத்துக்கலாமா..? இல்லை.. ஆலப்புழா போட்-ஹவுஸில் வைத்துக்கலாமா..?”

அவையிரண்டிலும் அவனுடன் அவள் கழித்த நாள்களைப் பற்றி விரசமாக பேசியதை மறந்தவனாகப் பேசியவனை வெறித்துப் பார்த்தாள்.. அவளது அந்தப் பார்வையில் குற்ற உணர்வு கொண்டவனாக..

“ஸாரிடி..” என்றான் அவன்..

‘ஸாரி..! இந்த ஒற்றை வார்த்தையில் அத்தனை குற்றங்களும் மன்னிக்கப்பட வேண்டுமா..? மன்னிக்கத் தான் முடியுமா..?’

“என் கோபத்தைக் கிளறின.. கோபம் வந்தால் என்ன பேசுகிறேன், என்ன செய்கிறேன்னு எனக்கே தெரியாது..”

“ஓ..! அப்படிக் கோபம் வர்றப்ப எல்லாம் பெல்ட்டை எடுத்து விளாசி மரணப் படுக்கையில் தள்ளி விடுவீங்களோ.. இல்லேன்னா துப்பாக்கியை எடுத்து ஒரே குண்டில் ஆளைப் போட்டுத் தள்ளிட்டு காமா எதுவும் நடக்காததைப் போல ரொட்டின் வொர்க்கைப் பார்த்துக்கிட்டு இருப்பீங்களோ..?”

குற்றம் சாட்டும் பாவனையுடன் அவள் கேட்ட கேள்விகளில் அவனது புருவங்கள் சுருங்கின..

“இதையெல்லாம் யார் உனக்குச் சொன்னது..? மோகனா..?”

“மோகன் சொல்லிருவான்னுதான் அவனைக் கண்டாலே காத தூரத்துக்குத் தள்ளிப் போய் நின்றுக்கனும்னு ஆர்டர் போட்டு வைத்திருந்தீங்களே..”

“அஜந்தா சொன்னாளா..?”

“ஆக வயநாடு மொத்தத்ததுக்கும் இந்த விவரம் தெரிந்திருக்கு.. கூடவே இருக்கிற கேணச்சி எனக்குத்தான் விவரம் தெரியலை..”

ஆதரவாய் அவளை அணைத்து அமர்ந்திருந்தவன் வேகமாக அவளைத் தள்ளி விட்டான்.. மணற்பரப்பில் சரிந்து விழுந்தவளுக்கு கை கொடுக்காமல் உறுமினான்..

“ஆமாண்டி.. நான் அப்படித்தான் செய்தேன்.. தெரிந்து விட்டதில்லை.. விலகிப் போகனும்னா விலகிப் போய் விடு..”

சம்மட்டி அடிகளாய் நெஞ்சில் அறைந்த வார்த்தைகளினால் காயம் பட்டவளாக மன ரணத்துடன் துடித்துப் போனாள்.. வேறு என்ன வழியென்று புத்தி கேள்வி கேட்டது.. நான் அப்படித்தான்.. போவதானால் போய் விடு என்று அவனே சொல்லிவிட்டான்.. அவளுக்கு விடுதலை கொடுத்து விட்டான்..

இனி அவள் என்ன செய்ய வேண்டும்..? தஞ்சாவூரிலிருந்து ஓடி வந்தவளுக்கு வயநாடு அடைக்கலம் கொடுத்தது.. இங்கிருந்து எங்கு போவாள்..? தஞ்சாவூருக்கா..?

“கொஞ்ச நாளா பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்.. ஷெர்லெக் ஹோம்ஸ் மாதிரி துப்பறிந்துக்கிட்டு இருக்க.. எதுவா இருந்தாலும் நேரடியாப் பேசனும்.. நேரடியாக் கேட்கனும்.. வேண்டாதவங்க சொல்கிறதையெல்லாம் மனதில்

போட்டுக்கிட்டு கேள்வி கேட்டா எனக்குப் பிடிக்காது.. நீ நீயா இல்லை நந்தினி..”

“நீங்க மட்டும் நீங்களா இருக்கீங்களா பாஸ்..?”

“ஏய்ய்.. உனக்கு என்னதான்டி பிரச்னை..? என்னதான் வேணும்..? சொல்லித் தொலையேண்டி.. தன்னந்தனியா சமுத்ரா பீச்சில வந்து உட்கார்ந்து அழுகிற அளவுக்கு என்ன நடந்து விட்டது.. நீ என்ன தெரிந்துக்கிட்ட..? நீ தனிமை விரும்பியில்லை நந்தினி.. உன்னுடைய அடையாளமே கலகலப்புதான்.. அது எங்கேடி போனது..? எங்கே தொலைத்த..?”

“நீங்கதான் தொலைய வைத்துட்டிங்க பாஸ்..”

“நானா..?”

“யெஸ்.. நீங்கதான்.. உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸிலதான் என்னை முதன் முதலாப் பார்த்தீங்களா..?”

அவன் விழிகளை நேருக்கு நேராகப் பார்த்துக் கேட்டாள் நந்தினி.. அவனது இமையோரம் சிறு அசைவு தோன்றி மறைந்ததில் இவளுக்குள் ஏதோ நிகழ்ந்தது..

“இல்லை..”

அவன் உண்மையை ஒப்புக் கொண்டதில் மனம் உடைந்தாள் நந்தினி..

“வேற எங்கே பார்த்தீங்க பாஸ்..?”

“ஃபோட்டோவில் பார்த்தேன்.. யெஸ்.. உன்னை முதன் முதலா ஃபோட்டோவில்தான் பார்த்தேன் நந்தினி.. என் அம்மா இவதான் என் மருமகள்ன்னு சொன்னாங்க..”

“அத்தையும், ரம்யாவும் தஞ்சாவூருக்குப் போயிருந்தாங்களா..?”

“ம்ம்ம்.. தமிழ்நாட்டுக் கோவில்களுக்குப் போகிறப்ப தஞ்சாவூர் கோவிலுக்குப் போயிருந்தாங்க..”

“அங்கே என் அம்மாவை மீட் பண்ணினாங்களா..?”

“ஐ டோன்ட் நோ.. பட்.. உன்.. ஃபேமிலியை மீட் பண்ணினாங்களாம்..”

“என்னை உங்களுக்காகப் பெண் கேட்டாங்களா..?”

சட்டென்று திரும்பி அவளை உற்றுப் பார்த்த ரவிச்சந்திரனின் பார்வையின் கூர்மையில் நந்தினி உதட்டைக் கடித்தாள்.. கேட்கக் கூடாத கேள்வியை அவள் கேட்டு

விட்டதைப் போல அல்லவா குற்றம் சாட்டும் பார்வை பார்க்கிறான்..?

இவள் இப்படி நினைக்க.. அவனோ அதே தினுசில்..

“என்னவோ செய்யக் கூடாத ஒன்றை அம்மா செய்து விட்டதைப் போல இல்ல கொஸ்டின் கேட்கிற..?” என்று கேட்டு வைத்தான்..

“பாஸ்..”

“ஏண்டி.. எனக்கென்ன குறைச்சல்..? எனக்காக உன்னைப் பெண் கேட்கக் கூடாதா..?”

“இதை எதுக்காக என்னிடம் மறைத்தீங்க..?”

“எப்படிச் சொல்ல..?” அவன் பெருமூச்சு விட்டான்..

“மேரேஜ் பிடிக்கலைன்னு நீ சூசைட் அட்டெம்ட் வரைக்கும் போயிட்ட.. உன்னிடம் இதையெல்லாம் சொல்லி அழைத்துக் கொண்டு வந்தால் கூட வந்து விடுவியா..? ஸோ.. எனக்காக உன்னைப் பெண் கேட்ட விவரத்தைச் சொல்லாமலே அழைத்து வந்தேன்.. பழகி என்னை உனக்குப் புரிய வைத்தேன்..”

“என்னைத் தோற்கடிச்சுட்டிங்கள்ல..”

“ஏய்ப்ப்.. இதில வெற்றி, தோல்வின்னு எதுவுமே இல்லை நந்தினி.. யோசிச்சுப் பார்த்தா உனக்கே அது புரியும்.. இது நம்ம வாழ்க்கைடி.. வெற்றி கிடைத்தா அது இரண்டு பேருக்கும் சொந்தமானது.. தோற்றுப் போனா இரண்டு பேரும்தான் தோற்றுப் போவோம்.. புரிந்துக்க..”

“மக்கு, தத்தின்னு சொல்லிச் சொல்லியே என்னை மக்காக்கிட்டிங்கள்ல.. தத்தின்னுதானே இத்தனை நாளா இந்த விவரத்தை சொல்லாம மறைத்து வைத்திருந்தீங்க..?”

திரும்பத் திரும்ப அவள் புலம்பியதில் அவன் எரிச்சலாகி விட்டான்.. கோபத்துடன் எழுந்து நின்று..

“இப்ப என்னடி வேணும் உனக்கு..? நான் உண்மையைச் சொல்லாம ஏமாற்றியதற்கு என்னைப் பனிஷ் பண்ணனுமா..? என்னை விட்டு விட்டுப் போகனுமா..? போக நினைத்தால் போய்விடு.. போ.. என் முகத்தில் விழிக்காதே.. நான் பொய்காரனாம்.. உண்மையைச் சொல்லலையாம்.. இவ கண்டு பிடித்து விட்டாளாம்.. போடி போ.. நான் பொய்காரன்தான்.. இனி என் கண் முன்னால் வராதே..” என்று கத்தி விட்டுப் போய் விட்டான்..

எங்கேயாவது போய் விட வேண்டும் என்ற வேகம் வந்தது நந்தினிக்கு.. அப்படியே கடலுக்குள் இறங்கி விடலாமா என்றிருந்தது.. காக்கும் கடலாய் அது அலையடித்து அவளை அமைதிப் படுத்த முயன்றது.. தோற்றுப் போன சோகத்துடன் இற்றுப் போன மனதுடன் கண்ணீர் விட்டபடி இறுகிப் போனவளாக கடலை வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள்..

“நந்தினி..”

அதட்டலுடன் அவளது முடியை முரட்டுத்தனமாகப் பிடித்து உலுக்கினான் ரவிச்சந்திரன்.. அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

‘இவன் இன்னும் போகலையா..?’ மண்டியிட்டு மணலில் சரிந்து அவள் முகத்தைத் திருப்பி உறுத்துப் பார்த்தான் அவன்..

“என்னை விட்டுப் போகச் சொன்னேனே.. ஏன் போகாம இங்கேயே உட்கார்ந்திருக்க..?”

பதில் சொல்லாமல் உதட்டைக் கடித்தவளின் உதடுகளில் விரலால் சுண்டி விட்டான்.. வலியுடன் முகம் திருப்பிக் கொண்டவளின் முகத்தை முரட்டுத்தனமாகத் திருப்பி அவளது நாடியைப் பிடித்து விழிகளுடன் விழிகலக்க உன்மத்தம்

பிடித்தவனைப் போல முறைத்தான்.. அவளது உயிர் துடித்தது..

“என்னை விட்டுப் போயிருவியாடி..?”

அந்த ஒற்றைக் கேள்வியில் அவள் கதறியழுக ஆரம்பித்தாள்.. அவளது கண்ணீர் முகத்தை மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டான் அவன்..

“என்னை விட்டுப் போக உன்னால் முடியுமாடி..?”

‘அந்த தைரியம்தானே உனக்கு.. நான் உன்னை உயிருக்குயிராய் காதலிக்கிறேங்கிற திமிர்தானே உனக்கு.. உன் மேலிருக்கிற காதலினால் நீ என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்வேன்.. எதைச் சொன்னாலும் பொறுத்துக் கொள்வேன்.. உன் காலடியிலேயே விழுந்து கிடப்பேன்ங்கிற தெனாவெட்டுத்தானே உனக்கு..’

“உன்னிடம் உண்மையைச் சொல்லிடனும்னுதான் நினைத்தேன் நந்தினி.. ஏன் சொல்லனும் என்கிற கொஸ்டின் எனக்குள்ளே வந்திருச்சு.. நான் யாராக இருந்தால் என்ன..? உன் மீது எனக்கிருக்கும் காதல் உண்மையானதுதானே.. அதில் பொய்யில்லையே..”

‘யாருக்குத் தெரியும்..? உண்மையில்லாத உன்னிடம் இருக்கும் காதல் மட்டும் உண்மையாய் இருக்குமா..?’

வீம்புக்காக நினைத்தாலும் நினைக்கும் போதே அவளுக்கு மனம் பதறியது.. ரவிச்சந்திரனின் காதல் பொய்யாக இருக்குமானால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவளுக்கு இருக்கிறதா..?

‘அந்த நொடியே செத்து விடுவேன்..’ கண்ணீர் உருண்டு திரண்டு கன்னங்களில் உருண்டது.. ஆறுதலாக மண்டியிட்டு அமர்ந்திருந்தவனின் மார்பில் சரிந்து விட மனம் துடித்தது.. அடக்கிக் கொண்டாள்.. அவன் மீதான காதல் அவளை பலவீனப் படுத்தி விடும்.. அது கூடாது.. எவ்வளவுதான் அவன் காரணங்களை அடுக்கினாலும் அவன்தான் பெல்ட் மன்னன் என்பதில் அத்தனை காரணங்களும் அடிபட்டுப் போகின்றனவே..

‘‘டிரெயினில் உன்னைப் பார்த்தப்ப எனக்குள் உண்டான ஈர்ப்பு வேற எந்தப் பெண் மீதும் எனக்கு வந்ததில்லைடி.. நான் யாருன்னு தெரியாம ‘ஹு ஆர் யு மேன்..?’னு நீ சண்டைக்கு வந்ததும், உன்னுடைய பேச்சும், ஆட்டிடூயூடும் என்னை இம்ப்ரெஸ் பண்ணுச்சு.. உன்னுடம் வம்பிழுத்து

விளையாட வைத்தது.. யு நோ.. நான் உலகம் முழுவதும் சுற்ற வருகிற பிஸினெஸ் மேன்.. தினமும் டிராவலில்தான் இருப்பேன்.. என்னுடைய அத்தனை டிராவலிலும் என்னால் மறக்க முடியாத டிராவல் எது தெரியுமா..? உன்னுடன் சென்னையிலிருந்து கோழிக்கோடுக்கு மங்களூர் எக்ஸ்பிரஸில் டிராவல் பண்ணினேனே.. அந்த டிாவல்தான்டி.. என் வாழ்நாள் முழுவதும் மனதில் நிலைத்திருக்கப் போகும் தித்திப்பான டிரவால் அது..”

நந்தினிக்குத் துக்கமாக இருந்தது.. அவன் மீதான அவளது மயக்கம் சற்றும் குறையவில்லை.. எந்நாளிலும் குறையப் போவதுமில்லை.. இருந்தாலும் அவளால் முழு மனதாய் அவனுக்குக் கழுத்தை நீட்ட முடியாது.. அவன்தான் பெல்ட் மன்னன் என்பதை மறந்து அவனுடன் குடும்பம் நடத்த முடியாது..

என்ன காரணத்திற்காக தமிழகத்தை விட்டுக் கேரளாவுக்கு அவள் ஓடிவந்தாளோ.. அந்தக் காரணம் கேலிக்கூத்தாகி விட்டதைப் போல உணர்ந்தாள்.. அவள்தான் எவ்வளவு பெரிய ஏமாளி..!

“அதிகமா யோசிக்காதே.. வா.. உன் பேரண்ட்ஸும், என் பேரண்ட்ஸும் நம்ம மேரேஜுக்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிச்சுட்டாங்க.. இன்னும் கொஞ்ச நாளில லீகலா நீ என் வொய்பாகி விடுவ.. அதுதானே நமக்கு வேண்டும்..?”

நந்தினி ஆமாம் என்று தலையாட்டவில்லை.. கை கொடுத்தவனின் கை பிடித்து சோகையாய் எழுந்தவள் தளர்வாக அவனுடன் நடக்க ஆரம்பித்தாள்..

# அத்தியாயம் 238

“**த**டக்.. தடக்.. தடக்..”

சீரான தாள லயத்துடன் அவளைச் சீராட்டுவதைப் போன்ற மெலிதான ஆட்டத்துடன் விரைந்து கொண்டிருந்தது ரயில்.. கடந்து சென்ற பிளாட்பாரத்தில் குதித்து விட மனம் துடித்தது.. அடக்கிக் கொண்டாள்.. புள்ளியாக ரயில்வே ஸ்டேஷன் மறைய ஏஸி கம்பார்ட்மெண்டின் உள்ளே செல்ல மனமில்லாமல் கம்பியின் மீது சாய்ந்து நின்று கடந்து செல்லும் மின் கம்பங்களை வெறித்துப் பார்த்தாள்.. மனது கட்டுக்கடங்காமல் அலைபாய்ந்து கொண்டிருந்தது.. அவளுக்குத் தெரியும்.. அவளது மனதை அடக்கும் மாயக் கயிறும், அங்குசமும் அந்தக் கம்மாண்டரிடம் மட்டுமே இருக்கிறது என்பது.. அவனைக் கண்டு விட்டால் போதும்.. அலைபாயும் அவளது மனது சமனப் பட்டு விடும்..

சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறாள்.. தோற்றுப் போன மனநிலையுடன் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறாள் என்பதைப் பற்றிய கணக்கீடு எதுவும் இல்லாமல் இலக்கில்லாமல் பயணித்துக் கொண்டிருக்கிறாள்.

‘தஞ்சாவூருக்குப் போகக் கூடாது..’

அதில் மட்டும் அவள் உறுதியாக இருந்தாள்.. மகள் தற்கொலைக்கு முயன்றாலும் பரவாயில்லை.. தான் நிச்சயம் செய்த பெல்ட் மன்னனுக்குத்தான் அவள் கழுத்தை நீட்ட வேண்டும் என்ற பிடிவாதம்தானே அவளது தந்தைக்கு.. மகளுக்காக ஓர்நொடிகூட அவர் யோசிக்க வில்லையே.. பிடிக்காத ஒருவனைப் பிடிக்க வைத்துத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்பதுதானே அவரது எண்ணம்.. என் மகளுக்குப் பிடிக்கவில்லை.. நீ ராஜாதி ராஜனாக இருந்தாலும் உனக்குப் பெண் கொடுக்க மாட்டேன் என்று அவர் சொல்லியிருந்தால், ஆஹா.. என் அப்பாவுக்குத்தான் என்மீது எத்தனை பாசம் என்று மகிழ்ந்து போயிருப்பாள்..

‘கடைசி வரை என் அப்பா எனக்கு அந்த சந்தோஷத்தைக் கொடுக்கலையே..’

கேரளத்தின் குளிர்காற்று எதிர்காற்றாய் மாறி உடலைத் துளைத்ததில் உள்ளே வந்தாள்.. ஏஸியின் இதமான குளிர் மிதமான வெப்பத்துடன் இருந்தது.. சீட்டில் கால் மடக்கிச் சரிந்து ஜன்னல் கண்ணாடியில் முகம் பதித்து வெளியே

பார்த்தாள்.. அவளது எதிர்காலம் போல இருள் அவளை மருட்டியது..

“நந்துகூட என்னை ஏமாத்திட்டானே..”

வாய்விட்டு முணுமுணுத்தவளை நிமிர்ந்து பார்த்த எதிர் சீட்டுக்காரனின் விழிகள் அவளை சந்தேகத்துடன் அளந்தன..

‘தானாப் பேசிக்கிறதினால இவன் என்னைப் பைத்தியம்ன்னு நினைக்கிறானோ..’

போடா என்று திரும்பி உட்கார்ந்து கொள்ளவும் முடியவில்லை.. அவன் பாட்டுக்கு டி.டி. ஆரிடம் கம்ப்ளெயிண்ட் பண்ணக் கிளம்பி விட்டால் வம்பு வந்து சேர்ந்து விடும்.. வாதாடும் மனநிலையில் நந்தினியில்லை.. சோர்ந்திருந்தாள்..

‘பேசறப்ப மைண்டு வாய்ஸா... இல்லை சவுண்டு வாய்ஸான்னு செக் பண்ணிக்கிட்டுப் பேசித் தொலைக்கனும்..’

வாயை இறுக்கி மூடிக் கொண்டு வெளியே வேடிக்கை பார்ப்பவளைப் போலத் தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டாள்.. எதிர் சீட்டுக்காரன் கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்து விட்டான்.. அப்பாடி என்று நிம்மதி கொள்ள முடியாமல்

பெருமூச்சு வந்தது.. மனதுக்குள் நந்து அவளைத் திட்டித் தீர்த்த நொடிகள் வந்து நின்றன..

“ஒரு தரம் ‘பேக்’கா இருந்தா ஓகே.. எப்பப் பார்த்தாலும் பேக்கு மாதிரியே இருப்பேன்னு அடம் பிடிச்சா எப்படிக்கா..?”

“பேசாதேடா நீ..”

“நான் பேசாமல்தான் இருந்தேன்.. நீதான் எனக்குப் ஃபோன் போட்டுப் பேசிக்கிட்டு இருக்க.. நினைவிருக்கட்டும்.”

“தம்பியாடா நீ..?”

“இல்லையா..? உனக்கு அண்ணனா..? இது கூட நல்லாத்தான் இருக்கு.. எனக்கு லைன் கிளியர்ன்னு சொல்லு.. நாளைக்கே அப்பாகிட்டச் சொல்லி உனக்கு முதல்ல எனக்குக் கல்யாணம் நடந்தாகனும்னு சொல்லனும்..”

“நீ அதிலேயே இரு.. பறக்கா வெட்டி.. வயசுக்குத் தக்கனப் பேசித் தொலைடா..”

“என் வயசுக்கு இப்படித்தான் பேசுவேன்.. பறக்கா வெட்டியாய் இருக்கப்பவே இப்படி.. இன்னும் தியாகச் செம்மலாய் இருந்தேன்னு வைய்யி.. கையில கமண்டலத்தைக் கொடுத்துக் காசி பக்கம் அனுப்பி

வைத்திருவாங்க.. நான் எப்பவுமே ‘வருமுன் காப்பவன்..’ தெரியுமோ நோக்கு..?”

“பல்லைக் கழட்டிருவேன்.. படவா ராஸ்கல்.. நீ என் பக்கம்ன்னு பார்த்தா பெல்ட் மன்னன் பக்கம் கூட்டுச் சேர்ந்திருக்கியா..?”

“கூட்டெல்லாம் எனக்கு ஷீட் ஆகாதுக்கா.. நீயென்ன திடீர்ன்னு ஃபோன் பண்ணி இந்தக் குதி குதிக்கிற..? நீதான் சிம்மை மாற்றியிருக்கிற.. நானில்லை.. எனக்குப் ஃபோன் பண்ணிப் பேச இத்தனை நாளா..?”

“நடிக்காதேடா.. நான் ஃபோன் பண்ணலைன்னா என்ன..? உத்ராவும், கம்மாண்டரும் தினமும் ஃபோன் பண்ணிப் பேசியிருப்பாங்கள்ல.. அது எனக்குத் தெரியாதுன்னா நினைக்கிற..?”

“உனக்குத் தெரிஞ்சு போச்சா..? அதுதான் இந்தக் கோபமா..? அதுசரி.. என்ன.. கம்மாண்டர்ன்னு சொல்கிற.. அத்தானுக்கு நிக் நேம் வைச்சிருக்கியா..?”

“அத்தானா..? அந்த அளவுக்கு வந்துட்டியா..?”

“நீ வரலையா..?”

“டேய்ய்.. அதிகமாப் பேசினா முகரையைப் பேர்த்திருவேன்.. துரோகி.. பெல்ட் மன்னன் கையில என்னைப் பிடிச்சுக் கொடுக்கனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இத்தனை நாளாக் காத்திருந்தேன்னு தெரியாமப் போயிருச்சேடா..”

“என்ன நீ.. திரும்பத் திரும்ப நீ ‘பேக்கு’ங்கிறதை புரூவ் பண்ணிக்கிட்டு இருக்கிற..?”

“கொலைவெறியில இருக்கேன்.. எரிச்சலைக் கிளப்பாதே.. இந்த ஆள்தான் என்னைப் பெண் கேட்டு வந்தவர்ன்னு தெரிஞ்சிருந்தும் நீயும் உத்ராவும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு அதை மறைத்திருக்கீங்க.. உங்க ரெண்டு பேரையும் என்ன செய்தால் தேவலாம்..?”

“எதுவும் செய்ய வேணாம்.. லூஸில விடு..”

“லூஸா..?”

“நீ லூஸேதான்க்கா.. எப்பேற்பட்ட மாப்பிள்ளை உனக்குக் கிடைத்திருக்கிறார்.. அதைக் கொண்டாடத் தெரியாம லூஸாட்டம் பேசிக்கிட்டு இருக்கியே.. கேணத்தனமாவே இருப்பியா..”

“மிதி வாங்கப் போறடா..”

“நீ மிதிக்கிற வரைக்கும் உன் பக்கத்தில நின்னு மாட்டிக்க நானொன்னும் நீயில்லை.. நந்து..! அது என்ன கூட்டுச் சேர்ந்திட்டயா.. கூட்டுச் சேர்ந்திட்டயான்னே ஏலம் போட ற..? நான் யாரோடும் கூட்டுச் சேரல.. உனக்கு நல்லதுன்னு என் மனதுக்குப் பட்டதைச் செய்துக்கிட்டு இருக்கேன்..”

“இது எனக்கு நல்லதா..?”

“இல்லைன்னா ஏன் காதலிச்ச..? யாருன்னு தெரியாம காதலிக்கிறப்ப அவர் உனக்கு நல்லவராத் தெரிஞ்சாரு.. இப்ப பக்கா வில்லனாத் தெரிகிறாரா.. உன்கூட ரொம்பக் கஷ்டம்க்கா..”

“அதுக்காக பெல்ட் மன்னன்கூட என்னைக் கூட்டுச் சேர்த்து விடுவியா..? நல்லா வருவேடா நீ..”

“நீ அந்த பெல்ட் மன்னனை விடவே மாட்டியா..? அதுதான் அத்தானுக்கு ‘கம்மாண்டர்’ன்னு நிக்நேம் கொடுத்தாச்சே.. அதில நில்லு.. பெல்ட் மன்னனை மறந்திரு..”

“பாவி..! எப்படியெல்லாம் அட்வைஸ் கொடுக்கிற.. மறந்திருன்னு சொன்னா மறந்திர முடியுமாடா..?”

“கிராக்குன்னு சொன்னா மட்டும் கோபம் வந்துருது.. மறக்காம பெல்ட் மன்னனை நினைத்துக்கிட்டே இருக்கப் போறியா..? உனக்கென்ன மறை, கிறை கழண்டு போச்சா..? அருமையான மாப்பிள்ளை கிடைச்சிருக்கார்.. அற்புதமான வாழ்க்கை கிடைக்கப் போகுது.. அதை என்ஜாய் பண்றதை விட்டு விட்டு பெல்ட் மன்னனை மறக்க முடியலைன்னு பேத்திக்கிட்டு இருக்கிற..?”

இவன்கூடப் பேசினால் வேலைக்கு ஆகாது என்று லைனைத் துண்டித்து விட்டு உத்ராவைக் கூப்பிட்டாள்.. அவள் நந்தகுமாருக்கு மேலே இருந்தாள்..

“இப்ப என்னடி ஆகிருச்சு..? ரவிசாருக்கு உன்னைத் தெரியும்.. போட்டோவில் பார்த்திருக்கிறார்.. அவரோட அம்மாவும், தங்கையும் தஞ்சாவூர் வரைக்கும் போயி உன் வீட்டில் அவருக்காக உன்னைப் பெண் கேட்டிருக்காங்க.. இவ்வளவு தானே..?”

“இவ்வளவுதானேவா..? எவ்வளவு ஈஸியாச் சொல்ற உத்ரா..”

“வேற எப்படிச் சொல்லச் சொல்ற..? உனக்கு என்னதாண்டி பிரச்னை..? உன் விருப்பமில்லாம உன் கழுத்தில் தாலியைக் கட்டிட்டாரா..?”

“ஓ..! உனக்கு அது ஒரு குறையா..? அப்படி அவன் செய்யட்டும்ன்னுதானே அவன் பொறுப்பில என்னை ஒப்படைச்ச..?”

“நிச்சயமா இல்லை நந்தினி.. நீ சூசைட் அட்டெம்ப்ட் பண்ணினதும் எனக்கு என்ன செய்கிறதுன்னே தெரியலை.. வினித்திடம் புலம்பினேன்.. அவரோட ஃபிரண்டுக்கு ஃபிரண்டாத்தான் ரவிசார் எங்களுக்கு அறிமுகமானார்.. புத்திசாலியா ஒரு செக்கரட்டரி வேண்டும்ன்னு சொன்னாராம்.. கேரளத்துக்காரங்களா இல்லாம தமிழ்நாடா இருந்தாத் தேவலைன்னும் சொன்னாராம்.. அந்த இடத்தில வினித்தும் இருந்தாராம்.. வினித்துக்கு டக்குன்னு ஐடியா வந்து உன் பிரச்னையைச் சொல்லி உனக்கு உதவ முடியுமான்னு கேட்டிருக்கிறார்.. ரவிசார் ஓகேன்னு சொல்லியிருக்கார்.. வினித்தோட ஃபிரண்ட் ஜெனூன் பெர்சன்.. அவர் கேரண்டி கொடுத்ததினாலதான் உன்னை வயநாட்டுக்கு அனுப்பி வைத்தோம்.. அப்ப இந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது நந்தினி..”

“இப்பத் தெரியுமா..?”

“தெரியும்.. நந்தகுமாரும், ரவிசாரும் ஃபோனில் பேசினாங்க... விவரம் சொன்னாங்க... எனக்கே ஆச்சரியமாகிருச்சு நந்தினி.. பாரேன்.. உனக்கு அவர், அவருக்கு நீதான்னு இருக்கிறப்ப யாரால் அதை மாத்த முடியும்..? சொல்லு..”

“என்னால் என் தலைவிதியை மாத்த முடியலைன்னு சொல்லிக் காட்டறியாடி..”

“ஏய்ய்.. ச்சீ.. அடிச்சேன்னா பாரு.. உனக்குன்னு எங்கேயிருந்துடி இப்படியாப்பட்ட யோசனையெல்லாம் வந்து தொலைக்குது..? ரவிசார் உனக்கு ஹஸ்பெண்டாக் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்கனும் நந்தினி.. கண்டதையும் நினைத்து மனதைப் போட்டு உழப்பி உன் வாழ்க்கையைக் கெடுத்துக்காதே நந்தினி.. அவ்வளவுதான் சொல்வேன்..”

“ஏன்..? அதுக்கும் மேலேயே சொல்லேன்.. நீங்கள்ளாம் ஒண்ணாச் சேர்ந்து என்னை ஏமாத்திட்டு எனக்கு அறிவுரை சொல்லனும்.. நான் அதைக் கேட்டுக்கனும்னு ஆகிப் போயிருச்சில்ல..? ஏண்டி நிறுத்திட்ட..? சொல்லு உத்ரா சொல்லு.. நீ சொல்லும் அறிவுரையைக் கேட்கத்தான் நான்

ஓடோடி வந்து உனக்குப் ஃபோன் பண்ணிக்கிட்டு இருக்கிறேன்.. உன் அறிவுரையென்னும் வெள்ளத்தில நீந்த ஓடோடி வந்திருக்கும் என்னை ஏமாற்றி விடாதே உத்ரா..”

“உன் தஞ்சாவூரு ‘லொள்ளு’ இருக்கே.. அப்பப்பா.. நீ அவரைக் காதலிக்கிறதானே..?”

“காதலிச்சா..? அவர் செய்ததெல்லாம் சரின்னு ஆகிருமா..?”

“உனக்கு என்னதாண்டி பிராப்ளம்..?”

“என்னை எனக்காக அவர் காதலிக்கலை உத்ரா.. அவரை வேண்டாம்ன்னு சொன்னதில அவரோட ஈகோ பாதிக்கப்பட்டிருக்கு.. என்னை ஜெயிக்கனும்னு காதலிக்கிறதா நடிச்சிருக்கார்.. கடைசியில் அவர் ஜெயிச்சுட்டார்.. நீங்கள்ளாம் அதுக்காக அவருக்கு சப்போர்ட் பண்ணியிருக்கீங்க.. நான்தான் சப்போர்ட் பண்ண ஆளில்லாம தனிச்சு நிற்கிறேன்.. நீ எனக்காக இருக்கிறன்னு நினைத்தேன் உத்ரா.. நீயும் என்னை ஏமாத்திட்டயேடி..”

“உளராம நான் சொல்கிறதைக் கேள் நந்தினி..”

“கேட்டவரைக்கும் போதும்.. பை..”

நந்தினி செல்ஃபோனை ஸ்விட்ச் ஆஃப் செய்து ஹேண்ட் பேகில் போட்டுக் கொண்டு எழுந்து நின்றாள்.. அடுத்து செய்ய வேண்டிய வேலைகளை மனம் அவசரமாகத் திட்டமிட்டது.. அவள் இருப்பது 'யாழ்' ஹோட்டலில்.. ரவிச்சந்திரனுக்குத் தெரியாமல் அறையைக் காலி செய்ய முடியாது.. எனவே பெட்டிகளைத் தவிர்த்தாள்.. ஹேண்ட் பேக்கையும் தவிர்த்தாள்.. அவளுடைய சம்பளப் பணம் என்ற பெயரில் கற்றையாக அவன் கொடுத்திருந்த பணக்கட்டைக் கைக் குட்டையில் சுற்றி எடுத்துக் கொண்டாள்..

'வேலை கிடைக்கும் வரை லேடிஸ் ஹாஸ்டலில் தங்க உதவும்.. செலவுக்குப் பணம் வேண்டுமே..'

வயநாட்டுக்கு வந்திருப்பதால் அவள் இன்னும் வங்கிக் கணக்கை ஆரம்பிக்கவில்லை.. ஏற்கனெவே இருக்கும் வங்கிக் கணக்குக்கு ஏ.டி.எம் கார்டு இருந்தது.. அதில் வரவு, செலவு வைத்துக் கொண்டால் மேகநாதனுக்குத் தெரிந்து விடும் என்பதால் அந்தக் கணக்கை அவள் உபயோகிக்கவில்லை..

'எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்கிறது.. எதுவும் தெரியாத கூமுட்டை நான் மட்டும்தான்.. இது தெரியாம பெரிய

புத்திசாலி மாதிரி இங்கே தலை மறைவாய் இருக்கிறதா நம்பிக்கிட்டு இருந்திருக்கேன்..'

கசப்பான புன்முறுவலுடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.. ஹோட்டலின் முன்பக்க தோட்டத்தில் நடைபயின்றபடி வாசல் கேட்டருகே சென்றவள் மெதுவாக நடந்து சாலையை அடைந்தாள்.. பின்னாடி ஓடி வந்த செக்யூரிட்டியிடம்..

“ஜஸ்ட் எ ஸ்மால் வாக்..” என்று சிரித்தாள்.. அவன் தலையாட்டி விட்டுச் சென்று விட இவள் நடையின் வேகத்தைக் கூட்டி நடந்து தெருவின் திருப்பத்தில் திரும்பி ஆட்டோவைப் பிடித்தாள்.. ரயில்வே ஸ்டேஷனுக்குப் பறந்து வந்து விட்டாள்..

‘கிரேட் எஸ்கேப்..!’

சிலாகிக்கத்தான் முடியவில்லை.. சென்னைக்குச் செல்ல ஏஸி கம்பார்ட்மெண்டில் டிக்கெட் கிடைத்து விட்டது.. பெட்டி, பையென்று எதுவும் இல்லாமல் உடுத்தியிருந்த சுரிதாருடன் அவள் ரயிலில் ஏறி அவளுக்கான இடத்தைக் கண்டு பிடித்து உட்கார்ந்தாள்.. எதிர் சீட்டில் உட்கார்ந்திருந்தவன் வெறுங்கையுடன் வந்தவளை விசித்திரமாகப் பார்த்து

வைத்தான்.. அப்போது ஆரம்பித்த விசித்திர பார்வை ரயில் ஆரம்பித்த பின்பும் தொடர்கிறது..

கண்ணாடி ஜன்னலின் மீது சாய்ந்திருந்தவள் அருகில் யாரோ வந்து நிற்கும் உணர்வில் திடுக்கிட்டு ஏறிட்டுப் பார்த்தாள்.. போதி மரத்தடி புத்தன் போல புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருந்த எதிர்சீட்காரன் கையில் ஒரு கைக்குட்டையுடன் நின்றிருந்தான்.

“வாட் டு யு வான்ட்..?” நந்தினி பதறி எழுந்து கொள்ள முயன்றாள்..

“நீதான்டி வேண்டும்..”

அவளை எழுந்திருக்க விடாமல் குனிந்து அவள் முகத்தில் மயக்க மருந்தில் நனைக்கப்பட்டக் கைக்குட்டையை அழுத்தினான்..

“ஹு ஆர் யு..” மயக்கத்தில் ஆழ்ந்தபடி அவள் குழறினாள்..

“ஹா.. ஹா.. ஓரிஜினல் பெல்ட் மன்னன் நான் தாண்டி.. மக்கு..”

மயக்கத்தில் புதைந்து கொண்டிருந்த நந்தினியின் செவிகளில் தெளிவாக அந்த வார்த்தைகள் கேட்டன.

**- எட்டாம் பாகத்தில் தொடரும்...**





